K. RAGU

சாவுக்கு அஞ்சாத சிறுவர்கள்

K.LENIN RAGU RAMAN 20

சாவுக்கு அஞ்சாத சிறுவர்கள்

(வீரச் சிறுவர் கதைகள்)

மாஸ்கோ
முன்னேற்றப் பதிப்பகம்

தயாரிப்பு: வி. அலிக்ஸேயிவ்

БЕССМЕРТНЫЙ ГОРНИСТ

(сборник рассказов о юных героях)

На тамильском языке

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம் 1978

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{70500-202}{014(01)-78}$ 687—78

பொருளடக்கம்

அறிமுகம் 5
மி. ஷோலகவ். சோரபுத்திரன் 9
அ. கைதார். சின்னப் பையன் 48
யூ. யாக்கவ்லெவ். சிறுவனுக்குக் கிடைத்த சம்பத்து 64
அ. மஷ்கோவ்ஸ்கி. செல்யூஸ்கின்த்ஸி தெருவிலிருந்து வந்தவன் . . . 72
நி. பக்தானவ். அமர முழக்கம் 80
நி. தீஹனவ். சிங்கத்தின் பாதம் 106
லி. பன்திலேயெவ். ஓடத்தில் 112
லே. கசில், மா. பலிஞேவ்ஸ்கி. சாரணச் சிறுவர்கள் 131
வி. கிரப்பிவின். துறவி முனை 147
ஆபூ-பாக்கார். குல்தூம் 168
அ. துகினெத்ஸ். மாம்பெத்தின் குல்லாய் 178

அறிமுகம்

புத்தகம் படிக்க விரும்பாத பிள்ளைகளும் உண்டோ? ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா—இப்படி எல்லாக் கண்டங்களிலும் எல்லா நாடுகளிலும் குழந்தைகள் புத்தகம் படிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். குதூகலமானவை, கருத்தார்ந்தவை, விளையாட்டும் வேடிக்கையுமானவை, சோகமானவை, வீரதீரமானவை, கவிதை எழிலுள்ளவை—இப்படிப் பல வகையான புத்தகங்களும் உண்டு. எவ்வகையைச் சேர்ந்ததாயினும் நல்ல புத்தகம் ஒவ்வொன்றும் புதிதாய் ஒன்றை அறிமுகம் செய்து மகிழ்விக்கிறது, சிந்தனைக்கு உணவு அளிக்கிறது. புத்தகத்தை அறிவின் ஊற்றென்றும் வாழ்க்கையின் ஆசானென்றும் சொல்வார்கள். காரணமின்றி இவ்வாறு சொல்லப்படவில்லை. பொதுவாக இலக்கியத்துக்கும், இன்னும் முக்கியமாகச் சிறுவர் இலக்கியத்துக்கும் இது முற்றும் பொருந்துவதாகும்.

எல்லோரையும் போல் சோவியத் சிறுவர்களும் சிறுமிகளும் புத்தகங்களை நேசிக்கிறார்கள். இவர்களுக்காக சோவியத் நாட்டில் புத்தகங்கள் கணக்கின்றி வெளியிடப்படுகின்றன. ருஷ்ய மொழியிலும், விரிந்து பரந்த இந்நாட்டில் வாழும் ஏனைய எல்லா இனத்தோரின் மொழிகளிலும் இவை அச்சாகின்றன. நூற்றுக்கும் அதிகமான மொழிகள் இந்நாட்டில் வழங்குகின்றன! பள்ளிக்கூட நூலகங்களிலிருந்தும், தாம் வசிக்கும் நகரம் அல்லது வட்டாரத்தின் நூலகங்களிலிருந்தும் பிள்ளைகள் இந்தப் புத்தகங்களை எடுத்துச் சென்று படிக்கிறார்கள். ருஷ்யாவையும் ருஷ்ய வரலாற்றையும், தற்கால நிகழ்ச்சிகளையும், சோவியத் சிறுவர் சிறுமியரது வாழ்க்கையையும், மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த இளம் பிராயத்தினர், முதியோரது வாழ்க்கையையும் பற்றிய புத்தகங்கள் பலவும் இருக்கின்றன. பிற நாடுகளின் எழுத்தாளர்களது சிறந்த நூல்கள் எல்லாம்—ஆங்கிலத்திலும் ஜெர்மனிலும், ஸ்பானிய, பிரெஞ்சு மொழிகளிலும், அரபு, இத்தாலிய, ஜப்பானிய, செக் மொழிகளிலும், ஹங்கேரியனிலும் பல்கேரியனிலும், சுருக்கமாகச் சொல்வதெனில் உலகின் எல்லா மொழிகளிலும் அமைந்த இந்நூல்கள்— சோவியத் சிறுவர் சிறுமியருக்காக எமது நாட்டில் மொழிபெயர்த்து வெளியிடப்படுகின்றன.

சோவியத் இளந் தலைமுறையினர் மிகப் பலவும் குறித்து படிக்க விரும்புகிறார்கள். யாவற்றிலும் முக்கியமாக வீர காவியங்களைக் கூறும் புத்தகங்களை, சீரிய இலட்சியங்களுக்காக ஆற்றப்பட்ட புகழ் மிக்க செயல்களையும் சாதனைகளையும் சித்திரிக்கும் புத்தகங்களைப் படிப்பதில் அளவிலா ஊக்கம் கொண்டுள்ளனர் என்று சொல்லலாம். சோவியத் சிறுவர் சிறுமியர் வீரம் செறிந்த நாட்டில் வீர மிக்க மக்களிடையே வாழ்கிறவர்கள். சோவியத் மக்கள் உலகிலே முதன் முதலாய், 1917 அக்டோபரில் மக்கள் புரட்சி ஒன்றை நடத்தி, தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாட்சியை அமைத்துக் கொண்டவர்கள்; உள்நாட்டுப் போரின் போதும், பாசிஸ்டு ஜெர்மனிக்கு எதிரான யுத்தத்தின் போதும் மிகக் கடும் போர்களில் இந்த அரசாட்சியைப் பாதுகாத்துக் கொண்டவர்கள். ஒவ்வொரு சோவியத் சிறுவனும் சிறுமியும் வீரச் செயல்களும் தீர சாதனைகளும் புரிய வேண்டுமென ஆசைப்படுவதில் வியப்பில்லை. எனவே தான் இவர்கள் வீர மிக்க கதைகளையும் காவியங்களையும், குறிப்பாகத் தமது வயதினரான வீரச் சிறுவர், சிறுமியரைப் பற்றிக் கூறும் நூல்களைப் பெரிதும் விரும்புகிறார்கள்.

இம்மாதிரியான புத்தகங்களை நீங்களும்தான் விரும்புகிறீர்கள். இதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

இம்மாதிரியான ஒரு புத்தகம்தான் இதோ உங்கள் கையில் இருக்கிறது.

மிகயீல் ஷோலகவ், அர்க்காதி கைதார், யூரி யாக்கவ்லெவ், அனத்தோலி மஷ்கோவ்ஸ்கி, நிக்கலாய் பக்தானவ், நிக்கலாய் தீஹனவ், லியனீத் பந்திலேயெவ், லேவ் கசீல், மாக்ஸ் பலிஞேவ்ஸ்கி, விளாதிஸ்லாவ் கிரப்பிவின், அஹ்மெத்கான் ஆபூ-பாக்கார், அந்திரேய் துகினெத்ஸ் ஆகிய சோவியத் எழுத்தாளர்களது கதைகளும், நெடுங்கதைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளும் இதில் இருக்கக் காண்பீர்கள். இந்த ஆசிரியர்கள் யாவரையும் சோவியத் சிறார் நன்கு அறிவர். நீங்கள் முதல் முறையாக இப்போது இவர்களைத் தெரிந்து கொள்வோராக இருக்கலாம். அதனால் பாதகமில்லை, சில நேரம் முதல் சந்திப்பே மிகவும் சுவையானதாய் இருக்கலாம் அல்லவா?

இந்தப் புத்தகத்தைப் படித்து, நீங்கள் நெஞ்சு உறுதியும் துணிவும் வாய்ந்த இளம் பிராயத்தினர் சிலரைத் தெரிந்து கொள்வீர்கள். இவர்கள் உள்நாட்டுப் போர் நடைபெற்ற ஆண்டுகளில் தமது மூத்த தலைமுறையினருடன் சேர்ந்து, தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாட்சிக்காகப் போராடியவர்கள். முற்றுகை இடப்பட்டிருந்த லெனின்கிராது நகரில் பாசிஸத்தை எதிர்த்துப் போராட தமது முதியோருக்குத் துணை புரிந்தோரும், கிரிமியாவில் தலைமறைவான இயக்கத்தில் பங்கு கொண்டோருமான இளம் வீரர்களை இங்கே சந்திப்பீர்கள். உங்களுக்கு அந்த ஆண்டுகள் இப்போது பழங் கால வரலாற்றுக்குரிய ஆண்டுகளாகிவிட்டன. ஆயினும் சோவியத் இளந் தலை

முறையினர் தமது தந்தையரும் அண்ணன்மார்களும் புரிந்த வீரச் செயல்களை மறந்துவிடவில்லை. போர்கள் இடிமோதிய பழங் காலம் இல்லாமல் இன்றைய சமாதான காலம் உங்களுக்குக் கிட்டியிருக்குமா?

வீரச் செயல்கள் புரிய வேண்டுமெனக் கனவு காணும் பிள்ளைகள் அடிக்கடி சொல்வார்கள்: ''அந்தக் காலத்தில் நான் வாழ்ந்திருந்தால், நானும் அம் மாதிரி....''

ஆனல் பகைவனை எதிர்த்து நடைபெறும் போர்களில் மட்டுமின்றி, சமாதான காலத்திலும் தீரச் செயல்கள் புரியப்படுவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்தப் புத்தகத்தைப் படித்துச் செல்லுகையில் நீங்கள் இதைக் காண்பீர்கள். தன்னிலும் இளையவர்களான இரு சிறுவர்கள் ஆற்றிலே விழுந்து மூழ்கிவிடாதபடி காப்பாற்றிய சிறுவனைப் பற்றி இங்கு படிப்பீர்கள். கடினமான பணிகளைச் செய்து முடிப்பதற்கு முதியோருக்கு உதவிய சிறுவர்களைத் தெரிந்து கொள்வீர்கள். சமாதான காலத்துக்குரிய இளம் வீரர்களையும் உழைப்பாளர்களையும் சந்திப்பீர்கள்.

அமர முழக்கம் என்னும் கதை முற்றுகைக்கு உள்ளாகியிருந்த லெனின் கிராதின் முன்னணி இளைஞர்களைப் பற்றியது. அளவு கடந்த துணிவும் உறுதியும் கொண்டு இன்னல்களை எதிர்த்து நிற்பது தமது கடமை என்பதை உணர்ந்தவர்கள் இவர்கள். இந்தக் கதையின் ஆசிரியரான நிக்கலாய் பக்தானவ் துணிவும் உறுதியும் மிக்கோர் என்ருெரு புத்தகத்தையும் எழுதியிருக்கிருர். சோவியத் சிறுவர் சிறுமியர் பெரிதும் போற்றிப் பாராட்டும் புத்தகமாகும் இது.

நீங்கள் எல்லோரும் இந்தப் புத்தகத்தை விரும்பிப் படிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இதைப் படிப்பதன் மூலம் நீங்கள் சோவியத் சிறுவர்களையும் சிறுமிகளையும் பற்றி மட்டுமின்றி, மாபெரும் சோவியத் சோஷலிசக் குடியரசுகளது ஒன்றியத்தைப் பற்றியும் சிறிதளவு தெரிந்து கொள்வீர்கள்.

இதை மேலும் நன்ருகத் தெரிந்து கொள்ள விரும்புவீர்களாயின், எங்கள் நாட்டுக்கு வருகை செய்து நேரில் பார்வையிடுமாறு உங்களை அழைக்கின்ருேம்.

செர்கே பருஸ்தின்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

மிகயீல் ஷோலகவ்

சோரபுத்திரன்

மீஷா கனவு கண்டான்: அவனுடைய தாத்தா தோட்டத்தில் செர்ரி மரத்திலிருந்து வலுவான கொம்பு ஒன்றை நறுக்கி எடுத்துக் கொண்டு அவனருகே வந்து கொம்பை ஓங்கி ஆட்டிக்கொண்டே இப்படிச் சொல்கிறார்:

''எங்கே, இப்படி வாரும் ஐயா, மீஷா அவர்களே, கால்கள் முளைக்கத் தொடங்குகிற இடத்திலே உம்மை உரித்துப் போடுகிறேன்!...''

''எதற்காக, தாத்தா?'' என்று கேட்கிறான் மீஷா.

''நீ கோழிக் குடிலிலே கொண்டைக் கோழியின் கூட்டிலிருந்து எல்லா முட்டைகளையும் திருடி, குடை ராட்டினத்துக்குக் கொண்டுபோய்ச் சுற்றி விட்டு வந்தாயே, அதற்காகத்தான்!...''

''தாத்தா, நான் இந்த வருஷம் குடை ராட்டினத்திலே சுற்றவே இல்லையே!'' என்று திகிலுடன் வீரிடுகிறான் மீஷா.

ஆனால் தாத்தா கம்பீரமாகத் தாடியைத் தடவிக் கொண்டே காலை உக்கிரமாகத் தொப்பென்று அடிக்கிறார்.

''படு, குட்டிச்சாத்தான், கால் சட்டையை நெகிழ்த்து!...''

மீஷா வீரிட்டு அலறி வழித்துக் கொண்டான். மிலாறினால் உண்மையாகவே அடி வாங்கியது போல அவனுடைய நெஞ்சு படபடத்தது. இடது கண்ணைக் கொஞ்சம் போலத் திறந்தான்—குடிசையில் வெளிச்சமாய் இருந்தது. காலை இளவெயில் சாளரத்துக்கு வெளியே தகதகத்துக் கொண்டிருந்தது. மீஷா தலையை நிமிர்த்தினான். முன்கொட்டகையில் குரல்கள் கேட்டன: அம்மா கீச்சிட்டாள், ஏதோ முனகினாள், சிரிப்பினால் அவளுக்குப் புரையேறிற்று. தாத்தா இருமினார். ஏதோ வேற்றுக் குரல் ''பூ-பூ-பூ...'' என்று ஒலித்தது.

மீஷா கண்களைக் கசக்கித் தேய்த்துக் கொண்டான். பார்க்கிறானே, கதவு திறந்தது, படீரென்று மூடிக்கொண்டது, தாத்தா அறைக்குள் ஓடினார், துள்ளிக் குதித்தார், அவரது மூக்குக்கண்ணாடி அதிர்ந்தாடிற்று. பாதிரிதான் தோத்திரப் பாடகர்களுடன் வந்துவிட்டாராக்கும் (ஈஸ்டர் திருநாளில் பாதிரி வரும்போது தாத்தா இப்படித்தான் அலைபாய்வது வழக்கம்) என்று முதலில் நினைத்தான் மீஷா. ஆனால் தாத்தாவின் பின்னோடு அறைக்குள் புகுந்தான் முக

மறியாத பெரிய படை வீரன் ஒருவன். கறுப்பு மேல் கோட்டும் தொப்பியும் அணிந்திருந்தான். தொப்பியில் நாடாக்கள் இருந்தன. ஆனால் முன்விளிம்பு இல்லை. அம்மா இந்த மனிதன் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள், ஊளையிட்டாள்.

குடிசையின் நடுவே வேற்றுள் அம்மாவைக் கழுத்திலிருந்து உதறி அகற்றி விட்டு, ''எங்கே என் சந்ததி?'' என்று உறுமினன்.

மீஷா அரண்டு போய்ப் போர்வைக்குள் பதுங்கிக் கொண்டான்.

''மீஷாக் கண்ணா, என் செல்வ மகனே! என்னடா அப்பா நீ உறங்குகிறாய்? உன் தகப்பனார் இராணுவ சேவையிலிருந்து திரும்பி வந்திருக்கிறாரே, பார்!'' என்று கத்தினாள் அம்மா.

மீஷா இமைகொட்டுவதற்குள் வீரன் அவனைக் குண்டுக் கட்டாகத் தூக்கி விட்டத்துக்கு அடியில் எறிந்து, அப்புறம் அவனைப் பிடித்து மார்போடு இறுகப் புல்லி, செம்பட்டை மீசைகளால் உதடுகளையும் கன்னங்களையும் விழிகளையும் குத்திக் குதறி விட்டான். மீசைகளில் ஏதோ ஈரமாக உப்புக் கரித்தது. மீஷா ஆன மட்டும் திமிறினான், ஆனால் படைவீரன் விடுகிற வழியாய் இல்லை.

''அடேயப்பா,எப்பேர்ப்பட்ட போல்ஷெவிக் வளர்ந்துவிட்டான் எனக்கு!... சீக்கிரம் அப்பனை விட உயர்ந்துவிடுவான்!... ஹோ-ஹோ-ஹோ!'' என்று கத்தினான் தகப்பன். மீஷாவை உள்ளங்கையில் உட்கார்த்துவதும், தட்டாமாலை சுற்றுவதும், விட்டத்துக் குறுக்குச் சட்டம் வரை எட்டும்படி தூக்கிப் போட்டுப் பிடிப்பதுமாகச் சீராட்டத் தொடங்கினானே பார்க்கலாம்.

மீஷா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான், பின்பு தாத்தா செய்வது போலவே புருவங்களை நெரித்தான், கண்டிப்பை வரவழைத்துக் கொண்டான், அப்பனின் மீசையை வெடுக்கென்று பிடித்தான்.

''இறக்கிவிடு என்னை, அப்பா!''

''விட மாட்டேன், என்ன செய்வாயாம்?''

''விடு! நான் பெரியவன் ஆகிவிட்டேன், நீ என்னவோ குழந்தைபோல என்னைக் கொஞ்சுகிறாயே!...''

தகப்பன் மீஷாவை மடியில் உட்கார்த்திக் கொண்டு புன்முறுவலுடன் கேட்டான்:

''எத்தனை வயது உனக்கு, என் துப்பாக்கிக் குஞ்சே?''

தலை நிமிராமல் அவனை ஏறிட்டுப் பார்த்தவாறே, ''எட்டாவது வயது நடக்கிறது'' என்று உறுமினான் மீஷா.

''போன வருஷத்துக்கு முந்தின வருஷம் நான் உனக்குக் கப்பல்கள் பண்ணிக் கொடுத்தேனே, நினைவிருக்கிறதா, தங்க மகனே? நாம் அவைகளைக் குளத்தில் விட்டோமே, ஞாபகம் இருக்கிறதா?''

''நினைவிருக்கிறது!'' என்று கத்திவிட்டு, தகப்பனின் கழுத்தைத் தயக்கத்துடன் கைகளால் கட்டிக்கொண்டான் மீஷா.

அப்புறம் குதூகலம் கரைகடந்து பெருக்கெடுத்தது. தகப்பன் மீஷாவைத் தன் கழுத்தில் உட்கார்த்திக் கொண்டு, அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு அறையில் சுற்றிச் சுற்றி வந்தான், குதிரைபோலக் கனைத்தான், செருமினான். பேரின்ப மிகுதியால் மீஷாவுக்கு மூச்சு திணறிற்று. அம்மா அவன் சட்டைக் கையைப் பற்றி இழுத்தாள்.

''முகப்புவெளிக்கு ஓடிப்போய் விளையாடு! உன்னைத்தானடா சொல்கிறேன், கடைகெட்ட காவாலிப் பயலே, போ!'' என்று கத்தினாள். பின்பு தகப்பனைப் பார்த்து, ''ஃபமா அக்கீமிச்! விடு இவனைச் சற்றே!... உன்னை, என் சிங்கத்தை, கண்ணாரப் பார்க்க விடமாட்டான் இவன். இரண்டு வருஷமாயிற்று உன்னைப் பார்த்து. நீ என்னடா என்றால் இவனோடு கொஞ்சிக் கொண்டிருக்கிறாய்!'' என்றாள்.

தகப்பன் மீஷாவைத் தரையில் இறக்கிவிட்டு, ''ஓடு, பையன்களோடு விளையாடு. அப்புறமாக வா, நான் உனக்குப் பரிசுகள் தருகிறேன்'' என்றான்.

மீஷா கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். வீட்டுக்குள் எதைப் பற்றிப் பேச்சு நடக்கிறது என்று முகப்புக் கொட்டகையில் இருந்தபடி உற்றுக் கேட்கலாம் என்று முதலில் நினைத்தான். அப்புறம் அவனுக்கு ஞாபகம் வந்தது—பையன்களில் எவனுக்குமே அப்பா வந்திருப்பது தெரியாதே என்பது. முகப்பு வெளியைக் கடந்து, காய்கறித் தோட்டத்தின் வழியாக உருளைக் கிழங்குப் பாத்திகளைத் துவைத்து நசுக்கிக் கொண்டு பாய்ச்சலாகக் குளத்துக்கு ஓடினான்.

நாற்றம் வீசும் தேங்கிய நீரில் நீந்திக் குளித்து வீட்டு மீஷா மணலில் புரண்டான், பின்பு கடைசித் தடவையாக நீரில் மூழ்கிவிட்டு, ஒரு காலால் கெந்தியவாறு காற்சட்டையை மாட்டிக்கொண்டான். வீட்டுக்குப் புறப்படத் தயாராகிவிட்டான், அதற்குள் பாதிரி மகன் வீத்யா அவனருகே வந்து சேர்ந்தான்.

''போகாதே, மீஷா! வா, நீந்திக் குளிப்போம், அப்புறம் எங்கள் வீட்டில் விளையாடப் போவோம். நீ எங்கள் வீட்டுக்கு வரலாம் என்று அம்மா அனுமதித்துவிட்டாள்'' என்றான் வீத்யா.

மீஷா நழுவும் சராயை இடது கையால் தூக்கி விட்டுக்கொண்டு, தோளில் சராய்வாரைச் சரிப்படுத்திவிட்டு வேண்டா வெறுப்புடன் சொன்னான்:

''எனக்கு உன்னோடு விளையாட இஷ்டம் இல்லை. உன் காதுகளிலிருந்து கடுமையான கவிச்சு அடிக்கிறது!...''

வீத்யா இடது கண்ணை வன்மத்துடன் இடுக்கிக் கொண்டு, பின்னல் சட்டையை எலும்பு துருத்திய தோள்களிலிருந்து கழற்றினான்.

''எனக்குக் கண்டமாலை வந்ததினாலே அப்படி. நீ குடியானவன். உன் அம்மா உன்னை வேலி ஓரத்தில் பெற்றாள்!...''

''நீ என்ன, கண்ணால் பார்த்தாயா?''

''அம்மாவிடம் எங்கள் வீட்டுச் சமையற்காரி சொன்னதை நான் கேட்டேன்.''

மீஷா மணலைக் காலால் கிளறி, வீத்யாவை ஏற இறங்க நோட்டம் இட்டான்.

''உங்கள் அம்மா புளுகுகிறாள். எங்கள் அப்பா யுத்தத்திலே சண்டை போட்டாரே. உங்கள் அப்பாவோ, இரத்த வெறியர், ஊராரைச் சுறண்டித் தின்றுகொழுக்கிறார்!...''

''சோரபுத்திரன்!'' என்று உதடுகளைக் கோணிக் கொண்டு கூவினான் பாதிரி மகன்.

மீஷா நீரால் கூராக்கப்பட்ட கூழாங்கல்லை எடுத்தான். ஆனால் பாதிரி மகன் கண்ணீரை அடக்கிக்கொண்டு மிகவும் நளினமாகப் புன்னகை செய்தான்.

''சண்டை போடாதே, மீஷா, சச்சரவு செய்யாதே! நான் உனக்கு என் கட்டாரியைத் தருகிறேன், இரும்பால் செய்ததை! வேண்டுமா?'' என்று குழைந்தான்.

மீஷாவின் விழிகள் மகிழ்ச்சியால் ஒளி வீசின. கூழாங்கல்லை ஒரு புறம் கடாசினான். ஆனால் தகப்பன் நினைவு வந்ததும் இறுமாப்புடன், ''எங்கள் அப்பா உன்னுடையதை விட அருமையான கட்டாரி யுத்தத்திலிருந்து கொண்டு வந்திருக்கிறாரே!'' என்றான்.

''புளு-குகிறாய்!'' என்று நம்பிக்கை இன்றி நீட்டினான் வீத்யா.

''நீதான் புளுகுகிறாய்!... கொண்டு வந்திருக்கிறார் என்று எப்போது சொல்லுகிறேனோ, அப்போது கொண்டு வந்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்!... நிஜமான துப்பாக்கியுங்கூட....''

''அடேயப்பா, நீதான் எவ்வளவு பணக்காரன் ஆகிவிட்டாய்!'' என்று பொறாமை ததும்பப் பல்லிளித்தான் வீத்யா.

''இன்னும் அவரிடம் தொப்பி இருக்கிறது, தொப்பியில் குஞ்சம் தொங்குகிறது. உன் புத்தகத்தில் இருக்கிறதே அதே போலத் தங்கத்தில் வார்த்தைகள் எழுதியிருக்கின்றன அந்தத் தொப்பியில்.''

எதைச் சொல்லி மீஷாவை ஆச்சரியப்பட வைக்கலாம் என்று வீத்யா நெடுநேரம் சிந்தித்தான், நெற்றியைச் சுருக்கிக் கொண்டான், வெளிறிய வயிற்றைச் சொறிந்தான்.

''எங்கள் அப்பா சீக்கிரமே பெரிய பாதிரி ஆகி விடுவார், உங்கள் அப்பனோ, மேய்ப்பனாக இருந்தான். கெக்கே, என்ன சொல்கிறாய்?'' என்றான்.

மீஷாவுக்குச் சலித்துப் போயிற்று. திரும்பிக் காய்கறித் தோட்டத்தை நோக்கி நடந்தான். பாதிரிமகன் அவனைக் கூவி அழைத்தான்:

''மீஷா, மீஷா! உனக்கு ஒரு சங்கதி சொல்கிறேன்!''

''சொல்லு!''

''என் கிட்டே வா!...''

மீஷா அருகே போய்ச் சந்தேகத்துடன் கோணலாகப் பார்த்தான்.

''ஊம், சொல்லு!''

பாதிரிமகன் மெலிந்த கோணல் கால்களால் மணலில் குதித்தாடி, புன்னகைத்தான்.

''உங்கள் அப்பா கம்யூன்காரர்! நீ செத்துப் போன பிறகு உன் ஆன்மா வானத்துக்குப் போனதும் கடவுள் சொல்லுவார்: 'உன் தகப்பன் கம்யூனிஸ்ட் ஆனபடியால் உன்னை நரகத்துக்கு அனுப்புகிறேன்!' என்று. அங்கே சைத்தான்கள் உன்னை இருப்புச் சட்டியில் போட்டு வறுக்கத் தொடங்குவார்கள்!'' எனக் குரோதத்துடன் கூறினான்.

''உன்னை மட்டும் வறுக்கத் தொடங்க மாட்டார்கள் என்ற நினைப்போ?''

''எங்கள் அப்பா புனித மதகுரு! நீ மடையன், படிக்காதவன், ஒன்றும் உனக்குப் புரியாது....''

மீஷாவைத் திகில் பற்றிக்கொண்டது. திரும்பி, ஒன்றும் பேசாமல் வீட்டுக்கு ஓடினான்.

காய்கறித் தோட்ட வேலியருகே நின்று, ''இதோ தாத்தாவிடம் கேட்கிறேன். நீ மட்டும் பொய் சொல்லியிருந்தால் எங்கள் வீட்டுப் பக்கமே தலை காட்டாதே!'' என்று பாதிரி மகனை நோக்கி முட்டியை ஆட்டி மிரட்டியவாறு கத்தினான்.

வேலியைத் தாவி வீட்டுக்கு ஓடுகையில் அவன் கண்முன் இருப்புச் சட்டிதென்பட்டது, அதில் மீஷா வறுக்கப்பட்டுக் கொண்டிருந்தான்.... உட்கார முடியாதபடி ஒரே சூடு. சுற்றிலும் புளித்த பாலாடை குமிழியிட்டு நுரைத்துத் தளபளத்தது. முதுகில் எறும்புகள் ஊர்வது போலப் புல்லரித்தது. சீக்கிரம் தாத்தாவிடம் போய்க் கேட்டு அறிய வேண்டுமென்று துடித்தான்....

அவனுடைய துரதிர்ஷ்டம், சுற்றுவேலியின் அழிக்கதவில் பன்றி சிக்கிக்கொண்டிருந்தது. தலை உள்புறமும் உடல் வெளிப்புறமுமாகத் தரையில் காலூன்றி நின்று, வாலைச் சுழற்றியவாறு காதைக் குடையும்படிக் கீச்சிட்டது. மீஷா அதை விடுவிக்க விரைந்தான். அழிக்கதவைத் திறக்க முயன்றான்—பன்றிக்கு ஈழையிழுக்கத் தொடங்கிற்று. குதிரையேறுவது போல அதன் மேல் உட்கார்ந்தான். பன்றி ஒரு முண்டு முண்டி அழிக்கதவைத் திருகி முறித்துப் பாய்ந்து முன்சென்று முகப்பு வெளிவழியாக அடிகளத்துக்குக் குதித்தோடியது. மீஷா கால் குதிகளால் அதன் விலாவில் இடித்தான். பன்றி படுவேகமாக விரைந்தோடவே மீஷாவின் தலைமயிர் பின்னே பறந்தது.

அடிகளத்தில் மீஷா பன்றி முதுகிலிருந்து இறங்கினன். பார்க்கிருனே, தாத்தா வாசற் படியில் நின்று விரலால் சைகை செய்து அவனை அழைத்தார்.

''என் கிட்டத்தில் வா, என் கண்ணே!''

தாத்தா எதற்காகக் கூப்பிடுகிருர் என்று மீஷா ஊகிக்கவில்லை. இதற்குள் நரகத்து இருப்புச்சட்டி நினைவுக்கு வரவே தாத்தாவிடம் பாய்ந்து ஓடினன்.

''தாத்தா, தாத்தா, நரகத்திலே சைத்தான்கள் உண்டா?''

''உனக்குச் சைத்தான்தான் பிடித்திருக்கிறது! உடம்பின் ஓர் இடத்திலே துப்பி, விளாறினல் ஈரத்தைத் துடைக்கிறேன்!... ஏனடா, கேடு கெட்ட கொள்ளை நோயே, எதற்காக அடா பன்றி மேல் சவாரி பழகினய்?...''

தாத்தா மீஷாவின் சிண்டை வெடுக்கென்று பிடித்துக் கொண்டு, அறையில் இருந்த அம்மாவைக் கூவி அழைத்தார்:

''இந்தா, இங்கே வந்து உன் கெட்டிக்கார மகனைப் பாரேன்!''

அம்மா ஓடி வந்தாள்.

''நீங்கள் எதற்காக அவனை?''

''எதற்காகவாவது? பார்க்கிறேன், இந்தப் பயல் முகப்பு வெளியில் பன்றி மேல் சவாரி செய்கிருன், காற்றில் புழுதி பறக்க அதை விரட்டுகிருன்!...''

''இவன் என்ன, குட்டிபோட்ட பன்றிமேலா சவாரி செய்தான்?'' என்று பதைத்தாள் தாய்.

மீஷா சமாதானம் சொல்வதற்காக வாயைத் திறப்பதற்குள் தாத்தா தன் இடுப்பு வாரைக் கழற்றி, சராய் நழுவி விழாதபடி இடக்கையால் பிடித்துக் கொண்டு வலது கையால் மீஷாவின் தலையைத் தன்முழங்கால்களுக்கு இடையே நுழைத்துக்கொண்டார்.

''பன்றிமேலே சவாரி செய்யாதே!... சவாரி செய்யாதே!...'' என்று கண்டிப்பாகக் கூறிக் கொண்டே வெளுத்து வாங்கினர்.

மீஷா கூச்சலிட நினைத்தான். அதற்குள் தாத்தா முந்திக் கொண்டார்:

''ஏனடா தெருச்சுற்றி நாய்ப்பயலே, அப்பன் மேல் கூட உனக்குப் பரிவு கிடையாதா என்ன? அவன் வழிப்பயணத்தால் செத்துச் சாவடைந்து உறங்குவதற்காகப் படுத்திருக்கிருன், நீ கூச்சலா போடுகிருய்?'' என்று உருக்கினர்.

மீஷா வாயை மூடிக்கொள்ள வேண்டியதாயிற்று. தாத்தாவைக் காலால் உதைக்க முயன்றுன். ஆனல் கால் எட்டவில்லை. தாயார் மீஷாவைப் பிடித்து வீட்டுக்குள் தள்ளிக்கொண்டு போனள்.

''உட்கார் இங்கே, உன் அம்மாவை நூறு சைத்தான்கள் வாரிக்கொண்டு போக!... நான் மட்டும் உன்னைப் பிடித்தேனே, தாத்தா மாதிரித் தோலை விட்டுவைக்க மாட்டேன்! உரித்தெடுத்து விடுவேன், உரித்து!'' என்றுர்....

தாத்தா சமையலறையில் விசுப்பலகை மேல் உட்கார்ந்து மீஷாவின் முதுகை எப்போதாவது ஒரு தரம் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

மீஷா தாத்தாவின் பக்கம் திரும்பி, கடைசிக் கண்ணீரைப் புறங்கையால் தேய்த்துத் துடைத்து விட்டுக் கதவில் சாய்ந்து கொண்டு சொன்னன்:

''இருக்கட்டும் தாத்தா... பார்த்துக்கொண்டே இரு!''

''நீ என்னடா இது, கழிசடைப் பயலே, தாத்தாவை மிரட்டுகிருயா?''

தாத்தா மறுபடியும் இடுப்புவாரைக் கழற்றுவதைப் பார்த்த மீஷா, நேரம் இருக்கையிலேயே கதவைச் சிறிது திறந்துவைத்துக் கொண்டான்.

''அப்படியாளுல் நீ என்னை மிரட்டவா செய்கிருய்?'' என்று மறுபடியும் கேட்டார் தாத்தா.

மீஷா ஒரேயடியாகக் கதவுக்குப் பின்னே மறைந்துகொண்டான். இடுக்கு வழியாகப் பார்த்து, தாத்தாவின் ஒவ்வோர் அசைவையும் மிக உன்னிப்பாகக் கவனித்தான். அப்புறம் உரக்கக் கூறினன்:

''இரு, இரு, தாத்தா!... இதோ உன் பற்கள் விழுந்து விடும். அப்போது நான் உனக்காகச் சவைத்துக் கொடுக்க மாட்டேன். என்னிடம் அப்பொழுது கேட்டுப் பயனில்லை!''

தாத்தா வாசலுக்கு வந்து பார்த்தார். காய்கறித் தோட்டத்தின் வழியாகவும், பசிய இலைகள் அடர்ந்து தழைத்து ஆளிச் செடிகளுக்கு இடையேயும் மீஷாவின் தலை அமிழ்வதையும் நீலக் காற்சட்டை பளிச்சிடுவதையும் கண்டார். நெடுநேரம் வரை தடியைக் காட்டி அவனை அச்சுறுத்திக் கொண்டிருந்தார் தாத்தா. ஆனல் அவரது தாடிக்குள் புன்னகை மிளிர்ந்தது.

* * *

தகப்பனுக்கு அவன் மீஷாக் குட்டி. தாய்க்கோ, மீஷாக் கண்ணு. தாத்தாவுக்கு — கொஞ்சம் நிமிடங்களில் — குட்டிச் சாத்தான். தாத்தாவின் நரைத்த புருவ மயிர்கள் கண்கள் மேல் தொங்கும் மற்ற நேரங்களில் ''ஐயா, மீஷா அவர்களே, வாரும் இங்கே, உம் காதைத் திருகுகிறேன்!''

மற்றவர்கள் எல்லோருக்கும், வீண்வம்பு அளக்கும் அண்டை அயலாருக்கும் சிறுவர்களுக்கும் வட்டாரம் முழுவதற்குமே அவன் மீஷ்க்கா அல்லது ''சோரபுத்திரன்.''

மணம் ஆகும் முன்பே அவனைப் பெற்றெடுத்தாள் தாய். குழந்தைக்குத் தகப்பனை மேய்ப்பன் ஃபமாவுடன் இதற்கு ஒரு மாதத்திற்கெல்லாம் அவளுக்குத் திருமணம் நடந்துவிட்டது என்ருலும் ''சோரபுத்திரன்'' என்ற கேலிப் பெயர் சிழ்க்கட்டி போல மீஷாவுடன் ஒட்டிக்கொண்டு வாழ்நாள் முழுவதும் அவனுக்கு நிலைத்துவிட்டது.

மீஷாவுக்குச் சிறு கூடான மேனி. அவன் தலை மயிர் இளவேனில் காலத் தொடக்கத்தில் மலர்ந்த சூரியகாந்தி இதழ்கள் போல் இருக்கும். ஜூன் மாதம் சூரியன் அதை வெயிலால் பொசுக்கி, பல நிறப் பறட்டைக் கற்றைகள் ஆக்கி விடும். அவனுடைய கன்னங்கள் குருவி முட்டைபோல மச்சங்களால் நிறைந் திருக்கும். அவனுடைய மூக்கு வெயிலாலும் ஓயாமல் குளத்தில் நீந்திக் குளிப் பதனாலும் தோலுரிந்து சிதல் சிதலாக வெடித்திருக்கும். கெந்துகாலன் மீஷா விடம் இருந்த ஒரே நல்ல அம்சம் அவனுடைய விழிகளே. குறுகிய கண் குழிகளுக்குள் இருந்து உருகாத ஆற்றுப் பனிக்கட்டி மணிகள் போல நீல நிறத்துடன் குறும் புத்தனம் சொட்ட அவை வெளியே நோக்கும்.

இந்தக் கண்களுக்காகவும் முரட்டுத்தனமான துருதுருப்புக்காகவும் தான் தகப்பனுக்கு மீஷா மேல் அன்பு. இராணுவ சேவையிலிருந்து திரும்புகையில் அவன் மகனுக்குப் பரிசாக மிக மிகப் பழைய, காலம் கடந்ததால் கடுக்கிட்டுப் போன பிஸ்கோத்துப் பணியாரமும் ஓரளவு உபயோகித்த நெடுஞ் சோடு களும் கொண்டு வந்திருந்தான். நெடுஞ் சோடுகளைத் தாயார் துவாலையில் சுற்றிப் பெட்டிக்குள் பதனப்படுத்திவிட்டாள். பிஸ்கோத்துப் பணியாரத் தையோ மீஷா அன்றே மாலையில் நிலைப்படியில் சம்மட்டியால் உடைத்து நொறுக்கி ஒரு துணுக்கு மிச்சம் இல்லாமல் தின்று தீர்த்து விட்டான்.

மறுநாள் சூரியன் உதிக்கும் போதே மீஷா விழித்து எழுந்துவிட்டான். இரும்புப் பாத்திரத்திலிருந்து வெது வெதுப்பான நீரைக் கையால் எடுத்து, கன்னங்களிலிருந்த முந்திய நாள் அழுக்கைத் தேய்த்துப் பரப்பிக்கொண் டான். உலர்வதற்காக முகப்பு வெளிக்கு ஓடினன்.

அம்மா மாட்டுக்கொட்டிலில் காரியமாக இருந்தாள். தாத்தா வெளிச் சுவரை ஒட்டிய மண் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். மீஷாவைக் கூப்பிட் டார்.

''இந்தா, குட்டிச்சாத்தான், களஞ்சியத்துக்கு அடியில் புகுந்து பார். கோழி அங்கே கொக்கரித்துக் கொண்டிருந்தது. கட்டாயம் முட்டை இட்டிருக்கும்'' என்ருர்.

தாத்தாவுக்குத் தொண்டு செய்ய மீஷா எப்போதும் ஆயத்தமாய் இருந் தான். தவழ்ந்து களஞ்சியத்துக்கு அடியில் நுழைந்து மறுபுறம் வெளி வந்து சிட்டாய்ப் பறந்து விட்டான்! காய்கறித் தோட்டத்தை மிதித்துத் துவைத் துக்கொண்டு, தாத்தா பார்க்கிருரா என்று திரும்பி நோக்கியவாறு குளத் திற்கு ஓட்டமெடுத்தான். வேலிவரை ஓடுவதற்குள் காஞ்சொறிச் சுணைகள் அவன் கால்களில் அப்பிவிட்டன. அங்கே தாத்தா அவனை எதிர்பார்த்து முக்கி முனகிக்கொண்டு காத்திருந்தார். அப்புறம் பொறுக்கமுடியாமல் போகவே களஞ்சியத்துக்கு அடியில் நுழைந்தார். கோழி எச்சத்தை மேலெல்லாம் தீற்றிக்கொண்டார். புழுக்கம் நிறைந்த இருளில் முகத்தைச் சுளித்துக்

கொண்டு, குறுக்குச் சட்டங்களில் தலையை வலியெடுக்கும்படி இடித்துக் கொண்டு கடைசிவரை ஊர்ந்து சென்றார்.

''வடிகட்டின முட்டாள் அடா நீ, மீஷா, மெய்யாகவேதான்!... தேடு தேடென்று தேடுகிறாய், ஒரு பயன் இல்லாமல்!... எங்காவது கோழி இந்த இடத்தில் முட்டையிடுமா? இதோ இங்கே, கல்லுக்கு அடியிலே இருக்க வேண்டும் முட்டை. நீ எங்கே ஊர்ந்து கொண்டிருக்கிறாய், குட்டிச்சாத்தான்?''

தாத்தாவுக்குக் கிடைத்த பதில் நிசப்தம்தான். காற்சட்டையில் ஒட்டிக் கொண்டிருந்த எச்ச உண்டைகளைத் தட்டி உதறிப் போக்கிவிட்டுக் களஞ்சியத்துக்கு அடியிலிருந்து வெளியே வந்தார். கண்களைச் சுருக்கிக் கொண்டு நெடுநேரம் குளத்தின் பக்கம் நோக்கி மீஷாவைக் கண்டு கொண்டு கையை ஆட்டினார்....

குளத்தின் அருகே சிறுவர்கள் மீஷாவைச் சூழ்ந்துகொண்டு கேள்விகள் கேட்கலானார்கள்:

''உன் தகப்பனார் சண்டைக்குப் போனாரா?''

''போனார்.''

''அங்கே அவர் என்ன செய்தார்?''

''அது தெரிந்ததுதானே—சண்டை போட்டார்!...''

''கதைவிடுகிறாய்!... அவர் அங்கே பேன் குத்திக்கொண்டிருந்தார், சமையலறையில் எலும்புகளைக் கறுவினார்!...''

சிறுவர்கள் கெக்கலி கொட்டி நகைத்தார்கள், மீஷாவை விரல்களால் சுட்டினார்கள், சுற்றிலும் குதித்தாடினார்கள். கொடுந் துன்பத்தால் மீஷாவின் விழிகளில் கண்ணீர் ஊற்றெடுத்தது. போதாக் குறைக்குப் பாதிரிமகன் வீத்யா வேறு அவனைக் கடுமையாகப் புண்படுத்தினான்.

''ஆமாம், உன் தகப்பனார் கம்யூனிஸ்டா?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது....''

''எனக்குத் தெரியும், அவர் கம்யூனிஸ்ட் என்பது. அவர் தன் ஆன்மாவைச் சைத்தானுக்கு விற்றுவிட்டார் என்று என் அப்பா இன்று காலையில் சொன்னார். எல்லாக் கம்யூனிஸ்டுகளையும் சீக்கிரமே தூக்கிலிட்டுவிடுவார்கள் என்றும் சொன்னார்.''

குழந்தைகள் பேசாதிருந்தார்கள். மீஷாவுக்கோ நெஞ்சில் சுரீரென்று தைத்தது. அவன் அப்பாவைத் தூக்குப் போடப் போகிறார்களாமே, எதற்காக? பற்களை இறுக அழுத்திக் கொண்டு சொன்னான்:

''எங்க அப்பாகிட்டே ரொம்பப் பெரிய துப்பாக்கி இருக்கிறதே, அவர் எல்லா பூர்ஷுவாக்களையும் கொன்று போட்டுவிடுவாரே!''

வீத்யா ஒரு காலை முன்னே வைத்து, ''அவர் கை அவ்வளவுக்கு நீளாது!

அப்பா அவருக்குப் புனித ஆசி அளிக்க மாட்டார். புனிதத்தன்மை இல்லாமல் அவரால் ஒன்றுமே செய்ய ஏலாது!'' என்று பெருமிதத்துடன் கூறினுன்.

கடைக்காரன் மகன் புரோஷ்கா மூக்கை விடைத்துக் கொண்டு மீஷாவின் மார்பில் இடித்தான்.

''நீ உன் தகப்பனுர் பெருமையைப் பீற்ருதே! புரட்சி கிளம்பியதும் அவர் என் அப்பாவிடம் சாமான்களைப் பறித்துக் கொண்டபோது 'ஆட்சி மட்டும் மாறட்டும், அப்போது இந்த மேய்ப்பன் ஃபமாவை முதலாவதாகக் கொன்று விடுகிறேன்!'' என்று என் அப்பா சொன்னுர்.''

புரோஷ்காவின் தங்கை நத்தாஷா காலைத் தொப்பென்று தரையில் அடித்தாள்.

''பையன்களா, என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்! நொறுக்குங்கள் இவனை!'' என்று கூவினுள்.

''நொறுக்கு கம்யூன்காரன் மகனை!...''

''சோரபுத்திரன்!...''

''சக்கை சாருக வாங்கு இவனை, புரோஷ்கா!''

புரோஷ்கா பிரம்பை வீசியாட்டி மீஷாவின் தோள்மேல் அடித்தான். பாதிரி மகன் வீத்யா காலை இடறினுன். மீஷா பின்னே சாய்ந்து தடாரென்று மணலில் விழுந்தான்.

சிறுவர்கள் காட்டுக்கூச்சல் போட்டுக் கொண்டு அவன் மேல் பாய்ந்தார்கள். நத்தாஷா மென் குரலில் கீச்சிட்டுக் கொண்டே மீஷாவின் கழுத்தில் நகங்களால் பிருண்டினுள். எவனே மீஷாவின் வயிற்றில் வலியுண்டாகும்படி உதைத்தான்.

மீஷா புரோஷ்காவைத் தன்மேலிருந்து உதறித் தள்ளி விட்டுத் துள்ளி எழுந்து முயல் நாய்களுக்குப் போக்குக் காட்டுவது போல மணலில் வளைந்து நெளிந்து ஓடி வீட்டுக்குப் பரிந்தான். சிறுவர்கள் பின்னுலிருந்து சீழ்க்கை அடித்தார்கள், யாரோ கல் எறிந்தான், ஆனுல் துரத்திக் கொண்டு வரவில்லை.

ஆளிச்செடிகளின் அடர்ந்து மண்டிய கூரிய பச்சிலைகள் தலையில் பட்டதுந் தான் மீஷாவுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. மணம்வீசும் ஈரத் தரையில் உட்கார்ந்து, பிருண்டப்பட்ட கழுத்திலிருந்து இரத்தத்தைத் துடைத்துவிட்டு வாய்விட்டு அழுதான். மேலே, இலைகளின் ஊடாகப் புகுந்து வந்த சூரியன் மீஷாவின் கண்களுக்குள் எட்டிப்பார்க்க முயன்றது, கன்னங்களில் வழிந்திருந்த கண்ணீரை உலர்த்தியது, பறட்டைச் சடைக் கற்றைகள் அடர்ந்த அவனுடைய உச்சந்தலையில் அம்மாவைப்போலக் கொஞ்சலாக முத்தமிட்டது.

கண்ணீர் அடங்கி உலரும்வரை, வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். அப்புறம் எழுந்திருந்து மெதுவாக வீட்டுக்கு நடந்தான்.

கொட்டகையில் அப்பா வண்டிச் சக்கரங்களுக்குத் தார் பூசிக் கொண்டிருந்தான். அவனுடைய தொப்பி பிடர்த் தலைக்குப் போய் விட்டது, நாடாக்

கள் தொங்கின, மார்பில் வெள்ளைக் கோடுகள் போட்ட நீலச் சட்டை இலகியது. மீஷா ஒரு பக்கமாகக் கிட்டே போய் வண்டி அருகே நின்றான். வெகு நேரம் பேசாதிருந்தான். கொஞ்சம் துணிவடைந்து தகப்பனின் கரத்தைத் தொட்டான்.

''அப்பா, நீ சண்டையில் என்ன செய்தாய்? '' என்று தணிந்த குரலில் வினவினான்.

தகப்பன் செம்பழுப்பு மீசைக்குள் முறுவலித்து, ''போரிட்டேன், மகனே!'' என்றான்.

''ஆனால் பையன்கள்... பையன்கள் சொல்லுகிறார்கள், நீ, அங்கே பேன்களை மட்டும்தான் சுடக்கினாயாம்!...''

கண்ணீர் மீண்டும் மீஷாவின் தொண்டையில் அடைத்துக் கொண்டது. தகப்பன் கடகடவென்று சிரித்து மீஷாவைக் கையில் தூக்கிக் கொண்டான்.

''பொய் சொல்லுகிறார்கள் அவர்கள், என் கண்ணே! நான் கப்பலில் படை வேலை செய்தேன். பெரிய கப்பல் கடலில் போகும், அதில்தான் நான் வேலை செய்தேன். அப்புறம் சண்டை போட்டேன்.''

''யாரோடு நீ சண்டை போட்டாய்?''

''பணக்கார கனவான்களோடு சண்டை போட்டேன், என் அருமை மகனே. நீ இன்னும் சின்னவன், அதனால் உனக்காக நான் போர்முனைக்குப் போகவேண்டி வந்தது. இதைப் பற்றிப் பாட்டுக்களும் பாடுகிறார்களே.''

அப்பன் புன்னகைத்து, மீஷாவைப் பார்த்துக் கொண்டு காலால் தாளம் போட்டபடி மெல்லப் பாடலானான்:

''ஓ மீஷா, மீஷா ஒன்று கேள் என் மீஷா!
போகாதே நீ போருக்கு, போகட்டும் உன் அப்பன்தான்.
முதியவன் உன் அப்பன், வாழ்ந்து முடித்து விட்டானே....
இளையவன் நீ, இன்னமும் மணம் முடிக்க வில்லையே....''

பையன்கள் தனக்கு ஏற்படுத்திய மனப்புண்ணை மீஷா மறந்துவிட்டுக் கலகலவென்று நகைத்தான். அம்மா துடைப்பம் கட்டும் சைபீரியப் புற்கள் போல அப்பாவின் செம்பழுப்பு மீசை உதட்டுக்கு மேல் குத்திட்டு நின்றதும், மீசைக்கு அடியில் உதடுகள் வேடிக்கையாக அசைந்ததும், வாய் கரிய வட்டக் குழி போலத் திறந்ததுமே அவனுக்குச் சிரிப்பூட்டின.

''நீ இப்போது என் வேலைக்கு இடைஞ்சல் செய்யாதே, மீஷாக் குட்டி. நான் வண்டியைச் செப்பனிடப் போகிறேன். ராத்திரி தூங்கப் போவதற்கு முன் போரைப்பற்றி உனக்கு எல்லாம் சொல்லுகிறேன்!'' என்றான் தகப்பன்.

* * *

2*

ஸ்தெப்பி வெளியில் செல்லும் நீண்ட, அத்து வானமான சாலே போல இழுத்துக் கொண்டு போயிற்று பகல். பொழுது சாய்ந்தது. மந்தை கிராமத்தின் வழியே திரும்பி வந்தது. புழுதி அடங்கிற்று. கருமையாகிவிட்ட வானத்திலிருந்து கூச்சத்துடன் எட்டிப் பார்த்தது முதலாவது விண்மீன்.

மீஷா பொறுமையிழந்து துடித்துக் கொண்டிருந்தான். அம்மாவோ, ஏதோ வேண்டுமென்றே போல, வெகு நேரம் பசுவுடன் பாடு பட்டுக் கொண்டிருந்தாள், வெகு நேரம் பாலே வடிகட்டினுள், நிலவறைக்குள் புகுந்துகொண்டாள். அங்கே சரியாக ஒரு மணி நேரம் என்னவோ குடைந்து கொண்டிருந்தாள். மீஷா அவளருகே நிலேகொள்ளாமல் சுற்றிவந்து கொண்டிருந்தான்.

''சீக்கிரமாகச் சாப்பிடப் போகிறோமா இல்லேயா?''

''எல்லாம் வேளேயில் கிடைக்கும், ஊர்சுற்றிப் பயலே. ஏன், பசியெடுத்து விட்டதோ?...''

மீஷாவோ அவளே விட்டு ஓர் அடிகூடப் பின்தங்கவில்லே. அம்மா நிலவறைக்குள் போனுள், அவனும் பின்னேடு போனுன். அம்மா சமையலறை சென்றுள், அவனும் நிழல் போல் தொடர்ந்தான். அட்டையாய் ஒட்டிக்கொண்டு ஆடைத்தலேப்பில் ஒண்டிக் கொண்டு அம்மா பின்னுலேயே வளேய வந்தான்.

''அம்ம்-மா-ஆ! சீக்-கிரம் சாப்பிடப் போகிறோமா?''

''அட என்னே விட்டுத் தொலேயடா ஒட்டுச் சொறி!... இரையெடுக்க வேண்டும் போலிருந்தால் ரொட்டித் துண்டை எடுத்து விழுங்கேன்!''

ஆனுல் மீஷா ஓயவில்லே. அம்மா கையால் மண்டையில் வாங்கிக்கொண்ட குட்டு கூடப் பயன் அளிக்கவில்லே.

சாப்பாட்டின் போது பால் கஞ்சியை எப்படியோ அவசர அவசரமாகக் குடித்துவிட்டு ஒரு பாய்ச்சலில் அறைக்குப் போய்விட்டான். கால்சட்டையைக் கழற்றிப் பெட்டிக்கு அப்பால் வெகு தூரத்தில் கடாசிவிட்டு, ஓடித் துள்ளிக் கட்டிலில் விழுந்து, பல வண்ண ஒட்டுத்துணிகள் சேர்த்துத் தைத்த அம்மாவின் போர்வைக்குள் புகுந்து கொண்டான். அங்கே ஒளிந்துகொண்டு, போரைப் பற்றிச் சொல்வதற்கு அப்பா எப்போது வருவார் என்று எதிர் பார்த்துக் காத்திருந்தான்.

தாத்தா தெய்வப்படங்களுக்கு முன் நின்று பிரார்த்தனேகளே வாய்க்குள் சொல்லிவிட்டு முடிதரையில் பட வணக்கம் செலுத்தினுர். மீஷா தலேயைத் தூக்கிப் பார்த்தான். தாத்தா சிரமத்துடன் முதுகை வளேத்து, இடதுகை விரல்களேத் தரைப் பலகையில் ஊன்றிக் கொண்டு நெற்றியால் தரையில் டங்கென்று முட்டிக்கொண்டார்! மீஷா அதற்கு இசைந்தாற்போல முழங்கையால் சுவற்றில் டப்பென்று இடித்தான்.

தாத்தா மறுபடி வாய்க்குள் முணுமுணுத்து விட்டு நெற்றியைத் தரை

யில் மோதிக்கொண்டார். மீஷா சுவற்றில் இடித்தான். தாத்தாவுக்குக் கோபம் வந்துவிட்டது. மீஷா பக்கம் திரும்பினர்.

''உன்னே என்ன செய்கிறேன் பார், கடைத்தேரு ஜென்மமே— ஆண்டவா, என்னே மன்னிப்பாயாக!... இன்னெரு தரம் இடி, நான் உன்னேக் குட்டுகிறேன்!'' என்று சீறினர்.

சச்சரவு மூண்டிருக்கும், ஆனல் அதற்குள் அறைக்குள் அப்பன் வந்துவிட்டான்.

''ஏனடா மீஷாக்குட்டி, எதற்காக நீ இங்கே படுத்துக்கொண்டிருக்கிருய்?'' என்று கேட்டான்.

''நான் அம்மா கூடத் தூங்குகிறேன்.''

தகப்பன் கட்டிலில் உட்கார்ந்து பேசாமல் மீசையை முறுக்கினன். அப்புறம், சற்று சிந்தித்து விட்டு, ''நான் உனக்குத் தாத்தாவுடன் பக்கத்து அறையில் படுக்கை போட்டிருக்கிறேனே'' என்றான்.

''தாத்தா பக்கத்தில் நான் படுத்துக்கொள்ள மாட்டேன்.''

''ஏனும்?''

''அவர் மீசையிலிருந்து படு மோசமான புகையிலே நாற்றம் அடிக்கிறது!''

தகப்பன் மறுபடி மீசையை முறுக்கிப் பெருமூச்சு விட்டான்.

''இல்லே மகனே, நீ தாத்தா பக்கத்தில் படுத்துக்கொள் இனிமேல்.''

மீஷா போர்வையைத் தலேக்கு மேல் இழுத்து விட்டுக்கொண்டு ஒற்றைக் கண்ணல் வெளியே பார்த்தவாறு மனத்தாங்கலுடன் சொன்னன்:

''அப்பா, நேற்றைக்குத்தான் நீ என் இடத்தில் படுத்துக் கொண்டாயே. இன்றைக்கு... நீ தாத்தா பக்கத்தில் படுத்துக்கொள்ளேன்....''

கட்டிலில் உட்கார்ந்து கைகளால் தகப்பனின் தலேயைக் கட்டிக்கொண்டு, ''நீ தாத்தா கூடப் படுத்துக்கொள். இல்லாவிட்டால் அம்மா உன் பக்கத்தில் தூங்க மாட்டாள்! உன்னிடமிருந்தும் புகையிலே நெடி அடிக்கிறது!'' என்று கிசுகிசுத்தான்.

''நல்லது அப்படியே ஆகட்டும். தாத்தா கூடப் படுத்துக் கொள்கிறேன். ஆனல் போர் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டேன்.''

தகப்பன் எழுந்து சமையலறைக்குப் போய் விட்டான்.

''அப்பா!''

''ஊம்?''

''சரி, இங்கேயே படுத்துக்கொள்'' என்று பெருமூச்சுடன் சொல்லிவிட்டு மீஷா எழுந்தான். ''யுத்தத்தைப் பற்றிச் சொல்லுவாய் அல்லவா?''

''சொல்லுவேன்.''

தாத்தா சுவரோரமாகப் படுத்துக் கொண்டு, மீஷாவை விளிம்போரமாகப் படுக்கப் போட்டார். சிறிது நேரம் பொறுத்து அப்பா வந்தான்.

பெஞ்சியைக் கட்டிலருகே இழுத்துப் போட்டுக்கொண்டு அதில் உட்கார்ந்து நாற்றச் சுருட்டைப் புகைக்கலானுன்.

''கேள், யுத்தம் எப்படி இருந்தது என்று... நமது அடிகளத்துக்குப் பின்னுலே கடைக்காரனின் வயல் இருந்ததே ஒருகாலத்தில், நினைவு இருக்கிறதா?...''

மணம் கமழும், உயரமான கோதுமைப் பயிருக்கிடையே முன்னர் தான் ஓடிச் சாடியது மீஷாவுக்கு நினைவு வந்தது. அடிகளத்தின் தடுப்புக் கற்சுவர் மேல் ஏறி அப்பால் குதிப்பான், அங்கே கோதுமை வயல். கோதுமைப் பயிர் அவன் தலையை மூடிவிடும், கனத்த, கருமீசைக் கதிர்கள் அவன் முகத்தில் கிச்சு கிச்சு மூட்டும். புழுதியும் சாமந்தி மலரும் ஸ்தெப்பிக் காற்றும் கலந்த மணம் வீசும்.

''மீஷா, கோதுமை வயலில் ரொம்பத் தூரம் போகாதே, வழி தவறி விடப் போகிறது!'' என்று அம்மா அடிக்கடி சொல்லுவாள்....

தகப்பன் சற்று நேரம் பேசாது இருந்துவிட்டு மீஷாவின் தலையை நோக்கியவாறு சொன்னுன்:

''நீ என்னேடு மணல் குன்றுக்கு வண்டியில் வந்தாயே, நினைவு இருக்கிறதா? நமது கோதுமை அங்கே இருந்தது....''

மறுபடியும் மீஷா நினைவுகளில் ஆழ்ந்தான்: மணல் குன்றுக்கு மறுபுறம், சாலை ஓரமாக இருந்தது, குறுகிய, கோணலான கோதுமை வயல். மீஷா தகப்பனுடன் அங்கே போய்ப் பார்த்த போது வயல் எல்லாம் கால்நடைகளால் மிதித்துத் துவைக்கப்பட்டிருந்தது. கதிர்கள் சேறு மண்டிய குவைகளாகத் தரையோடு நசுக்கித் தேய்க்கப்பட்டுக் கிடந்தன. வெற்றுத் தண்டுகள் மட்டுமே காற்றில் அசைந்தாடின. அவ்வளவு பெரியவனும் பலசாலியுமான தகப்பன் பயங்கரமாக முகத்தைச் சுளித்ததும் அவனுடைய புழுதி படிந்த கன்னங்களில் சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் வழிந்ததும் மீஷாவுக்கு நினைவு வந்தன. அவனைப் பார்த்து மீஷாவும் அப்போது அழுதான்....

திரும்புகாலில் தகப்பன் முலாம்பழத் தோட்டக்காரனிடம், ''சொல்லு ஃபெதோத், என் கோதுமைப் பயிரில் கால்நடைகளை ஓட்டிப் பாழ்படுத்தியவன் யார்?'' என்று கேட்டான்.

முலாம்பழத் தோட்டக்காரன் காலடியில் துப்பினுன்.

''கடைக்காரன் மாடுகளைச் சந்தைக்கு ஓட்டிச் செல்லும் போது வேண்டுமென்றே உன் வயலில் விரட்டிவிட்டான்'' என்று பதிலளித்தான்....

....தகப்பன் பெஞ்சியைக் கட்டிலுக்கு இன்னும் அருகில் நகர்த்திக் கொண்டு சொல்லத் தொடங்கினுன்:

''கடைக்காரனும் மற்ற எல்லாப் பணக்காரர்களும் நிலம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டு விட்டார்கள். ஏழைகள் விதைத்துப் பயிர் செய்வதற்கு

ஒன்றுமே இல்லை. இந்த மாதிரி நம் ஊர் ஒன்றில் மாத்திரம் அல்ல, எங்குமே இருந்தது. அப்போது அவர்கள் நம்மை ரொம்ப ரொம்பக் கொடுமைப்படுத்தினார்கள்.... பிழைப்பு நடத்துவது அரும்பாடாக இருந்தது. நான் மந்தையை மேய்த்தேன். அப்புறம் இராணுவ சேவைக்கு என்னை எடுத்துக்கொண்டு விட்டார்கள். இராணுவத்தில் என் பாடு மிக மோசமாயிருந்தது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் ஆபீசர்கள் என் முகத்தில் அறைந்தார்கள்.... அப்புறம் போல்ஷெவிக்குகள் வந்தார்கள். அவர்கள் எல்லோரிலும் முதல்வர், லெனின் என்ற பெயருடையவர். பார்ப்பதற்கு என்னவோ அவர் அப்படி ஒன்றும் பிரமாதமானவர் அல்ல, சாதாரணக் குடியானவர்கள் ஆகிய நம்மைச் சேர்ந்தவர் என்றாலும் மூளையில் அறிவாளிகளை எல்லாம் மிஞ்சுபவர். போல்ஷெவிக்குகள் எங்களுக்கு முன்னே வைத்த அபார புத்தி சாதுரியம் நிறைந்த தர்க்கங்களை நாங்கள் திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தோம். 'குடியானவர்களோ, தொழிலாளர்களே, என்ன நீங்கள், தன் நிலை மறந்து வாளாவிருக்கிறீர்கள்?... முதலாளிகளையும் அதிகாரிகளையும் குப்பைத் துடைப்பத்தால் புடைத்து கழுத்தில் கையைக் கொடுத்து நெட்டித் தள்ளி விரட்டுங்கள்! எல்லாம் உங்களுடையது!' என்றார்கள்....

''இந்தச் சொற்களால் அவர்கள் எங்களை வசப்படுத்திவிட்டார்கள். சொத்துக்காரர்களை நாங்கள் விரட்டியடித்துவிட்டோம், மெய்யாகவே. முதலாளிகளிடமிருந்து நிலத்தையும் சொத்துக்களையும் பிடுங்கிக் கொண்டோம். ஆனால் அவர்களுக்குக் கழிசடை வாழ்க்கை திகட்டிப் போய் விட்டது, யுத்தத்தினால் எங்களுக்கு, குடியானவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் எரிச்சல் அளவு கடந்து பொங்கிவிட்டது.... புரிகிறதா மகனே?

''அதே லெனின், அதாவது போல்ஷெவிக்குகளில் முதல்வர், மக்களைத் தட்டி எழுப்பினார்—உழவன் நிலத்தைக் கலப்பையால் உழுது பண்படுத்துவது போல. படைவீரர்களையும் தொழிலாளர்களையும் ஒன்று திரட்டினார், முதலாளிகளை நொறுங்கப் புடைப்பதற்காக! அடேயப்பா, முதலாளிகள் என்ன அடி, என்ன உதை பட்டார்கள்! படைவீரர்களும் தொழிலாளர்களும் செங்காவல் படையினர் என்ற பெயர் பெற்றார்கள். இப்படித்தான் நானும் செங்காவல் படையில் இருந்தேன். நாங்கள் பிரமாண்டமான மாளிகையில் வசித்தோம். ஸ்மோல்னிய் என்பது அதன் பெயர். மகனே, அங்கே முகப்புக் கொட்டகை ரொம்ப நீளம், அறைகள் எத்தனை எத்தனையோ, அதனால் வழி தவறக் கூடும், அவ்வளவு நிறைய.

''ஒரு நாள் ராத்திரி நான் வாசலில் நின்று காவல் செய்து கொண்டிருந்தேன். வெளியில் கடுங்குளிர். என்னிடமோ, ஒரு மேல்கோட்டு மட்டுமே. கீழே தள்ளி விடும் போலக் காற்று... அந்த வீட்டிலிருந்து இரண்டு ஆட்கள் வெளியே வந்து என்னைக் கடந்து சென்றார்கள். அவர்கள் என்னை நெருங்கி

யதும் அவர்களில் ஒருவர் லெனின் என்று நான் கண்டுகொண்டேன். அவா என் பக்கத்தில் வந்து, 'உமக்குக் குளிராயில்லையா, தோழரே?' என்று பரிவோடு கேட்டார்.

" 'இல்லை, தோழர் லெனின். இந்தக் குளிர் மட்டும் அல்ல, எப்பேர்ப்பட்ட பகைவர்களும் நம் உறுதியைத் தகர்க்க முடியாது! நாம் ஆட்சி அதிகாரத்தை நம் கையில் எடுத்துக்கொண்டது அதை பூர்ஷ்வாக்களிடம் ஒப்படைப்பதற்காக இல்லையே!...' என்று நான் அவரிடம் சொன்னேன்.

"அவர் கடகட வென்று சிரித்து என் கையைப் பற்றி அழுத்திக் குலுக்கினர். அப்புறம் மெள்ள வாயில் பக்கம் நடந்து போய்விட்டார்."

தகப்பன் சற்று நேரம் பேசாதிருந்தான், கோட்டுப் பைக்கு உள்ளிருந்து புகையிலைப் பையை எடுத்தான், காகிதத்தைச் சரசரக்கச் செய்தான், புகை பிடிப்பதற்காகத் தீக்குச்சியைக் கிழித்தான். அவனுடைய குத்திட்ட செம்பழுப்பு மீசைமேல், காலை வேளையில் காஞ்சொறி இலை மேல் தொங்குமே பனித்துளி, அதைப் போன்ற, தூய, பளபளப்பான கண்ணீர்த் துளியை அப்போது மீஷா கண்டான்.

"அப்பேர்ப்பட்டவராக்கும் அவர். எல்லார் விஷயத்திலும் கவலை எடுத்துக்கொண்டார். ஒவ்வொரு சிப்பாயின் நலத்துக்காகவும் உளமாரப் பாடுபட்டார்.... இதற்குப் பிறகு நான் அவரை அடிக்கடி கண்டேன். என்னைக் கடந்து போகும் போது, தூரத்திலிருந்தே என்னைப் பார்த்து, புன்னகை செய்வார்.

" 'அப்படியானல் பூர்ஷ்வாக்களால் நம் உறுதியைத் தகர்க்க முடியாது என்கிறீர்களா, ஊம்?' என்று கேட்பார்.

" 'அவர்களுக்குக் கையாலாகாது, தோழர் லெனின்!' என்பேன்.

"அவர் சொன்னபடியேதான் ஆயிற்று, மகனே! நிலத்தையும் தொழிற்சாலைகளையும் நாம் எடுத்துக்கொண்டோம், பணக்காரர்களை — நம் இரத்தத்தை உறிஞ்சியவர்களை—இடுப்பில் உதைத்து விரட்டி விட்டோம்!... நீ பெரியவன் ஆன பிறகு மறந்துவிடாதே—உன் அப்பன் கடற்படை வீரனுக இருந்தான், கம்யூனிஸ சமூகத்துக்காக நான்கு வருஷங்கள் உதிரம் பெருக்கினேன் என்பதை. ஆண்டுகள் சென்ற பின்பு நானும் இறந்து போவேன், லெனினும் காலமாகி விடுவார். ஆனல் எங்கள் செயல் என்றென்றைக்கும் வாழும்!... நீ பெரியவன் ஆனதும் சோவியத் ஆட்சி அதிகாரத்திற்காக உன் அப்பன் போரிட்டது போலவே போரிடுவாயா?"

"போரிடுவேன்!" என்று கத்தினன் மீஷா. கட்டிலில் துள்ளி எழுந்தான், நின்று தகப்பன் கழுத்தைக் கட்டிக் கொள்ள விரும்பியவன், அண்டையில் தாத்தா படுத்திருப்பதை மறந்து அவருடைய வயிற்றை மிதித்துவிட்டான்.

தாத்தா போட்டாரே கூச்சல்! கையை நீட்டி மீஷாவின் மண்டையில் குட்ட வந்தார், ஆனல் தகப்பன் மீஷாவைத் தூக்கி அறைக்கு எடுத்துப் போய் விட்டான்.

மீஷா அவன் கைகளிலேயே உறங்கிப் போனான். விசித்திர மனிதர் லெனினைப் பற்றியும் போல்ஷெவிக்குகளைப் பற்றியும் யுத்தத்தைப் பற்றியும் கப்பல்களைப் பற்றியும் ஆரம்பத்தில் நீண்ட நேரம் எண்ணமிட்டான். தொடக்கத்தில் தூக்கத்திற்கிடையே அடங்கிய குரல்களைக் கேட்டான், வியர்வை, புகையிலை ஆகியவற்றின் இனிய மணத்தை முகர்ந்தான், அப்புறம் கண்கள் செருகிக்கொண்டன, யாரோ உள்ளங்கைகளால் அழுத்தியதுபோல இமைகள் ஒட்டிக்கொண்டன.

தூங்குவதற்கு முன் கனவில் ஒரு நகரைக் கண்டான்: வீதிகள் அகலமானவை. கோழிகள் சிதறிய சாம்பலில் குளிக்கின்றன. கிராமத்திலேயே கோழிகள் ஏராளம், நகரத்திலோ இன்னும் எவ்வளவோ அதிகம். வீடுகள் அப்படியே அப்பன் வருணித்தவை போலவே: ரொம்பப் பெரிய வீடு, புத்தம் புது நாணல் வேய்ந்தது. அதன் புகைப்போக்கியின் மேல் இன்னொரு வீடு, அந்த வீட்டின் புகைப்போக்கி மேல் இன்னும் ஒன்று, எல்லாவற்றுக்கும் மேலே உள்ள வீட்டின் புகைப்போக்கி நேரே ஆகாயத்துக்குள்ளே துளைத்துக் கொண்டு போயிருக்கிறது.

மீஷா வீதியோடு போகிறான். தலையைத் தூக்கிச் சுற்றுமுற்றும் பார்க்கிறான். திடுதிப்பென்று எங்கிருந்தோ அவனுக்கு எதிரே கன வேகமாக வருகிறார் உயரமான மனிதர், சிவப்புச் சட்டை போட்டுக்கொண்டு.

''ஏனப்பா, மீஷா, எதற்காக வெட்டியாகச் சுற்றிக்கொண்டிருக்கிறாய்?'' என்று மிகவும் கனிவுடன் கேட்கிறார்.

''தாத்தா என்னை விளையாட விட்டிருக்கிறார்'' என்று மீஷா பதில் சொல்லுகிறான்.

''நான் யார் என்பது உனக்குத் தெரியுமா?''

''இல்லை, தெரியாது.''

''நான்தான் தோழர் லெனின்!''

மீஷாவின் முழங்கால்கள் திகிலால் துவண்டு வளைகின்றன. கம்பி நீட்டப் பார்க்கிறான். ஆனால் சிவப்புச்சட்டைக்காரர் அவன் சட்டைக் கையைப் பற்றிக்கொள்கிறார்.

''மீஷா, உனக்குக் கடுகத்தனைகூட வெட்கம் இல்லை! நான் ஏழைகளுக்காகப் போராடுகிறேன் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் நீ என் படைவீரனாகச் சேரமாட்டேன் என்கிறாயே, ஏனாம்?'' எனக் கேட்கிறார்.

''தாத்தா என்னை விட மாட்டேன் என்கிறார்'' என்று சப்பைகட்டுகிறான் மீஷா.

''நல்லது, உன் இஷ்டம். ஆனால் நீ இல்லாமல் என் வேலை ஒழுங்குபட மாட்டேன் என்கிறது! நீ என் படை வீரனாகச் சேர வேண்டியதுதான், எல்லாம் சரியாகிவிடும்!'' என்று சொல்லுகிறார் தோழர் லெனின்.

மீஷா அவர் கையைப் பிடித்துக்கொண்டு மிகவும் உறுதியாகக் கூறு கிருன்:

''சரி, ஆகட்டும். நான் அனுமதி இல்லாமலே உன் படைவீரனுகச் சேர்ந்து கொண்டு ஏழை மக்களுக்காகப் போரிடுவேன். ஆனல் இதற்காகத் தாத்தா என்னை மிலாறினுல் அடிக்க வந்தால் அப்போது நீ எனக்குப் பரிந்து பேச வேண்டும்!...''

''கட்டாயமாகப் பரிந்து பேசுகிறேன்!'' என்று சொல்லிவிட்டு வீதியோடு போய்விட்டார் தோழர் லெனின். சந்தோஷ மிகுதியால் தனக்கு மூச்சு திணறு வதையும் தான் திக்குமுக்காடுவதையும் மீஷா உணர்ந்தான். ஏதோ கத்த வாயெடுத்தான் ஆனல் நாக்கு வறண்டு போயிருந்தது....

மீஷா படுக்கையில் நடுங்கினுன், தாத்தாவைக் கால்களால் உதைத்தான், பின்பு விழித்துக்கொண்டான்.

தாத்தா தூக்கத்தில் முனகியவாறு உதடுகளை மென்ருர். குளத்துக்கப்பால் வானம் மென்மையாக வெளுப்பதும் கிழக்கிலிருந்து மிதந்துவரும் மேகங்கள் ரோஜா நிற இரத்த நுரை போலச் சுருண்டு படர்வதும் ஜன்னல் வழியே புலனுயின.

* * *

அன்றுமுதல் ஒவ்வோர் இரவிலும் தகப்பன் மீஷாவுக்கு யுத்தத்தைப் பற்றியும் லெனினைப் பற்றியும் தான் போன இடங்களைப் பற்றியும் கதை கதையாய்ச் சொல்லுவான்.

சனிக்கிழமை மாலையில் நிர்வாகக் கமிட்டிக் காவலன், குள்ளமான ஒரு மனிதரை வீட்டுக்கு இட்டுவந்தான். அந்த மனிதர் ராணுவ மேல் கோட்டு அணிந்திருந்தார், நீளமான தோல்பையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண் டிருந்தார்.

காவலன் தாத்தாவை அருகே அழைத்து, ''சோவியத் ஊழியரான இந்தத் தோழரை உங்கள் வீட்டுக்குக் கூட்டி வந்திருக்கிறேன். இவர் நகரத் திலிருந்து வந்திருக்கிருர், நம் ஊரில் இராத் தங்குவார். அவருக்கு உங்கள் வீட்டில் சாப்பாடு போடுங்கள், தாத்தா'' என்ருன்.

''அதற்கு ஒன்றும் தடையில்லை. ஆனல் ஸ்ரீமான் தோழரே, உங்களிடம் ஆணைப் பத்திரம் இருக்கிறது அல்லவா?'' என்று கேட்டார் தாத்தா.

தாத்தாவின் கல்வியறிவு மீஷாவை வியப்பில் ஆழ்த்தியது. வாயில் விரலை வைத்துக்கொண்டு பேச்சைக் கேட்பதற்காக நின்ருன்.

''இருக்கிறது, தாத்தா, எல்லாம் இருக்கிறது!'' என்று சொல்லி விட்டுத் தோல்பைக்காரர் அறைக்குள் போனுர்.

தாத்தா அவரைத் தொடர்ந்தார், மீஷா தாத்தாவைத் தொடர்ந்தான்.

''நீங்கள் என்ன காரியமாக எங்கள் ஊருக்கு வந்திருக்கிறீர்கள்?'' என்று வழியில் கேட்டார் தாத்தா.

''மறுதேர்தலை நடத்திவைப்பதற்காக வந்திருக்கிறேன். கிராம சோவியத் தலைவரையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்கப் போகிறோம்.''

சற்று நேரத்துக்குப் பின் அப்பன் அடிகளத்திலிருந்து வந்தான். வேற்ருளுக்கு முகமன் கூறி விட்டுச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யும்படி அம்மாவிடம் சொன்னான். சாப்பிட்ட பிறகு அப்பனும் வேற்ருளும் பெஞ்சில் அக்கம் பக்கமாக உட்கார்ந்து கொண்டார்கள். வேற்ருள் தோல்பைக் கொக்கியைக் கழற்றி அதற்குள்ளிருந்து ஒரு காகிதக் கட்டை எடுத்து அப்பனுக்குக் காட்டத் தொடங்கினார். மீஷாவால் ஆவலை அடக்க முடியவில்லை. பக்கத்தில் இடுங்கி நெளிந்து கொண்டு எட்டிப் பார்க்க முயன்றான். தகப்பன் ஒரு காகிதத்தை எடுத்து மீஷாவுக்குக் காட்டினான்.

''பார் மீஷா, இவர்தான் லெனின்!''

மீஷா தகப்பன் கையிலிருந்து அட்டைக் காகிதத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு அதைக் கண்ணாரப் பருகினான். வியப்பினால் அவன் வாய் திறந்துவிட்டது. நின்று கொண்டிருக்கும் ஒரு மனிதரின் முழு உருவமும் காகிதத்தில் பதிந்திருந்தது. அவர் உயரமற்றவர், சிவப்புச் சட்டைகூட இல்லை, சாதாரணக் கோட்டுத்தான் போட்டிருந்தார். ஒரு கையைக் காற்சட்டைப் பைக்குள் நுழைத்திருந்தார், மற்றக் கையால் முன்னே எதையோ சுட்டிக் கொண்டிருந்தார். மீஷா அவர்மீது பார்வையை நாட்டினான், ஒரே கணத்தில் யாவற்றையும் உணர்ந்து கொண்டான்; வளைந்த புருவங்கள், பார்வையிலும் உதடுகளின் ஓரங்களிலும் மறைந்திருந்த புன்னகை ஆகியவற்றை உறுதியாக, மொத்தமாக, என்றென்றைக்கும் நினைவில் பதித்துக்கொண்டான். முகத்தின் ஒவ்வொரு தோற்றச் சிறப்பையும் ஞாபகத்தில் இருத்திக்கொண்டான்.

வேற்ருள் மீஷா கையிலிருந்து அட்டைக் காகிதத்தை எடுத்துத் தோல் பைக்கு உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுத் தூங்கப் போனார். உடைகளைக் கழற்றிவிட்டுப் படுத்து மேல்கோட்டால் உடம்பைப் போர்த்துக்கொண்டு உறங்கத் தொடங்கியவர், கதவு கிறீச்சிடுவதைக் கேட்டுத் தலையைத் தூக்கினார்.

''யார் அது?''

தரையில் யாரோ வெறுங்கால்களால் நடக்கும் ஓசை கேட்டது.

''யார் அங்கே?'' என்று மறுபடி வினவினார். கட்டிலின் அருகே திடீரென மீஷாவைக் கண்டார்.

''உனக்கு என்ன வேண்டும், பையா?''

மீஷா நிமிட நேரம் பேசாது நின்று கொண்டிருந்தான். பின்பு தைரியத்தை

வரவழைத்துக் கொண்டு, ''நீ மாமா, வந்து... நீ இருக்கிறுயே... லெனினை எனக்குக் கொடு!'' என்று கிசுகிசுத்தான்.

வேற்ருள் மௌனமாக, கட்டிலிருந்து தலையைத் தொங்கப் போட்டு மீஷாவை உற்றுநோக்கினுர்.

மீஷாவைத் திகில் பற்றிக்கொண்டது. ஒரு வேளை கஞ்சத்தனம் பண்ணிக் கொண்டு கொடுக்க மறுத்து விடுவாரோ? குரல் நடுக்கத்தை அடக்கிக் கொள்ள முயன்றவாறு, அவசரப்பட்டதனுல் புரையேற, தணிந்த குரலில் சொன்னுன்:

''நீ லெனினை எனக்கே எனக்குக் கொடுத்து விடு, நான் உனக்கு... நான் உனக்கு நல்ல தகர டப்பாவை இனுமாகத் தருகிறேன்.... இன்னும் எல்லாப் பகடைக் காய்களேயும் கொடுத்துவிடுகிறேன்...''—மீஷா மனச்சோர்வுடன் கையை உதறி—''எனக்கு அப்பா கொண்டுவந்தாரே நெடுஞ்சோடு, அதையும் உனக்கே தந்துவிடுகிறேன்!'' என்ருன்.

''ஆமாம், உனக்கு எதற்காக லெனின்?'' என்று புன்னகையுடன் வினவினுர் அன்னியர்.

''கொடுக்க மாட்டார்!'' என்ற எண்ணம் மீஷாவின் மனதில் பளிச்சிட்டது. கண்ணீர் தெரியக்கூடாது என்பதற்காகத் தலையைக் குனிந்து கொண்டு, ''எதற்காக என்ருல், வேண்டும்!'' எனக் கம்மிய குரலில் கூறினுன்.

வேற்ருள் வாய்விட்டுச் சிரித்து, தலையணைக்கு அடியிலிருந்து தோல் பையை எடுத்து, மீஷாவுக்கு லெனின் படத்தைக் கொடுத்தார். மீஷா அதைச் சட்டைக்கு உள்ளே மார்பின்மீது, நெஞ்சோடு மிக மிக இறுக அழுத்திக் கொண்டு ஒரே பாய்ச்சலில் அறையிலிருந்து வெளியேறினுன்.

தாத்தா விழித்துக்கொண்டு, ''நீ என்னடா அலைந்து திரிகிருய், நிசாசரப் பயலே? ராத்திரி வேளையிலே பால் குடிக்காதே என்று சொன்னேனே உனக்கு, கேட்டாயா? இப்போது இந்தத் தொல்லை!... குப்பை வாளியிலேயே பெய்து விட்டு வா, நான் உன்னை முற்றத்துக்குக் கொண்டு விடத் தயாராயில்லை!'' என்று சிடுசிடுத்தார்.

மீஷா மூச்சுக் காட்டாமல் படுத்துக்கொண்டு, அட்டைக் காகிதத்தை இரண்டு கைகளாலும் அழுத்திக் கொண்டான். எங்கே மடங்கிவிடுமோ என்று அவனுக்குப் பயம்: கசங்கிவிடக் கூடாதே. அப்படியே உறங்கிப் போனுன்.

அவனுக்கு விழிப்பு வந்தபோது வெளிச்சமும் இல்லை, விடியவும் இல்லை. அம்மா அப்போது தான் பால் கறந்துவிட்டு மாட்டை மந்தைக்கு ஓட்டினுள். மீஷாவைக் கண்டதும் கைகளைச் சளப்பென்று கொட்டினுள்.

''உனக்கு என்னடா காய்ச்சல் பிடித்து ஆட்டுகிறதா? இவ்வளவு வெள்ளென எதற்காக எழுந்திருந்தாய்?'' என்ருள்.

மீஷா அட்டைக் காகிதத்தைச் சட்டைக்கு அடியில் அழுத்தி வைத்துக் கொண்டு அம்மாவைக் கடந்து அடிகளத்துக்குப் போய்க் களஞ்சியத்துக்கு அடியில் நுழைந்தான்.

களஞ்சியத்தைச் சுற்றிலும் அகலிலே புர்டாக் செடிகள் வளர்ந்திருந்தன. கடக்க முடியாத பச்சைச் சுவர்போலக் காஞ்சொறிச் செடிகள் சிலுப்பிக் கொண்டு மண்டியிருந்தன. மீஷா களஞ்சியத்துக்கு அடியில் தவழ்ந்து சென்று புழுதியையும் கோழி எச்சத்தையும் உள்ளங்கையால் துடைத்து அகற்றிவிட்டு, புர்டாக் பழுப்பு ஒன்றைப் பறித்து, அட்டைக் காகிதத்தை அதற்குள் வைத்துச் சுற்றி, காற்று அடித்துக்கொண்டு போய் விடாமல் இருப்பதற்காக அதன் மேல் கல்லை வைத்தான்.

காலை முதல் மாலை வரை விடாது மழை பெய்தது. வானம் கருநீலத் திரையால் மூடப்பட்டிருந்தது. முகப்புவெளியில் நுரை மிதக்கும் நீர்க் குட்டங்கள் நிறைந்தன. தெருவில் நீரோடைகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு பெருகி ஓடின.

மீஷா வீட்டில் உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று. அந்தி மயங்கும் நேரத்தில் தாத்தாவும் தகப்பனும் நிர்வாகக் குழு அலுவலகத்திற்குக் கூட் டத்தில் கலந்துகொள்ளச் சென்றார்கள். தாத்தாவின் முன்விளிம்பு வைத்த தொப்பியைப் போட்டுக்கொண்டு மீஷா அவர்கள் பின்னோடு போனான். நிர்வாகக் குழுவின் அலுவலகம் மாதாகோயிலைச் சேர்ந்த வீட்டில் இருந்தது. கோணல்மாணலான, சேறுபடிந்த படிகள் மேல் முக்கி முனகிக் கொண்டு ஏறி முன்வாயிலை அடைந்து அறைக்குள் புகுந்தான் மீஷா. விட்டத்துக்கு அடியில் சிகரெட்டுப் புகை குமைந்து கொண்டிருந்தது, ஆட்கள் செம்மச் செம்ம நிறைந்திருந்தார்கள் வேற்றுள் ஜன்னல் ஓரமாக மேஜை அருகே உட்கார்ந்து கூடியிருந்த கஸாக்கியருக்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். மீஷா மெள்ள மெள்ள நகர்ந்து மறு கோடிக்குப் போய் பெஞ்சியில் உட்கார்ந்தான்.

''ஃபமா கோர்ஷுனுவ் தலைவர் ஆவதற்குச் சாதகமாய் இருப்பவர்கள் யார், தோழர்களே? தயை செய்து கைகளை உயர்த்துங்கள்!''

மீஷாவுக்கு முன்னே உட்கார்ந்திருந்த, கடைக்காரன் மாப்பிள்ளையான புரோகர் லீஸென்கவ் கத்தினான்:

''சக பிரஜைகளே!... அவனுடைய நியமனத்தை அகற்றி விடும்படி கேட்டுக் கொள்கிறேன். அவன் நடத்தையில் நேர்மை இல்லாதவன். அவன் மேய்ப்பனாக எங்கள் மந்தையைப் பார்த்துக் கொண்டிருந்தபோதே கண்டிக்கப்பட்டிருக்கிறான்....''

செம்மான் ஃபெதோத் ஜன்னல் குறட்டிலிருந்து எழுந்து கைகளை வீசி ஆட்டிக்கொண்டு கத்தியதை மீஷா கண்டான்.

''தோழர்களே, மேய்ப்பன் ஃபமா தலைவன் ஆவதில் பணக்காரர்களுக்கு விருப்பம் இல்லை. ஆனால் அவன் பாட்டாளி, சோவியத் ஆட்சி அதிகாரத் துக்கு ஆதரவாளன், ஆகையால்....''

கதவருகே கும்பலாக நின்று கொண்டிருந்த பணம் படைத்த கஸாக்கியர்

கள் கால்களைத் தரையில் உதைத்தார்கள், சீழ்க்கை அடித்தார்கள். நிர்வாகக் குழு அலுவலகத்தில் கூச்சல் கிளம்பியது.

''மேய்ப்பன் வேண்டாம்!''

''இராணுவ சேவையிலிருந்து திரும்பி வந்தவன் ஊருக்கு மேய்ப்பனுக வேலை செய்யட்டுமே!...''

''சைத்தான் வாரிக்கொண்டுபோக ஃபமா கோர்ஷுனை!''

பெஞ்சின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த தகப்பனின் வெளிறிய முகத்தை நோட்டமிட்டான் மீஷா. தகப்பனுக்காக ஏற்பட்ட திகிலால் தானும் வெளிறிப் போனுன்.

வேற்ருள் மேஜையை முட்டியால் குத்தித் தட்டி, ''அமைதியாய் இருங்கள், தோழர்களே!... கூட்டத்திலிருந்து வெளியேற்றி விடுவேன்!'' என்று பெரு முழக்கம் செய்தான்.

''கஸாக்கியர்களில் எங்கள் ஆளைத் தேர்ந்தெடுப்போம்!...''

''தேவை இல்லை!...''

''எங்களுக்கு இஷ்டமில்லை'' என்று வசவு திட்டுகளுடன் கூச்சலிட்டார்கள் கஸாக்கியர். கடைக்காரன் மாப்பிள்ளை புரோஷ்கா எல்லோரையும்விட உரக்கக் கத்தினுன்.

காதில் கடுக்கனும் மேலே கிழிந்த, நைந்து போன கோட்டும் போட்டிருந்த வாட்டசாட்டமான ஒரு கஸாக்கியன் பெஞ்சி மேல் துள்ளி ஏறி நின்று கொண்டான்.

''சகோதரர்களே!... விஷயத்தின் தந்திரம் எல்லாம் இதுதான்!... பணக்காரர்கள் தங்கள் மனிதனைத் தலைவர் பதவியில் அடிபிடி கட்டாயமாக அமர்த்த விரும்புகிருர்கள். அங்கே மறுபடியும்...''

ஹோ ஹோ வென்ற இரைச்சலில் கடுக்கன்காரக் கஸாக்கியன் உரக்கக் கத்திய தனித்தனி வார்த்தைகள் மட்டுமே மீஷாவின் காதில் விழுந்தன:

''நிலத்தை.... பங்கீடு.... ஏழைகளுக்குக் களி மண் பூமி.... செழுமையான கருமண் நிலத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்வார்கள்....''

''தலைவர் பதவிக்குப் புரோகரைத் தேர்ந்தெடுங்கள்!'' என்று ஓலமிட்டார்கள் கதவருகே நின்ற கஸாக்கியர்கள்.

''புரோ-ஓ-க-ரை! ஹோ-ஹோ-ஹோ! ஹா-ஹா-ஹா!''

மிகுந்த சிரமத்தின் பேரிலேயே இந்த ஆரவாரம் அடங்கியது. வேற்ருள், புருவங்களைச் சுளித்துக்கொண்டு, எச்சில் தூவானம் தெளித்தவாறு வெகு நேரம் ஏதேதோ பெருங்கத்தலாகக் கத்திக் கொண்டிருந்தார்.

''நிச்சயமாக வைது திட்டுகிருர்'' என்று எண்ணிக்கொண்டான் மீஷா.

''ஃபமா கோர்ஷுனை யார் ஆதரிக்கிறீர்கள்?'' என்று உரக்கக் கேட்டார் வேற்ருள்.

பெஞ்சிகளின் மேலே நிறையக் கைகள் உயர்த்தப்பட்டன. மீஷாவும் கையைத் தூக்கினன். ஒருவன் பெஞ்சிக்குப் பெஞ்சி தாவியவாறு வாய் விட்டு எண்ணினன்:

"அறுபத்து மூன்று, அறுபத்து நான்கு" என்று சொல்லிவந்தவன், மீஷாவைக் கவனிக்காமல் அவனுடைய உயர்த்திய கையை விரலால் சுட்டி, "அறுபத்து ஐந்து!" என்று கூவினன்.

வேற்ருள் காகிதத்தில் ஏதோ எழுதிக்கொண்டு, கத்தினன்:

"புரோகர் லீஸென்கவுக்கு ஆதரவாய் இருப்பவர்கள் கைகளை உயர்த்தும்படி கேட்டுக் கொள்கிறேன்!"

இருபத்தேழு பணக்காரக் கஸாக்கியர்களும் அரைவை அலைக்காரன் யெகோரும் கூட்டாகக் கைகளை உயர்த்தினர்கள். மீஷா சுற்றுமுற்றும் கண்ணேட்டிவிட்டுத் தானும் கையைத் தூக்கினன். வாக்குகளை எண்ணிக் கணக்கிட்டவன் மீஷாவுக்கு நேரே வந்ததும் ஏற இறங்க நோட்டமிட்டுவிட்டு அவன் காதை வலியெடுக்கும்படி பற்றிக்கொண்டான்.

"அட போக்கிரிப் பயலே!... நடையைக் கட்டு இங்கிருந்து, இல்லாவிட்டால் தூக்கிக் கடாசிவிடுவேன்! தானும் வோட்டுப் போடவந்துவிட்டான்!" என்று அதட்டினன்.

எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். அந்த மனிதனே மீஷாவை வெளி வாயில் வரை இழுத்துப் போய் முதுகில் கைவைத்துத் தள்ளிவிட்டான். ஒரு தடவை தாத்தாவுடன் ஏதோ சச்சரவின்போது அப்பன் சொன்ன வார்த்தைகள் மீஷாவுக்கு நினைவு வந்தன. சேறுபடிந்த வழுக்கல் படிகளைப் பிடித்துக் கொண்டு இறங்கியவாறே, "இதற்கு உனக்கு உரிமை கிடையாது!" என்று கத்தினன்.

"நான் உனக்குக் காட்டுகிறேன் உரிமை!..." என்று பதில் வந்தது.

மனத்தாங்கல் எல்லா மனத்தாங்கல்களையும் போலவே வைப்பாயிருந்தது.

வீட்டுக்கு வந்து மீஷா கொஞ்சம்போல அழுதான், அம்மாவிடம் புகார் செய்தான்.

"போகக் கூடாத இடங்களுக்கு நீ போகாதே! எந்த ஓட்டையைக் கண்டாலும் மூக்கை நுழைக்கிருய்! நீ எனக்குத் தண்டனையாகத்தான் வந்து வாய்த்திருக்கிருய், வேறு ஒன்றுமில்லை!" என்று அவள் கோபத்துடன் சீறினள்.

மறு நாள் காலையில் சிற்றுண்டி உண்பதற்கு அவர்கள் உட்கார்ந்து சாப்பிட்டு முடிப்பதற்குள் மிகத் தொலைவிலிருந்து, தூரம் காரணமாக மந்தமாக ஒலித்த வாத்திய இசை அவர்கள் காதில் பட்டது. தகப்பன் சிறு கரண்டியை வைத்துவிட்டு மீசையைத் துடைத்துக்கொண்டே, "இது இராணுவ வாத்திய கோஷ்டியின் இசையாயிற்றே!" என்ருன்.

பெஞ்சி போட்டிருக்கும் இடத்திலிருந்து காற்று அடிப்பது போல் இருந்தது மீஷாவுக்கு. முகப்புக் கொட்டகைக் கதவு அடித்துக் கொண்டது. ஜன்னலுக்கு வெளியே டுப்-டுப்-டுப்-டுப் என்ற ஓசை கேட்டது.

அப்பனும் தாத்தாவும் முகப்பு வெளிக்குச் சென்றுர்கள். அம்மா ஜன்னலுக்கு வெளியே பாதி உடம்பை நீட்டிக்கொண்டாள்.

அசைந்தாடும் பச்சை அலேபோலச் செம்படை வீரர்களின் அணிகள் தெருக்கோடியில் பெருகி வந்தன. முன்னலே வாத்தியக்காரர்கள் பெரிய எக்காளத்தை ஊதிக்கொண்டும் டமாரத்தை அடித்துக்கொண்டும் வந்தார்கள். ஊர் முழுவதும் ஒலி நிறைந்தது.

மீஷாவுக்குத் தலே சுற்றியது. பேந்தப் பேந்த விழித்துக்கொண்டு ஒரே இடத்தில் சுழன்றுன். பின்பு ஒரு தாவு தாவி வாத்தியக்காரர்களே நோக்கி ஓட்டம் பிடித்தான். நெஞ்சில் ஏதோ இனிய வேதனே எடுத்தது. தொண்டை தழுதழுத்தது.... செம்படை வீரர்களின் புழுதி படிந்த குதூகலம் ததும்பும் முகங்களேயும், கனமிடுக்காகக் கன்னத்தை உப்பிக் கொண்டிருந்த வாத்தியக்காரர்களேயும் மீஷா ஏறிட்டு நோக்கினன். "இவர்களோடு சேர்ந்து சண்டை போடப் போவேன்!" என்று அக்கணமே திட்டமாக முடிவு செய்தான்.

தான் கண்ட கனவை நினேத்துக் கொண்டான். எங்கிருந்துதான் அவனுக்கு அவ்வளவு துணிச்சல் வந்ததோ தெரியாது. கோடியில் சென்ற படை வீரனின் தோட்டாப் பையைப் பற்றிக் கொண்டான்.

''நீர் எங்கே போகிறீர்? சண்டை போடவா?''

''பின்னே வேறு என்ன? ஆமாம், சண்டை போடத்தான்!''

''யார் தரப்பில் நீர் சண்டை செய்கிறீர்?''

''சோவியத் ஆட்சியின் தரப்பில், அசடே! எங்கே, இப்படி வா, நடுவுக்கு.''

படைவீரன் மீஷாவை அணிவரிசையின் நடுவே தள்ளினுன். ஒருவன் சிரித்துக்கொண்டே அவனுடைய பறட்டைச் சடைப் பிடரில் தட்டினுன், இன்னெருவன் கோட்டுப்பையிலிருந்து அழுக்குப் படிந்த சர்க்கரைக் கட்டி ஒன்றை எடுத்து அவன் வாய்க்குள் திணித்தான். சதுக்கத்தில் முன் வரிசைகளில் எங்கோ இருந்து ''நி-ல்!'' என்ற கத்தல் கேட்டது.

செம்படை வீரர்கள் நின்ருர்கள், சதுக்கத்தில் ஆங்காங்கே பரவலாகச் சிதறினுர்கள், பள்ளிக்கூடச் சுற்றுச்சுவர் நிழலில் குளுமையான இடத்தில் நெருக்கமாகப் படுத்துக் கொண்டார்கள். மழித்த தலேயும் நெடிய மேனியும் இடையில் உடைவாளுமாக இலகிய ஒரு செம்படை வீரன் மீஷாவிடம் வந்தான்.

''நீ எங்கிருந்து வழி தவறி எங்களிடம் வந்து சேர்ந்தாய்?'' என்று புன்னகையுடன் உதடுகளேச் சுருக்கிக்கொண்டு கேட்டான்.

மீஷா பெருமிதத் தோற்றத்தை வருவித்துக் கொண்டான், நழுவிய கால் சட்டையைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

''நான் உங்களோடு சேர்ந்து சண்டை போட வருகிறேன்!''

''தோழர் கம்பாத்,* இவனேத் துணேவனுக ஏற்றுக்கொள்ளும்!'' என்று கத்தினுன் ஒரு செம்படை வீரன்.

எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள். மீஷா அடிக்கடி இமைகளேக் கொட்டினுன். ஆனுல் ''கம்பாத்'' என்னும் விசித்திரப் பெயர்கொண்ட மனிதன் புருவங்களேச் சுளித்துக் கண்டிப்பாகக் கூறினுன்.

''எதற்கப்பா கனேக்கிறீர்கள், மடையர்களா? நாம் இவனேக் கட்டாயமாகச் சேர்த்துக்கொள்வோம், சந்தேகமே கிடையாது. ஆனுல் ஒன்று...'' 'கம்பாத்' மீஷா பக்கம் திரும்பி மேலே சொன்னுன்: ''உன் கால்சட்டையில் ஒரு தோள்வார் மட்டுந்தான் இருக்கிறது. இது சரியல்ல, இந்தக் கோலத்தில் நீ எங்களே அவமானத்துக்கு உள்ளாக்குகிருய்!... இதோ பார், எனக்கு இரண்டு தோள்வார்கள் இருக்கின்றன, எல்லாருக்கும் ஆளுக்கு இரண்டு வார்கள் உள்ளன. ஓடு. அம்மாவிடம் இன்னெரு வாரைத் தைத்துத்தரச் சொல்லு. நாங்கள் உனக்காக இங்கே காத்திருக்கிருேம்....''—அப்புறம் அவன் சுற்றுச் சுவர்

---

* கம்பாத்—கமாந்தீர் பாத்தாலியோனு (பட்டாளத் தளபதி) என்ற சொற்களின் சுருக்கம்.—(மொ-ர்.)

அருகே சென்று கண்களைச் சிமிட்டி, ''இந்தா, தெரேஷென்கோ, போய்ப் புதிய செம்படை வீரனுக்குத் துப்பாக்கியும் மேல்கோட்டும் எடுத்துக் கொண்டுவா!'' என்று கத்தினான்.

சுவர் நிழலில் படுத்திருந்தவர்களில் ஒருவன் எழுந்திருந்து, கையைத் தொப்பி முன்விளிம்பில் வைத்து, ''உத்தரவு!'' என்று பதிலளித்துவிட்டுச் சுவரோரமாக விடுவிடென்று நடந்தான்.

''ஊம், ஓடு வேகமாய்! இன்னொரு வாரைச் சட்டுப்புட்டென்று தைக்கச் சொல்லு அம்மாவிடம்!...''

மீஷா கண்டிப்பான தோற்றத்துடன் 'கம்பாத்தை' நோக்கினான்.

''இதோ பாரு, என்னை ஏய்க்க மட்டும் செய்யாதே!'' என்றான்.

''அட நீ என்ன ஒன்று? அது எப்படி முடியும்?...''

சதுக்கத்திலிருந்து வீடு வெகு தூரம். வாயில் வரை ஓடிச் சேர்வதற்குள் மீஷாவுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. நெஞ்சு நிதானத்துக்கு வரவில்லை. வாயில் அருகே ஓடுகிற ஓட்டத்தில் கால் சட்டையைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு, வெறுங்கால்கள் பளிச்சிடச் சூறைக்காற்றுப் போல வீட்டுக்கு உள்ளே பாய்ந்தான்.

''அம்மா! கால்சட்டை! தோள்வார் தைத்துக் கொடு!...''

வீட்டில் ஆள் அரவமே இல்லை. அடுப்புக்கு மேலே ஈக்கள் கருந்திரளாக மொய்த்துப் பறந்து கொண்டிருந்தன. மீஷா முகப்பு வெளியிலும் அடி களத்திலும் காய்கறித் தோட்டத்திலும் சுற்றிப் பார்த்துவிட்டான் — தகப்பனையோ, தாயையோ, தாத்தாவையோ எங்குமே காணவில்லை. அறைக்குள்ளே பாய்ந்து புகுந்தான். கோணிப்பை கண்ணில் பட்டது. கத்தியால் அதன் நீண்ட நாடாவை அறுத்து எடுத்துக் கொண்டான். தைப்பதற்கு நேரமில்லை, மீஷாவுக்குத் தைக்கவும் வராது. அவசர அவசரமாக நாடாவைக் கால்சட்டையுடன் சேர்த்துக் கட்டினான், தோளில் மாட்டிக் கொண்ட பின் இன்னொரு தடவை முன்னே இணைத்துக் கட்டிக்கொண்டான், களஞ்சியத்தின் அடியில் விருட்டென்று புகுந்தான்.

கல்லை அகற்றிவிட்டு, தன்னை மீஷாவை, சுட்டும் லெனினுடைய கையைச் சற்றே நோக்கினான், மூச்சு அடைக்கக் கிசுகிசுத்தான்:

''ஊம், இதோ, பார்த்தாயா?... நானும் உன் படையில் சேர்ந்து விட்டேன்!...''

படத்தை புர்டாக் இலையில் வைத்துப் பத்திரமாகச் சுற்றினான். சட்டைக்குள் மார்பின் மேல் செருகிக் கொண்டான், தெருவழியே குதித்து ஓடினான். ஒரு கையால் பட அட்டையை மார்போடு சேர்த்து அழுத்திக் கொண்டான், மற்றக் கையால் கால்சட்டை நழுவி விடாதபடி தூக்கிப் பிடித்துக்கொண்

டான். அண்டை வீட்டு வேலியோரமாக ஓடி, ''அனீஸிமவ்னு!'' என்று கூவி அழைத்தான்.

''ஊம்?''

''எனக்காகக் காத்திராமல் சாப்பிடும்படி எங்களவர்களிடம் சொல்லு!...''

''நீ எங்கேயடா ஓடுகிறுய், கிறுக்கா?''

மீஷா கையை வீசி ஆட்டினுன்.

''இராணுவ சேவைக்குப் போகிறேன்!'' என்றுன்.

சதுக்கத்துக்கு ஓடிச் சென்றவன், அடித்த சிலை போல நின்றுவிட்டான். சதுக்கத்தில் ஒரு பூதரைக் காணேம். சுற்றுச் சுவரோரமாகப் புகைத்த சிகரெட்டுத் துணுக்குகளும், பதனிட்ட உணவுப் பண்ட டப்பிகளும், யாரோ ஒருவனுடைய கிழிந்த பட்டித் துணியும் கிடந்தன. ஊரின் வெளி எல்லையில் வாத்திய சங்கீதம் மந்தமாக முழங்கிற்று. கப்பிரஸ்தாவில் நடப்பவர்களின் காலடிகள் கூட்டாக ஒலிப்பது கேட்டது.

மீஷாவுக்கு அழுகை பீறிக்கொண்டு வந்தது. ஓவென்று அரற்றிக் கொண்டே தன் பலத்தை எல்லாம் திரட்டி ஓடினுன் — படைவீரர்களை எட்டிப் பிடிப்பதற்காக. எட்டிப் பிடித்திருப்பான், கட்டாயமாக எட்டிப் பிடித்திருப்பான், ஆனுல் சக்கிலியன் வீட்டுக்கு எதிரே தெருவுக்குக் குறுக்கே வாலடர்ந்த மஞ்சள் நாய் பற்களைக் காட்டி உறுமிக்கொண்டு படுத்திருந்தது. மீஷா வேறெரு தெருவில் திரும்பி ஓடுவதற்குள் வாத்திய ஒலியோ காலடிச் சத்தமோ எதுவும் கேட்கவில்லை.

* * *

இரண்டு நாட்களுக்கெல்லாம் ஒரு நாற்பது தொண்டர்கள் கொண்ட தளம் கிராமத்துக்கு வந்தது. தொண்டர்கள் சாம்பல் நிற நமுதா ஜோடுகளும் சிக்குப் பிடித்த தொழிலாளர் கோட்டுக்களும் அணிந்திருந்தார்கள். தகப்பன் நிர்வாகக் குழு அலுவலகத்திலிருந்து சாப்பிட வந்தபோது தாத்தாவிடம், ''அப்பா, களஞ்சியத்தில் கோதுமையை மூட்டைகட்டித் தயாராக வைத்திரு. தானிய வசூல் தொண்டர் தளம் வந்திருக்கிறது. விளைச்சல் பங்கீடு தொடங்கப் போகிறது'' என்றுன்.

தொண்டர்கள் வீடு வீடாகப் போனுர்கள். களஞ்சியங்களில் தரையைத் துப்பாக்கிச் சனியன்களால் குத்திப் பார்த்தார்கள், புதைத்து வைக்கப் பட்டிருந்த கோதுமையைக் கண்டுபிடித்து எடுத்துச் சரக்கு வண்டிகளில் ஏற்றிப் பொதுக் களஞ்சியத்துக்குக் கொண்டு சென்றுர்கள்.

நிர்வாகக் குழுத் தலைவன் வீட்டிற்கு வந்தார்கள். தலைமை வீரன் சுங்கானைச் சப்பிக்கொண்டே, ''கோதுமையைப் புதைத்து வைத்திருக்கிறுயா, தாத்தா? உள்ளதை ஒப்புக் கொண்டு விடு!'' என்றுன்.

தாத்தா தாடியைத் தடவிவிட்டுக்கொண்டு, ''என் மகன்தான் கம்யூனிஸ்ட் ஆயிற்றே!'' என்று பெருமை பொங்கக் கூறினர்.

களஞ்சியத்துக்குள் புகுந்தார்கள். சுங்கான்கார வீரன் தானியக் குதிர்களைக் கண்மதிப்பாக அளவிட்டுவிட்டு முறுவலித்தான்.

''தாத்தா, இதோ இந்தக் குதிரில் உள்ள தானியத்தைப் பொதுவுக்குக் கொடுத்து விடு. பாக்கி இருப்பது உனக்குச் சாப்பாட்டுக்கும் விதைப்புக்கும்'' என்றான்.

தாத்தா முதிய பழுப்புக் குதிரையை வண்டியில் பூட்டினர், முக்கி முனகிக்கொண்டு எட்டு மூட்டைகளில் கோதுமையை நிரப்பிக் கட்டினர், ஏக்கத்துடன் கைகளை உதறினர், பின்பு மூட்டைகளை வண்டியிலேற்றிப் பொதுக் களஞ்சியத்துக்குக் கொண்டுபோனர். தானியம் பறிபோன வருத்தத்தால் அம்மா கொஞ்சம் அழுதாள். மீஷாவோ, தானியத்தை மூட்டைகளில் நிரப்புவதில் தாத்தாவுக்கு ஒத்தாசை செய்தான், பின்பு வீத்யாவுடன் விளையாடுவதற்காகப் பாதிரி வீட்டுக்குச் சென்றான்.

மீஷாவும் வீத்யாவும் சமையலறையில் உட்கார்ந்து காகிதத்தில் கத்தரித்து எடுத்த குதிரைகளைத் தரையில் பரப்பி வைக்கலானர்கள். அதற்குள் அதே தொண்டர்கள் சமையலறைக்குள் நுழைந்தார்கள். பாதிரியார் நீள் அங்கி கால்களில் சிக்க இடறிக்கொண்டு வெளிவந்து அவர்களை எதிர்கொண்டு அலைபாய்ந்தார், அறைக்குள் வரும்படி அழைத்தார்.

ஆனல் சுங்கான்கார வீரனே, ''களஞ்சியத்துக்குப் போவோம். உங்கள் தானியத்தை எங்கே சேமித்து வைத்திருக்கிறீர்கள்?'' என்று கறாராகக் கேட்டான்.

பாதிரியார் மனைவி அறைக்குள்ளிருந்து ஒரே அலங்கோலமாகப் பாய்ந்து வந்தாள், கள்ளத் தனமாகப் புன்னகை செய்தாள்.

''நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் கனவான்களே, எங்களிடம் தானியம் கொஞ்சங்கூட இல்லை!... என் வீட்டுக்காரர் இன்னும் தண்டலுக்குப் போகவில்லை'' என்றாள்.

''உங்கள் வீட்டில் நிலவறை இருக்கிறதா?''

''இல்லை, கிடையாது. முன்னெல்லாம் தானியத்தைக் களஞ்சியத்தில் வைத்திருந்தோம்....''

சமையலறையிலிருந்து தானும் வீத்யாவும் விசாலமான நிலவறைக்குள் ஒரு முறை இறங்கிச் சென்றது மீஷாவுக்கு நினைவுவந்தது. பாதிரிச்சி பக்கம் தலையைத் திருப்பி, ''வீத்யாவும் நானும் சமையலறையிலிருந்து நிலவறைக்குள் இறங்கிப் போனேமே, மறந்துவிட்டாயா?'' என்றான்.

பாதிரிச்சி முகம் வெளிற வாய்விட்டுச் சிரித்தாள்.

''இல்லை, குழந்தை, நீ எதையோ நினைத்துக் கொண்டு எதையோ சொல்லு

கிருய்!... வீத்யா, நீங்கள் இரண்டு பேரும் தோட்டத்தில் போய் விளையாடுங்களேன்!'' என்றுள்....

சுங்கான்கார வீரன் கண்களை இடுக்கிக் கொண்டு மீஷாவை நோக்கி முறுவலித்தான்.

''அங்கே எப்படி இறங்குவது, தம்பீ?'' என்று கேட்டான்.

பாதிரிச்சி விரல்களை நொடித்து, ''அறியாச் சிறுவனின் வார்த்தையை நீங்கள் நம்புகிறீர்களா என்ன? மெய்யாகவே சொல்லுகிறேன், எங்கள் வீட்டில் நிலவறை இல்லை!'' என்றுள்.

பாதிரியார் நீளங்கி விளிம்புகளை உதறி, ''கொஞ்சம் சிற்றுண்டி அருந்துகிறீர்களா, தோழர்களே? அறைக்குள் போவோம் வாருங்கள்!'' என்று அழைத்தார்.

பாதிரிச்சி மீஷாவின் பக்கத்தில் சென்று அவன் கையை வெடுக்கெனக் கிள்ளிவிட்டுக் கனிவுடன் புன்னகைத்தாள்.

''குழந்தைகளா, இங்கே இடைஞ்சல் பண்ணுதீர்கள். தோட்டத்துக்குப் போய் விளையாடுங்கள்!'' என்று தேன்கசிந்தாள்.

தொண்டர்கள் ஒருவருக்கொருவர் கண்ஜாடை செய்து விட்டுத் துப்பாக்கிக் குந்தாக்களால் தரையைத் தட்டிய வண்ணம் சமையலறையில் சுற்றி வந்தார்கள். சுவரோரமாக இருந்த மேஜையை அப்பால் நகர்த்தி, சாக்கு விரிப்பைத் தரையிலிருந்து அகற்றினுர்கள். சுங்கான்கார வீரன் தரைப் பலகையைத் தூக்கி நிலவறைக்குள் கண்ணோட்டி விட்டுத் தலையை அசைத்தான்.

''உங்களுக்கு வெட்கமாய் இல்லையா? தானியம் இல்லை என்றீர்கள், நிலவறையிலோ, மேல் மட்டம் வரை தானியம் நிறைந்து கிடக்கிறது!'' என்றுன்.

பாதிரிச்சி மீஷாவைப் பார்த்த பார்வையில் அவனுக்கு உதறல் எடுத்து விட்டது, சீக்கிரம் வீடு திரும்ப ஆசையுண்டாயிற்று. எழுந்திருந்து முகப்பு வெளிக்கு நடந்தான். பாதிரிச்சி அவன் பின்னே முகப்புக் கொட்டத்துக்குப் பாய்ந்து வந்து, தேம்பிக் கொண்டே அவன் தலைமயிரை லாவிப் பிடித்து அவனைத் தரையில் கரகரவென்று இழுக்கலானுள்.

கஷ்டப்பட்டுத் திமிறி விடுவித்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்குப் பறிந்தான் மீஷா. கண்ணீர் தொண்டையை அடைக்க அம்மாவிடம் எல்லாக் கதையையும் சொன்னுன். அவளோ, தலையைப் பிய்த்துக் கொண்டாள்.

''உன்னை வைத்துக் கொண்டு என்னதான் செய்யப் போகிறேனே?... என் கண்முன்னே நிற்காமல்போய்த் தொலை எங்கேயாவது. இல்லையோ, தொலைத்துப் போட்டு விடுவேன்!'' என்று இரைந்தாள்.

அன்று முதல் ஒவ்வொரு துன்ப நிகழ்ச்சிக்குப் பிறகும் மீஷா களஞ்சியத்துக்கு அடியில் ஊர்ந்து போய், கல்லை அகற்றி புர்டாக் இலையைப் பிரித்து,

கண்ணீரால் காகிதத்தை நனைத்தவாறு லெனினிடம் தன் துயரத்தைச் சொல்லிக் கொள்வான், தனக்கு வருத்தம் உண்டாக்கியவன்மீது புகார் செய்வான்.

ஒரு வாரம் கழிந்தது. மீஷா சலித்துப் போனான். விளையாடுவதற்கு யாரும் இல்லை. அக்கம் பக்கத்துச் சிறுவர்கள் அவனோடு பழகுவதில்லை. ''சோரபுத்திரன்'' என்ற பட்டப் பெயரோடு, பெரியவர்களிடம் கேட்டுப் பெற்ற இன்னொன்றும் சேர்ந்துகொண்டது.

''டேய், கம்யூன்காரக் கொடுக்கு! கம்யூன்காரனின் குறைப்பிள்ளை! திரும்பிப்பார்!'' என்று பையன்கள் அவன் பின்னிருந்து கத்துவார்கள்.

ஒரு தடவை முன்மாலையில் மீஷா குளத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்தான். உள்ளே புகுவதற்கு முன்பே தகப்பன் கடுமையான குரலில் பேசுவதும் அம்மா யாரையோ சாகக் கொடுத்தவள் போலப் புலம்புவதும் அரற்றுவதும் அவன் காதில் பட்டன. மீஷா அறைக்குள் மெள்ள நழுவினான். தகப்பன் மேல்கோட்டைப் போட்டுக் கொண்டு நெடுஞ்சோடுகளை மாட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''நீ எங்கே போகிறாய், அப்பா?''

தகப்பன் சிரித்து, ''அம்மாவை நீ தான் கொஞ்சம் தேற்று, மகனே!... ஒரேயடியாக ஊளையிட்டு என் உயிரை வாங்குகிறாள். நான் சண்டைக்குப் போகிறேன், இவள் விடமாட்டேன் என்கிறாள்!'' என்றான்.

''நானும் உன்னோடு வருகிறேன் அப்பா!''

அப்பன் இடுப்பு வாரைப் பூட்டிக்கொண்டு, நாடா வைத்த தொப்பியை அணிந்து கொண்டான்.

''வேடிக்கையான பயல் நீ, மெய்யாகவே! நாம் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் போவது கூடாது!... நான் திரும்பி வருகிறேன், அப்புறம் நீ போகலாம். இல்லாவிட்டால் தானியப் பயிர் முற்றி விடுமே, அறுவடை செய்வது யாராம்? அம்மாவுக்கோ வீட்டுவேலை தலைக்குமேலே, தாத்தாவுக்கு வயதாகிவிட்டது....''

அப்பாவுடன் பிரிவு சொல்லிக்கொள்ளும் பொழுது மீஷா கண்ணீரை அடக்கிக்கொண்டு புன்னகைகூடச் செய்தான். அம்மா முதல் தடவையில் போலவே அப்பனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினாள். அப்பன் சிரமப்பட்டு அவளை அப்பால் அகற்றினான். தாத்தா தொண்டையைக் கனைத்துக் கொண்டார், இராணுவ சேவைக்குப் போகும் மகனை முத்தமிட்டு, அவன் காதோடு காதாகக் கிசுகிசுத்தார்:

''ஃபமா... என் மகனே! ஒருவேளை நீ போகாதிருப்பதே தேவலையோ? ஒருவேளை நீ இல்லாமலே எப்படியாவது?... காலங்கெட்ட காலம், உன்னைக் கொன்று விட்டார்களானால் நாங்கள் ஒழிந்தோம்!...''

''விடு, அப்பா.... இப்படிப் பேசுவது உனக்கு அழகாயில்லை. ஒவ்வொரு

வனும் பெண்டாட்டி ஆடைத் தலைப்புக்குள் புகுந்து ஒளிந்து கொண்டால் ஆனால் நமது ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாப்பது யாராம்?''

''ஊம், நான் என்னத்தைச் சொல்ல, உன் காரியம் நியாயமானது என்னும் போது? சரி போய்வா.''

தாத்தா முகத்தைத் திருப்பிக்கொண்டு ஒருவரும் பார்க்காதபடிக் கண்ணீரைச் சுண்டி எறிந்தார். அப்பனை வழியனுப்புவதற்காக நிர்வாகக் குழு அலுவலகம் வரை மூவரும் போனார்கள். அலுவலக வெளி முகப்பில் ஒரு இருபது பெயர் போலத் துப்பாக்கிகளுடன் கூடியிருந்தார்கள். அப்பனும் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, மீஷாவைக் கடைசித் தடவையாக முத்தம் இட்டுவிட்டு மற்றவர்களோடு ஊர் எல்லையிலிருந்த ரஸ்தாவில் நடக்கலானான்.

மீஷா தாத்தாவோடு வீடு திரும்பினான். அம்மா பின்தங்கிவிட்டாள் போலும். ஊரில் நாய்களின் குலைப்பு அரிதாகவே கேட்டது, விளக்குகளும் அரிதாகவே எரிந்தன. ஊர் கறுப்புச் சால்வை போர்த்துக் கொண்ட கிழவி போல இரவின் இருளால் போர்க்கப்பட்டு விட்டது. மழை சிறு தூறலாகத் தொடங்கியது. ஊருக்கு வெளியே எங்கோ, ஸ்தெப்பி வெளிக்கு உயரே, மின்னல்கள் வெட்டின, அமுங்கிய பொரு பொருத்த அதிர்ச்சிகளுடன் இடி முழுங்கிற்று.

வீட்டை நெருங்கினார்கள். வழி நெடுகிலும் கம்மென்றிருந்த மீஷா, ''தாத்தா, அப்பா யாரோடு சண்டைபோடப் போயிருக்கிறார்?'' என்று கேட்டான்.

''நச்சு பண்ணாதே!...''

''தாத்தா!''

''ஊம்?''

''அப்பா யாரோடு சண்டை செய்யப் போகிறார்?''

தாத்தா கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, ''கெட்ட ஆட்கள் நம்முடைய ஊரைச் சூறையாட வந்திருக்கிறார்கள். மக்கள் அவர்களை ஏதோ 'பாண்டு' என்று சொல்லுகிறார்கள். என் கருத்துப்படி அவர்கள் வெறும் வழிப்பறித் திருடர்கள்.... அதுதான் உன் அப்பா அவர்களோடு சண்டை போடப் போயிருக்கிறான்.''

''அவர்கள் ரொம்பப் பேரோ, தாத்தா?''

''சுமார் இருநூறு பேர் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்.... சரி சரி, போ, படுக்கையில் படுத்துத் தூங்கு. நீ வளையவந்தது போதும்!''

இரவில் குரல்கள் மீஷாவின் உறக்கத்தைக் கலைத்து விட்டன. விழித்துக் கொண்டு கட்டிலில் கையால் துழாவிப் பார்த்தான் — தாத்தாவைக் காணவில்லை.

''தாத்தா, நீ எங்கே இருக்கிறாய்?''

K. Lenin

''பேசாதே!... தூங்கடா, துருதுருப்பை!''

மீஷா எழுந்திருந்து இருட்டில் தட்டித் தடவிக் கொண்டு ஜன்னல் வரை சென்றான். தாத்தா உள்ளாடை மட்டும் அணிந்து பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு, திறந்த ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டியவாறு காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார். மீஷா உற்றுக் கவனித்தான். ஊருக்கு அப்பால் துப்பாக்கி வெடிகள் அடிக்கடி சடசடப்பதும் அப்புறம் பீரங்கி வெடிகள் ஒரு சீராக இடைவிட்டு விட்டுத் தடதடப்பதும் கவிந்திருந்த நிசப்தத்தில் அவனுக்குத் தெளிவாகக் காதில் விழுந்தன.

''தடார்! டட்-டட்-டட்! தடார்!''

ஏதோ ஆணிகள் அடிப்பது போல.

மீஷாவுக்குக் கிலி பிடித்துவிட்டது. தாத்தா மேல் ஒண்டிக்கொண்டான்.

''இது யார், அப்பாவா துப்பாக்கி சுடுகிறார்?'' என்று கேட்டான்.

தாத்தா பேசாதிருந்தார். அம்மா வெடித்தழுது புலம்பத் தொடங்கினாள்.

பொழுது புலரும் வரை ஊருக்கு வெளியே வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன, அப்புறம் அரவம் எல்லாம் அடங்கிவிட்டது. மீஷா சுருள் தொட்டி போலப் பெஞ்சியில் முடங்கி, அமைதியோ மகிழ்வோ அற்ற உறக்கத்தில் ஆழ்ந்து விட்டான். உதயத்தில் நிர்வாகக் குழு அலுவலகத்தை நோக்கி வீதியில் சிலர் குதிரையேறிச் சென்றார்கள். தாத்தா மீஷாவை உசுப்பிவிட்டுத் தாம் முகப்பு வெளிக்கு ஓடினார்.

நிர்வாகக் குழு அலுவலக முகப்பு வெளியில் கருந்தூண் போலப் புகை குமைந்து எழுந்தது. நெருப்பு கட்டிடத்துக்குப் பரவிவிட்டது. தெருக்களில் குதிரையேற்றக்காரர்கள் சாரி போகலாயினர். ஒருவன் முகப்பு வெளியருகே வந்து, ''குதிரை இருக்கிறதா, கிழவா?'' என்று கேட்டான்.

''இருக்கிறது....''

''வண்டியில் பூட்டி ஊருக்கு வெளியே ஓட்டிப் போ! உங்கள் கம்யூனிஸ்டுகள் புதரில் கிடக்கிறார்கள்!... வண்டியிலே தூக்கிப் போட்டுக் கொண்டு வா. சொந்தக்காரர்கள் அவர்களைப் புதைக்கட்டும்!...''

தாத்தா மளமளவென்று பழுப்புக் குதிரையை வண்டியில் பூட்டி, நடுங்கும் கைகளால் கடிவாள வாரைப் பிடித்துக் கொண்டு பாய்ச்சலில் விரட்டியவாறு தெருவுக்கு ஓட்டிச் சென்றார்.

ஊரெல்லாம் ஒரே அமளிகுமளி. குதிரைகளிலிருந்து இறங்கிய கொள்ளைக்காரர்கள் அடிகளங்களிலிருந்து தீனிப்புல்லை அள்ளிச் சென்றார்கள், ஆடுகளை வெட்டிப் போட்டு விட்டார்கள். ஒருவன் அனீஸிமவ்னுவின் வீட்டுக்கு எதிரே குதிரையிலிருந்து குதித்து வீட்டுக்குள் திடுமென நுழைந்தான். அனீஸிமவ்னு பெருங்குரலில் ஓலமிட்டதை மீஷா கேட்டான். கொள்ளைக்காரனே வாளை வீசிக்கொண்டு தலைவாசல் படிக்கு ஓடிவந்தான், உட்கார்ந்து பூட்சு

களைக் கழற்றி, அழுக்குக் கால் பட்டிகளை வீசி எறிந்துவிட்டு அனிஸிமவ்னுவின் பூவேலை செய்த கவர்ச்சியான சால்வையை இரண்டாகக் கிழித்துக் காலுக்கு ஒரு பாதியாகச் சுற்றிக் கொண்டான்.

மீஷா அறைக்குள் போய், கட்டிலில் படுத்து, தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். வெளிவாசற் கதவுகள் கிறீச்சிட்ட போது தான் எழுந்திருந்தான். தலைவாசலுக்கு ஓடினுன். கண்ணீரால் நனைந்த தாடியுடன் தாத்தா குதிரையை முகப்புக்குள் ஓட்டி வருவதைக் கண்டான்.

வண்டியின் பின்பகுதியில் வெறுங்காலனை ஒரு மனிதன் கிடந்தான். அவனது கைகள் இரு புறமும் அகல விரித்துக் கிடந்தன. அவனுடைய தலை எழும்பி எழும்பிக் குதித்துப் பின்பக்கம் அடித்துக்கொண்டது. கட்டியான கரு இரத்தம் வண்டிப் பலகையில் பெருகிற்று....

மீஷா ஆடி அசைந்துகொண்டு வண்டி அருகே போனுன். வாள் வெட்டுக்களால் துணிக்கப்பட்டிருந்த முகத்தை எட்டிப்பார்த்தான். இளித்த பற்கள் தெரிந்தன. எலும்போடு சேதிக்கப்பட்டிருந்த கன்னம் அறுந்து தொங்கிற்று. குருதி கொப்புளித்த பிதுங்கிய விழியின் மேல் பெரிய பச்சை ஈ ஒன்று உட்கார்ந்திருந்தது.

மீஷா அது யார் என்று புரிந்துகொள்ளாமல், பயங்கரத்தால் சிறிது நடுக்கம் கொண்டு பார்வையைத் திருப்பினுன். மார்பின் மேல் மாலுமிச் சட்டை மீது இரத்த வெள்ளத்தில் ஊறிய நீல, வெள்ளைக் கோடுகளைக் கண்டதும் யாரோ பின்னுலிருந்து தன் கால்களில் உதைத்தது போல நடு நடுங்கி, அசைவற்ற கரிய முகத்தை அகலத் திறந்த விழிகளால் இன்னெரு தடவை கவனமாகப் பார்வையிட்டு விட்டு வண்டியில் தாவி ஏறினுன்.

''அப்பா, எழுந்திரு! அப்பாக் கண்ணு!''—இவ்வாறு கத்திக் கொண்டே வண்டியிலிருந்து விழுந்துவிட்டான். எழுந்து ஓட எண்ணினுன். ஆனுல் கால்கள் துவண்டுமடிந்துவிட்டன. தவழ்ந்து தலை வாசலுக்குப் போய் மணலில் தலையைப் புதைத்துக்கொண்டான்.

*   *   *

தாத்தாவின் கண்கள் குழிகளுக்குள் ஆழப் புதைந்து விட்டன. தலை நடுங்கித் துள்ளிற்று. உதடுகள் ஒலியின்றி எதையோ முணுமுணுத்தன.

நெடு நேரம் மீஷாவின் தலையைத் தடவிக் கொண்டிருந்தார். பின்பு, மஞ்சத்தில் கட்டையாய்க் கிடந்த அம்மாவை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''முகப்பு வெளிக்குப் போவோம் வா, பேரப்பிள்ளை'' என்று கிசுகிசுத்தார்.

மீஷாவின் கையைப் பிடித்துத் தலைவாசலுக்கு இட்டுவந்தார். அறைக் கதவைக் கடந்து செல்கையில் மீஷா கண்களைச் சுருக்கிக் கொண்டு நடு நடுங்

கிறன். அறையில் மேஜைமேல் கிடந்தான் அப்பன்—வாய்பேசாமல், மிடுக்குடன். அவன் மேலிருந்த இரத்தம் கழுவப் பட்டு விட்டது. ஆனால் அப்பனின் குருதி கொப்புளித்த நிலைக் குத்திட்ட விழியும் அதன்மேல் உட்கார்ந்திருந்த பெரிய பச்சை ஈயும் மீஷாவின் கண்களுக்கு எதிரே தெரிந்தன.

கிணற்றடியில் கயிற்றை வெகு நேரம் அவிழ்த்துக்கொண்டிருந்தார் தாத்தா. அப்புறம் லாயத்துக்குப் போய், பழுப்புக் குதிரையை நடத்திவந்தார். அதன் நுரை படிந்த உதடுகளை எதற்காகவோ சட்டைக் கையால் துடைத்தார். அப்புறம் அதற்குக் கடிவாளம் மாட்டி விட்டு உற்றுக் கேட்டார். ஊரெங்கும் கூச்சலும் கும்மாளமும். முகப்பின் அருகாகக் குதிரையேறிச் சென்றார்கள் இருவர். இருளில் சுருட்டுக்கள் கனிந்து கனிந்து தணிந்தன. குரல்கள் ஒலித்தன.

''இவர்களுக்குச் சரியானபடி வசூல் பண்ணிக் கொடுத்து விட்டோம்!... ஜனங்களிடமிருந்து தானியத்தைப் பறித்துக் கொள்வது எப்படி என்பதை மறு உலகில் நினைவுபடுத்திக் கொள்வார்கள்!...''

குதிரைக் குளம்புகளின் ஓசை அடங்கிவிட்டது. தாத்தா மீஷாவின் காதருகே குனிந்தார்:

''நான் கிழவன். குதிரைமேல் ஏற என்னால் முடியாது. உன்னைக் குதிரைமேல் ஏற்றிவிடுகிறேன், பேரக்கண்ணா. ஆண்டவனே துணையாக நீ புரோனின் கிராமத்துக்குப் போ.... வழியை நான் உனக்குக் காண்பிக்கிறேன்.... நம் ஊர் வழியாக வாத்தியம் வாசித்துக்கொண்டு ஒரு படைப்பிரிவு போயிற்றே, அது அங்கே இருக்க வேண்டும்.... அந்தப் படைவீரர்களிடம் போய் எங்கள் ஊருக்கு வாருங்கள், இங்கே கொள்ளைக் கூட்டம் என்று சொல்லு.... புரிந்ததா?...''

மீஷா ஒன்றும் பேசாமல் தலையை அசைத்தான். தாத்தா அவனைக் குதிரைமேல் உட்கார்த்தி, அவன் விழாதிருப்பதற்காகச் சேணத்துடன் அவன் கால்களைக் கயிற்றால் சேர்த்துக் கட்டி, அடி களத்தின் வழியாக, குளக்கரை ஓரமாக, கொள்ளைக்கூட்டத்தாரின் எல்லைக் காவலிடத்தைக் கடந்து ஸ்தெப்பி வெளிக்குக் குதிரையை நடத்திச் சென்றார்.

''அதோ அந்தத் திட்டின் இடையே ஒரு பள்ளம் நெடுகப் போகிறது. அதன் ஓரமாகச் செல். எங்கும் திரும்பாதே!... நேரே போனால் சிற்றூரை அடைவாய். நல்லது, போய் வா, என் செல்வமே!''

தாத்தா மீஷாவை முத்தமிட்டுவிட்டு, குதிரையை உள்ளங்கையால் மெல்ல அடித்தார்.

நிலா இரவு. வெளிச்சமாயிருந்தது. பழுப்புக் குதிரை மெது நடையாகக் கிளம்பிற்று, செருமிற்று, பின்பு முதுகின்மேல் சுமை லேசானதே என்பதை உணர்ந்து கொண்டு வேகத்தைக் குறைத்தது. மீஷா கடிவாளவாரைச் சுண்டி

இழுத்தான், அதன் கழுத்தைத் தட்டிக்கொடுத்தான், எம்பி எம்பிக் குதித்துக் கொண்டே குலுங்கினுன்.

முதிரும் கோதுமைப் பயிரின் அடர்ந்த பசுந்தாள்களுக்குள் எங்கேயோ காடை குதூகலமாகச் சீழ்க்கை அடித்தது. பள்ளத்தின் அடித்தரையில் ஊற்றுநீர் சிலம்பியது. காற்று குளுகுளுவென்று வீசிற்று.

ஸ்தெப்பி வெளியில் தனியனுக இருந்தது மீஷாவுக்குத் திகில் ஊட்டியது. குதிரையின் கதகதப்பான கழுத்தைக் கட்டிக் கொண்டான். குளிர்ந்த சின்னஞ்சிறு உருண்டைபோல அதோடு ஒட்டிக் கொண்டான்.

பள்ளம் மேலும் கீழுமாக நீண்டுகொண்டு சென்றது. திரும்பிப் பார்க்கவே மீஷாவுக்கு அச்சமாயிருந்தது. எதைப் பற்றியும் சிந்திக்காதிருக்க முயன்றவாறு ஏதோ கிசுகிசுத்தான். அவன் காதுகளில் நிசப்தம் குடிகொண்டிருந்தது, கண்கள் மூடியிருந்தன.

பழுப்புக் குதிரை கழுத்தை ஆட்டிற்று, செருமிற்று. போக்கை விரைவுபடுத்திற்று. மீஷா விழிகளைத் துளிபோலத் திறந்தான். கீழே, திட்டின் சரிவில் வெளிர்மஞ்சள் விளக்குகள். நாய்களின் குலைப்போலி காற்றில் மிதந்து வந்தது.

இன்ப மகிழ்வால் மீஷாவின் உள்ளத்தில் கணப் போது உற்சாகம் பொங்கிற்று. குதிரையைக் கால்களால் இடித்து, ''ஹோ - ஓ - ஓ - ஓ!'' என்று கத்தினுன்.

நாய்களின் குலேப்பு கிட்டத்தில் நெருங்கியது. குன்றின் மேல் காற்ருடி எந்திரத்தின் உருவம் நிழல் வரைப்படம் போலத் தோற்றம் அளித்தது.

''யார் குதிரை மேலே?'' என்ற உரத்த குரல் காற்ருடி எந்திரத்திலிருந்து வந்தது.

மீஷா பேசாமல் குதிரையை விரட்டிஞன். தூங்கி வழிந்த சிற்றூரில் சேவல்கள் கூவின.

''நில்! யார் குதிரை மேலே?... சுட்டுவிடுவேன்!...''

மீஷா அரண்டுபோய்க் கடிவாள வாரை இழுத்துப் பிடித்தான். ஆனல் குதிரைகள் அருகாமையில் இருப்பதை மோப்பம் கண்டுகொண்ட பழுப்புக் குதிரை கனைத்தது. கடிவான வாருக்குக் கீழ்ப்படியாமல் பிய்த்துக்கொண்டு முன்னே பாய்ந்தது.

''நில்!''

காற்ருடி எந்திரத்தருகே துப்பாக்கி வெடிகள் சடசடத்தன. மீஷாவின் அலறல் குதிரைகளின் குளம்புச் சத்தத்தில் அமுங்கிப் போயிற்று. பழுப்புக் குதிரைக்கு ஈழை இழுத்தது, அது பின்னங்கால்களின் மீது நின்றது, பின்பு தடாலென்று வலப்பக்கம் சரிந்து வழுந்தது.

தன் காலில் பயங்கரமான, தாங்கமுடியாத வலி எடுப்பதை மீஷா நொடி நேரத்தில் உணர்ந்தான். அவனுடைய கத்தல் வாய்க்குள்ளேயே உறைந்து போயிற்று. பழுப்புக் குதிரை அவன் காலில் மேலும் மேலும் அதிகக் கனத்துடன் சரிந்தது.

குதிரைகளின் குளம்பொலிகள் இன்னும் கிட்டே வந்தன. உருவி ஓங்கிய வாள்களுடன் இருவர் குதிரைகள் மேலிருந்து குதித்தார்கள், மீஷாவின் மீது குனிந்தார்கள்.

''அட என்னைப் பெற்ற தாயே! இவன் சின்னப் பையன் அல்லவா!''

''நாம் இவனைக் கொன்றுவிட்டோமா என்ன?''

ஒருவன் மீஷாவின் சட்டைக்குள் கையை நுழைத்தான், முகத்தருகே புகையிலே நெடியடிக்கும் மூச்சு விட்டான். ஒருவனுடைய களிபொங்கும் குரல் கூவியது:

''பையன் முழுசாகத்தான் இருக்கிருன்!... குதிரைதான் ஒருவேளை அவன் காலைச் சிதைத்திருக்குமோ என்னவோ?...''

உணர்வு இழந்து கொண்டிருக்கையில் மீஷா கிசுகிசுத்தான்:

''ஊரில் கொள்ளைக்கூட்டம்.... அப்பாவைக் கொன்றுவிட்டார்கள்!... நிர்வாகக் குழு அலுவலகத்தை எரித்துவிட்டார்கள். உங்களிடம் சீக்கிரமாகப் போகச் சொல்லித் தாத்தா அனுப்பினர்!''

மீஷாவின் மங்கும் பார்வையில் பலவண்ண வட்டங்கள் தோன்றித் தோன்றி மறைந்தன....

அப்பா அவன் அருகாகச் செல்கிருர். செம்பழுப்பு மீசையை முறுக்குகிருன். சிரிக்கிருன். ஆனல் அவன் கண்மேல் உடலை ஆட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறது, பெரிய பச்சை ஈ. தாத்தா, கடிந்துகொள்ளும் பாவனையில் தலையை அசைத்துக்கொண்டு அவனைக் கடந்து செல்கிருர். அம்மா போகிருள். அப்புறம், அகன்ற நெற்றியை உடைய சிறு மனிதர் முன்னே நீட்டிய கையுடன் வருகிருர். கை நேரே அவனை, மீஷாவை, சுட்டுகிறது.

''தோழர் லெனின்!'' என்று கம்மிய குரலில் கத்துகிருன் மீஷா. சிரமத்துடன் முயன்று தலையை நிமிர்த்துகிருன். முன்னே கையை நீட்டி முறுவலிக்கிருன்.

அர்க்காதி கைதார்

சின்னப் பையன்*

புல் தரையில் நாத்கா உட்கார்ந்ததுதான் தாமதம், அதற்குள் அவளருகே இடம் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று சின்னஞ் சிறிசுகள் எல்லாம் கூச்சலிட்டுப் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்தன. சற்று நேரத்துக்குள் அவளைச் சுற்றி வெறுங்கால் வாண்டுகளது குதூகலக் கும்பல் ஒன்று கூடி விட்டது.

''நாத்கா, கதை சொல்லு நீ!''

''எங்களுக்கு ஏதாவது படித்துக் காட்டேன்!''

''எங்களுக்குப் படங்கள் காட்டு!''

''நாத்கா, பாட்டுப் பாடு நீ!''—விதம் விதமான குரல்களில் கூவியவாறு குழந்தைகள் அவளிடம் புத்தகங்களையும் படங்களையும் நீட்டினர். ஏனோ தெரியவில்லை சில குழந்தைகள் ஒட்டைத் தம்பட்டத்தையும், வால் இறகுகள் உதிர்ந்து போன பஞ்சடைத்த பறவை ஒன்றையுங்கூட அவளிடம் தந்தனர்.

''நாத்கா, சுவையானதாய் ஏதாவது சொல்லு'' என்று முறையிடும் குரலில் வேண்டினான் கராசிக்கவ். ''நேற்று ரோஸா ஏதோ சுவையானதாகச் சொல்லப் போவதாகக் கூறிவிட்டு, கைகளை எப்படிக் கழுவிச் சுத்தம் செய்வது, எப்படிப் பல் விளக்குவது என்று எங்களுக்குச் சொன்னாள். சுவையானதா இதெல்லாம்?''

''நாத்கா, ஒரு கதை சொல்லு!'' என்று கேட்டு, குற்றம் புரிந்தவளைப் போல் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டாள், நீல விழிச் சிறுமி ஒருத்தி.

''கதையா?'' என்று ஆலோசித்தாள் நாத்கா. ''எனக்கு கதைகள் அதிகம் தெரியாதே... சரி, அலெக்கின் கதையை சொல்லட்டுமா?'' என்று, வெடுக்கென நிமிர்ந்து பார்த்த அலெக்கிடம் கேட்டாள்.

''சொல்லு'' என்று, மௌனமாகச் சுற்றிலும் காத்திருந்த குழந்தைகளைப் பெருமையாய் ஒரு தரம் பார்த்து விட்டு, அலெக் பதிலளித்தான்.

''அலெக்கின் கதையை எனது சொற்களில் சொல்லப் போகிறேன். எதையாவது நான் மறந்துவிட்டால், அல்லது சரியாகச் சொல்லாவிட்டால், அலெக் குறிக்கிட்டுத் திருத்த வேண்டும். சரி, சொல்கிறேன், கேளுங்கள்!''

---

* போர் இரகசியம் என்னும் கதையிலிருந்து ஒரு பகுதி.—பதிப்பாசிரியர்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, இந்நாட்டில் போரின் இடி முழங்கி அப்போது தான் ஓய்ந்திருந்தது. சின்னப் பையன் என்று அழைக்கப்பட்ட சிறுவன் ஒருவன் அப்போது வாழ்ந்து வந்தான்.

பெரு முதலாளிகளது வெள்ளைப் படைகளை செஞ்சேனை தோற்கடித்து விரட்டியிருந்தது. விரிந்த வயல்களிலும் பசும் புல் வெளிகளிலும் அமைதி நிலவ ஆரம்பித்திருந்தது. வயல்களில் ரையும் பக்வீட்டும் பயிராகி வந்தன. அடர்ந்த செர்ரித் தோட்டங்களிடையே ஒரு சிறு வீட்டில் சின்னப் பையன் அவனது தந்தையுடனும் அண்ணனுடனும் வசித்து வந்தான். அவனுக்குத் தாய் இல்லை.

தந்தை புல் அறுத்தார், அண்ணன் அந்தப் புல்லை வண்டியில் அள்ளிக் குவித்து எடுத்து வந்தான். சின்னப் பையனும் வேலை செய்தான்—முதலில் தந்தைக்கு உதவியாகவும், பிறகு அண்ணனுக்கு உதவியாகவும் வேலை செய்தான். எஞ்சிய நேரத்தில் ஏனைய பையன்களுடன் சேர்ந்து ஓடி விளையாடினான், ஆடிக் குதித்தான்.

ஒய்யா! ஒய்யா! கொண்டாட்டம்தான்! துப்பாக்கிக் குண்டுகள் சீறிப் பாயவில்லை, வெடிகுண்டுகள் விழுந்து வெடிக்கவில்லை, கிராமங்கள் தீக்கிரையாகவில்லை. துப்பாக்கி குண்டுகளுக்குப் பலியாகாமல் இருப்பதற்காகத் தரையில் படுத்துக் கிடக்க வேண்டாம், வெடிகுண்டுகளிடமிருந்து தப்புவதற்காக நிலவறைகளில் பதுங்க வேண்டாம், எரிந்து சாம்பலாகும் கிராமங்களிலிருந்து காட்டுக்கு ஓட வேண்டாம். முதலாளிகளுக்கு இனி அஞ்சி நடுங்கத் தேவையில்லை. யாருக்கும் அடி பணிந்து வாழத் தேவையில்லை. எல்லாரும் அமைதியாக வேலை செய்து அமைதியாக வாழ முடிந்தது — வாழ்க்கை நன்றாயிருந்தது!

ஒரு நாள் மாலைப் பொழுதில் சின்னப் பையன் வாயில் முகப்பிலே வந்து நின்று சுற்றிலும் பார்த்தான். வானம் தெளிவாக இருந்தது, காற்று வெதுவெதுப்பாய் இருந்தது. இராப் பொழுதைக் கழிப்பதற்காகக் கதிரவன் கரிய மலைகளுக்குப் பின்னால் போய்க் கொண்டிருந்தான். யாவும் ஒழுங்காக இருப்பது போலவே தோன்றின, ஆயினும் ஏதோ கேடு நேருங்குவது போலிருந்தது. சின்னப் பையன் காதைத் தீட்டிக் கொண்டு உற்றுக் கேட்டான், இங்கு ஏதோ தடதடப்பது போலவும் அங்கு ஏதோ இடிந்து நொறுங்குவது போலவும் தோன்றியது. காற்றிலே கனித் தோட்டங்களிலிருந்து மலர்களது மணமோ, புல் வெளிகளிலிருந்து தேனின் வாசனையோ மிதந்து வரவில்லை. எரியும் வீடுகளது புகையும் வெடிமருந்தின் வீச்சமும் அதிர்வெடிகளது கந்தமும் கலந்து மூக்கில் ஏறுவதாக நினைத்தான் சின்னப் பையன். இதை அவன் தன் தந்தையிடம் சொன்னான், ஆனால் வேலை செய்துவிட்டு வந்திருந்த அவர் களைப்புற்றிருந்தார்.

''சின்னப் பையா, உனக்கு என்ன ஆயிற்று?'' என்று கேட்டார் அவன் தந்தை. ''கரு மலைகளுக்கு அப்பால் இடி உறுமுகிறது. நீல ஆற்றுக்கு அக்கரையில் மேய்ப்பாளர்களது சொக்கப்பனைகளிலிருந்து புகை எழும்புகிறது. மந்தைகளை மேய்க்க அங்கே சென்றிருக்கும் அவர்கள் இரவு உண்டியைத் தயாரிக்கிறார்கள். சின்னப் பையா, நீ உள்ளே சென்று அமைதியாகப் படுத்துறங்கு.''

சின்னப் பையன் உள்ளே சென்றான். படுத்துக் கொண்டு தூங்க முயன்றான். ஆனால் தூக்கம் வரவில்லை, கண்கள் மூடிக் கொள்ள மறுத்தன.

திடுமெனத் தெருவில் குதிரைக் குளம்பொலி கேட்டது, பிறகு சன்னலில் யாரோ தட்டுவது தெரிந்தது. சின்னப் பையன் கண்களை உயர்த்திப் பார்த்தான். சன்னலுக்கு வெளியே குதிரை மீது வீரன் ஒருவன் அமர்ந்திருக்கக் கண்டான். அது கறுப்புக் குதிரை, வீரனது போர்வாள் வெள்ளி போல் பளிச்சிட்டது, அவன் தலையிலிருந்த உயரமான அஸ்திரகான் குல்லாய் சாம்பல் நிறமுடையது, அதில் சிவப்பு நட்சத்திரம் இருந்தது.

''விழித்தெழுங்கள்!'' என்று கூவினான் குதிரை வீரன். ''நாம் எதிர்பாராத இடத்திலிருந்து கேடு வந்திருக்கிறது. கேடுகெட்ட முதலாளிகள் கரு மலைகளுக்குப் பின்னாலிருந்து நம் மீது தாக்குதல் தொடுத்துள்ளனர். மீண்டும் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து வருகின்றன, வெடிகுண்டுகள் வந்து விழுகின்றன. நமது படைகள் முதலாளிகளை எதிர்த்துப் போராடுகின்றன. தொலைவிலுள்ள செஞ்சேனையை உதவிக்கு வரும்படி அழைக்க நமது தகவல் ஆட்கள் குதிரை மீதேறி ஓடியிருக்கிறார்கள்.''

அச்சம் தரும் இச்செய்தியை அறிவித்துவிட்டுச் சிவப்பு நட்சத்திர வீரன் பாய்ந்தோடினான். உடனே சின்னப் பையனின் தந்தை சுவர் அருகே சென்று தமது துப்பாக்கியை எடுத்துக் கொண்டார், படையாள் பையை முதுகில் சுமந்து கொண்டார், குண்டு வாரைத் தோளில் மாட்டிக் கொண்டார்.

''சென்று வருகிறேன்'' என்று அவர் தமது மூத்த மகனிடம் கூறினார். ''அடர்த்தியாக ரை தானியம் விதைத்திருக்கிறேன்—அறுக்க வேண்டிய காலம் வந்ததும் நீ நிறைய அறுத்தெடுக்கலாம்.'' பிறகு சின்னப் பையனிடம் அவர் சொன்னார்: ''நல்லது, என் வாழ்வு மிகக் கடினமாய் இருந்துள்ளது, எந்நாளும் எனக்கு அமைதியான வாழ்வு கிட்டுவதாய் இல்லை — எனக்குப் பதில் நீ அமைதியாய் வாழ்வாய்.''

இவ்வாறு சொல்லி சின்னப் பையனை இறுகத் தழுவி முத்தமிட்டபின் அவர் புறப்பட்டுச் சென்றார். சாவதானமாய் விடை பெற்றுக் கொள்வதற்கு அவருக்கு அவகாசம் இல்லை. புல்வெளிகளுக்கு அப்பால் வெடிகுண்டுகள் வெடித்தது காதில் விழுந்தது, கரு மலைகளுக்கு அப்பால் வீடுகள் தீப்பற்றி எரிந்ததன் செவ்வொளி வானத்தில் தெரிந்தது.

''அலெக், நான் சொல்வது சரிதானு?'' என்று கேட்டாள் நாத்கா, உருக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்த குழந்தைகளை அவள் நோட்டமிட்டுக் கொண்டாள்.

''சரிதான்—முற்றிலும் சரிதான்'' என்று மெல்லிய குரலில் பதிலளித்து, அலெக் தனது கையை வெயிலில் பழுப்பேறியிருந்த நாத்காவின் தோள் மீது போட்டுக் கொண்டான்.

''நல்லது, மேலும் சொல்கிறேன், கேளுங்கள்....''

ஒரு நாள் கழிந்தது, மற்றொரு நாளும் கழிந்தது. சின்னப் பையன் ஓயாமல் வாயில் முகப்புக்குச் சென்று உற்றுப் பார்த்தான். செஞ்சேனைக்கான அறிகுறி ஏதும் தென்படக் காணும். வீட்டின் கூரையின் மேல் ஏறிப் பார்த்தான். ஒரு பகல் முழுதும் அவன் கீழே வரவில்லை. அங்கிருந்தும் ஏதும் தென்படவில்லை. இரவு நெருங்கியதும் அவன் அங்கிருந்து இறங்கி வந்து படுத்துக் கொண்டான். திடுமெனத் தெருவிலே குதிரைக் குளம்பொலியும் பிறகு சன்னல் தட்டப்படுவதும் கேட்டன. சின்னப் பையன் கண்களை உயர்த்தினுன், அதே குதிரை வீரன் அங்கே நிற்கக் கண்டான். இப்போது அவன் குதிரை ஒடுங்கிப் போயிருந்தது, எலும்பு உருவாய் நின்றது, அவனது போர்வாள் வளைந்திருந்தது, அதன் பளபளப்பு மறைந்துவிட்டது. உயரமான அவனது கம்பளிக் குல்லாயில் குண்டுகள் துளையிட்டிருந்தன, அதன் சிவப்பு நட்சத்திரம் இரண்டாகப் பிளக்கப்பட்டிருந்தது, வீரன் தன் தலையில் கட்டு போட்டிருந்தான்.

''விழித்தெழுங்கள்!'' என்று கூவினுன் வீரன். ''முன்பு வந்தது பாதிக் கேடுதான், இப்போது முழுக் கேடும் வந்துவிட்டது. முதலாளிகள் ஏராளமானேர் வந்திருக்கிருர்கள், நாம் சொற்பத் தொகையினரே இருக்கிறோம். போர்க் களத்தில் துப்பாக்கிக் குண்டுகள் பெருந் திரள்களில் பாய்ந்து வருகின்றன, ஆயிரக் கணக்கில் வெடிகுண்டுகள் நம் படையினர் மீது விழுந்து வெடிக்கின்றன. உடனே புறப்படுங்கள், எங்களுக்கு உதவி புரியுங்கள்!''

இதைக் கேட்டதும் அண்ணன் எழுந்து நின்று சின்னப் பையனிடம் சொன்னுன்:

''சின்னப் பையா, நான் போய் வருகிறேன்.... இனி நீ தனியே இருந்தாக வேண்டும். சட்டியில் சூப்பு இருக்கிறது, மேசை மீது ரொட்டி இருக்கிறது, கிணற்றிலே தண்ணீர் இருக்கிறது, உன் தோள்களின் மேல் உன் தலை இருக்கிறது.... உன்னுல் முடிந்த அளவுக்கு நீ நல்லபடியாக வாழ வேண்டும், நான் வருவேனென எதிர்பார்க்காதே.''

4*

ஒரு நாள் கழிந்தது, மறு நாளும் கழிந்தது. சின்னப் பையன் கூரை மீதேறிப் புகைபோக்கியின் அருகே அமர்ந்திருந்தான். பிறகு அவன் அறியாத வீரன் ஒருவன் நெடுந் தொலைவிலிருந்து குதிரையிலே வந்தான்.

சின்னப் பையனுக்கு எதிரே வந்ததும் குதிரையிலிருந்து அவன் குதித்து இறங்கிக் கூறினன்:

''நல்லத் தம்பி, குடிக்க எனக்குத் தண்ணீர் கொண்டு வந்து கொடு. மூன்று நாட்களாய் நான் குடிக்காமல் தாகமாய் இருக்கிறேன், மூன்று இரவுகளாய் தூங்காமல் விழித்திருக்கிறேன், மூன்று குதிரைகள் களைத்து ஓய்ந்து போகும் படி சவாரி செய்துள்ளேன். நமக்குக் கேடு வந்திருப்பது பற்றி செஞ்சேனை தெரிந்து கொண்டுவிட்டது. எல்லா எக்காளங்களும் எச்சரித்து முழங்கு கின்றன, எல்லா முரசங்களும் பலக்கக் கொட்டுகின்றன, போர்க் கொடிகள் யாவும் உயர்த்தப்பட்டுள்ளன. செஞ்சேனை நமக்கு உதவுவதற்காகப் புய லெனப் பறந்து வந்து கொண்டிருக்கிறது. நாளை இரவு வரை நாம் எதிர்த்து நின்று சமாளித்தால் போதும்.''

சின்னப் பையன் கூரையிலிருந்து சரிந்து கீழே இறங்கி, அந்த வீரனுக்குக் குடிதண்ணீர் கொண்டுவந்து தந்தான். வேண்டிய மட்டும் குடித்துவிட்டு, குதிரை மீதேறி அவ்வீரன் அங்கிருந்து பாய்ந்தோடினன்.

அந்திப் பொழுதானதும் சின்னப் பையன் படுத்துக் கொண்டான். ஆனல் அவனுக்குத் தூக்கம் வரவில்லை, கண்கள் மூடிக் கொள்ள மறுத்தன. அந்த இக்கட்டான நிலைமையில் யாருக்குத்தான் தூக்கம் வரும்?

திடுமெனத் தெருவில் காலடி ஓசை கேட்டது, சன்னலிலிருந்து சலசலப்பு எழுந்தது. சின்னப் பையன் கண்களை உயர்த்தினன், அவன் அறிந்த பழைய வீரன் அங்கே நிற்கக் கண்டான். அதே வீரன்தான், ஆனல் வெகுவாய் மாற் றம் அடைந்திருந்தான். குதிரையை இழந்திருந்தான், அவனது போர்வாள் இரண்டாய் உடைந்து விட்டது, அவன் குல்லாய் பறந்தோடிவிட்டது. அவனது கால்கள் நடுங்கி ஆடின, நிற்க முடியாமல் அவன் தடுமாறினன்.

''விழித்தெழுங்கள்!'' என்று அவன் கடைசி முறையாகக் குரல் கொடுத் தான். ''நம்மிடம் வெடிகுண்டுகள் இருக்கின்றன, ஆனல் நமது பீரங்கி வீரர் கள் எல்லாரும் கொல்லப்பட்டு விட்டனர். நம்மிடம் துப்பாக்கிகள் இருக் கின்றன, ஆனல் படையாட்கள் மிகச் சிலரே நம்மிடம் எஞ்சியிருக்கிறர்கள். நமக்கு உதவி நெருங்கி வருகிறது, ஆனல் நம்மிடம் பலம் இல்லை! இன்று இரவும் நாளை பகலும் நாம் எதிர்த்து நின்று சமாளித்தால் போதும். ஆகவே, எஞ்சியிருப்பவர்கள் எல்லாரும் புறப்படுங்கள்!''

சின்னப் பையன் தெருவினை உற்று நோக்கினன், தெரு காலியாக இருந் தது. சன்னல் கதவுகள் இழுத்து மூடப்படவில்லை, வேலிக் கதவுகள் கிரீச்சிட வில்லை—புறப்படுவதற்கு அங்கே யாரும் இல்லை. தந்தையர் எல்லாரும்

முன்பே சென்று விட்டார்கள், அண்ணன்கள் யாவரும் ஏற்கெனவே புறப் பட்டுப் போய்விட்டார்கள்—இனி யாரும் எஞ்சியிருக்கவில்லை.

ஒரேயொரு கிழவர் மட்டும் வேலிக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வரக் கண்டான் சின்னப் பையன். அந்தக் கிழவருக்கு நூறு வயது இருக்கும். அவர் துப்பாக்கியைத் தூக்கிக் கொள்ள விரும்பினர், ஆனல் முடியவில்லை— அவ்வளவு தள்ளாதவராக இருந்தார் அவர். போர்வாளை இடுப்பில் தரித்துக் கொள்ள விரும்பினர், ஆனல் இயலாதபடி அவ்வளவு பலவீனமாய் இருந் தார். பிறகு அந்தக் கிழவர் அவரது குடிசைச் சுவருக்கு அருகே இருந்த மண் மேட்டில் உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்தார்.

''அலெக், நான் சொல்வது சரிதானு?'' என்று கேட்டாள் நாத்கா. மூச்சு விட தனக்கு நேரம் கிடைக்கும் பொருட்டு அவள் இவ்வாறு கேட்டாள், பிறகு சுற்றிலும் ஒரு தரம் பார்த்துக் கொண்டாள்.

அலெக்கின் கதையை இப்போது கேட்டுக் கொண்டிருந்தவர்கள் சின்னஞ் சிறுசுகள் மட்டுமல்ல.

முன்னணி இளைஞரின் யோஸ்கா பிரிவு அனைத்துமே மெல்ல இங்கு வந்து கூடிவிட்டது. இவர்கள் எப்போது இங்கு வந்து அமர்ந்தார்கள் என்பது யாருக் கும் தெரியாது. சரிவர ருஷ்யன் புரியாத பஷ்கீர் சிறுமியான எமீனுவுங்கூட சிந்தனையில் ஆழ்ந்தவளாய் அமர்ந்து உருக்கமாகக் கேட்டுக் கொண்டிருந் தாள். கதையைக் கேட்காதவனைப் போல் ஒதுப்புறமாகப் படுத்திருந்த குறும் புக்கார விளாதிக்குங்கூட முழு நேரமும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந் தான். யாருடனும் பேசாமல் அமைதியாக அவன் படுத்திருந்ததும், வழக்க மான அவனது குறும்புகளைத் துவக்காமல் இருந்ததும் இதைத் தெளிவாகவே புலப்படுத்தின.

''சரிதான்! நாத்கா, முற்றிலும் சரிதான்!... இன்னுங்கூட சிறப்பாய் இருக்கும்!'' என்று அலெக் பதிலளித்தான், நாத்காவுக்கு இன்னும் கொஞ்சம் அருகே நகர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

''நல்லது, மேலும் சொல்கிறேன், கேளுங்கள்....''

அந்தக் கிழவர் மண் மேட்டில் உட்கார்ந்து கொண்டு அழ ஆரம்பித்தார்.

சின்னப் பையனுக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. தெருவிலே ஓடி உச்சக் குரலில் கத்தினன்:

''பையன்களே, சிறுவர்களே! கம்புகளையும் விளையாட்டுக் குதிரைகளையும் வைத்துக் கொண்டு விளையாட மட்டும்தானு தெரியும் நமக்கு? நமது தந்தை யர் எல்லாரும் சென்று விட்டார்கள், அண்ணன்கள் யாவரும் போய்ச் சேர்ந்து

விட்டார்கள். சிறுவர்களாகிய நாம் மட்டும் இங்கேதான் உட்கார்ந்திருக்க வேண்டுமா? முதலாளிகள் இங்கே வந்து அவர்களது பாழாய்ப் போன முதலாளி உலகுக்கு நம்மை இழுத்துச் செல்லும் வரை நாம் காத்துக் கொண்டு சும்மாகவா இருக்கப் போகிறோம்?''

இதைக் கேட்டதும் சிறுவர்கள் எல்லாரும் பரபரக்கும் குரலில் கூச்சலிட முற்பட்டனர். சிலர் வாயிற் கதவுகளைத் திறந்து கொண்டு வெளியே

வந்தார்கள், சிலர் சன்னல் வழியே ஏறி வந்தார்கள், சிலர் வேலிகளைத் தாண்டிக் குதித்து வந்தார்கள்.

எல்லாரும் புறப்பட்டுச் சென்று உதவி புரிய விரும்பினார்கள். சிறுவன் கேடன் மட்டும்தான் முதலாளிகளது பக்கம் சேர்ந்து கொள்ள விரும்பினான். ஆனால் அவன் தந்திரக்காரன், இதைப் பற்றி யாரிடமும் பேச்சு மூச்சு காட்டவில்லை. கால் சட்டையை இழுத்துச் சரிசெய்து கொண்டு, தானும் உதவி புரிவதற்காகச் செல்வது போல் பாசாங்கு செய்து, எல்லோருடனும் சேர்ந்து ஓடினான்.

இரவு முழுதும் சிறுவர்கள் போர் புரிந்தனர். விடியும் வரை அவர்கள் ஓயவே இல்லை. சிறுவன் கேடன் மட்டும்தான் போர் புரியவில்லை, முதலாளி களுக்கு எப்படி உதவலாமென்று ஆராய்ந்து அங்கும் இங்கும் திரிந்து கொண் டிருந்தான். முடிவில், குன்றுக்குப் பின்னல் பெட்டிகள் குவித்து வைக்கப் பட்டிருக்கக் கண்டான். இந்தப் பெட்டிகளில் கரிய வெடிகளும் பளபளப் பான குண்டுகளும் மஞ்சள் தோட்டாக்களும் இருந்தன.

''சபாஷ்! நான் தேடியலைந்தது இதற்காகத்தானே!'' என்று தன்னுள் கூறிக் கொண்டான் கேடன்.

இதற்கிடையில் பெரு முதலாளி தனது முதலாளிப் படையினரிடம் விசாரித்தார்:

''முதலாளிப் படையினரே, வெற்றி பெற்றீர்களா?''

''பெரு முதலாளியே, இன்னும் வெற்றி கிட்டவில்லையே'' என்றனர் அவர் கள். ''தந்தையரைத் தோற்கடித்தோம், பிறகு அண்ணன்களைத் தோற்கடித் தோம். நமக்கு முழு வெற்றி கிடைக்கப் போன நேரத்தில் சின்னப் பையன் இவர்களுக்கு உதவுவதற்காக வந்து சேர்ந்தான், இவனை எங்களால் இன்னும் தோற்கடிக்க முடியவில்லை.''

பெரு முதலாளிக்கு வியப்பாய் இருந்தது, அவருக்கு ஆத்திரம் வந்து விட்டது. கோபம் பொங்கும் குரலில் அவர் கூச்சலிட்டார்:

''இந்தச் சின்னப் பையனைத் தோற்கடிக்க முடியவில்லையா, என்ன இது? முட்டாள் முதலாளிகளே, உதவாக்கரை ஆட்களாக அல்லவா இருக்கிறீர் கள்! பொடிப் பயல்—அவனை முறியடிக்க முடியவில்லையா உங்களால்? உடனே புறப்பட்டுச் செல்லுங்கள், வெற்றி பெறுமல் திரும்பி வராதீர்கள்!''

முதலாளிப் படையினர் ஓரிடத்தில் அமர்ந்து ஆலோசனை செய்தார்கள்: இதைச் செய்வது எப்படி? அப்போது சிறுவன் கேடன் புதர்களுக்கு இடை யிலிருந்து திடுமென வெளிப்பட்டு, அவர்களை நோக்கி ஓடி வரக் கண்டனர்.

''மகிழ்ச்சி தரும் செய்தி கொண்டு வருகிறேன்!'' என்று அவன் கூவினன். ''கேடனுகிய நான் செய்ய வேண்டியதைச் செய்து விட்டேன். கொஞ்சம் விரகு வெட்டி, சிறிதளவு வைக்கோலும் சேர்த்துத் தீ மூட்டினேன். கரிய வெடிகளும் பளபளக்கும் குண்டுகளும் மஞ்சள் தோட்டாக்களும் இருக்கும் பெட்டிகள் யாவும் விரைவில் இந்தத் தீயில் வெடிக்கப் போகின்றன, பாருங்களேன்!''

முதலாளிப் படையினர் ஆனந்தமடைந்தனர், தமது முதலாளிப் படை யில் சிறுவன் கேடனை சேர்த்துக்கொண்டனர். அவனுக்கு ஒரு பீப்பாய் நிறைய பழப்பாகும், அதோடு கூட ஒரு கூடை நிறைய பிஸ்கெட்டும் தந்தனர்.

சிறுவன் கேடன் அங்கே அமர்ந்து வயிறு புடைக்கத் தின்றுன், மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான்.

தீ பரவியதும் திடுதிப்பென பெட்டிகள் வெடித்தன! ஆயிரம் இடிகள் ஒரே இடத்தில் விழுந்தாற் போல, பலத்த சப்தம் கிளர்ந்தெழுந்தது; ஆயிரம் மின்வெட்டுகள் ஒன்றுசேர்ந்து பாய்ந்தாற் போல, ஒளிப் பிழம்பு பளிச்சிட்டது.

''துரோகம்!'' என்று கூச்சலிட்டான் சின்னப் பையன்.

''துரோகம்!'' என்று அவனது உற்ற நண்பர்களான எல்லாச் சிறுவர்களும் சேர்ந்து கூச்சலிட்டனர்.

அந்தப் புகைக்கும் தீயிற்கும் பின்னுலிருந்து முதலாளிப் படையினர் தாக்குதல் தொடுத்துச் சின்னப் பையனைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டனர். கனத்த சங்கிலிகள் கொண்டு அவனைக் கட்டினர். பாதாளக் கல் அறைக்குள் இழுத்துச் சென்று அவனைக் கட்டிப் போட்டனர். பிறகு பெரு முதலாளியிடம் ஓடிச் சென்று, பிடிபட்டுவிட்ட சின்னப் பையனை என்ன செய்வதென்று கேட்டார்கள்.

பெரு முதலாளி சற்று நேரம் ஆலோசித்தார், பிறகு மீண்டும் சிறிது நேரம் ஆலோசித்துவிட்டுச் சொன்னுர்:

''சின்னப் பெயனை நாம் கொன்றுவிட வேண்டும். ஆனுல் முதலில் அவனைப் போர் இரகசியம் பூராவையும் நம்மிடம் சொல்லச் செய்தாக வேண்டும். முதலாளிப் படையினரே, அவனிடம் நீங்கள் விசாரியுங்கள்:

'' 'சின்னப் பையா, ஏனென்று சொல்லு நீ. நாற்பது ஜார்களும் நாற்பது மன்னர்களும் செஞ்சேனையை எதிர்த்து அப்படிப் போர் புரிந்தார்கள், ஆயினும் முடிவில் தகர்ந்தே போனுர்களே—ஏனென்று சொல்லு.'

'' 'சின்னப் பையா, எங்கள் சிறைக்கூடங்கள் நிறம்பி வழிகின்றன, எங்கள் கைதி வேலை முகாம்களில் நிற்க இடமின்றி நெருக்கமாகிவிட்டது, எங்கள் போலீஸ்காரர்கள் எல்லாரும் தெருக்களிலே சுற்றுகிருர்கள், எங்கள் படையாட்கள் யாவரும் ஓய்வின்றி செயல்படுகிருர்கள், அப்படியும் பட்டப் பகலிலும் சரி, நள்ளிரவிலும் சரி அமைதி இல்லையே—ஏனென்று சொல்லு.'

''சின்னப் பையா, நாசமாகப் போகிறவனே, இது எப்படி என்று சொல்லு. முதலில் எனது முதலாளித்துவ மேட்டுவெளிகளிலும், அடுத்து முடியரசுச் சமவெளிகளிலும், மூன்ருவதாகக் குளிர் மண்டல ஜாராட்சிலும், நான்காவதாக வெப்ப மண்டல அரசிலும், வசந்தத்தின் முற்பகுதியிலும் இலையுதிர்காலத்தின் பிற்பகுதியிலும் அதே நாளில் பல்வேறு மொழிகளிலும் ஒரே பாட்டு பாடப்படுகிறது, பல்வேறு கரங்களும் ஒரே கொடியை ஏந்திச் செல்கின்றன, எல்லாரும் ஒரே பேச்சையே பேசுகிருர்கள், ஒன்றையே சிந்திக்கிருர்கள், ஒரே செயலில் ஈடுபடுகிருர்கள்—எப்படி இது?''

''எனது முதலாளிப் படையினரே, அவனை விசாரியுங்கள்:

'' 'சின்னப் பையா, செஞ் சேனையின் போர் இரகசியம் என்ன?'

''இந்த இரகசியத்தைச் சொல்லும்படி நீங்கள் அவனைக் கட்டாயப் படுத்த வேண்டும்.

'' 'உங்கள் தொழிலாளர்களுக்கு வெளி நாட்டிலிருந்து உதவி கிடைக் கிறது அல்லவா?'

''எங்கிருந்து உதவி கிடைக்கிறது என்று சொல்லும்படி அவனை நீங்கள் கட்டாயப்படுத்த வேண்டும்.

'' 'சின்னப் பையா, உங்கள் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு இரகசியப் பாதை இருக்கிறது அல்லவா? அது வழியே நீங்கள் குரல் கொடுத்ததும் எங் கள் நாட்டவர் பதில் அளிக்கிறார்கள் அல்லவா? அது வழியே நீங்கள் பாட்டுப் பாடுகையில் எங்கள் நாட்டவரும் உங்களுடன் சேர்ந்து பாடுகிறார்கள்

அல்லவா? அது வழியே நீங்கள் ஏதாவது சொன்னதும் எங்கள் நாட்டவர்கள் உடனே அது பற்றிச் சிந்திக்கிறார்கள் அல்லவா?'

''அந்த இரகசியப் பாதை எங்கே இருக்கிறதென்று சொல்லும்படி நீங்கள் அவனைக் கட்டாயப்படுத்த வேண்டும்....''

முதலாளித்துவப் படையினர் புறப்பட்டுச் சென்றார்கள். சீக்கிரமாகவே அவர்கள் திரும்பி வந்தார்கள்.

''சின்னப் பையன் போர் இரகசியத்தை நமக்குச் சொல்ல மறுக்கிறான். நம்மை அவன் நையாண்டி செய்கிறான்.

'' 'ஆம், செஞ்சேனையிடம் போர் இரகசியம் இருக்கிறது, நீங்கள் எவ்வளவுதான் தாக்கினாலும் ஒரு நாளும் உங்களால் வெற்றி பெற முடியாது.'

'' 'எங்களுக்கு எண்ணிலடங்காதபடி ஏராளமான உதவியாளர்கள் இருக்

கிருர்கள்' என்ருன் அவன். 'எத்தனை பேரை நீங்கள் பிடித்துச் சிறையில் அடைத்தாலும் சரி, எத்தனை பேரைப் பிடித்து கடுங்காவல் வேலை முகாங்களுக்கு அனுப்பினுலும் சரி, ஒரு நாளும் உங்களால் எங்களை அழித்துவிட முடியாது; வெட்ட வெளிச்சத்திலும், நள்ளிரவிலும் உங்களுக்கு அமைதி கிடைக்கப் போவதில்லை.'

'' 'மெய்தான், இரகசியமான, பாதாளப் பாதைகளை நாங்கள் நிறுவியுள்ளோம்' என்ருன் அவன். 'ஆனுல் எவ்வளவுதான் நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்தாலும் உங்களால் அவற்றைக் கண்டுபிடிக்க முடியாது. அப்படியே நீங்கள் கண்டுபிடித்தாலும் அவற்றை உங்களால் பூட்டி வைக்க முடியாது, அடைத்து மூடவும் முடியாது. முதலாளிகளே, அது மட்டுமல்ல, இதற்கு மேல் உங்களுக்கு எதுவும் சொல்ல மாட்டேன். சைத்தான்களே, உங்களால் அவற்றை உகித்து அறிய முடியாது, ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகும் அறிய முடியாது.' ''

இதைக் கேட்டதும் பெரு முதலாளி முகத்தைச் சுளித்துக் கொண்டு கூறினுர்:

''முதலாளிப் படையினரே, இந்தப் பிடிவாதக்காரச் சின்னப் பையனை இது காறும் உலகம் கண்டிராத பயங்கர முறையில் சித்திரவதை செய்து, அவனிடமிருந்து செஞ்சேனையின் போர் இரகசியத்தைத் தெரிந்து கொண்டுவிட வேண்டும், இதை நாம் தெரிந்து கொள்ளாத வரை நம்மால் அமைதியாக வாழ முடியாது.''

முதலாளித்துவப் படையினர் உடனே புறப்பட்டுச் சென்றனர், ஆனுல் இம்முறை அவர்கள் சீக்கிரம் திரும்பி வர முடியவில்லை.

''பெரு முதலாளியே, சின்னப் பையன் எதற்கும் அசங்கவில்லை, முகம் வெளிறிட்டுப் போனுலும் கம்பீரமாக நின்ருன். போர் இரகசியத்தை அவன் சொல்ல மறுக்கிருன். சொல்வதில்லை என்று வாக்களித்திருக்கிருனும், எந்நாளும் இந்த வாக்குறுதியை மீற மாட்டானும். நாங்கள் இங்கே வருவதற்காகப் புறப்பட்ட போது அவன் தரையிலே படுத்து, குளிர்ந்த பாறைக் கல்லின் மேல் காதை வைத்துக் கேட்டான். பெரு முதலாளியே, நீங்கள் நம்ப மாட்டீர்கள், அவன் அப்படிக் குறும்பாய் எங்களைப் பார்த்துச் சிரித்தான், நாங்கள் நடுங்கிப் போனேம். முதலாளிப் படையினர் எல்லாருமே மிரண்டு விட்டனர். தவிர்க்க முடியாத நமது அழிவுக் காலம் நெருங்கி வருவதாக அந்த இரகசியப் பாதை வழியே அவன் தகவல் தெரிந்து கொண்டு விட்டனே என்று நாங்கள் அஞ்சி நடுங்கினேம்.''

''இரகசியப் பாதை ஒன்றும் இல்லை—நமக்கு உதவுவதற்காக செஞ்சேனை விரைந்து வருவதை அறிந்து கொண்டான்!'' என்று கராசிக்கவ் ஆனந்தம் தாங்க மாட்டாமல் கூச்சலிட்டான்.

கையில் இருந்ததாக அவன் கற்பனை செய்து கொண்ட போர்வாளைக் கராசிக்கவ் ஆவேசமாய் ஆட்டி வீசினன். சற்று நேரத்துக்கு முன்பு ஒற்றைக் காலில் நொண்டியடித்து அவனிடம் வந்து சிறிதும் அச்சமின்றி அவனைக் கேலி செய்த அதே சிறுமி இப்பொழுது கலவரத்துடன் அவனைப் பார்த்துவிட்டு, எதற்கும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லதென்று சற்று விலகி நின்றாள்.

அந்த நேரத்தில் சாப்பாட்டுக்கு மணியடித்ததால், கதையை நாத்கா அத்துடன் நிறுத்திக் கொண்டாள்.

''கதையைச் சொல்லி முடி'' என்று அலெக் கடுப்புடன் கூறினன்.

''கதையை முடி நீ'' என்று முகம் சிவக்கக் கூவினன் யோஸ்கா. ''சீக்கிரமாகச் சொல்லி முடி, பிறகு இரு மடங்கு சீக்கிரமாய் அங்கே போய்ச் சேருவோம்.''

நாத்கா சுற்றிலும் பார்த்தாள். முன்னணி இளைஞர்களில் ஒருவர் கூட எழவில்லை. மென்னிற முடியினர், கருநிற முடியினர், செம் முடியினர், பொன்னிற முடியினர் — இப்படிப் பலரும் அவளைச் சுற்றி அமர்ந்திருந்தனர். எல்லாரும் வைத்த கண் வாங்காமல் அவளை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அலெக்கின் கண்களைப் போல் பழுப்பு நிறக் குண்டுக் கண்கள், கதை சொல்லும் படிக் கேட்ட அந்தச் சிறுமியினுடையவை போல் நீலமாகப் பளிச்சிட்ட கண்கள், எமீனவின் கண்களைப் போல் குறுகலாகக் கறுகறுத்தவை— வழக்கமாய் வேடிக்கையும் குறும்பும் வாய்ந்த இவை போன்ற பல விதமானவையும் இப்பொழுது உருக்கம் வாய்ந்தனவாய் அவளை உற்று நோக்கின.

''சரி, கதையைச் சொல்லி முடிக்கிறேன்'' என்றாள் நாத்கா.

''...முதலாளிப் படையினர் எல்லாருமே மிரண்டு விட்டனர். தவிர்க்க முடியாத நமது அழிவுக் காலம் நெருங்கி வருவதாக அந்த இரகசியப் பாதை வழியே அவன் தகவல் தெரிந்து கொண்டு விட்டானே என்று நாங்கள் அஞ்சி நடுங்கினேம்.''

''இது என்ன நாடு? புரிந்து கொள்ள முடியாத நாடாக அல்லவா இருக்கிறது?'' என்று பெரு முதலாளி வியந்து கூவினர். ''பொடிப் பசங்கள் எல்லாம் இங்கு போர் இரகசியத்தைத் தெரிந்து வைத்திருக்கிறர்கள், வாக்குறுதியை மீருமல் இறுதி வரை உறுதியாக இருக்கிருர்கள்—என்னல் புரிந்து கொள்ள முடியவில்லையே. சரி, முதலாளிப் படையினரே, நீங்கள் விரைந்து சென்று அந்த ஆணவம் படைத்த சின்னப் பையனைக் கொலை செய்யுங்கள். பீரங்கிகளைச் சுடுவதற்குத் தயார் செய்து வையுங்கள், போர்வாட்களை உறுதிக் கொள்ளுங்கள், முதலாளித்துவக் கொடிகளை உயர ஏற்றுங்கள். நமது எக்காளத்தினர் போர் வருகிறதென அபாய அறிவிப்பு அளிப்பது காதில் விழுகிறது, நமது குறி அறிவிப்பாளர்கள் கொடிகளை ஆட்டிக் காட்டுவது கண்ணுக்குத் தெரிகிறது. இன்றைய போர் பகைவனுடனை எளிய

கைகலப்பாய் இராது, அபாயகரமான கடும் போராக இருக்கும் போல் தெரிகிறது.''

சின்னப் பையன் இவ்வாறு கொலையுண்டு போனான்....

எதிர்பாராத இச்சொற்களை நாத்கா கூறியதும் கராசிக்கவின் முகம் திடுமென வாடிவிட்டது, கற்பனைப் போர்வாளை ஆட்டி வீசுவதை நிறுத்திக் கொண்டு விட்டான். நீல விழிகளையுடைய சிறுமியின் முகம் கோணிச் சிறுத்து விட்டது. புள்ளி முகச் சிறுவன் யோஸ்கா யாரோ அவனை அவமதித்தோ, ஏமாற்றியோ விட்டது போல் சீற்றமடைந்தான். குழந்தைகள் எல்லாரும் இருப்பு கொள்ளாமல் முணு முணுத்துக் கொண்டனர். முழுக் கதையையும் முன்பே அறிந்திருந்த அலெக் மட்டும்தான் அமைதியாக இருந்தான்.

''சூறுவளி தெரியுமா, உங்களுக்கு?'' என்று, நிசப்தம் திரும்பியதும் சுற்றிலும் திரும்பி எல்லாச் சிறுவர்களையும் சிறுமிகளையும் பார்த்து, பலத்த குரலில் கேட்டாள் நாத்கா. ''அம்மாதிரிதான் போர்ப் பீரங்கிகள் இடியென முழங்கி அதிர்ந்தன. அம்மாதிரிதான் மின்வெட்டுகள் பாய்வது போல் சுடரொளி பளிச்சிட்டு, வெடிகுண்டுகள் வெடித்தன. சூறுவளியைப் போல நமது குதிரை வீரர்கள் அடித்து மோதிச் சென்றனர், புயல் மேகங்களென நமது செஞ் கொடிகள் சடசடத்துப் பறந்தன. நமது செஞ்சேனை இவ்வாறுதான் தாக்கியது.

''கோடையிலே புயல் மோதி மழை கொட்டுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அம்மாதிரிதான், மலைகளிலிருந்து பாய்ந்தோடி வரும் பெருக்கென அமளி புரிந்து அலையலையாகக் கிளர்ந்தெழுந்தனர் மக்கள். போரின் இடியோசை அதிர்ந்ததும் அம்மாதிரிதான். எங்கும் எழுச்சி குமுறிப் பொங்கி எழுந்தது. சீற்றங் கொண்ட குரல்கள் ஆயிரம் ஆயிரமாய் முதலாளித்துவ மேட்டு வெளிகளிலிருந்து உயர்ந்தெழுந்து, முடியரசுச் சமவெளிகளிலும் குளிர் மண்டல ஜாராட்சிலும் வெப்ப மண்டல அரசிலும் எதிரொலித்தன.

''தோல்வியுற்றுக் கதிகலங்கிப் போய் ஓட்டமாய் ஓடினர் பெரு முதலாளி, அரும்பெரும் மக்களையும் யாராலும் தோற்கடிக்க முடியாத செஞ்சேனையையும் பகைவர்களால் ஊகித்தறிய வொண்ணுத போர் இரகசியத்தையும் பெற்ற அந்நாட்டைச் சபித்துக் கூச்சலிட்டார்.

''சின்னப் பையனை நமது வீரர்கள் நீல ஆற்றுக்கு அருகே பசும்புல் மேட்டில் அடக்கம் செய்தனர். அவனது சமாதிக்கு மேல் மாபெரும் செங்கொடியை உயர்த்தினர்.

கப்பல்கள் மிதந்து செல்கின்றன—சின்னப்
பையனுக்கு வாழ்த்துரைத்து!
விமானங்கள் பறந்து செல்கின்றன—சின்னப்
பையனுக்கு வாழ்த்துரைத்து!
புகைவண்டிகள் விரைந்து ஓடுகின்றன—சின்னப்
பையனுக்கு வாழ்த்துரைத்து!
முன்னணி இளைஞர்கள் அணிதிரண்டு—சின்னப்
பையனை வணங்குகின்றனர்!

''முழுக் கதையையும் சொல்லி முடித்துவிட்டேன்.''

யூ ரி யா க்க வ் லெ வ்

சிறுவனுக்குக் கிடைத்த சம்பத்து

முன்னணி இளைஞர் முகாமின் வாத்தியக் குழுவில் பாஷா செதோவ்தான் யாவரிலும் சின்னவன். ஆனால் அவனது முரசு பிரம்மாண்டமானது. குச்சியாய் மெலிந்து நெட்டை உருவினனாய் நின்ற சிறுவன் கரவாயெவின் உடலில் விரியன் பாம்பு போல் சுற்றிக் கொண்டிருந்த பெரிய எக்காள இசைக் கருவியையுங்கூட தோற்கடிக்கும்படி அந்த முரசு அவ்வளவு பெரிதாய் இருந்தது. கித்தான் வாரில் அது பாஷாவின் கழுத்தில் தொங்கியது. அதன் பளு தாங்காமல் முன்னால் கவிழ்ந்து விடாதிருக்கும் பொருட்டுச் சிறுவன் சற்றே பின்னால் சாய்ந்து நின்றான். முரசு கொட்டுவதற்கு அவன் வைத்திருந்தது, ஆச்சரியக் குறியின் வடிவில் அமைந்த மெல்லிய குச்சியல்ல; ஒட்டுக் கம்பளிக் குமிழுடன் கூடிய குண்டுத் தடி. பளபளப்பான பித்தளை இசைக் கருவிகளுக்கு இசைவாய் இந்தக் குமிழ்த் தடியால் தேர்ந்த திறமையுடன் அவன் முரசு கொட்டினான். முரசு கொட்டுதல் பெரிய காரியமல்ல, எவரும் இதைச் செய்யலாம் என்பதாகத் தோன்றும்—விவரம் அறியாதவருக்கு. இது வெறும் மன மயக்கம்! இசையேட்டைப் பார்த்து பாஷா செதோவ் முரசு கொட்டினான், பெருமுரசுக்குரிய இசை அந்த ஏட்டில் குறிக்கப்பட்டிருந்தது. வாத்தியக் குழு அனைத்துக்கும் பாஷா சுதியமைத்துத் தந்தான்.

இந்தப் பெருமுரசு மிகப் பழையது, அடிபட்டுப் போய் நசுங்கியிருந்தது. அதன் வட்ட முகத்தில் பெரிய கருந் திட்டு இருந்தது. அதன் உலோக விளிம்பில் பாதியளவு தேய்ந்து அழிந்து போன வாசகம் காணப்பட்டது: ''இடி முழங்குது, உலகம் குலுங்குது.'' இடியின் சக்தி இந்தப் பெருமுரசில் குடி கொண்டிருந்தது என்று உணர்த்துவதற்காக இதில் இந்த மணிவாசகம் பொறிக்கப் பட்டிருந்ததோ, என்னமோ?

திடுமென ஒருநாள் பாஷாவின் முரசு காணாமற் போய்விட்டது.

பாஷா படுத்துறங்கும் கட்டிலின் தலைப் பக்கத்துக்கு மேல் சுவரில் இதற்கென அடிக்கப்பட்ட ஒரு பெரிய ஆணியில் இந்த முரசு மாட்டித் தொங்கிக் கொண்டிருக்கும். இது குறித்து ஏனைய எல்லாச் சிறுவர்களும் கேலி செய்வது வழக்கம்:

''பாஷா, என்றோ ஒரு நாள் இது உன் தலையிலேதான் விழப் போகிறது!''

ஆனால் பாஷாவுக்குத் தெரியும் — அது ஒரு நாளும் விழாதென்று. சன்னலுக்கு வெளியே மழை பெய்து இடி முழங்கும், உடனே முரசு ஆழ்ந்து அதிரும் உறுமலை எழுப்பிப் பதிலளிக்கும். இரவில் அவனுக்கு அது வெண்ணிலாவை நினைவு படுத்தும், முழு நிலவு விண்ணிலிருந்து குதித்து முன்னணி இளைஞரின் நான்காம் பிரிவினரது கூடத்துக்கு உருண்டோடி வந்து பாஷா செதோவின் தலைக்கு மேல் ஆணியிலே தொங்குவதாக நினைத்துக் கொள்வான்.

ஒத்திகைக்குப் புறப்படும் போது பாஷா ஒரு முக்காலி மீது ஏறி நின்று, ஒரு முக்கு முக்கி இரு கைகளாலும் முரசை உயர்த்திச் சுவரிலிருந்து எடுப்பான். கூடத்தில் வரிசையாய் இருந்த கட்டில்களில் மோதிவிடாமல் அதை வெளியே எடுத்துச் செல்வான். நேரமாகி விட்டதென்று விரைந்து செல்லுகையில், கனத்த சுமை தாங்க மாட்டாமல் சாய்ந்தாடிக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் போய்ச் சேருவான். வாத்தியக் குழு அணி வகுத்துச் செல்லும் போது பாஷாதான் எல்லாருக்கும் கடைசியில் செல்வான். யாவரிலும் சின்னவன் என்பதல்ல காரணம்—பெருமுரசுக்குக் கடைசி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது, ஆகவே அவன் கடைசியில் சென்றான். துளை இசைக் கருவியினர் அவர்களுக்கு உரிய முன்வரிசையில் சென்றார்கள். ஆயினும் எந்த எக்காள இசைக் கருவியாலோ, எல்லாக் கருவிகளாலும் சேர்ந்தோ, பெருமுரசின் பலத்த உறுமலை, குதூகலமான அதன் இடி முழக்கத்தை மூழ்கடிக்க முடியவில்லை. ''இடி முழுங்குது, உலகம் குலுங்குது! தாம்-தோம்!'' முரசு தாளமிட்டு அதிர்ந்தது, ஆனால் முரசு கொட்டிய சிறுவன் கண்ணுக்குத் தெரியாதபடி மறைந்திருந்தான். தொலைவிலிருந்து பார்க்கையில் மாபெரும் முரசு ஒன்று கசங்கிய கால் சட்டையும் ஒட்டு போட்டுச் சரி செய்யப்பட்ட மிதிகளும் அணிந்த இரு கால்கள் கொண்டு நடந்து வருவது போல் தோன்றியது....

எங்கே போயிருக்க முடியும் இந்த முரசு? சாப்பாட்டு நேரத்துக்கு முன்பு அமைதியாகத்தானே சுவரில் தொங்கிக் கொண்டிருந்தது. ஆனால் நான்காம் பிரிவினர் உணவருந்தி விட்டுத் தமது கூடத்துக்குத் திரும்பிய போது முரசு அங்கே இல்லை. சுவரில் அந்தப் பெரிய ஆணி மட்டும்தான் இருந்தது. முரசு அதன் இடத்தில் இல்லையென்பதை கூடத்துள் நுழைந்ததுமே பாஷா செதோவ் கண்டு கொண்டுவிட்டான். உடனே ஓரிடம் பக்கி இல்லாமல் தேடினான், ஒவ்வொரு கட்டிலுக்கு அடியிலும் ஆராய்ந்தான், கட்டிடம் பூராவும் திரும்பத் திரும்பச் சுற்றிவந்து பார்த்தான். பெரிய முரசு ஆயிற்றே, எப்படிக் காணமற் போகும்? சிறு ஊசி அல்லவே, வைக்கோல் போரில் காணமற் போவதற்கு!

நெடுந் தொலைவிலிருந்து பாஷா அதை இங்கே கொண்டு வந்திருந்தான். தொடர்ந்து மூன்று நாட்கள் பயணம் செய்து இந்த முகாமுக்கு வந்து சேர்ந்தான். ரயில் பெட்டியில் தனது முரசை வைப்பதற்குத் தக்க இடம் கிடைக்காமல் திண்டாடினன். தனது படுக்கை இடத்தில் முரசை வைத்து அதற்குப் பக்கத்தில் அவன் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்திருக்க வேண்டியிருந்தது. வழி நெடுகத் தனது இடத்தை முரசுடன் பகிர்ந்து கொண்டு, காலை நீட்ட முடியாமல் படுத்திருந்தான்.

''நீ இதை சாமான் பெட்டியில் போட்டிருக்க வேண்டும்'' என்று பயணிகளில் சிலர் அவனிடம் சொன்னர்கள்.

சொல்வது சுலபம்தான் — சாமான் பெட்டியில் போட்டிருக்க வேண்டுமாம்! அங்கே அவர்கள் இதன் மேல் எல்லா சாமான்களையும் குவித்தால் என்ன ஆவதாம்? அல்லது இதை நிமிர்த்து வைக்காமல் கவிழ்த்துப் போட்டார்களாயின் என்ன ஆவதாம்? வேண்டாம் அதெல்லாம், நன்றி உமக்கு! இது கைப்பெட்டி அல்ல, இசைக் கருவி.

திடுமென இப்போது இது காணமற் போய்விட்டது.

அன்று பகற் பொழுது முழுதும் பாஷா அவனது முகாமெங்கும் முரசைத் தேடி அலைந்தான். எல்லா இடங்களுக்கும் சென்று மூலை முடுக்கெல்லாம் தேடினன். எல்லாரையும் விசாரித்தான்:

''எனது முரசைப் பார்த்தீர்களா?''

இல்லையே என்று எல்லாரும் தோளை உலுக்கிக் கொண்டார்கள். பாஷாவின் முரசு எங்கே போயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை. அதைப் பார்த்தவர் யாரும் இல்லை.

நான்காம் பிரிவினர் மாலை உணவருந்துவதற்காகப் புறப்பட்டுச் சென்றபோது, பாஷா அவர்களுடன் செல்லாமல் கூடத்திலேயே தங்கிவிட்டான்.

''எனது முரசை நான் தேடிப் பிடித்தாக வேண்டும், அது வரை நான் சாப்பிடப் போவதில்லை'' என்றன் அவன்.

''என்ன? உண்ணவிரதமா இருக்கப் போகிருய்?''

''இல்லை, உண்ணவிரதமல்ல இது. எனது முரசு எனக்குக் கிடைக்கும் வரை நான் சாப்பிடப் போவதில்லை.''

வாத்தியக் குழு அதன் முரசு இல்லாமலே அணிவகுத்துச் சென்றது, ஆனல் அணிவகுப்பு இசை அன்று களை இழந்து உயிரற்றதாய் ஒலித்தது. துளை இசைக் கருவிகள் தாளஇசைவின்றித் தடுமாறின—வாத்தியக் குழு அதன் பிரதான வாத்தியத்தை இழந்திருந்தது.

''நீ கவலைப்படாதே'' என்று பாஷாவுக்கு ஆறுதல் கூறினன் குழுத் தலைவன் கிம். ''உனக்கு ஒரு புதிய முரசு வாங்கித் தருவோம்'' என்றன்.

''புதியது ஒன்றும் எனக்கு வேண்டாம்'' என்று பதிலளித்தான் பாஷா

செதோவ். ''எனது பழய முரசுதான் எனக்கு வேண்டும். அது எனது மர புரிமைச் சொத்து, எனக்குக் கிடைத்த சம்பத்து.''

''நிலப் பிரபுவா நீ? மரபுரிமைச் சொத்து, சம்பத்து என்றெல்லாம் பேசுகிறுயே.''

பாஷா ஒன்றும் சொல்லவில்லை. கூடத்துக்குச் சென்று, சாப்பிடாமலே படுக்கையில் படுத்துக் கொண்டான்.

மறுநாள் பொழுது விடிந்ததும், பாஷா செதோவும் காணுமற் போய் விட்டது முன்னணி இளைஞர்களுக்குத் தெரிய வந்தது. அவனுடைய படுக்கை சரிசெய்து வைக்கப்பட்டிருந்தது, ஆனுல் பாஷா எங்கோ மறைந்துவிட்டான். காலை உணவருந்தியதும் முகாமினர் எல்லாருமாகச் சென்று, காணுமற் போன பாஷாவைத் தேடுவதென்று காலை அணிவகுப்பின் போது அறிவிக்கப் பட்டது.

முகாமே காலியாகிவிட்டது. முன்னணி இளைஞர் பிரிவுகள் யாவும் புறப் பட்டுச் சென்றன. சிறுவர்கள், சிறுமிகள் எல்லாரும் துப்பறிவோராகச் செயல் பட்டார்கள். யாவரும் பாஷாவைக் கடிந்து கொண்டார்கள். சனியன் பிடித் தவன் எங்கோ மறைந்துவிட்டானே. அவனது அந்த விஞேத மரபுரிமைச் சொத்தைத் தேடிக் கொண்டு எங்கே போனுன், தெரியவில்லையே.

தேடி அலைந்து களைத்துப் போன முன்னணி இளைஞர்கள் தூங்கிக் கொண் டிருந்த நேரத்தில் பாஷா செதோவ் திரும்பி வந்தான். தள்ளாடியபடி வாயில் வழியைக் கடந்து உள்ளே நுழைந்தான், கண்கள் குழி விழுந்திருந்தன. பார்ப்பதற்கு அவன், போர் முடிந்து முகாமுக்குத் திரும்பும் படையாளைப் போல் இருந்தான். பெரிய கேடயம் போல் அவனது முரசு அவன் தோளில் தொங்கியது. குமிழ்த் தடியைத் தண்டாயுதம் போல் கையில் பிடித்திருந் தான். நெடுந் தூரம் சென்று சுற்றிவிட்டு வந்ததாலும், பெரும் பளுவைச் சுமந்து வந்ததாலும் தள்ளாடிக் கொண்டு நடந்தான்.

அவனைக் கண்டதும் குழுத் தலைவன் கிம் மகிழ்ச்சிக் கூச்சலிட்டான்:

''தேடிப் பிடித்துவிட்டாயே!''

''ஆம், தேடிப் பிடித்துவிட்டேன்...'' முயற்சி செய்து பதில் சொன்னுன் பாஷா.

''நீ எங்கே போயிருந்தாய்?'' என்று அவனை ஏற இறங்கப் பார்த்தபடி கேட்டான் கிம். ''இங்கே முகாமில் நாங்கள் எல்லாரும் எங்கெங்கோ சென்று உன்னைத் தேடினேம்.''

''நான் ஏதாவது சாப்பிட்டாக வேண்டும்'' என்ருன் பாஷா.

''ஆம், சாப்பிடத்தான் வேண்டும். சாப்பாட்டு அறைக்குச் செல்வோம், வா! முரசை என்னிடம் கொடு, நான் தூக்கி வருகிறேன்.''

''வேண்டாம், நானே தூக்கி வருவேன்'' என்று முனகினுன் பாஷா.

''மன்றத்திலிருந்து வந்திருந்த பையன்கள் இதை எடுத்துச் சென்றுவிட்டார்கள். நான் தேடிப் பிடித்து விட்டேன்....''

காலியாக இருந்த சாப்பாட்டு அறையில் ஒரு நாற்காலியில் ஓய்ந்து போன நிலையில் சரிந்து விழுந்தான், பிறகு முரசை எடுத்துத் தனக்குப் பக்கத்தில் தரையில் வைத்தான். அங்கிருந்து அது உருண்டோடிச் சென்று திரும்பவும் காணமற் போய்விடுமென அஞ்சுகிறவனைப் போல் வைத்த கண்

வாங்காமல் அதை உற்றுப் பார்த்தபடி அவன் சாப்பிட ஆரம்பித்தான். பொங்கல் ஆறிப் போயிருந்தது, ஆனால் அடங்காப் பசி கொண்ட சிறுவன் ஆவலுடன் அதை அள்ளி அள்ளி விழுங்கினான். இதற்கிடையில் குழுத் தலைவன் கிம் மேசையின் முன்னால் அவனுக்கு எதிரே வந்து அமர்ந்து கொண்டான், அவனிடம் ஏதும் கேட்கவோ, அவனை ஏசவோ இல்லை. புரூட்சலாடும் சாப்பிட்டு முடித்து, புறங்கையால் பாஷா தன் உதடுகளைத் துடைத்துக் கொண்ட பிறகு குழுத் தலைவன் அவனிடம் கேட்டான்:

''இந்த முரசின் மீது உனக்கு ஏன் இத்தனை ஆசை?''

பாஷா செதோவ் இப்போதுதான் முதல் தரம் பார்ப்பது போல் குழுத் தலைவனை உற்றுப் பார்த்தான், பிறகு அவனிடம் கூறினான்:

''இது திமீத்ரி ஃபியோதரவிச்சின் முரசு. எங்களது அண்டை வீட்டுக்காரர் இதை என்னிடம் ஒப்படைத்தார்—எனக்குக் கிடைத்த சம்பத்து இது.''

குழுத் தலைவன் கிம்முக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகவே பாஷா விளக்கிச் சொன்னான்:

''வெள்ளைப் படையினர் எங்கள் நகரைப் பிடித்துக் கொண்ட போது திமீத்ரி ஃபியோதரவிச் இசைவாணராய் இருந்தவர். 'ஜார் அரசனைக் கடவுள் காப்பாற்றுவாராக' என்ற ஜார் அரசன் வாழ்த்துக் கீதத்தை வாசிக்கும்படி வெள்ளைப் படை அதிகாரி இந்த இசைக் குழுவுக்குக் கட்டளையிட்டார். ஆனால் திமீத்ரி ஃபியோதரவிச்சும் ஏனைய இசைவாணர்களும் செம்படை ஆதரவாளர்கள். ஜார் அரசன் வாழ்த்தினை இசைக்க அவர்களுக்கு விருப்பமில்லை. ஆகவே அவர்கள் இசைத்தனர்:

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள்
பதறுகின்ற மனிதர்காள்,
பாரிற்கடையரே எழுங்கள்
விறுகொண்டே தோழர்கள்...

''வெள்ளைப் படை அதிகாரி கத்தினார், சபித்தார். பிறகு அவர் கூச்சலிட்டார்: 'இயந்திரத் துப்பாக்கியை இங்கே கொண்டு வாருங்கள்!' உடனே இயந்திரத் துப்பாக்கி இழுத்து வரப்பட்டது. ஆனால் இசைவாணர்கள் அப்போதும் தொடர்ந்து சர்வதேசியக் கீதத்தை இசைத்துச் சென்றார்கள். படை அதிகாரி 'சுடுங்கள்!' என்று உத்தரவிட்டார். முரசு கொட்டிய திமீத்ரி ஃபியோதரவிச்சும் ஏனைய செம்படை இசைவாணர்களும் சுட்டு வீழ்த்தப் பட்டனர்.''

பாஷா செதோவ் தனது முரசை உற்று நோக்கினான், அதில் இருந்த பெரிய கருந் திட்டை அவனது உள்ளங் கை வருடிச் சென்றது.

''இதோ இருக்கிறது, குண்டு துளைத்துச் சென்ற இடம்.''

சாப்பாட்டு அறையில் நிசப்தம் குடிகொண்டுவிட்டது. குழுத் தலைவன் கிம் முரசின் மீது கவிழ்ந்து கொண்டு கையால் அதைத் தொட்டுப் பார்த்தான். பிறகு திமீத்ரி ஃபியோதரவிச் அதில் பொறித்திருந்த வாசகத்தைப் படித்தான்: ''இடி முழங்குது, உலகம் குலுங்குது.'' சமையல்கார அன்னை சமையலறையிலிருந்து வந்து பாஷா செதோவின் சம்பத்தை உருக்கமாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

''எங்கள் பக்கத்து வீட்டுக்காரர் அப்போது சிறிய பையன்'' என்று கூறிச் சென்றான் பாஷா. ''அவருக்குத் திமீத்ரி ஃபியோதரவிச்சைத் தெரியும், இந்த அரும் பெரும் முரசை அவர் எடுத்துச் சென்றார்.''

''இதை நீ பொருட்காட்சி சாலைக்கு அன்பளிக்க வேண்டும்'' என்றான் கிம்.

''இல்லை, அது சரியல்ல'' என்றான் பாஷா. ''பொருட்காட்சி சாலையில் இது மௌனமாய் அல்லவா இருந்து வர வேண்டும், முழக்கமிட வேண்டிய முரசு இது....''

பாஷா செதோவ் மேசையிடமிருந்து எழுந்து, காலித் தட்டுக்குப் பக்கத்தில் மேசை மீதிருந்த குமிழ்த் தடியை எடுத்து, முரசை மெல்லத் தட்டினான். ஆழமாய் ஒலித்த முழக்கம் சாப்பாட்டு அறையினுள் பரவிச் சென்றது. பாஷா திரும்பவும் ஒரு தட்டு தட்டினான். அதிர்வுகள் முன்னிலும் அதிகமாயின. திடுமெனச் சிறுவன் அந்த முரசைத் தூக்கிக் கழுத்தில் மாட்டிக் கொண்டான். முன்பக்கம் கவிழ்ந்து விடாதபடி பின்பக்கம் சாய்ந்து நின்று குமிழ்த் தடியால் கொட்டினான். வாத்தியக் குழுவினர் தூங்கிக் கொண்டிருந்தார்கள், அவர்களது துளை இசைக் கருவிகளும் எக்காளங்களும் மௌனமாயிருந்தன. ஆயினும் பாஷாவின் அரும்பெரும் முரசு முழங்கியது, அதன் இசையைக் குழுத் தலைவன் கிம்மும் சமையற்கார அன்னையும் அடையாளம் தெரிந்து கொண்டார்கள். புகழ்மிக்க அந்தப் பண் பாஷாவின் சின்னஞ் சிறு கையால் தட்டியெழுப்பப்பட்டு, பெரு முரசின் உந்தியிலிருந்து எழுந்து அதிர்ந்தது. பண் மேலும் வலுமிக்கதாகிச் சாப்பாட்டு அறையில் நிரம்பியது, துயிலெழுமாறு அறைகூவித் தெளிவாய் முழங்கியது. ஜார் அரசன் வாழ்த்தினை இசைக்க மறுத்து, புதிய உலகை அமைத்திடுவதற்கான இறுதிப் போரில் தமது இன்னுயிரைத் தியாகம் புரிந்த அந்தச் செம்படை இசைவாணர்கள் முன்பு இயந்திரத் துப்பாக்கியின் குண்டுகளுக்கு அஞ்சாது இசைத்த பண் அது.

அனத்தோலி மஷ்கோவ்ஸ்கி

செல்யூஸ்கின்த்லி தெருவிலிருந்து வந்தவன்

ஓடிவந்து மணலில் விழுந்த நாங்கள் பேசவில்லை. பேசியதும் சிரித்ததும் போதுமென்று ஒய்வெடுத்துக் கொண்டது எங்கள் நாக்கு. வெயில் காய்ந்தது. அப்போதுதான் நான் ஆற்றிலிருந்து கரைக்கு ஓடிவந்து மணலில் புரண்டிருந்தேன். மாவில் புரட்டியெடுத்து வாணலியில் போடப்பட்ட மீனைப் போன்றவனாய் அங்கே படுத்துக் கிடந்தேன்.

ஆனால் லியோங்கா இது போதுமென நினைக்கவில்லை, அவன் என் மேல் மண்ணைப் போட்டு மூடிச் சென்றான். என் கால்கள் ஏற்கெனவே மறைந்துவிட்டன, என் மார்பு மீது ஒரு சிறு மஞ்சள் மேடு எழுந்து வந்தது.

லியோங்கா பாடுபட்டு வேலை செய்தான், வியர்வைத் துளிகள் அவன் மூக்கு நுனியிலிருந்து சொட்ட ஆரம்பித்தன.

''தெப்பம்! தெப்பம்!'' என்று திடுமெனக் கூச்சலிட்டான் காவ்ரிக். எல்லாரும் மணலிலிருந்து குதித்தெழுந்தார்கள்.

நான் மட்டும்தான் எழவில்லை, லியோங்கா செய்து வைத்திருந்த வேலையை வீணாக்க மனம் வரவில்லை எனக்கு.

கவனமாய்த் தலையை வலப் பக்கம் திருப்பிப் பார்த்தேன், திவீனா ஆற்றில் தொலைவில் ஒரு வளைவில் நீண்டதொரு தெப்பம் மிதந்து வரக் கண்டேன்.

ஆம், துண்டு மரங்களது தெப்பம்!

இந்தத் தெப்பங்கள் மிதந்து செல்லாத பெரிய பெலோருஷ்ய ஆறு ஒன்று கூட இல்லை. திவீனா இதற்கு விதிவிலக்கு அல்ல. தெப்பங்களின்றி எங்கள் ஆற்றைக் கற்பனை செய்வது முடியாத காரியம். வேகமாய் ஓடிவரும் வெள்ளத்தில் இத்தெப்பங்கள் மிதந்து வருகின்றன. இவற்றின் ஒவ்வொரு முனையிலும் மிகப் பெரிய திருப்புத் துடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. வழி செலுத்துவோர் இங்கே நின்று துண்டுமரத்தில் கால்களை வைத்து அழுத்திப் பெருந் துடுப்புகளை இயக்கித் தெப்பத்தைச் சரியான பாதையில் செலுத்துகிறார்கள். பாலத்துக்கு அடியில் புகுந்து செல்வது மிகவும் அபாயகரமானது: பாலந்தாங்கியில் தெப்பம் மோதுமாயின் அதோகதிதான். பாலத்தை நெருங்கியதும் வண்ணத் தலைக் குட்டை அணிந்த பெண்கள் தெப்பத்தின் கூடாரத்திலிருந்து வெளியே வந்து நின்று கலவரத்துடன் மௌனமாய் முன்

ஞல் உற்று நோக்குவதையும் சிலர் தம்மீது சிலுவைக் குறியிட்டுச் கொள் வதையுங்கூட அடிக்கடி நான் பார்த்திருக்கிறேன்.

இதற்கிடையில் கரையிலே நாங்கள் தலை தெரிக்க ஓடிச் சென்று உச்சக் குரலில் கத்துவோம்:

''தெப்பத்தை இடப் பக்கமாய்ச் செலுத்துங்கள், இல்லையேல் பாலந் தாங்கியில் மோதிக் கொள்வீர்கள்!''

நங்கள் எல்லாரும் பரபரப்புற்று எங்களுக்கிடையே விவாதிப்போம்—தெப்பம் மோதாமல் போய்ச் சேருமா, மோதிக் கொண்டு விடுமா? நிலைப் பாடில்லா இந்த நீண்ட நெடிய தெப்பத்தை வழிநடத்திச் செல்லுதல் இலே சான காரியமல்ல. முன்பு ஒரு தெப்பம் பாலந்தாங்கியில் மோதிக் கொண் டதை இங்குள்ளோர் கண்ணுற்றனர். தெப்பம் சுக்கு நூருய்த் தகர்ந்து துண்டு மரங்கள் சிதறுண்டு ஆறெங்கும் ஓடிச் சென்றன, தெப்பக்காரர்கள் தப்பிப் பிழைப்பதற்குள் பெரும் பாடாகிவிட்டது....

''நீந்திச் செல்வோமா?'' என்று கலக்கத்துடன் கேட்டான் காவ்ரிக்.

''அதற்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது'' என்றேன் நான். ''லியோங்கா, உன் வேலையைச் செய்து முடி.''

அவன் மேலும் மேலும் மணலை அள்ளி என் மேல் குவித்தான். முதலில் மண் என்னைக் கிளுகிளுக்கச் செய்தது, பிறகு குளுமையாய் இருந்தது, முடிவில் என்னை அழுத்த ஆரம்பித்தது.

''நாம் போய்ச் சேர்வதற்குள் நேரமாகிவிடக் கூடாது'' என்று அமைதி யில்லாக் குரலில் கூறினுன் காவ்ரிக், ''பையன்களே, புறப்படுங்கள்! நீங்கள் எல்லாம் செத்தப் பிணங்களா, என்ன?'' என்றுன்.

''சரி, நீ நீச்சலடித்துச் செல்'' என்றேன் நான், சாவதானமாய். ''நீ நடு ஆற்றுக்குப் போய்ச் சேருவதற்கும் தெப்பம் இங்கே வந்தடைவதற்கும் சரியாக இருக்கும்.''

சிடுசிடுப்பாய் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான் காவ்ரிக்.

லியோங்கா தொடர்ந்து அவன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். இப்போது நான் வெளியே தெரியாதபடி மறைந்துவிட்டேன். என் தலை மட்டும்தான் மணலுக்கு மேலே நீட்டிக் கொண்டிருந்தது. அக்கம் பக்கத் தில் சென்றவர்கள் என்னை விரலால் சுட்டிக் காட்டி வாய்விட்டுச் சிரித்துக் கொண்டார்கள்.

மணலில் புதைந்திருப்பது நன்ருகவே இருந்தது: அப்படியொன்றும் சூடாய் இல்லை.

தெப்பம் வந்து கொண்டிருந்த பக்கம் இப்போது என்னல் தலையையுங் கூட திருப்பிப் பார்க்க முடியவில்லை. அது அருகாமையில் வந்துவிட்டதா என்று மெதுவாய் லியோங்காவிடம் விசாரித்தேன்.

''சுமார் அரைக் கிலோமீட்டர் தொலைவில் வருகிறது'' என்று சொல்லி லியோங்கா முதுகை நிமிர்த்தித் தனது வேலையைப் பார்த்து மனம் மகிழ்ந்து கொண்டான்.

''நாம் புறப்பட வேண்டாமா? நேரமாகவில்லையா?'' என்று கேட்டேன்.

''சரி, புறப்படு!'' என்று கூவினான் லியோங்கா.

நான் ஓர் உலுக்கு உலுக்கித் துள்ளியெழுந்தேன். கனத்த மணற் கவசம் நொறுங்கிச் சலசலத்து என் மேலிருந்து விழுந்தது. கரை ஓரமாய் நாங்கள் தலை தெறிக்க ஓடினோம். நீர்த் திட்டுகளையும், துண்டுமரங்களையும், பாறைக் கற்களையும், யாரோ கழற்றிப் போட்டிருந்த ஆடைகளையும், மற்றும் கம்பிச் சுருள்களையும், பலகைகளையும் தாவிப் பாய்ந்து பறந்தோடினோம். மணலில் எங்கள் பாதங்கள் மெல்லிய சுவடுகள் பதித்தன. நீரினுள் குதித்துத் தட தடக்கத் தட்டினோம்.

நீரோட்டம் எங்களைப் பின்னோக்கி இழுத்துச் சென்றது. ஆனால் நாங்கள் கனைத்து மூக்கிலிருந்து நீரை வெளியே தள்ளி, தெப்பத்தை நோக்கி முன்னால் சென்றோம். ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு நீந்தினோம். நான் சுழலடி அடித்துச் சென்றேன் (இவ்வழியில் என்னால் வேகமாய் நீந்த முடிந்தது). வோவ்கா வீச்சடி அடித்தும், லியோங்கா அதிவேக மாற்றடி அடித்தும் நீந்தினர்.

லியோங்கா எங்களிடமிருந்து பிரிந்து நீரைக் கிழித்துக் கொண்டு அதி விரைவாய் முன்சென்றான். வெட்டுமரங்களிடம் அவன்தான் யாருக்கும் முதலில் போய்ச் சேர்ந்தான்.

தெப்பத்தை நோக்கி இன்னும் நான் போய்க் கொண்டிருக்கையில் லியோங்கா வெட்டு மரங்கள் மீது அமர்ந்து வெயிலில் காய்ந்து கொண்டிருந்தான்.

தெப்பத்தில் நாங்கள் முதலில் ஏறிவிடவில்லை, அதற்கு முன்பே அங்கே சில பையன்கள் அமர்ந்து கொண்டு, நெருங்கி வந்த எங்களை அலட்சியமாய்ப் பார்வையிட்டனர்.

களைத்துப் போய் நான் தெப்பத்திடம் போய்ச் சேர்ந்தேன். ஒட்டுப் போட்டுத் தைக்கப்பட்ட நிசார் அணிந்திருந்த சப்பை மூக்குச் சிறுவன் ஒருவன், நான் மேலே ஏறுவதற்குக் கைகொடுத்து உதவ வந்தான்.

அதைக் கவனிக்காதது போல் பாவனை செய்து கொண்டு ஒரு முக்கு முக்கி மேலே எழுந்தேன், அப்பொழுது வெட்டுமரங்களின் சொறசொறப்பான மேற்புறத்தில் வயிற்றை சிராய்த்துக் கொண்டேன். தத்தித் தாவித் தெப்பத்தில் ஏறினேன். வயிற்றில் தோல் உராய்ந்துவிட்டது, சில இடங்களில் இரத்தம் கசிந்தது.

மற்றும் பல பையன்கள் தெப்பத்தை நோக்கி நீந்தி வந்தனர். யாவருக்கும் கடைசியில் காவ்ரிக் வந்தான். நீராவி இயந்திரத்தைப் போல் உஸ்ஸிட்டு,

பார்க்கப் பரிதாபமான முறையில் கைகளை ஆட்டியசைத்து, ஐந்து ஆண்டுகளாய் நீந்தாதவனைப் போல் திணறிக் கொண்டு நீந்தினான்.

''காப்புக் குழுவினர்—தயாராகுங்கள்!'' லியோங்கா கூக்குரல் எழுப்பினான். எங்களில் சிலர் பெரு முயற்சி செய்து காவ்ரிக்கை இழுத்துத் தூக்கித் தெப்பத்துள் விட்டோம்.

அவனுக்கு மேல்மூச்சு வாங்கிற்று. துண்டு மரங்கள் மீது உடனே படுத்துக் கொண்டான்.

''மூச்சு வாங்குகிறதா?'' என்று கேட்டான் லியோங்கா.

''இ-ல்-லை'' என்று காவ்ரிக் நீட்டியிழுத்து முனகினான். ஆனால் முகம் வெள்ளையாய் வெளிறிட்டிருந்தது, குழிவுகளில் நீலம் பாய்ந்திருந்தது.

ஒட்டுப் போட்டுத் தைக்கப்பட்ட நிசார் அணிந்த பையன் என் பக்கத்தில் வந்து அமர்ந்து அவனது தகிக்கும் தோளால் என் தோளில் இடித்தான்—நீண்ட நேரமாய் அவன் இந்த தெப்பத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது புலப்பட்டது. அவன் என்னிடம் சொன்னான்:

''உங்கள் எல்லாருடன் இனி அவனை நீந்தி வர அனுமதிக்காதீர்கள். உயிர்க் காப்புச் சேவகர்கள் இவ்வளவு தூரம் வருவதில்லை.''

அவன் குறிப்பிட்டது குளிப்புத் துறைகளில் சேவை புரியும் உயிர் காப்புப் படையினர்.

''மெய்தான்'' என்றேன் நான். ''நீ எங்கிருந்து நீந்தி வந்தாய்?''

''அங்கிருந்து....'' என்று நீரோட்டத்துக்கு எதிர்த் திசையில் கையை வீசிக் காட்டினான். ''செல்யூஸ்கின்த்ஸி தெருவிலிருந்து வருகிறேன். நீ எங்கிருந்து வருகிறாய்?''

''சோவியத் தெருவிலிருந்து வருகிறேன். நான்காவது கட்டிடத் தொகுதி. உனக்குத் தெரியுமா?''

''ரொம்பப் பெரிதாய் இருக்குமே, அதுவா?''

''ஆம், அதுவேதான்.''

எனது குடியிருப்பு எண்ணை அவனிடம் சொன்னேன்.

''நான் வசிப்பது 17ஆவது வீடு, குடியிருப்பு 6.''

''அப்படியா? உன் பெயர் என்ன?''

''ஃபேத்கா.... உன் பெயர்?''

என் பெயரைச் சொன்னேன்.

''ஐயோ, பார் இதை! தெப்பத்தை எங்கே செலுத்துகிறார் இவர்?'' திடுமெனக் குதித்தெழுந்து கத்தினான் ஃபேத்கா. புள்ளி விழுந்த அவனது சப்பை மூக்கு முகம் வெளிறிட்டுச் சென்றது. ''மோதத்தான் போகிறோம்!''

நாங்கள் பேசிக் கொண்டிருந்த போது தெப்பம் பாலத்தருகே மிதந்து வந்துவிட்டது. கெட்டியாக இணைக்கப்படாத அது நடுவில் கோணிக் கொண்டு

விட்டது. நேரே பாலந்தாங்கியை நோக்கி அது விரைந்தோடிக் கொண்டிருந்தது.

எல்லாப் பையன்களும் தவளைகள் போல் நீருக்குள் தாவிக் குதித்தார்கள். இன்னும் நிதான மூச்சு திரும்பாத காவ்ரிக்குங்கூட புரண்டு சென்று உருளைக் கிழங்கு மூட்டையைப் போல் தொப்பென விழுந்தான்.

நானும் குதிக்கவே விரும்பினேன். ''இடப் பக்கம்! இடப் பக்கமாய் ஒதுக்கிச் செலுத்துங்கள்!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு, முன்பக்கத்துத்



தெப்பக்காரரிடம் ஃபேத்கா பாய்ந்தோடியதைக் கண்ட நான் குதிக்கவில்லை. தயாராய் ஓரத்துக்கு நகர்ந்து உட்கார்ந்து கொண்டேன்.

பாலம் எங்களை நோக்கிப் பறந்தோடி வந்தது. அச்சந் தரும் பாலந்தாங்கியின் உதைகாலின் கற்களுக்கு இடையில் அமைந்த இடுக்குகள் ஏற்கெனவே என் கண்ணுக்குத் தெரிந்தன.

கூச்சலிட்டுக் கைகளை வீசிக் காட்டியபடி தெப்பக்காரரிடம் ஓடினன் ஃபேத்கா. பிறகு துடுப்பின் முனையைப் பிடித்து அழுத்தி, தெப்பக்காரருடன் சேர்ந்து முழு பலத்தையும் கொண்டு தள்ளினன். கடுமுயற்சியால் அவன் முதுகு விறைத்து விட்டது, அவன் கால்கள் துண்டு மரங்களை வலிய அழுத்தின, அவன் முடிகள் கற்றிலே துடித்தன.

நான் ஓடிச் சென்று உதவ வேண்டும் என்பது தெரிந்தது எனக்கு. அவசியம் உதவ வேண்டும். பிரம்மாண்டமான, மூர்க்கமான உருவம் எங்களை

நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது, மிரட்சி தரும் பயங்கரம் என் வயிற்றையும் நெஞ்சையும் கலக்கியது. என்னுல் நகர முடியவில்லே, எனது இடத்தை விட்டு அசைய முடியவில்லே.

பாலந்தாங்கியின் உதைகாலிலிருந்து எங்கள் தெப்பம் இரண்டு மீட்டர் விலகிச் சென்றது, திடுமென யாவும் இருண்டு போயின, தலேக்கு மேல் ஏதோ தடதடத்து இரைந்து உறுமியது. பிறகு கண் கூசும்படி திரும்பவும் எங்கள் மீது சூரிய வெளிச்சம் வீசியது—பாலத்துக்கு அடியிலிருந்து வெளியே பாய்ந்து நாங்கள் நீரோட்டத்தின் திசையில் பறந்தோடினேம்.

ஃபேத்கா திருப்புத் துடுப்பை விட்டு விலகி என்னிடம் ஓடி வந்தான். புன்னகை புரிந்து படீரென வயிற்றில் தட்டிக் கொண்டு, வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாமல் நீருக்குள் தலே கீழே தாவினுன். கைகளே வீசியடித்துக் கரையை நோக்கி நீந்தினுன்.

அவனேத் தொடர்ந்து நானும் நீருக்குள் தாவினேன்.

கரை ஓரமாய் நடந்து, எங்கள் ஆடைகள் கிடந்த இடத்தை அடைவதற்கு எங்களுக்கு அரை மணி நேரமாயிற்று. எனக்குச் சங்கடமாயிருந்தது. ஃபேத்காவின் எலும்பும் தோலுமான முதுகையும் குறுகலான தோள்களே யும் அவனது முதுகெலும்பின் புடைப்புகளேயும் நான் பார்க்க முடிந்தது—இந்தப் புடைப்புகளே எண்ணிக் கணக்கிடவுங்கூட முடிந்தது. ஆனுல் நான் வாய் பேசாமல் மௌனமாய் நடந்தேன். பிற்பாடு நிசப்தத்தைக் கலேக்கும் பொருட்டு அவனிடம் கேட்டேன்:

''நீ எந்த வகுப்பில் படிக்கிருய்?''

''ஆருவது வகுப்புக்குப் போகப் போகிறேன். ஏன் கேட்கிருய்?'' பிறகு எதிர்பாராத விதமாய் அவன் கூறிச் சென்ருன்: ''எனக்கு அண்ணன் ஒருவன் இருக்கிருன், ஸ்தெப்பான் என்று பெயர், ஆமூர் ஆற்றில் அவன் எல்லேக் காவலன். ஆனுல் உங்களுடைய அந்தக் குண்டுப் பையனே இனி தெப்பங்களே நோக்கி நீந்தச் சொல்லாதீர்கள்...''

''சொல்ல மாட்டோம்'' என்று நான் வாக்களித்தேன்.

அதற்கு மேல் அவனுடன் வேருென்றும் பேசவில்லே. ஏனெனில் நாங்கள் ஏனேய பையன்கள் இருந்த இடத்தை வந்தடைந்துவிட்டோம். ஃபேத்கா என்னேப் பார்த்து இலேசாய்த் தலேயை அசைத்து விடை பெற்றுக் கொண்டு, ஒட்டுப் போட்டுத் தைக்கப்பட்டு இப்போது உலர்ந்திருந்த நிசாரில் தொடர்ந்து மேலே நடந்தான். தனது நண்பர்களுடன் சேர்ந்து மேலும் கோஞ்ச தூரம் தள்ளி ஆடைகளேக் கழற்றிப் போட்டிருந்தான்.

நடந்ததைப் பற்றி அரை மணிக்குக் குறையாமல் எங்களுக்குள் விவாதித்த பின் நாங்கள் மணலில் விளேயாடினேம், வெயிலில் படுத்திருந்தோம், கூச்ச லிட்டு ரகளே புரிந்தோம். மற்ருெரு தெப்பத்திடம் நீந்திச் சென்ருேம். அதன்

பிறகு எங்களுக்கு வயிறு பசித்தது, காது செவிடுபட கத்திக் கும்மாள மடித்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டோம்.

அன்று அந்திப் பொழுது பூராவும் நான் ஃபேத்காவைப் பற்றியே சிந்தித்தேன். என் கனவுகளிலுங்கூட தெப்பத்தைத்தான் கண்ணுற்றேன்: அது பாலத்தில் மோதிக் கொண்டது, பாலம் தகர்ந்து விழுந்தது.

மறுநாள் காலையில் நான் ஃபேத்காவைப் பார்ப்பதற்காக ஓடினேன். ஒரு மணி நேரத்துக்கும் அதிகமாய்ச் செல்யூஸ்கின்த்ஸி தெருவில் சுற்றி அலைந்தேன், ஆனால் அவனைப் பார்க்க முடியவில்லை. 14ஆம் எண் கட்டத்தில் 6ஆம் எண் குடியிருப்பு இருந்தது, அங்கிருந்த கிளி மூக்குக் கிழவி என்னைச் சபித்து அங்கிருந்து விரட்டியடித்தாள். அவன் கூறிய எண்களை நான் குளறுபடி செய்து விட்டேன் என்பது தெரிந்தது.

15ஆம் எண் கட்டிடத்தில் இருந்தாலும் இருக்கலாமென்று அங்கேயும் சென்று தட்டினேன். அங்கும் ஃபேத்கா என்பதாய் எவனும் இல்லை.

ரொட்டிக் கடையின் படிகளில் வந்து உட்கார்ந்தேன். ஒருவேளை அவன் அங்கே வந்தால் சந்திக்கலாமென்று காத்திருந்தேன்.

நான் அவனைச் சந்திக்கவில்லை. என் எதிரே அவன் வரவே இல்லை.

அவனது முகவரியை எப்படி என்னால் மறக்க முடிந்தது? தெளிவாகத் தானே என்னிடம் சொன்னான். ஓகோ, தெப்பம் பாலத்தை நெருங்குவதற்கு முன்பு அவன் சொன்னான், அப்போது நான் அதிக நாட்டம் கொண்டிருக்கவில்லை.

படிகளிலிருந்து எழுந்து, கால்சட்டையின் பின்பக்கத்தைத் தட்டிவிட்டுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டேன்.

தெப்பத்திலே நான் சந்தித்த அந்தப் பையன் எனது சிறந்த நண்பன் ஆகியிருக்கக் கூடுமென நினைத்தபடி நடந்தேன்.

அவன் என்னைத் தேடி என் வீட்டுக்கு வரலாம் என்பதாய் என்னுள் அரை குறையான ஒரு நம்பிக்கையும் எழுந்தது. நானும் எனது முகவரியை அவனுக்குத் தெரிவித்தேனே என்று நினைத்தேன். ஆனால் ஃபேத்கா வரவில்லை. எதற்காக என்னை அவன் பார்க்க விரும்ப வேண்டும்?

நிக்கலாய் பக்தானவ்

அமர முழக்கம்

''தா-தூ-தும், தா-தா!''

அதே போல் மீண்டும்:

''தா-தூ-தும், தா-தா!''

வெள்ளி எக்காளத்தின் முழக்கத்தைக் கேட்டதும் அல்யோஷா புன்னகை புரிந்தான். வெடித்திருந்த உதடுகளில் சுருக்கென வலிக்கவே, உடனே முகத்தைச் சுளித்துக் கொண்டான். உணவும் ஊட்டமும் இல்லாமல் அவனுக்கு உதடு வறண்டு வெடித்துவிட்டது. அவனுல் சிரிக்க முடியவில்லை. முன்னணி இளைஞர் எக்காளத்தின் காலை முழக்கத்தைக் கேட்டதும் அவன் உள்ளம் எப்படிப் பூரிப்புற்றது! முற்றுகை* இரவு மேலும் ஒன்று கழிந்து விட்டதைக் குறித்த முழக்கம் அது. முன்னணி இளைஞர்கள் இன்னும் உயிருடன்தான் இருக்கிறுர்கள்! எக்காளச் சிறுவன் தொடர்ந்து கடமை ஆற்றுகிறுன், வழக்கம் போல் காலையில் சுற்றி வந்து முழக்கமிடுகிறுன்!

எக்காளம் ஊதியது வாஸ்யாதான், தற்போது பாசிஸ்டுகளால் பிடிக்கப்பட்டு விட்ட நகரச் சுற்றுவட்டாரம் ஒன்றைச் சேர்ந்த கட்டை குட்டையான பையன், திடகாத்திரமானவன். அல்யோஷா பலமிழந்து, படுத்த படுக்கையாவதற்கு முன்பு அவனுக்குரியதாக இருந்த இந்தக் கடமையை அவன் இந்தப் பையனிடம் ஒப்படைத்திருந்தான். நம்பிக்கையான கரங்களிலேதான் எக்காளத்தைத் தந்தோமென அல்யோஷா மனம் மகிழ்ந்து கொண்டான். விமானக் குண்டுகளுக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் அஞ்சாமல் ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தப் பையன் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு வீட்டு வெளிமுற்றத்துக்கும் சென்று சுற்றி வந்தான். எக்காளத்தை மீண்டும் மீண்டும் ஊதி, லெனின்கிராது நகரின் சிறுவர் சிறுமியரைத் தளராத உறுதியும் வீரமும் வெளிப்படுத்தும்படி ஊக்கமூட்டி வந்தான்.

---

* பாசிஸ்டு-எதிர்ப்பு யுத்தத்தின் போது (1941-45) லெனின்கிராது நகர் பாசிஸ்டுப் படைகளால் முற்றுகையிடப்பட்டிருந்த போது இக்கதையின் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த முற்றுகை 900 நாட்களுக்கு நீடித்தது. வீரஞ் செறிந்த லெனின்கிராதுவாசிகள் சாவுக்கு அஞ்சாது வெஞ்சமர் புரிந்து பசிஸ்டுகளது முற்றுகையை முறியடித்தனர்.—பதிப்பாசிரியர்.

முற்றுகை இடப்பட்டிருந்த நகரில் யாவரிலும் அதிகமாய் ஆபத்துக்கு உள்ளாகிவர்கள் சிறுவர்கள்தாம். போர் முனையில் போர் புரிந்தவர்கள் அல்ல, கட்டிடக் கூரையில் பணியாற்றிய தீயணைக்கும் படையினர் அல்ல, ஓயாத குண்டுவீச்சுக்கு இலக்காகிய போர்க் கப்பல் மராத்தின் மாலுமிகளுங் கூட அல்ல—இன்னும் வயது வராதவர்களான சிறுவர் சிறுமிகள்தாம் அதிக அபாயத்துக்கு ஆளாயினர்.

படையாட்கள் போர்க் களத்தில் பகைவர்களுக்குப் பெருஞ் சேதம் விளைவித்து வீர மரணம் எய்தினர், ஆனல் லெனின்கிராது சிறுவர் சிறுமியர் பட்டினிக்கு இரையாகி புற்பூண்டுகளைப் போல் மழித்தெறியப்பட்டனர்.... படையாட்களுக்குக் கிடைத்த ரொட்டிப் பங்கீடு இவர்களுக்கும் கிடைத்த தென்றலும், இவர்கள் விரைவில் வதங்கிப் போயினர். குழந்தைகள் வளரு கிறவர்கள், போதிய உணவு இல்லாமற் போனதும் தசைநார்கள் பலமிழந்து விடுகின்றன, பிறகு உறுப்புகள் செயலிழந்து முடங்குகின்றன, அதன்பின் உறக்கம்தான்—நிரந்தர உறக்கம்....

சாவுக்குப் பணிந்து விடக் கூடாதென்பது அல்யோஷாவுக்குத் தெரியும். பகைவனை எதிர்த்து வெஞ்சமர் புரியும் படையாளைப் போல் அவன் சாவை எதிர்த்து வீரப் போர் நடத்தியாக வேண்டும்! அவன் வெற்றி வாகை சூடியாக வேண்டும், அப்போதுதான் போரணியில் அவன் தனக்குரிய இடத்தை ஏற்க முடியும். சிறு பையன்கள் உயிருடன் இருந்து, வளர்ந்து பெரியவர் களாகாவிடில், போரில் மடிந்தோரின் இடத்தில் நின்று தொடர்ந்து போராடு வோர் யார்?

மந்த நிலையை, கருத்தின்மையை, அசதியை முதற்கண் எதிர்த்துச் சமாளித் தாக வேண்டும். கைகால்களை மட்டுமாவது கொஞ்சம் ஆட்டியசைத்தாக வேண்டும். இந்தச் சிறுவனல் எக்காளத்தை உயர்த்தி உதடுகளில் வைத்து ஊத முடிகிறதெனில்—நிச்சயம் தன்னலும் தன் கரங்களை அசைக்க முடியும்.

விடாப் பிடியாக முயற்சி செய்து ஆல்யோஷா தன் கரங்களைச் சற்றே அசைத்தான், முதுகில் முட்டுக் கொடுத்து உடம்பைக் கொஞ்சம் உயர்த்தி ஞன், பிறகு கையை நீட்டி முன்னணி இளைஞனுக்குரிய சிவப்புக் கழுத்துக் குட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இரவிலுங்கூட இப்போது அவன் இந்தக் குட்டையைக் கழுத்திலிருந்து கழற்றியெடுப்பதில்லை. முடிச்சை அவிழ்ப்பது கடினமாக இருந்தது என்பது மட்டுமல்ல காரணம். முற்றுகை இடப்பட்டிருந்த நகரில் எல்லோரும் மிகப் பல நாட்களாகவே அவர்களது ஆடைகளைக் கழற்றுமல் அப்படியேதான் படுத்துறங்கினர். கழுத்துக் குட் டையைக் கழற்ற வேண்டாமென அவன் முடிவு செய்திருந்தான். ஏனெனில் திடுமென அவன் இறந்து போய், அவன் தாய் அதை அவன் கழுத்தில் கட்ட மறந்து விட்டால், முன்னணி இளைஞருக்குரிய அந்தச் சிவப்புக் கழுத்துக்

6—1387

குட்டை இல்லாமலே அல்லவா அவன் அடக்கம் செய்யப்படும்படி நேரிடும்? இன்னும் முக்கியமாய், செங்கொடியை ஒத்த அந்தக் குட்டை அவன் மார்பிலே இருக்கையில் போர் வீரனுக்குரிய உணர்ச்சி அவனுள் இருப்பதாக நினைத்தான்.

விமானங்கள் இரைகின்றனவா என்று உற்று கவனித்தான். இல்லை, மூடு பனியாக இருக்குமெனக் கூறிக் கொண்டான். நல்லதுதான், மூடுபனியில் பாசிஸ்டு விமானங்கள் கிளம்புவதில்லை. விமானக் குண்டு வீச்சு அபாய அறிவிப்புச் சங்குகள் அவலமாய் அலறி உள்ளத்தையும் ஆன்மாவையும் வதைக்க மாட்டா. தனக்கு அபாயம் ஏற்படுமென அவன் பயப்படவில்லை, எவ்வகையிலும் அவனால் உதவ முடியாத அம் மக்களுக்குத் தீங்கு நேரிடுமென்றுதான் அஞ்சினான். குறுகலான படிகளில் இறங்கிச் செல்ல, வயது முதிர்ந்தவர்களுக்கு இப்போது அவனால் உதவ முடியவில்லை; சிறு குழந்தைகளை நிலவறைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் அவனால் துணை புரிய முடியவில்லை.

பலம் எல்லாம் இழந்து அவன் படுத்துக் கிடந்தான் — காயமுற்றுப் போரணிகளுக்கு இடைப்பட்ட நிலத்தில் விழுந்து கிடக்கும் போர் வீரனைப் போல. அங்கே பாசிஸ்டுகளும் இல்லை, அவனைச் சேர்ந்த படையினரும் இல்லை. தன்னந் தனியே படுத்திருந்தான், எழுந்திருக்க முடியவில்லை.

இல்லை, அவன் எழுந்தே ஆக வேண்டும்! யாவற்றுக்கும் முக்கியமாய், எழுந்து நடமாட வேண்டும், நடமாட்டம் அவசியம் என்று அம்மா கூறியிருந்தார். அதிகம் வேண்டாம், ஏனெனில் வீணில் ஆற்றலை விரயமாக்கக் கூடாது. ஆனால் அவசியம் சிறிதளவு நடமாட வேண்டும்.

எழுந்து, முதற் காரியமாக அவன் முகம் கழுவிக் கொள்ள வேண்டும். புறப்படுமுன் எப்போதுமே அம்மா அவன் படுக்கைக்கு அருகே தட்டத்தில் நீரும் தேய்த்துக் கொள்ள கடற்பஞ்சும் மற்றும் துண்டும் தயாராக எடுத்து வைத்துவிட்டுச் சென்றாள். கடற்பஞ்சை நனைத்து முகத்தில் தேய்த்துக் கொள்வான், உடனே அவனுக்குக் கொஞ்சம் தெம்பு பிறக்கும். விமானக் குண்டுகளும் பீரங்கிக் குண்டுகளும் வெடித்துச் சுற்றிலும் பறந்தெழும் சுண்ணம்புத் தூசியும், மற்றும் எண்ணெய் விளக்கிலிருந்தும் இரும்புக் கணப் படுப்பிலிருந்தும் வந்து படியும் கரியும் முகத்திலிருந்து அகற்றப்பட்டதும் விறுவிறுப்பாக இருக்கும். அவர்களது குடித்தனப் பகுதியில் ஓர் அறையில் தங்கியிருந்த அன்தோன் பெத்ரோவிச் அமைத்துத் தந்த அடுப்பு அது. அவர்களது பகுவியில் சன்னல்கள் குண்டு வெடிப்புக் காற்று அதிர்ச்சியால் தகர்க்கப்பட்டதும் அவர்கள் அங்கிருந்து காலி செய்து கொண்டு அன்தோன் பெத்ரோவிச்சின் அறையில் வசித்து வந்தனர்.

ஆம், முகம் கழுவவில்லை என்றால் தலை கனத்துக் கொண்டு தலையணையில் கெட்டியாய் அழுந்திவிடுகிறது, தலையை உயர்த்துவது கடினமாகிவிடுகிறது. முழு பலத்தையும் கொண்டு முயற்சி செய்து அல்யோஷா மெள்ள எழுந்து, கடற்பஞ்சை எடுத்து தூசியையும் கரியையும் முகத்திலிருந்து துடைத்து அகற்றினான்.

அவன் கண்கள் திறந்து கொண்டன! ஆ, உடனே அவனுக்கு சுகமாய் இருந்தது.

இப்போது அவன் படுக்கையை விட்டகன்று உணவு அருந்த வேண்டும். படுத்தபடி சாப்பிடுவதைப் போல் படு மோசமான செயல் எதுவும் இல்லை யென அம்மா கூறியிருந்தார். மேசையின் முன்னால் அமர்ந்தே உணவருந்த வேண்டும்; தட்டுகள், கறண்டிகள், முட்கறண்டிகள் ஆகிய யாவும் ஒழுங் காய் எதிரே இருக்க வேண்டும். குகை மனிதர்களது காலத்துக்கு நம்மைப் பின்னடையும் படி விரட்டி, மனிதப் பிறவிகளுக்கு உரியவை எவையும் இல்லாத அவல நிலையில் நம்மை இருத்திவிட்டதாக நினைத்து பாசிஸ்டுகள் கொக்கரித்துக் கொள்ள, அவன் வாய்ப்பளிக்கப் போவதில்லை. இல்லை, எல்லோரையும் போல் முறைப்படி அமர்ந்தே காலை உணவருந்த வேண்டும்.

சில நாட்களுக்கு முன்பு அவனால் எல்லோரையும் போல் முறைப்படி அருந்த முடியாமற் போனது மெய்தான். ஆனால் அது விதிவிலக்கான நிலைமை, அப்போழுது அவனால் எழவே முடியவில்லை, அம்மா அவனைத் தூக்கி உட்கார வைக்க வேண்டியிருந்தது.

அல்யோஷா எலும்பும் தோலுமாய் இருந்தான். அந்நாட்களில் தொழிலாளர்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிய உணவுப் பங்கீட்டுச் சீட்டுகளின் பேரில் கூட ஏதும் அளிக்கப்படவில்லை. ஆனால் ஆயுதத் தளவாட ஆலைகளில் டாங்கித் தகர்ப்பு நிலவெடிகளும் கைக்குண்டுகளும் தயார் செய்த பெண்களுக்கு —வீட்டுக்கு எடுத்து வர முடியாத சூப்பும் வெதுவெதுப்பான கஞ்சியும் அல்ல—பொங்கல் கிடைத்தது.

தாய்மார்கள் எல்லாரும் தமது குழந்தைகளுக்காக அதில் கொஞ்சம் வீட்டுக்குக் கொண்டு வர முயன்றார்கள், ஆனால் அனுமதிக்கப்படவில்லை. தாய்மார்களும் உணவின்றிப் பலம் இழந்துவிட்டால், படை வீரர்களுக்கு வேண்டிய ஆயுத தளவாடங்களைத் தயாரித்துக் கொடுப்பது யார்? கைக் குண்டுகளும் நிலவெடிகளும் செய்ய முடியாதபடி பலமிழந்து ஒடுங்கி விடக் கூடதென்றுதானே, அவர்களுக்குக் கூடுதலாய்க் கொஞ்சம் உணவு அளிக்கப்பட்டது?

ஆகவே இந்தப் பெண்கள் தமக்குக் கிடைத்த கூடுதல் உணவை அங்கேயே அருந்த வேண்டுமென மேலாளர்கள் வற்புறுத்தினர். ''யாவற்றையும்

இங்கேயே சாப்பிட்டுவிட வேண்டும். வீட்டுக்கு எதையும் எடுத்துச் செல்லக் கூடாது'' என்றார்கள்.

நீர் ஆகாரத்தை அங்கேயே சாப்பிடுவதைத் தவிர வேறு வழியில்லை— சூப்பை ஆலையிலிருந்து வெளியே எடுத்த வர முடியாது. ஆனால் பொங்கல் அப்படி அல்ல. அம்மாவின் அதிர்ஷ்டம், அன்று உணவு இடை நேரத்தின் போது உணவு வந்து சேரவில்லை, முறைவேலை முடியும் தருவாயில் கொண்டு வரப்பட்டது. சுற்றி வரும் சமையல் வண்டி பீரங்கிக் குண்டுவீச்சில் சிக்கிக் கொண்டது, வினியோக ஊழியருக்குக் காயம் பட்டுவிட்டது. ஆகவே அது காலந் தாழ்த்தி வந்து சேர்ந்தது. பொங்கல் குளிர்ந்து கெட்டியாகி விதை விதையாகிவிட்டது.

''நல்லது, எனது அல்யோஷாவுக்கு நான் விருந்துணவு எடுத்துச் செல்லப் போகிறேன்'' என்று அம்மா மனம் மகிழ்ந்து கொண்டார்.

அந்தப் பொங்கலில் இரண்டு மூன்று வாய் சாப்பிட்டுவிட்டு, மிச்சத்தை அப்படியே வாய்க்குள் அடக்கி வைத்துக் கொண்டார். நேரே வீட்டுக்குத் திரும்பி வந்து தனது வாயை அல்யோஷாவின் வாயிலே வைத்து அந்தப் பொங்கலை அவனுக்கு ஊட்டினார்.

அவன் மென்று தின்ன முடியாமல் அப்படிச் செயலிழந்து படுத்திருந்தான். ஆனால் அவன் தாய் விடவில்லை, அதை அவன் மென்று தின்னும்படிச் செய்தாள். வெதுவெதுப்பாய் இருந்த அந்தப் பொங்கலைக் கொஞ்சம் தின்றதும் அவனுக்குப் புத்துயிர் பிறந்தது. தன்னைச் சற்று உயர்த்திக் கொண்டு அவன் எழுந்து உட்கார்ந்து விட்டான். அம்மா அவனைத் திரும்பத் திரும்ப முத்த மிட்டாள். ''நாம் பறவைகள் போலாகிவிட்டோம்! புறக்கள் தம் குஞ்சு களுக்கு இப்படித்தானே ஊட்டுகின்றன! ஒரு சிறு அலகிலிருந்து இன்னொன்றுக்கு உணவு செல்கிறது! ஓர் அலகிலிருந்து இன்னொரு சிறு அலகுக்கு!'' என்று சொல்லி அவள் முத்தமிட்டாள்.

இருவரும் சேர்ந்து சிரித்தார்கள். ஆம், மெய்யாகவே சிரித்தார்கள்! உயிருள்ள மட்டும் ஒருபோதும் இதை மறக்க மாட்டோமென இருவரும் கூறிக் கொண்டனர். எல்லோருக்கும் இதைச் சொல்வார்கள், யுத்தம் முடிவுற்றதும், சிறு பிள்ளைக்குக் கதை சொல்வது போல் இதை எல்லோருக்கும் சொல்வார்கள்.

ஆனால் இப்போது அவன் அம்மாதிரி அவ்வளவு செயலற்றுப் போய்விட வில்லை. அம்மாவின் உதவியில்லாமலே அவனால் எழுந்து நடமாட முடிந்தது. வெள்ளைப்பூண்டு அப்படி அவனுக்கு உதவியிருந்தது. விந்தையேதான், அரும் பெரும் சம்பத்தாய் அவர்களுக்கு அது கிடைத்தது! அவர்களது அறையைக் கணக்கின்றி எத்தனையோ தரம் அவர்கள் ஆராய்ந்து பார்த்திருப்பார்கள், தின்னக் கூடியது எதுவும் துளிக்கூட அங்கே எஞ்சியிருக்கவில்லை. தேய்த்துக்

கழுவாத பழப்பாகு பாட்டிலில் காய்ந்து கெட்டியாகி அடியில் ஒட்டிக் கொண்டு இருக்குமே அதுகூட பாக்கியில்லை, பழைய முட்டை ஓடுகூட எஞ்சியில்லை. முட்டை ஓடுகளும் பயன்படக் கூடியவையே, தெரியுமா? கால்ஷியச் சத்து அதில் இருக்கிறது என்பது மட்டுமல்ல, முட்டை ஓட்டைப் பொடி செய்து உப்பைத் தூவுவது போல் ரொட்டித் துண்டில் தூவிக் கொள்ளலாம்.

அவர்கள் அன்தோன் பெத்ரோவிச்சின் அறைக்கு வந்து வசிக்க ஆரம்பித்த பின் ஒரு நாள் வாணலியின் இணைப்புக் கைப்பிடியைச் சமையலறையில் தேடிய போது, அடுப்புக்குப் பின்னால் திரும்பவும் ஒரு தரம் பார்த்தனர். அங்கே முழுதாய் ஒரு வெள்ளைப் பூண்டு கிடக்கக் கண்டனர். எப்படி, எப்போது அது அம்மாதிரியான ஓர் இடத்தில் போய் அகப்பட்டுக் கொண்டதோ? முதலில் அவர்களால் தம் கண்களை நம்ப முடியவில்லை. பட்டினி கிடப்போர் தின்பதற்கு உகந்தவை பலற்றையும் கண்ணெதிரே காண்பது போல் அடிக்கடி கற்பனை செய்து கொள்வார்கள். ஆனால் இது கற்பனை அல்ல, மெய்யான பூண்டு. ஒரு முழுப் பூண்டு! சின்னச் சின்ன சுளைகளாய் அதனுள் எத்தனை இருந்தன தெரியுமா? எண்ணிப் பார்த்தார்கள். இருவருமாகச் சேர்ந்து ஒரு நாளைக்கு ஒன்று தின்பதாகக் கொண்டால், அவர்களுக்கு அது பதினைந்து நாட்களுக்கு வருமே!

ஆனால் பூண்டை அப்படியே வாயில் போட்டு மென்று தின்னக் கூடாது. ரொட்டித் துண்டில் அதைத் தேய்க்க வேண்டும். எவ்வளவுதான் காய்ந்து கெட்டியான ரொட்டித் துண்டானாலும், அல்லது எவ்வளவுதான் அரை வேக்காட்டு ரொட்டியானாலும், புகையில் பதனம் செய்யப்பட்ட கொத்திறைச்சி மாதிரி அல்லவா சுவையாக இருக்கும்!

பெரிய சம்பத்து கிடைத்தாற் போல் பூரிப்புற்று இருவரும் அதைப் பத்திரமாகப் பேணிக் காத்தனர். அதில் ஒரு சிறு சுளைகூட காய்ந்தோ, உறைந்தோ விடக் கூடாது. எத்தனையோ நாட்கள் ஓடி மறைந்துவிட்டன, இன்னமும் கொஞ்சம் பாக்கி இருந்தது. இன்றைக்கும் அல்யோஷா பூண்டு தேய்க்கப்பட்ட ரொட்டிதான் சாப்பிடப் போகிறான்.

அவன் இந்த அரிய சம்பத்தில் அன்தோன் பெத்ரோவிச்சுக்கும் கொஞ்சம் கொடுப்பான். பூண்டை அல்ல, அதன் வாசனையில் கொஞ்சம் அவருக்கும் தருவான். அன்தோன் பெத்ரோவிச் வேறு எந்த விதமான சம்பத்தையும் அவனிடமிருந்து ஏற்றுக் கொள்ள மாட்டார். பூண்டில் ஒரு துளியளவை எடுத்து அவர் தமது ரொட்டித் துண்டில் தேய்ப்பார், பிறகு கண்களைச் சுளித்து வாயைச் சப்பிட்டுக் கொண்டு சொல்லிக் கொள்வர்: ''ஓ, பிரமாதம்!''

காவல் பணியிலிருந்து திரும்பி வர இன்று ஏன் அவருக்கு இவ்வளவு நேரம்? முடிவில் படிக்கட்டில் அவர் மெள்ள ஏறி வரும் காலடியோசை கேட்டது. உடனே அல்யோஷா அவனது பலம் அனைத்தையும் திரட்டிக் கொண்டு

படுக்கையிலிருந்து எழ முயன்றான். அன்தோன் பெத்ரோவிச் தன்னைப் பார்த்து, ''இன்னுமா தூங்குகிறாய்? முழுச் சோம்பேறியாக அல்லவா இருக்கிறாய்?'' என்று சொல்லக் கூடாதென நினைத்தான். ''கிழவனாகிய நான் வரிசையில் நின்று காத்திருந்து உனது உணவுப் பங்கீட்டையும் வாங்கி வந்திருக்கிறேன், ஆனால் சிறு பையனாகிய உனக்கு இன்னும் படுக்கையை விட்டு எழ மனம் வரவில்லையே!''

அவர் இங்கே அருகே இருப்பது எவ்வளவு நன்றாய் இருந்தது, அவர்கள் இருவரிடமிருந்தும் ஒரு அலமாரிதானே அவரைப் பிரித்திருந்தது. இரவு காவல் பணி முடிந்ததும் அவர் திரும்பி வந்து, இங்கேதான் பகலில் படுத்துறங்குவார், அருகிலிருந்து அவர் குரட்டை விடுவது காதில் விழும் போது அல்யோஷாவுக்கு சற்று நிம்மதியாக இருக்கும். இந்த வீட்டிலே அவர் இருந்தது இரவிலுங் கூட அல்யோஷாவுக்குத் தெம்பு அளிப்பதாக இருந்தது. அல்யோஷா தூங்குகையில் அவர் வீட்டின் உச்சித் தளத்தில் காவல் புரிவார், தீக் குண்டுகளை வீசிப் பகைவர்கள் இந்த வீட்டைத் தீக்கிரையாக்காதபடி பாதுகாப்பார்.... அவர் அணைத்திட்ட தீக் குண்டுகளுக்கு கணக்கே இல்லை!

''இந்தப் பழைய குறடுகளால் அவற்றைப் பிடித்து மணற் பெட்டியில் கிடாசுகிறேன் — அவ்வளவுதான், அதோடு அவற்றின் கதை முடிந்து போகிறது!'' என்பார் அவர்.

யுத்தத்துக்கு முன்பே அன்தோன் பெத்ரோவிச்சுக்குத் தலை நரைத்து விட்டது, ஆனால் கன்னங்கள் சிவப்பாகவே இருந்தன. இப்போது பட்டினியால் அவை வெள்ளையாய் வெளுத்து ஒட்டிப் போய்விட்டன. ''எப்படிதான் இவருக்கு உயிர் உடலுடன் ஒட்டிக் கொண்டிருக்கிறதோ, தெரியவில்லை'' என்று அம்மா கூறுவது வழக்கம். ஆனால் அவர் உயிர் கெட்டியானது, எப்படியோ சமாளித்து வந்தது. நிலைமை மட்டு மீறி கடுமையாகிவிட்ட போது அவர் பலக்கக் கவிதை படித்து ஆன்மிக உணவளித்து உயிருக்குத் தெம்பூட்டிக் கொண்டார்.

எழில் கொழிக்கும் பீட்டர் நகரே
தலை நிமிர்ந்து நில்!
அழிவில்லை, அசங்காது நிலைத்திரு,
அன்னை ருஷ்யாவைப் போல்!

கதகதப்பு வேண்டுமென்று பல புத்தகங்களை அவர்கள் அடுப்பிலிட்டு எரித்தனர். ஆனால் பூஷ்கின் புத்தகத்தைக் கைவிட மறுத்துவிட்டார். அவர் படித்துக் காட்டிய மிகப் பல வரிகள் அவன் நினைவுக்கு வந்தன....

இறுதியில் அன்தோன் பெத்ரோவிச் திரும்பி வந்தார். இன்று அவருடைய முகம் வெள்ளையாக இல்லை, நீலமாக மாறியிருந்தது. உள்ளே வந்தவர்

கோட்டைக் கழற்றவில்லே, படுத்துறங்கவுமில்லே. ''நேற்று இரவு நான் மேலும் ஆறு குண்டுகளே அணைத்தேன்... அற்புதமான இரவு... ஓரிடத்திலும் தீ பிடிக்கவில்லே'' என்று வழக்கம் போல் பேச முற்படவுமில்லே.

அல்யோஷாவை அவர் கண்டிக்கவில்லே, சோம்பேரி என்றழைக்கவும் இல்லே. அவன் கையைப் பிடித்து, அதில் போட்டலங்கள் சிலவற்றை வைத்து மூடிவிட்டுக் கூறிஞர்:

''அல்யோஷா, இதை வீணுக்கி விடாதே, வசந்தம் பிறக்கும் வரை வைத்திரு... இதனுள் விதைகள் இருக்கின்றன....''

''சரி, வைத்திருக்கிறேன்'' என்ருன் அல்யோஷா.

''இதோ இருக்கிறது உனது ரொட்டிப் பங்கீடு. என்னுடையதையும் நீயே சாப்பிடு.... காவற் பணி புரிந்த போது நான் சாப்பிட்டேன்... ஆமாம், மெய்தான்....''

''அன்தோன் மாமா, நீங்கள் எங்கே கிளம்புகிறீர்கள்?''

''நெடுந் தொலேவு போயாக வேண்டும், நகரச் சுற்றுப் புறத்துக்குப் போய் வரப் போகிறேன்.... அங்கே என் உறவினர்கள் இருக்கிருர்கள், அவர்களிடம் உருளேக் கிழங்கு இருக்கிறது, அவர்களது கொல்லே நிலத்தில் விளேந்தது. நான் திரும்பி வந்துவிடுவேன், நிச்சயம் வருவேன், உருளேக்கிழங்கு கொண்டு வருவேன், தூக்க முடிந்த அளவு எடுத்து வருவேன்....''

அல்யோஷா கண்களே மூடிக் கொண்டான், உருளேக் கிழங்கு பெருங் குவியலாகத் தன்னெதிரே இருப்பதாய் அவன் கற்பனே செய்து கொண்டான். மிகப் பல நாட்களாய் அன்தோன் பெத்ரோவிச் இதைப் பற்றிச் சொல்லி வந்தார்.

''வசந்தம் பிறக்கும் வரை எப்படியாவது நாம் சமாளித்துக் கொள்ள வேண்டும்'' என்று அவர் சொல்வது வழக்கம். ''வசந்தத்தில் பனிக் கட்டி உருக ஆரம்பித்ததும், தரை தளர்ந்துவிடும், வெட்டிக் குழியைத் திறப்பார்கள். மூட்டை மூட்டையாக கிடைக்கும், சாக்குப் பைகளே எடுத்துக் கொண்டு நாம் செல்லலாம்!''

இந்தக் கனவு அவர்கள் மூவருக்கும் பலமளித்து வந்தது.

வசந்தம் வர இன்னும் நெடுநாள் இருக்கிறதே.... கெட்டியாய் உறைந்த தரையைத் தோண்டுவதற்கு அன்தோன் பெத்ரோவிச் எதாவது வழி கண்டு பிடித்து விட்டாரா, என்ன?... எனக்கு உருளேக் கிழங்கு வேண்டும். என்னே ஏன் இவர் அழைத்துச் செல்லவில்லே? அவ்வளவு மோசமான நிலேயா இருக்கிறேன்? ஆம், என்னே அவர் கூப்பிடவில்லே என்ருல், நான் மோசமான நிலேயில் இருக்கிறேன் என்றுதானே அர்த்தம்....''

இந்த எண்ணங்கள் அல்யோஷாவின் தலேயினுள் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கையில் கிழவர் அவன் தலேயை மெல்ல வருடி விட்டுக் கொண்டிருந்

தார். முன்பு வழவழப்பாய் வளேந்து நெளிந்திருந்த அவனது முடிகள் இப்பொழுது வறண்டு போய் விறைத்திருந்தன....

ஆசையாய் அவர் வருடி விட்டுக் கொண்டிருந்த போது அல்யோஷா கண்ணயர்ந்து விட்டான், அன்தோன் பெத்ரோவிச் புறப்பட்டுச் சென்றதை அவன் கவனிக்கவில்லே.

மீண்டும் விழித்துக் கொண்டதும், கையில் எதையோ கெட்டியாகப் பிடித்திருக்கிறேம் என்பதை உணர்ந்தான், அது விதைப் பொட்டலமென்பது நினேவுக்கு வந்தது. அந்தப் பொட்டலங்களில் அழகாய் அச்சிடப்பட்டிருந்த வெங்காயத்தையும் காரட்டையும் உற்று நோக்கினுன்.

ஆம், விதைகளேத் தின்னலாமே, பொடிப் பொடியானவையே என்ருலும் மென்று தின்னலாமே! இல்லே, கொரிப்பதற்கு நன்ருகவே இருக்குமென்ருலும், அவன் அவற்றைத் தின்னப் போவதில்லே. வெங்காயத்தின் சிறிய கரு விதைகளும் லெட்யூசின் தினே மணிகளேயொத்த விதைகளும், வள்ளிக் கிழங்கின் கோண வடிவிலான விதைகளுங்கூட ஊட்டச் சத்துள்ளவையே.

நிறைய இருந்தால் கொஞ்சம் தின்னலாம். ஆனுல் ஒரு சிட்டிகை அளவு கூட இல்லே, இதை வாயில்தான் போட்டுக் கொண்டோமா என்பதுகூட நிச்சயமாகத் தெரியாது. ஆனுல் இவற்றை விதைத்தோமானுல் கூடை கூடையாகக் காய்கறிகள் கிடைக்கும் இவற்றை விதைப்பதற்கு சதுக்கங்கள், பூங்காக்கள் போன்ற இடங்கள் நிறைய இருந்தன. தரையைத் கொத்தி விட்டு விதைத்தால் போதும்!

விதைப்பதற்கு ஏற்ற இடங்களே முன்னணி இளேஞர்கள் ஏற்கெனவே கணக்கிட்டு, எங்கே விதைப்பது, நாற்றுகளே எங்கே நடுவது என்றெல்லாம் திட்டம் வகுத்திருந்தார்கள்.

வசந்தம் வரை எப்படியாவது சமாளித்துவிட்டால் போதும், பிறகு நிலேமை மேம்பட்டுவிடும்! அவர்கள் ஏனேயோர் பலருக்கும் உதவ முடியும். எப்படியாவது சமாளித்தாக வேண்டும். பையன் யாரும் எஞ்சாவிடில், நிலத்தைக் கொத்தி விதைக்கப் போவது யார்? அவன் வைராக்கியமாய் இருந்தாக வேண்டும், இந்த அரிய விதைகளே வாவில் போட்டு மெல்லலாமென நினேப்பதை விட்டொழித்தாக வேண்டும்.

உலகப் புகழ் பெற்ற கோதுமை விதைகளே அரும்பாடு பட்டுச் சேர்த்துப் பேணிக் காத்துள்ளவர்கள் ஆயிற்றே லெனின்கிராதுவாசிகள். ருஷ்ய விஞ்ஞானிகள் நீண்ட பல ஆண்டுகள் பாடுபட்டு அல்லவா இவற்றைச் சேகரித்தார்கள்? பண்டை எகிப்திய பரோவா மன்னர்களது சமாதிகளில் கிடைத்தவை முதல் பாமீரில் பேரவை விஞ்ஞானி வவீலவ் கண்டுபிடித்தவை வரையிலான எத்தனேயோ ஆயிரம் வகைகள் அல்லவா சேகரிக்கப்பட்டுள்ளன.

கையளவு உள்ளவை அல்ல, சிறு பொட்டலங்களிலும் பெரிய பைய்

களிலுமாய், கிலோகிராம் கணக்கிலும், அந்தக் கணக்கிலுமான விதைகள் அல்லவா சேகரிக்கப்பட்டு,பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன?... தற்போது இவர்கள் பட்டினி கிடந்து உயிர் விட்டாலுங்கூட, விஞ்ஞானத்துக்காகவும் வருங்காலத் தலைமுறையினருக்காகவும் இவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. லெனின்கிராதுவாசிகளது வைராக்கியம் குறித்து அன்தோன் பெத்ரோவிச் கதை கதையாக அல்யோஷாவுக்குச் சொல்வது வழக்கம். எல்லாம் சிறந்த விதைகள்—மிக நேர்த்தியாகவும் குண்டுக் குண்டாகவும் சத்து மிகுந்தவையாகவும் இருப்பவை. அவசர வேலையை அம்மா திறம்பட செய்து முடித்ததற்காக முன்பு ஒரு தரம் ஆலையில் அவருக்கு ஒரு கையளவு பார்லி கொடுத்தார்கள். எப்படி அவர்கள் பரபரப்படைந்தார்கள், தெரியுமா? இதைச் சாப்பிடுவதற்குச் சிறந்த வழி என்ன? அப்படியே வாயில் போட்டு மென்று தின்பதல்ல, அது அபவாதமாகும்! பார்லியை முதலில் அவர்கள் வறுத்தெடுத்தார்கள், பிறகு காப்பி அறைவைப் பொறியில் போட்டு அறைத்துத் தூளாக்கினர்கள். தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு இந்தத் தூளை வெந்நீரில் இட்டு தினமும் காப்பியாக்கிக் குடித்தார்கள்!

ருசியில்லாத வெந்நீருக்குப் பதில், இப்படிக் கொஞ்சம் கமகமப்பு சேர்த்து அருந்திய போது எவ்வளவு அருமையாக இருந்தது!

ஆனல் அது பழங் கதை, அப்போது அல்யோஷாவால் வெளியே ஓட முடிந்தது, படிக்கட்டில் இறங்கிச் செல்ல முடிந்தது. பிற்பாடு அவன் அம்மா அவனை மேலே தூக்கி வர வேண்டியதாயிற்று. சில நாட்கள் இப்படி தூக்கி வந்ததும், ''உன்னைத் தூக்கி செல்ல எனக்கு சக்தி இல்லை, மகனே'' என்ருர் அவன் தாய். அதற்கு மேல் அவன் வெளியே செல்வதை நிறுத்திவிட்டான். அப்போதுதான் எக்காளத்தை வேருெரு முன்னணி இளைஞனிடம் ஒப்படைத்தான். அந்த வாஸ்யா சிறந்த சிறுவன்! எதற்கும் பணிந்துவிடாமல் அவன் திறம்பட கடமை ஆற்றி வந்தான்.

''தா—து—தும், தா—தா!''—நாள் தவருமல் அவன் சுற்றிச் சென்று எக்காளத்தை ஒலித்து வந்தான். தினமும் காலையில் முன்னணி இளைஞர்களது எக்காள முழக்கம் வெளிமுற்றங்களிலிருந்து எழுந்து உடைந்து நொறுங்கிய சன்னல்கள் வழியே உள்ளே புகுந்து ஒலித்தது.

அந்த வாஸ்யாவால் உயிரோடு இருக்க முடிகிறதெனில், அல்யோஷாவாலும்தான் நிச்சயம் உயிரோடு இருக்க முடியும்!

அல்யோஷா எழுந்து மேசையின் எதிரே அமர்ந்து காலை உணவு அருந்தப் போகிருன். அங்கே சுத்தமான துணியால் முடப்பட்ட தட்டிலே அவனுக்குரிய ரொட்டித் துண்டு தயாராய் இருந்தது—பூண்டு தேய்க்கப்பட்ட ரொட்டித் துண்டு. அம்மாவை என்னென்பது—வேடிக்கைதான். எஞ்சியவை அவன் எதிரே இருக்கக் கூடாதென்று தனியே ஓர் இடத்தில் பத்திரமாய் வைத்து

விட்டுச் செல்வார். அவனுடைய திடச் சித்தத்தில் அம்மாவுக்கு நம்பிக்கை இல்லை.

பூண்டு எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது என்று அவனுக்குத் தெரியாதாக்கும்! அவன் விரும்பினுல் நொடிப் பொழுதில் அதை எடுத்து வந்துவிடுவான். ஆனுல் அவன் உறுதி வாய்ந்தவன். அவனுக்குரிய ரொட்டித் துண்டை அப்படியே எடுத்து ஒரே வாயில் விழுங்கிவிட மாட்டான், பேராசை பிடித்தவனுய் அவசரப் பட்டுக் கொண்டு கவளம் கவளமாய்க் கடித்தும் விழுங்கிவிட மாட்டான். அம்மா சொல்லியிருந்தது போலவே யாவற்றையும் செய்தான். அப்பா விட்டுச் சென்றிருந்த பிளாஸ்க்கு தொடர்ந்து அவர்களிடம்தான் இருந்து வந்தது, அதிலிருந்து வெந்நீரை ஊற்றிக் கொள்வான். அதில் ஒரு தேக்கரண்டி — ஒன்றே ஒன்றுதான் — பழப்பாகு நீரைச் சேர்த்துக் கொள்வான். மறந்து போய் அவர்கள் கழுவாமல் வைத்திருந்த ஒரு பழைய பழப்பாகு பாட்டிலில் நீரை ஊற்றித் தயாரிக்கப்பட்ட இது பெர்ரிப் பழத்தின் மணத்துடன் கூடிய ஒரு வகை கமகமப்பு அளித்தது. இதை வெந்நீருடன் சேர்த்துக் கொண்டால் (ஒரேயொரு தேக்கறண்டிதான் என்ருலும்) அந்த வெந்நீர் வெறும் நீராய் இல்லாமல் பழப் பாகு மணம் கலந்த ஒரு வகை தேநீர் போன்றதாய் மாறிவிடுகிறதே!

இந்த விவரங்களை எல்லாம் நினைத்துப் பார்த்த போது அல்யோஷா திரும்பவும் புன்னகை புரியப் போனுன். ஆனுல் புன்னகை புரிந்ததும் உதடுகள் வெடித்து இரத்தம் கசிய ஆரம்பிக்கும் என்பது நினைவுக்கு வரவே அவன் நகைக்காது தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

எழுந்தாக வேண்டும், இது அவனுக்குத் தெரிந்ததுதான். ஆனுல் அவன் எழ விரும்பவில்லை, கம்பளிக்கும் குளிர் காலக் கோட்டுகளுக்கும் அடியில் அவ்வளவு சுகமாய் இருந்தது, பொழுதுக்கும் அப்படியே படுத்திருக்கலாம் போலிருந்தது. ஆனுல் அடுப்புக்கு அவன் விறகு உடைத்தாக வேண்டும்—அது அவனுக்குரிய புனித கடமை. அம்மா திரும்பி வருவதற்குள் அவன் கணப் படுப்பை எரிய விடுவதற்கு வேண்டிய தயாரிப்பு வேலைகளைச் செய்து முடித்தாக வேண்டும். அடுப்பைப் பற்ற வைத்து அதிலிருந்து தீக் கொழுந்து எழுந்து விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அவர்கள் இருவருக்கும் கொண்டாட்டமாக இருக்கும். இருவரும் அதன் எதிரே சேர்ந்து அமர்ந்து கொண்டு கைகளையும் முகங்களையும் கதகதப்பாக்கிக் கொள்வார்கள்; வசந்த கால வெயில் வந்துவிடுமெனக் கனவு காண்பார்கள்.

அல்யோஷா தனது முழு பலத்தையும் ஒன்று சேர்த்து கம்பளிக்கும் கோட்டுகளுக்கும் அடியிலிருந்து தவழ்ந்து வெளியே வந்து, காலை உணவு அருந்த ஆரம்பித்தான். புகையில் பதனம் செய்யப்பட்ட கொத்துக்கறி போல் கமகமத்த மெல்லிய ரொட்டித் துண்டை மெள்ள மெள்ள

மென்று சுவைத்தான், இடையிடையே பெர்ரிப் பழத் தேநீரைக் கொஞ்சம் குடித்துக் கொண்டான்.

பிறகு அவன் வேலையில் இறங்கினன். இது அத்தியாவசியம். வேலை இல்லையேல் மனிதன் நசித்து விடுவான், வெயில் இல்லாமல் அழிந்து போகும் புல்லைப் போல் பட்டுப் போவான் என்று அம்மா கூறி வந்தார்.

வேலை செய்வதற்கு அவனிடம் சக்தியில்லை, பெரிதும் சிரமப்பட்டான். கைக் கோடரி பளுவானதல்ல, ஆயினும் அது மட்டுமீறி கனப்பதாக நினைத்தான் அவன். குண்டு வீச்சில் நாசமாகிய வீடுகளிலிருந்து பழைய நாற்காலிகள், மேசைகள், கட்டில்களின் உடைந்த துண்டுகளை அம்மா எடுத்து வந்து வீட்டில் சேர்ப்பது வழக்கம்.

இந்தத் துண்டுகள் ஆரோக்கியமாகச் சடசடத்து நன்ருய் எரிந்தன. ஆனல் இவை இரும்பு போல் கெட்டியானவை, இவற்றை வெட்டிப் பிளப்பதற்குள் வியர்த்து விறுவிறுத்துப் போய்விடும்.

எல்லாத் துண்டுகளையும் உடைத்துப் பிளப்பதெனில் வீட்டுக்கு அம்மா திரும்பி வரும் வரை அவன் இவ்வேலையைச் செய்ய வேண்டியிருக்கும். அல்யோஷா இத்துண்டுகளை இரு கூறுகளால் பிரித்து ஒன்றை மட்டும் இன்று உடைப்பதென முடிவு செய்து கொண்டான். ஏனெனில் பாடங்கள் படிப்பதற்கும் அவனுக்கு நேரம் வேண்டியிருந்தது. லெனின்கிராது சிறுவர் சிறுமியர் என்ன நேர்வதாயினும் படிப்பைக் கைவிடுவதில்லை என்று தீர்மானித்திருந்தார்கள். முற்றுகை இட்டுக் குழந்தைகளைக் கல்லாதோராய் வளரச் செய்துவிட்டதாக பாசிஸ்டுகள் நினைத்துக் கொள்ள ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்ருர்கள். இல்லை, பாசிஸ்டுகளுக்கு அவர்கள் பணியப் போவதில்லை!

நிலவறைகளில் சாய்வு மேசைகளும் கரும் பலகையும் வைத்து வகுப்புகள் நடைபெற்று வந்தன. அங்கே போக முடியாதோருக்கு வீட்டிலே பாடம் சொல்லித் தரப்பட்டது. ஆசிரியைகள் வலுவிழந்துவிட்ட குழந்தைகளின் வீட்டுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் சென்று பாடம் சொல்லித் தந்தனர்....

எக்காரணத்தாலோ அல்யோஷாவின் ஆசிரியை பல நாட்களாய் அவனிடம் வரவில்லை. ஆனல் எப்படியும் அவர் வந்து சேருவார், அவரிடம் காட்டுவதற்கு அவன் சிறிதளவு வேலையைச் செய்து தயாராக வைத்தாக வேண்டும். கடந்த முறை அவர் வந்திருந்த போது, அல்யோஷாவுக்கு ஒரு முழு வாரத்துக்கு வேண்டிய வீட்டுப் பாடங்களைத் தந்திருந்தார்!

இரவில் குளிரில் உறைந்துவிட்ட மசியைச் சூடாக்கி உருக்கிக் கொண்டு, அல்யோஷா அவனுக்குரிய அழகான கையெழுத்தில் டிக்டேஷன் எழுதினன். தனக்குத் தானே டிக்டேஷன் போட்டுக் கொள்ள அவன் கற்று வைத்திருந்தான்.

திடுமெனத் தோலேவில் தரைக்கடியிலிருந்து எழுந்த அதிர்வு அவனை ஆடச் செய்தது. உணர முடியாதபடி அவ்வளவு மெல்லியது அது. ஆனால் அவன் உடனே தெரிந்து கொண்டான், பீரங்கித் தாக்குதல் ஆரம்பமாகிறது என்று. பூல்க்கவா குன்றுகளுக்குப் பின்னால் எங்கோ ஓர் இடத்தில் ஜெர்மானியர்கள் நிறுத்தியிருந்த கன பீரங்கிகள் இந்தத் தாக்குதலை நடத்தின.

மேலும் மேலும் கடுமையாகிச் சென்ற கீச்சொலி காதைத் துளைத்தது. உடைந்த போன சன்னலில் வைத்தடைக்கப்பட்டிருந்த தலையணையை அது கீழே விழச் செய்தது. வீட்டுக்குப் பின்னால் குண்டு வெடித்தது, சுவர் அதிர்ந்தது, சன்னல்கள் பரிதாபமாய்த் தடதடத்துக் குலுங்கின.

மறுபடியும் தரைக்கு அடியிலிருந்து அதிர்வு எழுந்தது, மறுபடியும் கடுமையான அதே கீச்சொலி. மற்றும் ஒன்று. மேலும் ஒன்று. பீரங்கிக் குண்டுகள் வலப் புறத்திலும் இடப் புறத்திலுமாய் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன.

''முட்டாள்கள்! முட்டாள்கள்!'' பற்களைக் கடித்துக் கொண்டு, ஜெர்மன் பீரங்கிப் படையினரை அல்யோஷா சபித்தான். ''எவற்றின் மீது குண்டு வீசுகிறீர்கள்? எங்கள் படையாட்களும் இயந்திர பீரங்கிகளும் கன பீரங்கிகளும் இருப்பது நகரச் சுற்றுவட்டாரங்களில். நகரின் மையப் பகுதியில் இராணுவ இலக்குகள் எவையும் இல்லை.... சரி, சுடட்டும், முட்டாள்கள்! ஆயுத தளவாடத்தை விரயமாக்கட்டும்!''

பிறகு மிகவும் அருகாமையில் ஒரு குண்டு வெடித்தது. புகையால் சன்னல்கள் இருண்டு போயின. என்ன எரிகிறதென்று அவன் பார்க்க விரும்பினான்... கால்களை இழுத்துக் கொண்டு அல்யோஷா சன்னல் மேடைக்குச் சென்றான். தெருவின் எதிர்ப் பக்கத்தில் உயர் தூண்களுடன் கூடிய நேர்த்தியான ஒரு கட்டிடம் எரிந்து கொண்டிருந்தது....

தீயை அவர்களால் அணைக்க முடியுமா? அங்கே சற்று நேரம் நின்று பார்க்க விரும்பினான் அவன். ஆனால் மீண்டும் தொலைவில் தரைக்கு அடியிலிருந்து அதிர்வு எழுந்தது, அல்யோஷா அந்த சன்னலிடமிருந்து விலகி ஊர்ந்து வந்தான். அருகாமையில் குண்டு வெடித்து எழும் காற்று அதிர்வில் சன்னல் கண்ணாடித் தூளாகிப் பறந்து கண்ணிலே பாயக் கூடும். அல்யோஷாவின் கண் பார்வை இன்னமும் நன்றாகவே இருந்தது. குறி தவறாது தொலை இலக்கைச் சுடும் திறனைப் போகிறவன் தன் கண்களை அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளக் கூடாது, அதற்கு அவனுக்கு உரிமை இல்லை.

தன்னைத் தானே பலவந்தம் செய்து, சுவர் பக்கம் தலையைத் திருப்பிக் கொண்டான். தீயின் நிழல்கள் அதில் ஆடிக் குதித்துக் கொண்டிருந்தன....

எங்கோ நெடுந் தொலைவில் திரும்பவும் குண்டு வெடித்தது.... ஆனால் அடுத்தது இங்கே அவர்களது வீட்டின் மீது விழுந்து வெடிக்கக் கூடும். அம்மா

வீட்டுக்குத் திரும்பி வருவார், இடிபாடுகளே எஞ்சியிருக்கக் காண்பார்—இதை நினைத்ததும் அவனுக்குப் பகீரென்றது....

திடுதிப்பென அவன் காதுக்குள் இரைந்த ஓசையைக் கேட்டதும் அவன் உள்ளத்துள் மகிழ்ச்சி பொங்கியது. திரளான தேனீக்களின் ரீங்காரத்தை போல் அது காதுக்கு இனிமையாக இருந்தது.

''சபாஷ்!''—அல்யோஷா ஆனந்தக் கூச்சலிட்டான், ஆனால் அவனது கூச்சல் முணுமுணுப்பாய் ஒலித்தது. சிறிது காலமாய் மேலும் மேலும் அவன் குரலை இழந்து வந்தான். ''சபாஷ்! எங்களது தாக்கு-குண்டு விமானங்கள் புறப்பட்டு வருகின்றன, சுடச்சுட உங்களுக்கு அவை பதிலளிக்கும்!''

தாக்கு விமானங்கள் போய்ச் சேர்ந்து விட்டன, அவற்றின் இரைச்சல் இப்பொழுது காதில் விழவில்லை. ஆனால் அல்யோஷா கண்களை மூடிக் கொண்டு, குண்டுகளை வீசிய பீரங்கிகளை நோக்கி நமது விமானங்கள் சரிந்து பாய்ந்து அவற்றின் மீது குண்டுகளைப் பொழிவதையும், ஹிட்லர் பீரங்கியினர் நாற்றிசையிலும் சிதறி ஓடுவதையும், நமது விமானங்களால் அவர்கள் சுட்டு வீழ்த்தப்படுவதையும் கற்பனைக் கண்ணால் கண்ணுற்றான்.

வண்ணக் கட்டிகளால் இம்மாதிரியான காட்சிகளை முன்பு அவன் சித்திரங்களாக வரைவது வழக்கம். ஆனால் இப்போது அதற்கு அவனிடம் தெம்பில்லை, மனத்துள் இச்சித்திரங்களைத் தீட்டிக் கொண்டான். முணுமுணுக்கும் குரலில் மேலும் அவன் கூறினான்:

''இதோடு முடிந்துவிடுமென நினைக்காதீர்கள். இரவு வரட்டும், எங்களது போர்க் கப்பல் மராத் எங்கள் எல்லோர் சார்பிலும் உங்களுக்குச் செம்மையாகத் தரும், பாருங்கள்!''

போர்க் கவசம் பூண்ட போர்க் கப்பல் நேவா ஆற்றிலே நங்கூரமிட்டு நிற்க, குறியறிவிப்பாளர்களான மாலுமிகள் உயிருள்ள அதன் கண்களாய் அமைந்து, இரதாப்பாருக்கும் இடைப்பட்ட நிலத்தில் ஒளிந்திருந்து ஜெர்மன் பீரங்கிகளது நிலைகளைக் கருராகக் கண்டறிந்து ஒளிக் குறிகள் மூலம் அவற்றைத் தெரியப்படுத்தினர் என்பது அவனுக்குத் தெரியும்.

இராப் பொழுதில் மராத்தின் பெருவிட்டக் கன பீரங்கிகளது சுழல் மேடை மெள்ள அமைதியாகத் திரும்பியது. சுட்டிக்காட்டப் பெற்ற இலக்கை நோக்கி அந்தப் பயங்கர பீரங்கி வாய்கள் வந்து நின்று, ''பூம்—பூம்!'' என்று கர்ஜனை புரிந்தன. திரும்பவும் ஒரு தரம் ''பூம்—பூம்!'' அனைத்து நகரமும் ஆனந்தமாக ஆடிக் குலுங்கி ஆத்திரத்தைத் தெரிவிக்கும். ஆஹா! வேண்டும் உங்களுக்கு! கொலைகாரர்களே, நன்றாக வேண்டும்! இம்மாதிரியான குண்டுவீச்சிலிருந்து எந்த அகழ்வரியும், எந்தப் பதுங்குக் குழியும் காப்பு அளிக்காது. இந்தப் பெருவிட்ட கன பீரங்கிகளின் தாக்குதல் விளையாட்டு விவகாரமல்ல!

பகற் பொழுதில் மராத் செயலற்றதாகி விட்டதாகப் பாசாங்கு செய்யும். நேற்று அது ஓயாத குண்டு வீச்சுக்கு இலக்காகி வந்தது. சரிந்து பாயும் குண்டு விமானங்கள் சாரை சாரையாக வந்து அந்தப் போர்க் கப்பலின் மீது குண்டுகளை வீசிச் சென்றன. வரிசையாக அவை வந்து தாக்கியதை அல்யோஷா தன் கண் கொண்டு கண்ணுற்றான். கப்பலின் தளத்தில் யாவும் அதிர்தாடின, எரிமலைகள் வெடித்துக் குமுறுவது போல் யாவும் நெருப்பு மயமாயின. கரும் புகை அக்கப்பலைச் சூழ்ந்து கொண்டதும், அதன் கதை முடிவுற்றுவிட்டதாக நினைத்து ஜெர்மன் விமானங்கள் தாக்குதலை நிறுத்தித் திரும்பிச் சென்றன.

ஆனால் அல்யோஷாவுக்குத் தெரியும்—நமது மாலுமிகள் புகைத் திரையை எழுப்பிப் பகைவனை ஏமாற்றியது. ஜெர்மன் விமானங்களது குண்டுகள் எல்லாம் அந்தப் பெரிய போர்க்கப்பலுக்குச் சிறு கொட்டைகள் போன்றவை. ஏனெனில் பால்டிக் கப்பல் துறைகளில் பிற போர்க் கப்பல்கள் கட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த கனத்த கவசத் தகடுகளை மராத்தின் மாலுமிகள் அதன் மேற்றளம் எங்கும் பரப்பி அடுக்கி மூடியிருந்தனர்.

அவற்றின் மேல் விழுந்து வெடித்த குண்டுகள் கவசத் தகடுகளின் மேலடுக்குகள் சிலவற்றைச் சிதறடித்தன. இரவில் மாலுமிகள் இவற்றை எடுத்துத் திரும்பவும் அடுக்கினர், அவ்வளவுதான்...

போர்க்கப்பலை தகர்த்துவிட்டதாக ஹிட்லர் படையினர் மகிழ்ந்து கொண்டனர், ஆனால் பகற் பொழுது முழுதும் அமைதியாய் அடங்கியிருந்த போர்க் கப்பல், இரவு வந்ததும் விழித்தெழும், அதன் பீரங்கிகள் இடி முழங்கும்....

இன்று இரவும் இந்தப் பீரங்கிகள் அவர்களுக்குச் சரியானபடி அடி கொடுக்கும்.

பழி தீர்க்கப்படும் என்று நினைத்த போது மகிழ்ச்சியால் அல்யோஷாவுக்கு ஆர்வம் கரை புரண்டு ஓடிற்று. கைகளைத் தேய்த்துக் கொண்டு கிசுகிசுக்கும் குரலில் கூறிக் கொண்டான்:

''முட்டாள்களே, உங்களுக்குச் செம்மையாகக் கிடைக்கும்!''

பரபரப்பும் துடிப்பும் தாங்க மாட்டாமல் திடுமென அவனுக்குக் கடுமையாகப் பசித்தது. அவன் சாப்பிட வேண்டுமென்று நினைத்தான், அதற்குள் தலை கிறுகிறுத்தது, பஞ்சால் ஆனவனைப் போல் தளர்ந்து சுருண்டு மெல்ல தரையிலே விழுந்துவிட்டான். உணர்விழந்து போய் நெடுநேரம் அவன் அங்கே படுத்துக் கிடந்தான்.

''தா—தா—தும், தா—தா!'' எக்காள முழக்கம் கேட்ட பிறகே விழித்துக் கொண்டான். மற்றும் ஒரு நாள் ஆரம்பித்துவிட்டது, உணர்விழந்து இருபத்து நான்கு மணி நேரம் தூங்கிவிட்டோம், தூக்கத்தில் உயிரை விடும் நிலையை நெருங்கினோம் என்பது தெரிந்தது! ஆனால் எக்காளத்தை அவன்

ஒப்படைத்திருந்த அந்த விரிந்த முகச் சிறுவன் இன்னும் உயிரோடுதான் இருந்தான், ஆகவே தானும் உயிரோடு இருக்க முடியும்!

அல்யோஷா தலையை உயர்த்தினன், பிறகு கைகளை ஊன்றி எழுந்து நின்றான். மேசையிடம் சென்றான், அவன் முடிக்காமல் விட்டுச் சென்றிருந்த பாடங்கள் அங்கே அவனுக்காக காத்திருந்தன. நாம் படித்தாக வேண்டும், கல்வி கற்றாக வேண்டும், லெனின்கிராடுவாசிகளாகிய நாம் பிற்பட்ட நிலையில் விடப் பட்டுவிடக் கூடாது.

அவன் தனது பலத்தைத் திரட்டிக் கொண்டாக வேண்டும். கற்பதற்காகத் தனது சிந்தனைகளை ஒருமுகப் படுத்திக் கொண்டாக வேண்டும். எக்காள முழக்கமிட்டவன் பின்னல் அணி சேர்ந்து, குண்டு விழுந்து சேதமடைந்த வீடுகளைச் சேர்ந்தோருக்கு உதவுவதற்காகப் புறப்பட்டுச் சென்ற பையன் களும்தான் தமது பலத்தைத் திரட்டிக் கொண்டாக வேண்டும்.

ஆம், நகருக்கு அருகே அமைந்த கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த அந்த வாஸ்யா சிறந்த பையன். அவனிடம் ஜீவ ஆற்றல் நிறைய இருந்தது. மெய்யாகவே அமரனாய் வாழ்ந்து எக்காள முழக்கம் எழுப்புகிறான்.

தினமும் காலையில் வாஸ்யா எக்காள முழக்கமிடும் வரை, தானும் சாகாமல் பிழைத்திருக்க முடியுமென அல்யோஷா நம்பினன்.

அந்தி நெருங்கி வந்தது, அறையினுள் அது நீல நிழல்களை நிறம்பச் செய்தது. கனத்த திரைச் சீலைகளை இழுத்து மூடிவிட்டு, சிறிய திரி விளக்கை ஏற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது. இருட்டில் இருக்க அவனுக்குப் பிடிக்காது. எல்லா வகையான கிலிகளும் அவனைப் பற்றிக் கொள்வதற்காக மெள்ள நெருங்கி வருவது போலிருக்கும். அந்த விளக்கு துளியளவு வெளிச் சமே தந்ததென்றாலும், அந்த வெளிச்சம் அவனுக்குச் சோர்வை நீக்கிச் சிறிதளவு உற்சாக மூட்டுவதாக இருந்தது.

அம்மா வந்து சேரும் வரை அவன் குளிரால் விறைத்துப் போகாமல் இருக்க வேண்டும், யாவற்றிலும் இது முக்கியமானது.

அம்மா இருக்கும் போது இருட்டு குறித்து அவனுக்கு அச்சமாய் இருக்காது. அம்மா இல்லாமல் தனியே கழித்தாக வேண்டிய நேரத்தில் அவன் உறுதி குலையாது இருந்தாக வேண்டும்.

அந்திப் பொழுது வந்துவிட்டது. முற்றுகையில் இன்னொரு பகல் கழிந்து விட்டது. அல்யோஷா இன்னமும் உயிருடன்தான் இருந்தான். விரைவாக இருட்டாகிச் சென்றது. அஸ்தமனத்தின் அச்சம் தரும் இரத்தச் சிவப்பு ஒளிக் கீற்று மட்டும்தான் மேற்கே எஞ்சியிருந்தது.

திடுமென இந்த இரத்தச் சிவப்பு ஒளிக் கீற்றின் எதிரே பறவைகளது கரிய வடிவங்கள் எழுந்தன. கூட்டமாய் அவை பிணம் தின்னிகளைப் போல் நகரை நோக்கிப் பறந்து வந்தன. அவற்றிடம் கொலைக் குணம் குடி கொண்



டிருந்ததாகத் தோன்றியது, ஏனெனில் அவை இறக்கைகளை ஆட்டாமல் பறந்தன.... அவை பாசிஸ்டுக் கழுகுகள், நேவாவை நோக்கிச் சென்றன.

ஒவ்வொன்றும் வானுயரத்திலிருந்து அவை சரிந்து விழுந்தன, திரும்பத் திரும்ப மராத்தைத் தாக்கின.



குண்டுகள் வெடித்துக் காற்று அதிர்ந்தது. அந்தத் தலையணையை எடுத்து சன்னலில் அவன் எப்போது அடைத்து வைத்தான் என்று அவனுக்கு நினைவில்லை, திரும்பவும் இப்போது அது கீழே விழுந்தது.

''இதனல் உங்களுக்கு ஆகப் போவது ஒன்றுமில்லை'' என்று கிசுகிசுத்து விட்டு, குண்டுவீச்சின் கொடுங் காட்சியைக் காணச் சகியாதவனைச் சன்னலிட மிருந்து திரும்பினன். ''நேற்று இரவு போர்க் கப்பல் உங்களைச் சரியானபடி கலங்கச் செய்துவிட்டது என்பது தெரிகிறது. இருங்கள், இன்னும் கொஞ்சம் இருட்டாகட்டும், மறுபடியும் கிடைக்கும் உங்களுக்கு!''

இதைச் சொல்லி, கனத்த திரைச் சீலைகளை இழுத்துச் சேர்த்தான்.

அறையின் எல்லா மூலைகளிலும் இருள் அடர்ந்துவிட்டது, மேசையின் மீது மட்டும்தான் சிறிய விளக்கின் வெதுவெதுப்பான மஞ்சள் வெளிச்சம்

தெரிந்தது. அந்த விளக்கின் பக்கத்தில் ஒரு சிறுவனின் கிராப்புத் தலை கவிந் திருந்தது. தனக்குத் தானே டிக்டேஷனைத் திருப்பிச் சொல்லி அவன் உதடு கள் அசைந்தாடின. ஆசிரியை வராவிட்டால் அம்மா அவனது பாடங்களைச் சரிபார்ப்பார், புதிய பாடங்கள் வகுத்தளிப்பார்.

அம்மா வரும் சப்தம் கேட்கிறதே! அம்மாவின் காலடிகள்தான் அவை! நெடுந் தொலைவில் வருகையிலே, படிக்கட்டின் முதலாவது படியில் பட்ட துமே, அவற்றை அவன் அடையாளம் தெரிந்து கொள்ளக் கற்றுக் கொண்டு விட்டான். அவன் அம்மா ஒவ்வொரு திருப்பத்திலும் சற்று நேரம் நின்று ஓய்வெடுக்க வேண்டியிருந்தது. அல்லது மேசையிலிருந்து எழுந்து வர அவனுக்கு அவகாசம் அளிக்க வேண்டுமென அவர் அப்படி ஆங்காங்கே காத்து நின்றிருக்கலாம். அவன் வெளிக் கதவருகே சென்று, ஈர நைப்பில் விரிந்து விட்ட அந்தக் கதவைத் திறப்பதற்கு அம்மாவுக்கு உதவுவது வழக்கம்.

கதவை அம்மா வெளியே இழுப்பார், உள்ளே இருந்து அவனால் அந்தப் பூச்சியின் பலத்துடன்தான் தள்ள முடிந்ததென்றாலும், அவன் தள்ளுவதை அவர் உணர்ந்து கொள்வார். அவன் உயிருடன் இருக்கிறான் என்பது அம்மா வுக்கு உடனே தெரியும்! மட்டிலா மகிழ்ச்சி கொள்வார்!

இன்று அவன் அறவே தளர்ந்து போயிருந்தான், கதவைத் தள்ள முடிய வில்லை, தனது பளுவை அதன் மேல் வைத்து அழுத்தினான். உறுதி குலையாமல் சமாளித்துவிட்டதையும், அம்மா வரும் வரை சாவுக்குப் பணியாது எதிர்த்து நின்றதையும் நினைத்து உள்ளுக்குள் அவன் பூரிப்புற்றுக் கொண்டான்.

அதற்கு மேல் அவனிடம் தெம்பு இல்லை. கதவை அழுத்த முடியாமல் மெள்ளச் சரிந்து வாயிற் படிக்கருகே உட்கார்ந்து விட்டான்....

அதே நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. அம்மா திடுக்கிட்டு அவனுக்குப் பக்கத்தில் மண்டியிட்டு அமர்ந்தார். அம்மாவின் ஆடையிலிருந்து குளிர் பனி, புகை இவற்றின் வீச்சம் எழுந்தது. கரி படிந்து அவர் முகம் கறுத்திருந்தது, தலை முடிகள் சடை பிடித்திருந்தன. அவர் உதடுகள் சுரசுரப்பாய் இருந்தன, என்றாலும் அவற்றில் அவன் முத்தமிட்டான். வெடித்துப் போன அவன் உதடு கள் வலித்ததைப் பொருட்படுத்தாமல் திரும்பத் திரும்ப முத்தமிட்டான்....

பிறகு திடுமென அவனுக்குத் தெரிந்தது, அது அவன் அம்மா அல்ல என் பது.... வேறு யாரோ ஒரு பையனின் அம்மா அது. ஆனால் குழி விழுந்த அதே கண்கள்தான் அவருக்கும் இருந்தன, அம்மாவின் கண்களிலிருந்து வழிந்தோ டும் அதே கண்ணீர்தான் அவருடையவற்றிலும் இருந்து வழிந்தோடியது, அம்மாவைப் போல் அதே சோற்களையே அவர் வாயும் முணுமுணுத்தன:

''நீ உயிரோடு இருக்கிறாயா? என் தங்கமே! நன்றாய் இருக்கிறாயா?''

தான் அவருடைய ''தங்கம்'' அல்ல, தவறிப் போய் அவர் இந்த வாயிலி னுள் நுழைந்திருக்க வேண்டுமென அவன் சொல்ல விரும்பினான். ஆனால் அதற்

குள் அந்த இன்னொரு அம்மா அவனைத் தூக்கிச் சென்று நாற்காலியில் அமர்த்தி விட்டு, அதைப் பற்றி அவரே சொல்ல முற்பட்டார்:

''பகற் பொழுதிலும் உன் சன்னல் திரைச் சீலைகள் இழுத்து மூடப் பட்டிருக்கக் கண்டேன்—இங்கு யாரும் உயிருடன் இல்லை என்று நினைத்தேன். பிறகு திடுமென இங்கே நான் திரும்பிப் பார்க்கையில் திரைச் சீலைகளில் இடுக்கு தெரிந்தது, யாரோ அதன் வழியே பார்ப்பது தெரிந்தது.... படிகளில் ஏறி ஓட்டமாய் ஓடி வந்தேன். அவ்வளவு பலம் எனக்கு எங்கிருந்து வந்ததோ, தெரியவில்லை! எனது பையனாய் இருந்தாலும் இருக்கலாமென நினைத்தேன்.... சரி, உனது நிலைமை என்ன? யாரும் இல்லையா உனக்கு? தனியாகவா இருக்கிறாய்? இந்தா, தம்பி, இதைச் சாப்பிடு!''

அவன் வாயில் குழகுழப்பான ஏதோ ஒன்றை ஊட்டினார் அவர்.

''சத்துள்ளது இது, எனது சிறுவனுக்காக கொண்டு வந்தேன்.... ஆனால் அவன் இல்லை, போய்விட்டான்.... வீடு இடிந்து நொறுங்கிவிட்டது, ஏதும் எஞ்சவில்லை. நான் புறப்பட்டுச் சென்ற போது யாவும் இருந்தன—வீடு, எனது சிறுவன்.... சரி, நீ சாப்பிடு.... ஏன் சும்மாயிருக்கிறாய், எப்படிச் சாப்பிடுவதென்று மறந்துவிட்டாயா? நெடு நாளாகவா நீ தனியே இருக்கிறாய்? பலம் எல்லாம் இழந்துவிட்டாயே, திரைச் சீலைகளைக்கூட சரியாக இழுக்க முடியவில்லை உன்னால். விளக்கு எரிவதைப் பார்த்தேன். உடனே அதனிடம் ஓடி வந்தேன்.... நீ சாப்பிடு! சாப்பிட்டால்தான், உயிருடன் இருக்க முடியும்.''

அல்யோஷா இயந்திரம் போல் உணர்வின்றி மென்றான். அந்தத் தாயின் உடலிலிருந்து அவனுள் பாய்ந்த வெதுவெதுப்பு அவனுக்கு இதமாய் இருந்தது, அப்படியே உறங்கிவிட்டான்.

எல்லாம் கனவுதானோ, என்னமோ? ...மறுபடியும் எக்காள முழக்கம் கேட்டு அவன் விழித்துக் கொண்ட போது தனக்கு அருகே உணவுப் பொட்டலம் இருக்கக் கண்டான். அதிலிருந்து அதிமதுர மணம் வீசியது, அல்யோஷா விழித்துக் கொண்டதும் அதை உடனே கையில் எடுத்தான். காகிதத்தைப் பிரித்தான், பழப்பாகு தடவிய ரொட்டி அதனுள் இருந்தது. அது அவ்வளவு ருசியாக இருந்தது, அவனையும் மீறி அவன் பற்கள் அதைக் கடித்து மென்றன. ஆனால் அவனுள் எழுந்த சிந்தனை அவனைத் தடுத்து நிறுத்தியது: ''இது என்னுடையது அல்ல.... தவறுதலாய் என்னிடம் இது தரப்பட்டுள்ளது!''

ஆனால் அவன் பற்களால் இப்போது சும்மாயிருக்க முடியவில்லை. அவை தொடர்ந்து மென்று சென்றன. அவை மென்று தந்ததை அவன் விழுங்கினான்....

பட்டினியால் ஒய்ந்து ஒடுங்கி அல்யோஷா படுமோசமான நிலையில் இருந்தான். அந்த நிலையில் அந்த ரொட்டியையும் பழப்பாகையும் தின்பது சாவை

வரவேற்பதற்கே ஒப்பானது. கடைசிக் கவளத்தையும் அவன் தின்று முடித்ததும் அப்படியே இருளில் மூழ்கிவிட்டான்.... அப்படி அது அவனை உறங்கச் செய்தது. ஆனால் அது நிறைவு கண்ட வயிற்றால் விளைந்த ஆரோக்கியமான உறக்கம். மறுபடியும் அவன் விழித்துக் கொண்டதும் உடனே எழுந்து உட்கார்ந்தான். பிறகு இன்பம் தாங்காமல் அவன் கால்கள் சுரணையற்றுப் போயின—வாயிற் படியைக் கடந்து அம்மா உள்ளே வந்தார்.

''உயிரோடு இருக்கிறாயா? என் கண்ணு! நல்லபடியாக இருக்கிறாயா?'' என்று கூவினார், அந்த இன்னொரு அம்மாவைப் போலவே அவரும் கூவினார். ஆனால் ''என் தங்கமே'' என்பதற்குப் பதில் ''என் கண்ணு'' என்றார்.

அதே கண்ணீர் இவர் கண்களிலிருந்தும் வழிந்தோடிற்று. இருவரும் ஒருவரையொருவர் கெட்டியாய்க் கட்டித் தழுவிக் கொண்டனர், அவர்களது மெலிந்த நெஞ்சுக் கூட்டினுள்ளிருந்து அவர்களது இதயங்கள் படபடத்தது அவர்கள் காதுக்குக் கேட்டது. எப்படிப்பட்ட ஆனந்தம்! இரு இதயங்கள் ஒன்று சேர்ந்து அல்லவா படபடத்தன. உயிருடன் இருந்தனர்; ஆம், இருவரும் உயிருடன் இருந்தனர்; ஒன்று சேர்ந்து இருந்தனர்!

''என் கண்ணு, நான் இல்லாமல் எப்படி நீ தனியே சமாளித்தாய்?''

''ஆம், சமாளித்துக் கொண்டுவிட்டேன்'' என்று பதிலளித்தான் அல்யோஷா.

''நான் மூர்ச்சித்துப் போய்விட்டேன். பிறகு கண்ணைத் திறந்ததும் விசாரித்தேன்: 'எங்கே இருக்கிறேன்? எனக்கு என்ன ஆயிற்று? இன்று என்ன கிழமை?' தொடர்ச்சியாக மூன்று நாட்களாய் நான் நினைவிழந்து கிடந்திருக்கிறேன்! ஆலையிலிருந்து வேளியே வரும் போது மூர்ச்சித்து விழுந்துவிட்டேனாம்.... இப்போது இங்கே வந்து சேர்ந்துவிட்டேன்... நல்ல காலம், காரிலே என்னை இங்கே கொண்டுவந்து விட்டார்கள்.... உயிரிழந்து விடவில்லை, அல்யோஷா, என் கண்ணு, உயிரோடு இருக்கிறோம்! யாவும் நல்லபடி ஆகிவிடும். இனி எல்லாம் சரியாகிவிடும். நீ கேட்டாயா இதை? லாடகா ஏரியின் பனிக்கட்டி வழியே சாலை அமைத்திருக்கிறார்கள். உயிரளிக்கும் சாலை!... ஆனால் நான் இல்லாத போது நீ என்ன சாப்பிட்டாய்? எப்படி நீ பட்டினியால் சாகாமல் இருந்தாய்? இது என்ன? எப்படி இங்கே வந்தது?... யாரோ உன்னிடம் வந்து சென்றிருக்கிறார்கள்? வேறு யாரோ ஒருவரது கையுறைகள் அல்லவா இங்கே கிடக்கின்றன.''

மேசைக்கு அடியில் விழுந்து கிடந்த அந்தக் கையுறைகளை அல்யோஷாவும் கவனித்திருந்தான். ஏதோ கனவில் தோன்றியது போல் வந்திருந்த அந்த இன்னொரு அம்மாவைப் பற்றி அவரிடம் சொன்னான். எப்படி அந்த அம்மா தமது சிறுவனைப் பற்றிக் கூறிவிட்டு அழுதார், பிறகு எப்படி அவரது இன்னொரு ''தங்கத்துக்கு'' உணவு ஊட்டினார் என்று சொன்னான்.

அவன் தாய் மௌனமாகத் தலையை ஆட்டியபடி அதைக் கேட்டுக் கொண்டிருந்தார். இடிந்து நாசமாகிவிட்ட அந்த வீட்டை அவர் இங்கு வருகையில் பார்த்திருந்தார், அதன் இடிபாடுகளிலிருந்து புகை இன்னும் சுருண்டெழுந்து கொண்டிருந்தது.... நிலவெடி அகற்றும் படையினர் இன்னும் அங்கே வேலை செய்து கொண்டிருந்தனர். இடிபாடுகளுக்கு அடியிலிருந்து ஏற்கெனவே சிலரைக் காப்பாற்றி வெளியே கொண்டு வந்திருந்தனர்.

''அவரது 'தங்கம்' காப்பாற்றப்பட்டிருக்கலாம், அதனால்தான் அவர் அவசரமாகப் போய்விட்டாரோ, என்னமோ?''

''அப்படியானால் அந்தச் சிறுவனது ரொட்டியையும் பழப்பாகையும் நான் சாப்பிட்டிருக்கக் கூடாது!''

''பரவாயில்லை, அவன் உயிரோடு இருந்தால், அல்லது மருத்துவமனைக்குக் கொண்டு போகப்பட்டிருந்தால், சாப்பிட அவனுக்கு ஏதாவது தருவார்கள். ஆம், நானும் போய் உதவி செய்வேன்... ஆனால்.... அதெப்படி அவ்வன்னை கையுறைகளை மட்டும் இங்கே விட்டுவிட்டு, ஒன்றும் சொல்லாமல் போனார்?... உன்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையா?... அது யார் என்று எப்படித் தெரிந்து கொள்வது? அன்தோன் பெத்ரோவிச்சுடன் பேசவில்லையா அவர்? காவற் பணியை முடித்துவிட்டு அன்தோன் பெத்ரோவிச் இன்னும் தூங்குகிறாரா?'' என்று அவன் தாய் கணப் பொழுது பேச்சை நிறுத்திவிட்டு, திரும்பவும் அவனிடம் கேட்டார்: ''அவருடைய மேல் கோட்டு உன் படுக்கையில் இருக்கிறதே, ஏன்?''

''நான் சொல்ல மறந்து விட்டேனே: அவர் உருளைக் கிழங்கு கொண்டு வருவதற்காக போயிருக்கிறார். ஒரு பெரிய பை நிறைய உருளைக் கிழங்குடன் திரும்பி வருவேன் என்றார்!''

''அப்படியா?'' என்று திகிலுடன் சுற்றிலும் அறையினுள் பார்த்தபடி கேட்டார் அவன் தாய். ''அல்யோஷா, பையை எடுத்துச் சென்றாரா?''

''எடுத்துச் சென்றார், நான் பார்த்தேன். பழைய கோட்டை எடுத்துப் போட்டுக் கொண்டார்.... நெடுந் தொலைவு போயாக வேண்டும், அனேகமாய் அகழ்வரிகளுக்கு அருகே சென்றாக வேண்டும்.... அங்கே இருக்கிறது ஒரு குழி. வீட்டுக் கொல்லையில் விளைந்த உருளைக் கிழங்கு அதனுள் இருக்கிறது!''

''அல்யோஷா, நீ அவரைப் போக விட்டிருக்கக் கூடாது.''

''திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்!''

''அவருடைய ரொட்டியையுமா உனக்குத் தந்துவிட்டுச் சென்றார்? மாதம் முடியும் வரை அவருக்குரிய ரொட்டிப் பங்கீட்டுச் சீட்டையும் அல்லவா தந்துவிட்டுப் போயிருக்கிறார்?''

''ஆமாம், அவருக்குரிய பங்கீட்டை நாம் வாங்கிச் சாப்பிட வேண்டு

மென்று சொன்னார். அவர் அங்கே அவரது உறவினர்கள் வீட்டில் சாப்பிட முடியும், அவர்களிடம்தான் அவ்வளவு உருளைக்கிழங்கு இருக்கிறதே என்றார். நெடுந் தூரப் பயணம், திரும்பி வருமுன் அங்கே தங்கி, ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியிருக்குமென்று கூறினார். ஏன் அம்மா, நீ நம்பவில்லையா?''

''அதைப் பற்றிப் பேச வேண்டாம், அப்பா.''

''ஏனைய பலரையும் போல அவரும் சாவதற்காக இடுகாட்டுக்குப் போய் விட்டார் என்று நினைக்கிறாய்? சறுக்கூர்தியில் நாம் அவர் உடலை இழுத்துச் செல்ல வேண்டி வருமென தாமே புறப்பட்டு அங்கே சென்றுவிட்டார் என்கிறாயா? இல்லை, அம்மா, அதெல்லாம் இல்லை!''

''அதைப் பற்றிப் பேச வேண்டாம்.''

''திரும்பி வருவதாக வாக்களித்துச் சென்றிருக்கிறார்.... எனக்கு வெது வெதுப்பாய் இருக்கட்டுமென்று மேல் கோட்டை என்மேல் போர்த்திவிட்டுச் சென்றார். மெய்யாகவே நீ அப்படியா நினைக்கிறாய்?... இல்லை, அம்மா, என்னை அவர் ஏமாற்ற மாட்டார்!''

''ஏமாற்ற மாட்டார், நீ பயப்படாதே.... அவருக்காக நாம் காத்திருப் போம். நாம் உயிரோடு இருந்தாக வேண்டும், தெம்பு இழக்கக் கூடாது. நாம் சாகாமல் இருந்தாக வேண்டும். அல்யோஷா, நாம் உயிரோடு இருக்க வேண்டுமென்று எத்தனையோ பேர் உயிரை விட்டிருக்கிறார்கள்.... உயிரோடு இருந்து பகைவனை முறியடித்தாக வேண்டும், இது நமது கடமை.''

தாயும் மகனும் நெடு நேரம் மௌனமாய் இருந்தனர்.

பிறகு மதிய உணவையும் இரவு உணவையும் சேர்த்துச் சாப்பிட்டனர். வெந்நீரில் வாசனை இலையைப் போட்டுக் கொண்டனர், வாசனையில் அனேகமாய் அது சூப்பை ஒத்ததாகிவிட்டது. தட்டுகளில் ஊற்றிக் கொண்டு கரண்டியால் எடுத்து அதைச் சாப்பிட்டார்கள். பிறகு தட்டுக்கு அடியில் ரொட்டியை வைத்து அதை உயர்த்தி வாயில் வைத்து உறிஞ்சினார்கள். சில துளிகள் ரொட்டியில் சிந்தின, உடனே மெய்யான சூப்பின் மணம் ரொட்டித் துண்டிலும் வீசியது. சுவையாக இருந்தது! எப்போதும் போல் அவன் தாய் பெரிய ரொட்டித் துண்டை அவனிடம் நகர்த்தி வைத்து அவனை ஏமாற்ற முயன்றார்....

முற்றுகை இடப்பட்டிருந்த நகருக்கு இன்று மாவு கொண்டு வந்தார்கள், லாடகா ஏரியின் பனிக்கட்டியில் அமைந்த உயிரளிக்கும் சாலை வழியே கொண்டு வந்து சேர்த்தார்கள். மூடுபனி கவிந்திருந்தது, லாரிகளை ஜெர்மன் விமானிகளால் தடுத்திட முடியவில்லை.

பாரேன், நாளைக்கு மறுபடியும் அவர்கள் பகைவனது தாக்குதலை மீறி நமக்கு உணவு கொண்டு வருவார்கள். நன்றாய் வேக வைக்கப்பட்ட மெய்யான ரொட்டி நமக்குக் கிடைக்கும்.

தாயும் மகனும் அளவிலா நம்பிக்கை கொண்டனர். கணப்படுப்பின் தீயை வேண்டிய மட்டும் பார்த்திருந்த பின் அடுப்பை அணைத்துவிட்டு, ஒருவரையொருவர் வெதுவெதுப் பாக்கிக் கொள்ளும் பொருட்டு இருவரும் சேர்ந்து படுத்துக் கொண்டார்.

தூங்கும் முன்பு ஓயாமல் பேசினர், நிறுத்த முடியாமல் பேசிக் கொண்டே இருந்தனர். எக்காளம் ஊதும் சிறுவன் தினமும் காலையில் உற்சாகமாய் முழக்கமிட்டுத் தன்னை எழுப்பியது குறித்து அல்யோஷா கூறினான்.

''அவ்வளவு பலமாய் முழக்கமிட்டான். அம்மா, நாளைக்கும் ஊதி நம்மை எழுப்புவான், பாரேன். அவன் எதையும் தாங்கக் கூடியவன், வலிமை வாய்ந்தவன். நகரச் சுற்றுவட்டாரத்திலிருந்து இங்கு வந்துள்ள ஆரோக்கியமான பையன், அவன் கன்னங்கள் எப்படிச் சிவப்பாய் இருக்கும், தெரியுமா?... அவன் உயிரோடு இருந்து வருகிறான், நானும் உயிரோடு இருப்பேன்.''

''நீல விழிகளுடைய சிறுவன்தானே? நான் அவனைப் பார்த்திருக்கிறேன்'' என்றார் அவன் அம்மா.

''இல்லை, பழுப்பு விழிகளுடையவன்.''

''ஆமாம், அவன் கண்கள் பெரிதாக, நீலமாய் இருக்கும். ஞாயிற்றுக்கிழமையன்று அவனைச் சந்தித்தேன். அடுப்பு எரிப்பதற்காக உடைந்த நாற்காலித் துண்டுகளையும் பிறவற்றையும் எடுத்துச் சென்றான்.''

''இல்லை, நான் சொல்வது அவனல்ல. அவனுக்குப் பழுப்பு நிறக் கண்கள்.''

''அப்படியா? அவன் கண்கள் நீலமாக இருந்ததாக எனக்கு ஞாபகம்.''

''நீ தொலைவிலிருந்து அவனைப் பார்த்தாய். ஆனால் எக்காளத்தை அவனிடம் ஒப்படைத்த போது அருகில் அவனெதிரே நின்று அவனைப் பார்த்தேன். அவன் வலுமிக்கவனாகத் தோன்றினான்.''

''நீ சொல்வது சரிதான். அவனது அந்த மாலுமிக் கோட்டில் வலுமிக்கவனாகவே தோன்றுகிறான்....''

''இல்லை, அவன் ஆட்டுத் தோல் கோட்டு போட்டிருப்பான்.''

''அமர முழக்கமிட்ட'' அந்தச் சிறுவனது தோற்றம் குறித்து உடன்பாட்டுக்கு வரும் முன்பே இருவரும் உறங்கிவிட்டனர்.

அவன் கண்கள் நீலமாகவும் இருந்திருக்கலாம், பழுப்பாகவும் இருந்திருக்கலாம், ஆனால் நிச்சயம் அவன் உயிரோடுதான் இருக்கிறான், நலமுடன்தான் இருக்கிறான். தவறாமல் எக்காள முழக்கமிட்டு, வாழ்வுக்காகப் போராடுவதற்காக இளைஞர்களை அறைகூவி அழைக்கின்றான்.

ஒவ்வொரு தரமும் விழித்துக் கொண்டதும் அல்யோஷா புன்னகை புரிந்து கொண்டான், அவன் உதடுகள் வெடித்துச் சென்றன. போதிய ஊட்டமின்றி அவை வறண்டிருந்தன.

''எக்காளம் ஊதும் சிறுவன் உயிரோடு இருக்கிறுன், அப்படியாஞல் நானும் உயிரோடு இருப்பேன்!''

இப்படி மிகப் பல நாட்கள் கழிந்து சென்றன. முடிவில் வசந்தம் பிறந்தது. சாகாமல் உயிர் பிழைத்திருந்தோர் எல்லாரும் தெருக்களில் கூடினர். விதைப்பதற்காக அவன் வைத்திருந்த விதைகளை எடுத்துக் கொண்டு அல்யோஷாவும் புறப்பட்டுச் சென்றுன். வயது வந்தோரும் சிறு பிள்ளைகளுமாகச் சேர்ந்து தெருக்களைச் சுத்தம் செய்தனர். பிறகு மண்ணைத் தோண்டினர். காற்றையும் நீரையும் போல விதைகளும் அத்தியாவசியமானவை.

அவனது அந்தச் சிறு பொட்டலத்தைப் பார்த்ததும் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில் அப்படியே அவனைத் தூக்கித் தலைக்கு மேல் உயர்த்தி ஆட்ட விரும்பினர், ஆஞல் அதற்கு வேண்டிய தெம்பு அவர்களிடம் இல்லை.

கையில் வெள்ளி எக்காளத்தை வைத்திருந்த சிறுவனைக் கண்டதும் அல்யோஷா தன்னிடம் எஞ்சியிருந்த பலத்தை ஒன்று சேர்த்து அவனிடம் ஓடினுன். பின்பக்கமாய் அவனை அணுகி அப்படியே அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்ட போது, அவன் அப்படிக் குச்சியாய் மெலிந்திருந்ததைக் கண்டு திகைத்துப் போனுன். கைகளால் அந்தச் சிறுவனின் கண்களை மூடிக் கொண்டு கூவினுன்: ''நான் யார், ஊகித்துச் சொல்லு, பார்ப்போம்! தெரியவில்லையா உனக்கு? தோல்வியை ஒத்துக் கொள்கிருயா? நான்தான், அல்யோஷா! நண்பனே, நன்றி உனக்கு! நீ இல்லாதிருந்தால், நான் செத்துப் போயிருப்பேன். தினமும் காலையில் நீ எவ்வளவு நன்ருய் எக்காள முழக்கமிட்டாய்! உனக்கு எங்கிருந்து அவ்வளவு தெம்பு கிடைத்தது? என் அறையிலே நடப்பதற்குக் கூட எனக்குப் பலமில்லை.... ஆஞல் நீ நகரெங்கும் சென்று சுற்றி வந்தாயே.... எங்கள் தெருவில் உனது எக்காளம் ஒலித்தபின், அது எங்கெங்கோ தொலைவிடங்களுக்குச் சென்று அல்லவா ஒலிக்கக் கேட்டேன்.... நீ வைராக்கியம் வாய்ந்தவஞய்க் கடமை ஆற்றிஞய். மெய்யாகவே என்னை நினைவில்லையா உனக்கு? குளிர் காலத்தில் என்னிடமிருந்துதானே நீ இந்த எக்காளத்தை வாங்கிக் கொண்டாய், நினைவில்லையா?''

எக்காளம் ஊதிய சிறுவனுக்குத் தன்னை அடையாளம் தெரியவில்லை என்பதைக் கண்டதும், அல்யோஷா அவன் கண்களிலிருந்து கையை எடுத்துவிட்டு, அவனெதிரே சென்று அவனை உற்றுப் பார்த்தான்.

உடனே அல்யோஷா திகைப்புற்றுத் தடுமாறிஞன் — அவன் எதிரே நின்றது, முன்பு அல்யோஷா எக்காளத்தை ஒப்படைத்திருந்த குண்டுக் கன்னங்களையுடைய பையன் அல்ல, நீல விழிகளும் இளைத்து ஒட்டிய வெளிறிய முகமும் கொண்ட வேருெருவன்.

''நகரச் சுற்றுவட்டாரத்திலிருந்து வந்திருந்த அந்த வாஸ்யா எங்கே போனுன்?''

''எனக்குத் தெரியாதே'' என்ருன் நீல விழிச் சிறுவன். ''எங்கள் கட்டிடத்தைச் சேர்ந்தவனுகிய அர்க்காதி என்ெருரு பையன் என்னிடம் எக்காளத்தை ஒப்படைத்துவிட்டுப் பேனுன்.''

''அவனுக்கு இதைத் தந்தது யார்?''

''எதிர்ப் பக்கத்துக் கட்டிடத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி....''

''அவளுக்கு இது எங்கிருந்து கிடைத்தது?''

எக்காள முழக்கமிட்டு வந்தது ஒரே பையன் அல்ல, இரண்டு மூன்று பேருங் கூட அல்ல, மிகப் பல பையன்களும் பெண்களும் எக்காளத்தை எடுத்துச் சென்று ஒலித்து வந்தனர் என்பது இதன் பிறகுதான் அல்யோஷாவுக்குத் விளங்கியது. ஒருவர் பலமிழந்ததும் வேெருருவர் எக்காளத்தை ஒலித்திடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு கடமை ஆற்றினர் என்பது தெரிந்தது. பல பேர் இறந்து போயினர், ஆனுல் எக்காளம் தொடர்ந்து முழங்கி வந்தது. ஓயாமல் நாள்தோறும் முழங்கி, லெனின்கிராது சிறுவர் சிறுமிகள் அவர்களது இன்னல்களை எதிர்த்து நிற்கத் துணை புரிந்தது.

உயிரோடு எஞ்சியவர்களுக்கு இதமாய் இப்போது கதிரவன் கதகதப்பாய் ஒளி வீசினுன். இனி இவர்கள் அபாயமின்றி உயிர் வாழ்வார்கள். இவர்களது பகைவர்கள் வசந்த வெள்ளப் பெருக்கில் கறைந்தோடும் பனி போல் ஓடி மறைந்தனர். ஆனுல் அவர்கள் நெடுந் தூரம் ஓடிவிடவில்லை, இங்கே பால்டிக் பிரதேசத்திலேயே தக்க முடிவை எய்தினர். அவர்களது எலும்புகள் மண்ணோடு மண்ணுகி நெடுங் காலமாகிறது.

ஆனுல் அமரர்களான நமது சிறுவர் சிறுமியர் இன்றும் தொடர்ந்து ஒவ்வொரு காலையும் எக்காளத்தை உயர்த்தி அமர முழக்கம் எழுப்புவது கேளீர்!

நி க் க ல ா ய் தீ ஹ ன வ்

சிங்கத்தின் பாதம்

''வீட்டில் உன்னால் ஓயாத தொல்லையாய் இருக்கிறதே'' என்று எந்நேரமும் பெரியவர்கள் அலுத்துக் கொள்ளும்படியான பிள்ளை அல்ல யூரா. சின்னஞ் சிறியவனே என்றாலும்—ஏழு வயதே ஆகிறது—வீட்டிலே அவன் தங்குவதில்லை. பொழுதுக்கும் பூங்காவுக்கோ, தெருவுக்கோ, விலங்கினக் காட்சிசாலைக்கோ போய்விடுவான். விலங்கினக் காட்சிசாலை அவன் வீட்டுக்கு நேர் எதிரே இருந்தது. அடிக்கடி அவன் அங்கே சென்றுவிடுவான், அங்கிருந்த விலங்குகளை அவன் நேசித்து வந்தான்.

ஆனால், அவன் இதை ஒத்துக் கொள்ள வெகுவாய்க் கூச்சப்பட்டிருப்பான் என்ற போதிலும், இவற்றை எல்லாம்விட அதிகமாய் அவன் நேசித்தது, களிக்கல் காரையால் செய்யப்பட்டுக் காட்சிசாலையின் நுழைவாயிலில் ஒரு தூணில் நின்ற மாபெரும் சிங்கமாகும்.

முதன்முதல் அதை அவன் பார்த்தது முதலாய் அந்தக் கண்ணுக்கு இனிய சிங்கத்திடம் அளவிலா அன்பு கொண்டிருந்தான்.

''அம்மா, இங்குள்ள விலங்குகளுக்கு யாரும் தீங்கிழைக்காதபடி இந்தச் சிங்கம்தானே இந்தக் காட்சிசாலையைக் காவல் புரிகிறது?'' என்று ஒருநாள் கேட்டான்.

''ஆமாம், ஆமாம்'' என்று அவன் அம்மா எதையோ நினைத்தபடி அவனுக்குப் பதிலளித்தாள். இந்த முக்கிய விவகாரத்தில் அம்மா தன் கருத்தை எதிர்க்காதது குறித்து அவன் மனம் மகிழ்ந்து கொண்டான்.

களிக்கல் காரையாலான அந்த மாபெரும் சிங்கம் யாவற்றுக்கும் அதிபனாய் நுழைவாயிலில் கம்பீர உருவாய் அமைந்திருந்தது. அதைக் கடந்து செல்லும் போதெல்லாம் அதற்கு உள்ளப் பூர்வமான அன்பும் மரியாதையும் செலுத்தி அவன் வாழ்த்துத் தெரிவிப்பது வழக்கம்.

... நகரின்[1] அபாய அறிவிப்புச் சங்குகள் ஓலமிட்டன; தாய்மார்கள் அவசர அவசரமாகத் தமது பிள்ளைகளை ஒன்றுதிரட்டி, விமானத் தாக்குதல் காப்பறைகளுக்குள் அழைத்துச் சென்றார்கள். காப்பறையினுள் ஒரு பெஞ்சின் மீது யூரா அமர்ந்திருந்தான், அவனுடைய சின்னஞ் சிறு நெஞ்சு படபடத்துக் கொண்டது. தணிவான குவிமாடமாய் அமைந்த அந்தப் பெரிய நிலவறையில் பீதியூட்டும் உறுமல்கள் தெளிவாகவே காதில் விழுந்தன. சில சமயம் நிலவறையே நடுக்கங் கொண்டுவிட்டது போல் அதிர்ந்து குலுங்கியது, சுவர்களிலிருந்து மண் கசிந்து விழுந்தது, வெளியே கண்ணாடி உடைந்து நொறுங்கும் சப்தம் கேட்டது.

''கொள்ளைக்காரர்கள், திரும்பவும் தாக்குவதற்காக வருகிறார்கள்'' என்று சில பெண்கள் ஆத்திரமாய் முணுமுணுத்தனர். வயது முதிர்ந்த பாட்டிமார்கள் பலத்த வெடியோசை எழுந்த ஒவ்வொரு தரமும் தம்மீது சிலுவைக் குறியிட்டுக் கொண்டனர்.

திடுமென அந்தக் கட்டிடமே பயங்கரமாய் ஆடிக் குலுங்கியது—வேர்களுடன் சேர்த்து ஓக் மரத்தை அப்படியே பெயர்த்தெடுப்பது போல் யாரோ சிலர் அந்தக் கட்டிடத்தை அதன் நிலவறை, அடித்தளம் ஆகிய யாவும் அடங்கலாய் அடியோடு மண்ணிலிருந்து பிய்த்தெடுக்க முயன்றபின் வேண்டாமென முடிவு செய்து முழு வலிவையுங் கொண்டு அதை ஓர் உலுக்கு உலுக்குவிட்டுச் சென்றது போலிருந்தது.

''நமக்கு மிகவும் அருகாமையில் விழுந்த குண்டு'' என்றாள் யூராவின் தாய். ''நம்முடைய வீட்டுக்கு நேர் எதிரே விழுந்திருக்க வேண்டும்....''

அவளது ஊகம் சரியாகவே இருந்தது. அபாய நீக்க அறிவிப்பு அளிக்கப்பட்டதும், குண்டுகள் எங்கே விழுந்தன என்று பார்ப்பதற்காக எல்லாரும் அடித்து மோதிக் கொண்டு வெளியே ஓடினார்கள். யூரா அவன் தாயுடன்கூட ஓடினான். கடைசிக் குண்டு விலங்கினக் காட்சிசாலையில் விழுந்து சேதப்படுத்தியிருந்தது. ஒரு யானை கொலையுண்டு விட்டது, ஒரு குரங்கு காயமுற்றிருந்தது. மிரண்டு போன கலைமான் தெரு வழியே ஓடிக் கொண்டிருந்தது, தனக்குக் கிடைத்த சுதந்திரத்தை என்ன செய்வதென்று அதற்குத் தெரியவில்லை.

ஆனால் யூரா திரும்பத் திரும்ப ஒன்றையேதான் சுட்டிக் காட்டி விம்மி விம்மிக் கூவிக் கொண்டிருந்தான்:

''அம்மா, சிங்கம்! அம்மா, சிங்கம்!''

---

[1] லெனின்கிராது நகர் இரண்டாவது உலக யுத்தத்தின் போது பாசிஸ்டுகளால் முற்றுகை இடப்பட்டிருந்த காலத்தில் நடைபெறும் கதை இது.—பதிப்பாசிரியர்.

யூராவின் கூச்சல் சொல்லொணுத் துயரங் கொண்டதாய் ஒலிக்கவே, அவன் தாய் தன்னையும் அறியாமல், அவன் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தாள். அங்கே அவனது மகோன்னத மூர்த்தி—களிக்கல் காரையில் செய்யப்பட்ட அந்த மாபெரும் சிங்கம்—விலாப் பக்கமாய் விழுந்து கிடந்தது. பிரம்மாண்டமான அதன் வெண்ணிறத் தலை அதன் பாதத்தின் மேல் கவிழ்ந்திருந்தது. பின்னங் கால்கள் இரண்டும் தகர்ந்துவிட்டன, முன்னங் கால் ஒன்றின் பாதம் சின்னு பின்னமாகிவிட்டது. ஆனால் இப்போதும் சிங்கத்தின் பிடரி மயிர் கம்பீரக் காட்சியளித்து, எப்போதும் போல் சிங்கத்தின் பார்வையும் ராஜகம்பீரம் வாய்ந்தாய் இருந்தது.

''கொள்ளைக்காரர்கள் அதைக் கொன்றுவிட்டார்கள் அம்மா!'' என்று கூச்சலிட்டான் யூரா. ''அந்தக் கொடியவர்களை எதிர்த்து அதுவும் போராடி வந்தது அம்மா!...''

குண்டுச் சிதறல்களால் தாக்குண்டு விடுப்பட்டிருந்த அந்தத் தூணிடம் ஓடிச் சென்று அதனடியில் அவன் எதையோ தேடினன். அவனது நீல நயனங்களிலிருந்து கண்ணீர் தாரையாய் வழிந்தோடியது, அங்கே உடைந்து கிடந்த பாளங்களை அவன் கிளறிப் பார்த்தான். சுற்றுமுற்றும் உற்று நோக்கி தொடர்ந்து தேடிய பின் ஏதோ கிடைக்கவே அதை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டான்.

''யூரா, அங்கே என்ன செய்கிருய் நீ?'' என்று கேட்டாள் அவன் தாய். ''குப்பைக் கூளத்தைக் கிளறிக் கொண்டு நிற்கிருயே, மேலெல்லாம் அழுக்கு ஆக்கிக் கொள்வாய். கல்லையும் கட்டியையும் பொறுக்காதே, கீழே போடு....''

ஆனல் யூரா அவனது சிங்கத்தை விட்டு விலகி வரவில்லை. அடிபட்டுவிட்ட தூணைச் சுற்றி வந்தான், கீழே விழுந்து கிடந்த சிங்கத்தைப் பார்த்துக் கொண்டு நின்ருன். விலங்குகளது வாழ்வையும் அமைதியையும் காத்து, காட்சிசாலையின் நுழைவாயிலில் நின்றிருந்த அந்த வாயில்லா ஜீவனைத் தன் நினைவில் என்றென்றுக்குமாய் இருத்திக் கொள்ள விரும்பியவனைப் போல் அதைக் கூர்ந்து கவனித்தான்.

குண்டு வெடிகுழிகளையோ, இடிந்து போன கிராதி அடைப்பையோ, கவிழ்ந்து கிடந்த பெட்டிக் கடைகளையோ, ஒரு சில பலகைகள் மட்டுமே உடையாமல் எஞ்சியிருந்த கட்டணச் சாவடியையோ அவன் பார்த்தான் இல்லை. காட்சிசாலையில் அங்கும் இங்கும் ஓடிய துருவ நரியையுங்கூட அவன் கவனிக்கவில்லை.

அவனது சிங்கம் மட்டும்தான் அவன் கண்ணுக்குத் தெரிந்தது.

போர்த் தழும்பேறி அழுக்கு படிந்த படையாள் ஒருவர் ஒரு நாள் அந்திப் பொழுதில் அவன் தாயைப் பார்ப்பதற்காக வந்திருந்தார். மேசையின் முன்னல் அமர்ந்து அவர் தேநீர் அருந்தினர், தூக்கக் கலக்கத்துடன் யூரா

அவரைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்கள் அவனையும் மீறி இடையிடையே மூடிக் கொண்டன. அன்று பகலில் ஓயாமல் அவன் ஓடிக் கொண்டிருந்ததால் களைத்துப் போயிருந்தான். படையாள் கூறியது பலவும் அவன் காதில் விழவில்லை. படையாள் போர்முனையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். தன் தோழர்கள் எவ்வளவு சிறந்த போர் வீரர்கள், ஜெர்மானியர்களை எதிர்த்து அவர்கள் எப்படியெல்லாம் போராடினர், செயற்கரிய வீரச் செயல்கள் புரிந்தனர் என்று அவர் கூறினார். யூராவின் தாயினுடைய சகோதரரைப் பற்றியும் அந்தப் படையாள் சொன்னார், அவருக்குச் செங்கொடி விருது அளிக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். களைப்புற்றிருந்த யூரா நாற்காலியில் இருந்தபடி தூங்கி விழுவதைக் கவனித்த அவன் தாய், அவனைப் படுக்க வைப்பதற்காக அழைத்துச் சென்றாள். ஆடைகளைக் கழற்றிவிட்டுப் படுக்கையின் ஓரத்தில் உட்கார்ந்த யூரா அவன் தாயிடம் கேட்டான்:

''மீஷா மாமாவுக்குச் செங்கொடி விருது அளிக்கப்பட்டிருப்பது மெய் தானா?''

''ஆமாம், மெய்தான். நாஜிக்களை எதிர்த்துச் சிங்கமெனப் போராடினார் அவர். உனக்கு வயது வந்ததும் நீயும் அதே போல் வீரமாகப் போராடு வாய். மீஷா மாமா இங்கே வருவார், எப்படிப் போராடுவதென்று உனக்குக் கற்றுத் தருவார்.''

''அம்மா'' என்றான் அவன், ''அந்தச் சிங்கத்தைப் போலத் தானே போராடினார்....''

''எந்தச் சிங்கத்தைச் சொல்கிறாய்?'' என்று கேட்டாள் அவன் தாய். ''வீரம் மிக்கவரைப் பற்றி அப்படிச் சொல்வது வழக்கம்—சிங்கமெனப் போர் புரிந்தார் என்பார்கள்....''

''அந்தச் சிங்கத்தைப் போல் போராடினார் என்று தான் அதற்கு அர்த்தம்'' — அவன் தாய் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே கூறினான் யூரா. ''அஞ்சாமல் தீரமுடன் போராடினார் என்பதை குறிக்கிறது அது. நானும் அப்படித்தான் போராடுவேன்....''

''சரி, இப்போது நீ படுத்துறங்க வேண்டும்'' என்றாள் அவன் தாய். ''திரும்பவும் அபாய அறிவிப்பு அவிக்கப் படலாம், சங்குகள் மறுபடியும் கூவுவதற்குள் நீ நன்றாய்த் தூங்கியெழுந்தாக வேண்டும்.''

அபாய அறிவிப்புகள் இப்போது அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. யூராவைப் பல சந்தர்ப்பங்களில் அவன் தாயால் தேடிப் பிடித்துக் காப் பறைக்குள் அழைத்துச் செல்ல முடியவில்லை. தெருவிலே அவன் எங்காவது ஓடிச் சென்றிருந்தான், அல்லது கட்டிடக் கூரைக்குப் போயிருந்தான், அல்லது முதல் உதவிக் களத்திலே இருந்தான். விமான-எதிர்ப்புப் பீரங்கி

கள், கட்டிடங்கள் ஆடியதிர்வது, குண்டுகளின் வெடியொலி ஆகியவை எல்லாம் அவனுக்குப் பழக்கப்பட்டவை ஆகிவிட்டன.

''நீ எங்கே போயிருந்தாய்?'' என்று அவன் தாய் கடிந்து கொள்வாள். ''எல்லா இடங்களிலும் உன்னைத் தேடிப் பார்த்தேன்—எங்குமே இல்லை நீ. எவ்வளவு துணிச்சல் இருந்தால் வீட்டிலிருந்து அவ்வளவு தூரம் செல்வாய்? உன் அப்பா இங்கு இல்லாமல் நீ கட்டுக்கு அடங்காதவனாகிவிட்டாய். அவர் திரும்பி வரட்டும், உனக்குத் தக்கபடி பாடம் கற்பிப்பார். நீ எனக்கு அடங்க மாட்டேன்கிறாய்.''

''நமது கட்டிடத்துக்குப் பின்னால் நான் தடுப்பரண் அமைத்துக் கொண்டிருந்தேன்'' என்று காரியார்த்தமான முறையில் பதிலளித்தான் அவன்.

''தடுப்பரணா?''

''ஆமாம், பெரியத் தெருவில் அமைத்தார்கள், நான் பார்த்தேன். அதைப் போல் நாங்கள் இங்கும் அமைத்து வருகிறோம். எல்லாப் பையன்களுமாகச் சேர்ந்து....''

மூன்று நாட்களுக்குப் பிறகு கனத்தக் குண்டு வீச்சுக்குப் பிற்பாடு உணர்விழந்த நிலையில் யூராவை வீட்டுக்குத் தூக்கி வந்தார்கள். முகம் வெள்ளை வெளேரென வெளுத்துப் போய், முடிகள் கலைந்து தொங்க அவனது தாய் நடுங்கும் கைகளால் அவன் ஆடைகளைக் கழற்றினாள். அசையாமல் அவன் அமைதியாகப் படுத்திருந்தான், ஏற்கெனவே அவனுக்கு உணர்வு திரும்பி வந்தது. வெடிப்பு அதிர்ச்சியலை மோதி அவனைத் தரையிலே வீழ்த்தி விட்டுச் சென்றதே ஒழிய அவனுக்கு அடி பட்டுவிடவில்லை.

''நமது கட்டிடத்துக்குப் பின்னால் நான் தடுப்பரண் அமைத்துக் கொண்டிருந்தேன்'' என்று குற்ற உணர்ச்சியுடன் ஒலித்த மெலிந்த குரலில் அவன் சொன்னான். ''அம்மா, நான் உயிரோடுதான் இருக்கிறேன். நீ பயப்படாதே'' என்றான்.

கைக்குட்டையை எடுக்க விரும்பி அவனுடைய பைகளுக்குள் கையை விட்ட அவன் தாய், அவற்றுள் இருந்தவற்றை வெளியே எடுத்தாள். ''வேண்டாத குப்பைகளை எல்லாம் பைக்குள் வைத்திருக்கிறாயே'' என்று சொல்லி, அழுக்கேறி வேண்மையை இழந்திருந்த ஒரு பெரிய காரைக் கட்டியை அவள் வெளியே எடுத்தாள்.

''அம்மா, அதை எறிந்துவிடாதே!'' என்று கத்தினான் யூரா. ''சிங்கத்தின் பாதம்! இங்கேயே இருக்கட்டும்! அது எனக்கு வேண்டும். நினைவுச் சின்னமாய் வைத்திருக்கிறேன்....''

அவன் தாய் அந்தக் காரைக் கட்டியை வியப்புடன் உற்று நோக்கினாள். ஆமாம், வளைந்த ஒரு பெரிய நகத்தை அதில் காண முடிந்தது.

''எதற்காக இதை எடுத்து வைத்திருக்கிறுய்?'' என்று கேட்டாள் அவன் தாய். ''கூளங்களைக் கிளறி அன்று இதைத்தான் எடுத்து வைத்துக் கொண்டாயா?''

''இது ஒரு நினைவுச் சின்னம்....'' என்று சொல்லி நெற்றியைச் சுளித்துக் கொண்டான் அவன்.

''கண்ணு, எனக்குப் புரியவில்லையே—உனக்கு ஏன் இந்த நினைவுச் சின்னம்?'' என்று அவன் தாய் அருமையாய் அவனைக் கேட்டாள்.

''அந்தச் சிங்கத்துக்காக நான் பழிதீர்த்துக் கொள்ள வேண்டும். அந்தக் கொள்ளைக்காரர்கள் இங்கே என்னிடம் வரட்டும். அவர்கள் மறக்க முடியாதபடி நான் செம்மையாகக் கொடுப்பேன்!...''

லியனித் பன்திலேயெவ்

ஓடத்தில்

அகன்ற விளிம்புகள் கொண்ட பெரிய படகு எங்கள் கரைக்கு மிதந்து வந்தது. செம்மச் செம்ம நிறைந்திருந்த அது நீரில் மிகவும் ஆழ்ந்திருந்தது, ஆற்றின் இழுப்பைச் சமாளித்துக்கொண்டு மெதுவாகவே நகர்ந்தது. துடுப்புக்கள் இறுக்கத்துடனும் சிரமத்துடனும் நீரில் அமிழ்வதும், எளிதாக அதிலிருந்து வெளிவந்து சுற்றிலும் ஆயிரமாயிரம் துளிகளைச் சிதறியவாறு வெயிலில் பளிச்சிடுவதும் தெளிவாகப் புலப்பட்டன.

நீரின் அருகேயே இருந்த வெதுவெதுப்பான, கரடு முரடான கல்மேல் நான் உட்கார்ந்திருந்தேன். எனக்கு மிக இன்பமாக இருந்தது, ஆகையால் அசையவோ சுற்று முற்றும் பார்வை செலுத்தவோ கூட மனம் வரவில்லை. படகு இன்னும் தொலைவிலேயே இருக்கிறது, எனவே இன்னும் சிறிது நேரம் நிதானமாக உட்கார்ந்து சிந்திக்கலாம் என்பதனால் எனக்கு மகிழ்ச்சிகூட உண்டாயிற்று.... சிந்திக்கலாம் என்றால் எதைப்பற்றி? விசேஷமாக எதைப் பற்றியும் அல்ல, உட்கார்ந்திருப்பது எவ்வளவு இன்பமானது, தலைக்கு மேல் எத்தகைய இனிய வானம் ஒளிர்கிறது, நீரின் வாசமும் சிப்பிகளின் வாடையும் கீல்பூசிய கட்டையின் மணமும் எப்படி அற்புதமாகக் கமழ்கின்றன என்பதைப் பற்றி மட்டுமே...

நான் வெகு காலமாக நகருக்கு வெளியே போகவில்லை. எனவே எல்லாமே எனக்கு இப்போது உண்மையிலேயே மகிழ்வு ஊட்டின. புர்டாக் செடியின் புழுதிபடிந்த இலைக் குடையின்கீழ் மறைந்து கொண்டிருந்த வாடிய டாண்டெலியன், நேவா ஆற்றின் அலைகளுடைய சற்றே காதில் படும் மேல்லிய மோதல் ஒலி, கண்ணுடி போன்ற தெள்ளிய காற்றில் ஒரு கணம் இங்கும் ஒரு கணம் அங்குமாகப் பளிச்சிட்டவாறு இருந்த வெண்வண்ணத்திப் பூச்சி, எல்லாம் எனக்கு இன்பம் அளித்தன. போர் நடந்து கொண்டிருக்கிறது என்றும் முனை முகம் மிக அருகில், இந்த வீட்டு முகடுகளுக்கும் புகைக் குழாய்களுக்கும் அப்பால் இருக்கிறது என்றும், முற்றுகைக்கு உள்ளான எங்கள் நகர் மீது ஜெர்மானிய வெடி விமானங்களும் தொலை தூரப் பீரங்கிக் குண்டுகளும் அங்கிருந்தே பறந்து வருகின்றன என்றும் நம்புவது

அந்த நேரத்தில் முடிந்திருக்குமா என்ன? இல்லை, அதைப் பற்றி எண்ணவே நான் விரும்பவில்லை, என்றால் எண்ண முடிந்தும் இராது. வெயில் ஒளி வீசிய அந்த ஜூலை நாள் எனக்கு அவ்வளவு இதமாக இருந்தது.

* * *

படகு வந்து நிற்பதற்கான சிறு இறங்குதுறை ஏற்கனவே ஆட்களால் நிறைந்திருந்தது. ஓடம் கரையை நெருங்கிக் கொண்டிருந்தது. என் முறையை இழந்துவிடக் கூடாது என்பதற்காக நானும் அந்த ஆட்டங்கண்ட பலகை மேடை மேல் நடந்து காத்திருந்தவர்களின் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன். கூட்டத்தில் எல்லோரும் மாதர்கள், பெரும்பாலும் முதிய தொழிலாளிப் பெண்டிர்.

அவர்களில் சிலர் படகில் இருந்தவர்களுடன் முகமன்களும் உரையாடல்களும் பரிமாறிக்கொண்டார்கள். படகிலும் அனேகமாகப் பெண்களே இருந்தார்கள். ஒரு சில கமாண்டர்களும் ஒரு கப்பற்படை வீரனும் ஓடக்காரனும் மட்டுமே ஆடவர்கள். தலைமூடியுள்ள பாங்கற்ற தார்ச்சீலை மழைக் கோட்டு அணிந்திருந்தான் ஓடக்காரன். அவனுடைய முதுகும் அகன்ற கோட்டுக் கைகளிலிருந்து வெளித் தெரிந்த கைகளும் மட்டுமே அப்போது எனக்குத் தென்பட்டன. இந்தக் கைகள் லாகவமாக, ஆனால் ஓரளவு சிரமத்துடன் துடுப்புக்களை வலித்துக் கொண்டிருந்தன. படகை ஆற்றோட்டம் இழுத்துச் சென்றது. எனினும் ஒவ்வொரு துடுப்பு வீச்சின்போதும் அது கரையை மேலும் மேலும் நெருங்கியது.

''மத்வேய் கப்பித்தோனிச், துரிதப்படுத்து!'' என்று கத்தினாள் காத்திருந்தவர்களில் ஒருத்தி.

படகோட்டி பதில் ஒன்றும் பேசவில்லை. படகை மேடை ஓரமாகச் செலுத்தி அவன் சற்றே தலையைத் திருப்பினான். அப்போது தான் நான் அவனுடைய முகத்தைப் பார்த்தேன். அவன் பதினொரு, பன்னிரண்டு வயதுச் சிறுவன். ஒரு வேளை அவன் வயது இன்னும் குறைவாக இருக்கலாம். வெயிலில் பழுப்பேறிய அவன் முகம் மெலிந்து, ஆழ்ந்த பார்வையும் கண்டிப்புமாக இருந்தது. ஆனால் முற்றிலும் நிறமற்ற வெளிறிய புருவங்களோ நகைப்பூட்டுபவையாக, குழந்தைமை கொண்டவையாகத் திகழ்ந்தன. தலைமை மாலுமிக்குரிய, முன் பட்டையில் நங்கூரச்சின்னம் பொறித்த பிரமாண்டமான தொப்பி அணிந்திருந்தான் அவன். அதன் அகன்ற விளிம்புக்கு அடியிலிருந்து நெடுங்காலமாகக் கத்தரிக்கப்படாத வைக்கோல் நிற வெளிர் முடிகள் வேர்வை துளித்த நெற்றிமேல் விழுந்திருந்தன.

இறங்குதுறையில் இருந்த மாதர்கள் மனப்பூர்வமான நேசத்துடன் சிறுவனுக்கு முகமன் தெரிவித்ததிலிருந்து அவன் படகோட்டுவது தற்செயலாகவோ முதன்முறையாகவோ அல்ல என்பது தெரிந்தது.

''காப்டனுக்கு வணக்கம்!'' என்று ஆரவாரித்தார்கள் மாதர்.

''மத்வேய் தம்பீ, இப்படி ஓட்டிவா! வெகு நேரமாக உன்னை எதிர்பார்க்கிறோம்.''

''மத்வேய் தம்பீ, சீக்கிரம், எங்களுக்கு நேரமாகிறது!''

''மத்வேய் கப்பித்தோனிச், வணக்கம்!''

''எட்ட நில்லுங்கள், அம்மாமாரே, இடைஞ்சல் பண்ணுமல்!'' என்று தடிமல் பிடித்த கரகரப்பான குரலில் பதிலுக்குக் கத்தினன் ஓடக்காரன். அப்போது படகு இறங்குதுறையின் சுவரில் மோதி, ஆட்டத்துடன் கிறீச்சிட்டது. சிறுவன் மேடையின் ஓரத்தில் துடுப்பைக் கொடுத்து மாட்டினன். ஒரு படைவீரன் துறைமீது தாவி, படகைத் துறையில் நிறுத்தச் சிறுவனுக்கு உதவினன்.

வந்தவர்களை இறக்குவதும் புதுப் பிரயாணிகளை ஏற்றுவதும் தொடங்கியது.

படகோட்டிப் பையன் மிகவும் களைத்தவன் போலக் காணப் பட்டான். அவன் முகத்தில் வேர்வை வழிந்தது. ஆனல் அவன் அமைதியாக, எவ்விதப் பதற்றமும் இன்றி, கண்டிப்புடனும் அதிகார தோரணையுடனும் பிரயாணிகள் ஏறுவதை ஒழுங்கு படுத்தினன்.

''இந்தா, அத்தை! விஷ வாயு முகமூடி வைத்திருக்கிறுயே, உன்னைத்தான் சொல்லுகிறேன். இடத்து ஓரத்தில் உட்காரு. கோப்பரை வைத்திருக்கிறுயே, நீ அங்கே உட்காரு.... மெதுவாக.... ஜாக்கிரதையாக.... கலவரப் படாமல்... ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு....''

அவன் பிரயாணிகளை எண்ணினன், நடுவில் தவறிவிட்டான், பின்னும் ஒரு முறை எண்ணிக் கணக்கிட்டான்.

''போதும். அவ்வளவுதான்! பாக்கி இருப்பவர்களை ஏற்றிப்போக அப்புறம் வருகிறேன்.''

துடுப்பால் இறங்குதுறையிலிருந்து படகை ஆற்றில் தள்ளிச் செலுத்திவிட்டு, தொளதொளத்த தார்ச்சீலைக் கோட்டைச் சரிப்படுத்திக்கொண்டு உட்கார்ந்து, ஆளுக்கு இருபது கோப்பெக்குகள் வீதம் கட்டணம் வசூலிக்கத் தொடங்கினன் சிறுவன்.

நான் அவனிடம் ஒரு ரூபிள் கொடுத்துவிட்டுச் சில்லரை வேண்டாம் என்று சொன்னேன். அவன் மூக்கை உறிஞ்சினன், முறுவலித்தான், எண்பது கோப்பெக்குகளை எண்ணி டிக்கெட்டுடன் சேர்த்து என்னிடம் தந்தான்.

''உங்களிடம் அதிகப்படி பணம் இருந்தால் சேமிப்பு பாங்கியில் போட்டு வையுங்கள்'' என்றான்.

பிறகு வசூலான பணத்தை மறுபடி எண்ணி விட்டு, பையிலிருந்து பெரிய, பழைய மோஸ்தர் தோல் பர்ஸை எடுத்து நாணயங்களை அதில் போட்டு டக்கென்று பர்ஸை மூடிப் பைக்குள் வைத்துக்கொண்டான், சௌகரியமாக அமர்ந்து கைகளில் துப்பிக்கொண்டான், துடுப்பு வலிக்கலானான்.

பெரிய, கனத்த படகு இடத்திலிருந்து நகர்ந்து, நீரோட்டத்தின் போக்கில் அனாயாசமாக, சுதந்திரமாக நீந்திச் சென்றது.

* * *

ஓடத்திலிருந்த பெஞ்சுகளில் நாங்கள் சரியாக உட்கார்ந்து கொள்வதற்குள், எங்கள் படகு கரையிலிருந்து நூறு மீட்டர் தொலை செல்வதற்குள், ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது. வெயில் ஒளி சுடரும் இந்த அமைதியான கோடை நாளில் எவ்வகையிலும் எதிர்பார்க்க முடியாதது என்று தோன்றக் கூடிய நிகழ்ச்சி அது.

நான் படகின் பின்புறத்தில் உட்கார்ந்திருந்தேன். என் முன்னே பரந்திருந்தது ஆறு. அதற்கு அப்பால் இருந்தது காமின்னிய் (பாறைத்) தீவு. காலை ஞாயிறு அதற்கு மேலும் மேலும் உயரே எழுந்துகொண்டிருந்தது. அதன் கரையின் தாழ்ந்த சரிவுக்கு மேலே அடர்ந்த பச்சைப் பிடரி தொங்கியது. பளிச்சென்ற புத்திலைகளின் இடை வழியே எவையோ வீடுகளும் வெண்ணிற வட்டத்தூண்கள் கொண்ட ஏதோ கொடிவீடும் தென்பட்டன. அவற்றுக்கும் அப்பால்.... இல்லை, அங்கே எதுவும் இல்லை, இருக்கவும் முடியாது. பூத்துக்குலுங்கும் இந்த நிலத்தின் மீது அமைதி நிறைந்த வாழ்க்கை ஆறு போலப் பெருகியது. பலவண்ணக் கோடை வீடுகளுக்கு மேலே மெல்லிய புகை படலங்களாக எழுந்தது. கரைமீது விரிக்கப் பட்டிருந்த செதில்கள் கொண்டவை போன்ற மீன்வலைகள் உலர்ந்துகொண்டிருந்தன. வெண்ணிறக் கடற்பறவை பறந்துகொண்டிருந்தது. ஒரே நிசப்தம் நிலவியது. எங்கள் படகிலும் எதனாலோ அமைதி குடி கொண்டிருந்தது. துடுப்புகள் மட்டுமே தாங்கி வளையங்களில் ஒரு சீராக அடித்துக் கொண்டிருந்தன. அதேபோல ஒரு சீராகவும் நிதானமாகவும் படகின் மீது சளப்பிட்டுக் கொண்டிருந்தது தண்ணீர்.

திடீரென்று இந்த இன்பமயமான அமைதி நிறைந்த நிசப்தத்தைப் பிளந்து உட்புகுந்தது தொலைவிலிருந்து வந்த ஒலி. தூரத்தில் இடி இடிப்பது போன்று இருந்தது அது. மெல்லோசையுடன் அது ஆற்றைக் கடந்து சென்றது. அக்கணமே எங்களுக்கும் இதயத் துடிப்பு நின்றுவிட்டது

8*

போலிருந்தது. பழக்கம் காரணமாக நாங்கள் எச்சரிக்கை ஆகிவிட்டோம். ஒரு மாது அதிக அச்சம் இன்றியும் அதிகச் சத்தம் இன்றியும் கீச்சிட்டு, ''ஐயோ அது என்ன, பெண்களே?'' என்ருள்.

அப்போது முந்தியதைவிடப் பலமான அதிர்ச்சி அகன்ற எதிரொலியுடன் ஆற்றின் மீது நெடுகச் சென்றது. எல்லோரும் பையனை நோக்கினுர்கள். படகில் அவன் ஒருவன் மட்டுமே சந்தேகத்துக்கு இடமான இந்த ஒலியைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாதவன் போல நிதானமாகத் துடுப்பு வலித்துக் கொண்டு போஞன்.

''மத்வேய் தம்பீ, என்ன இது?'' என்று மாதர்கள் அவனிடம் கேட்டார்கள்.

அவனே, தலையைத் திருப்பாமலே, ''என்னவாவது! ஒன்றும் விசேஷமில்லை. விமானந்தாக்கிப் பீரங்கிகள்'' என்ருன்.

அவன் குரலில் சலிப்பும் ஓரளவு துயரமும் கூடத் தொனித்தன. எனவே நான் என் வசமின்றியே அவனை நோக்கினேன். இப்போது அவன் எனக்கு எதனுலோ முன்னிலும் இளையவனுகத் தென்பட்டான். அவனிடம் முற்றிலும் குழந்தைமை நிறைந்த, பிள்ளைத்தன்மை உள்ள எதுவோ இருந்தது. பெரிய தொப்பிக்குக் கீழே காதுகள் நகைப்பூட்டும் வகையில் துருத்தியிருந்தன. பழுப்பேறிய கன்னங்களில் லேசான வெளிர் சுணை படிந்திருந்தது. அகன்று, நுகம் போல் முடமுடப்பாயிருந்த தலைமூடிக்கு அடியிலிருந்து நீட்டிக் கொண்டிருந்தது மெல்லிய கோழிக் கழுத்து.

மேகமற்ற தெள்ளிய வானில் இடிப்புயல் உக்கிரமாக அடித்துக் கொண்டிருந்தது. நகரின் அணுகுவழிகளில் எங்கோ, அரண்கள் மேலோ அல்லது இன்னும் அருகிலோ, நமது விமானந்தாக்கிப் பொறிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது இப்போது எனக்கும் தெரிய வந்தது. பகை விமானங்கள் முதல் பீரங்கி வரிசையின் குண்டு வீச்சுக்கு ஊடாகப் புகுந்து வருவதில் வெற்றி பெற்றுவிட்டன, இப்போது அவை நகருக்குப் பறந்து செல்கின்றன என்பது புலப்பட்டது. பீரங்கிக் குண்டுமாரி வலுத்தது, அருகே நெருங்கிற்று. மேலும் மேலும் புதிய பீரங்கிகள் செயல்படலாயின. விரைவிலேயே தனித்தனிப் பீரங்கிகளின் குண்டுகளை வேறு பிரித்து அறிவது இயலாதது ஆகிவிட்டது. ஒன்றை ஒன்று முந்தியவாறு அவை ஒரு மொத்தமான இரைச்சலில் ஒன்று கலந்தன.

''பறக்கிறது! பறக்கிறது! பாருங்களேன்!'' என்று எங்கள் படகில் யாரோ கத்திஞர்கள்.

நான் பார்த்தேன், ஆனுல் எனக்கு ஒன்றும் தென்படவில்லை. மென்மையான, தூவி அடர்ந்தவை போன்ற புகைப் படலங்கள் மட்டுமே தெளிந்த உயர் வானில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கரைந்தன.

ஆனல் விமானந்தாக்கிப் பீரங்கிக் குண்டுகளின் முழக்கத்துக்கு இடையே ஜெர்மன் விமான எஞ்சினின் அறிமுகமான, விட்டுவிட்டு ஒலிக்கும் கடகடப்பு என் காதில் பட்டது. எங்கள் படகோட்டியும் லேசாக வானைச் சிறக்கணித்து நோக்கினன்.

''ஆகா, வேவுவிமானம்'' என்று அலட்சியமாகச் சொன்னன்.

அவன் ஒரே பார்வையில் விமானத்தைக் கண்டு கொண்டு, அது வேறு எதுவும் இல்லை, வேவுவிமானந்தான் என்று துல்லியமாக நிச்சயப்படுத்தியதைப் பார்த்து நான் புன்சிரிப்புகூடச் சிரித்தேன். இந்த வேவுவிமானத்தை அவன் எங்கே பார்த்தான் என்று காட்டும்படி அவனிடம் கேட்பதற்கு வாயெடுத்தேன். அதற்குள் என் செவிப்பறையைப் பெருத்த சம்மட்டி அடி போல ஏதோ தாக்கியது. என்னையும் அறியாமல் கண்களைச் சுருக்கிக் கொண்டேன். மாதர்கள் வீரிடுவதைக் கேட்டேன். நீரில் எறியப்படாதிருப்பதற்காக படகின் ஈர விளிம்பை முழு பலத்துடன் இறுகப் பற்றி ஒண்டிக் கொண்டேன்.

* * *

காமின்னிய் தீவில் இருந்த விமானந்தாக்கிப் பீரங்கிகளின் குண்டுவீச்சு அது. சற்று முன்புதான் தோன்றியது, இதைவிட மோசமாக இருக்க முடியாது போல. ஆனல் இப்போதோ இந்த இடி முழக்கத்தாலும் தடதடப்பாலும் தரையும் வானும் அதிர்ந்த அதிர்ச்சியில் இவை எல்லாம் அற்ப விஷயங்கள் என்றும் அதுவரை மட்டுமீறிய நிசப்தம் நிலவியது என்றும் இப்போதுதான் விமானப் போரின் உண்மையான இசை தொடங்கியிருக்கிறது என்றும் எண்ணம் உண்டாயிற்று.

மறைக்காமல் சொல்லிவிடுகிறேன்—எனக்கு அச்சமாக இருந்தது. அதிலும் நீரில் படகின் முன்னேயும் பின்னேயும் வலப்புறமும் இடப்புறமும் குண்டுச் சிதர்த் துண்டுகள் விழ ஆரம்பித்ததுமோ பெருந் திகில் உண்டாயிற்று.

குண்டு வீச்சுக்கு எதிர் நிற்கும் சந்தர்ப்பங்கள் இதற்கு முன்பும் எனக்கு நிறைய ஏற்பட்டிருந்தன. ஆனல் எப்போதும் இது நான் தரைமீது இருக்கையில் நிகழ்ந்தது. அங்கே குண்டுச் சிதர்கள் பக்கத்தில் விழுந்தாலுங்கூடக் கண்ணுக்கு ஒன்றும் தெரிவதில்லை. இங்கேயோ, இந்தச் சிதர்கள் சீறலுடன் நீரில் விழுந்து பெருத்த நீர்த்தூண்களை எழுப்பின. இந்தக் காட்சி அழகாக இருந்தது, வெப்பக் கடல்களில் டால்பின்கள் விளையாடுவதுபோல, ஆனல் இவை உண்மையிலேயே டால்பின்களாக இருந்தால் எவ்வளவு நேர்த்தியாக இருக்கும்!...

படகிலிருந்த மாதர்கள் இப்போது கத்தவில்லை. அரண்டுபோய் அவர்கள் ஒரே கும்பலாகச் சேர்ந்து, உடல்களைக் குறுக்கி, தலைகளை முடிந்தவரை கீழே குனிந்துகொண்டிருந்தார்கள். அவர்களில் பலரோ, படகின் அடித் தளத்தில் விழுந்து கைகளால் தங்களைக் காத்துக்கொள்ளும் பாவனையில் கிடந்தார்கள்—பழுக்கக் காய்ந்த கனத்த உலோகத் துண்டின் தாக்கிலிருந்து கைகளால் தங்களைக் காத்துக்கொள்ள முடியும் போல. ஆனால் இம் மாதிரிக் கணங்களில் மனிதனால் ஆர அமரச் சிந்திக்க முடியாது அல்லவா? குனிந்து, கண்களை இடுக்கிக் கொண்டு தலையை மறைத்துக் கொள்ள எனக்குந்தான் ஆசை உண்டாயிற்று என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால் அவ்வாறு செய்ய என்னால் முடியவில்லை.

என் முன்னே அமர்ந்திருந்தான் சிறுவன். ஒரு நொடிப் போதுகூட அவன் துடுப்புக்களை வைக்கவில்லை. முன் போலவே தன்னம்பிக்கையுடனும் அனாயாசமாகவும் அவன் தனது சிறு படகை ஓட்டிச் சென்றான். பயமோ பதற்றமோ அவன் முகத்தில் எனக்குத் தென்படவே இல்லை. எப்போதாவது ஒரு தரம் இடப் புறமும் பின்பு வலப்புறமும் உயரேயும் அவன் கண்ணோட்டுவான், பிறகு தன் பிரயாணிகளை நோக்கி, புன்னகைப்பான். ஆம், புன்னகைப்பான். அவன் உதடுகளில் இந்த முறுவலைக் கண்டதும் எனக்கு வெட்கமாகக்கூட இருந்தது, முகம் சிவந்துகூட விட்டது.

''இவனுக்குப் பயம் உண்டாகவில்லையா என்ன?'' என்று எண்ணமிட்டேன். ''இவனுக்குத் திகில் ஏற்படவில்லையா? துடுப்புக்களைப் போட்டுவிட்டு, கண்களைச் சுருக்கிக்கொள்ளவும் பெஞ்சுக்கு அடியில் தலையை மறைத்துக் கொள்ளவும் இவனுக்கு விருப்பம் உண்டாகவில்லையா என்ன? ஆனால் இவன் இன்னும் சிறியவன். சாவு என்றால் என்ன என்பது இவனுக்கு இன்னும் புரியவில்லை. ஒருவேளை அதனால்தான் இப்படிக் கவலையின்றி, பரிவுடன் முறுவல் செய்கிறான் போலும்'' என்று நினைத்தேன்.

நாங்கள் கரை சேர்ந்த போது பீரங்கிக் குண்டு வீச்சு இன்னும் முடியவில்லை. படகிலிருந்து இறங்கும் படி யாரையும் அவசரப்படுத்தத் தேவை ஏற்படவில்லை. அரை நிமிடத்துக்குள் படகு காலியாகிவிட்டது. அடைமழை பெய்கையில் செய்வது போலவே பெண்கள் குண்டுச்சிதர் மாரியில் கரைமீது ஓடி, பருத்த ஓக் மரங்கள், நூறாண்டு லிண்டன் மரங்கள் ஆகியவற்றின் அடர்முடிகளுக்குக் கீழே ஒண்டிக்கொண்டார்கள்.

படகிலிருந்து கடைசியாக இறங்கினேன் நான். சிறுவன் சிக்கலான கப்பல் முடிச்சு எதையோ இறுக்கியவாறு இறங்குதுறையில் வேலையில் முனைந்திருந்தான்.

''கேள்! இங்கே என்ன நோண்டிக்கொண்டிருக்கிறாய்? குண்டுச் சிதர்கள் பறக்கின்றனவே'' என்று அவனிடம் சொன்னேன்.

அவன் ஒரு கணம் தலையை நிமிர்த்தி என்னை அன்பின்றி நோக்கி, ''என்ன?'' என்று கேட்டான்.

''நீ தைரியசாலிதான், பார்க்கிறேன். இருந்தாலும் பயங்கரம் ஆயிற்றே. உனக்கு அச்சமாக இல்லையா?'' என்றேன்.

அப்போது ஒரு கனத்த குண்டுத்துண்டு இறங்கு துறை மேடை ஓரத்தில் சதக்கென்று தாக்கியது.

''ஊம், ஊம். அப்பால் போங்கள். இங்கே ஒன்றும் இல்லை....'' என்று என்னை அதட்டினான் சிறுவன்.

''அடேயப்பா, பலே ஆள்தான் நீ!'' என்று புன்னகையுடன் சொல்லி விட்டு நான் கரையை நோக்கி நடந்தேன். ''எனக்கு மனத்தாங்கலாக இருந்தது. இந்த அசட்டுப் பையனைப் பற்றி நினைப்பதே வீண்'' என்று தீர்மானித்தேன்.

ஆனால் சாலைக்கு வந்ததும் அடக்க முடியாமல் ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். சிறுவனை இறங்கு துறையில் காணோம். அவன் கரையில் ஏதோ கிட்டங்கி அல்லது கொட்டாரத்தின் முகட்டுக்கு அடியில் நின்று கொண்டிருந்தான். தன் துடுப்புக்களையும் கையோடு எடுத்துவந்து இங்கே வைத்திருந்தான்.

ஒரு வகையான வன்மம் நிறைந்த திருப்தியுடன், ''அப்படியா, என்ன இருந்தாலும் நீயும் கொஞ்சம் பயப்படத்தான் செய்கிறாய், கண்ணே'' என்று நினைத்துக் கொண்டேன். ஆனாலும், உண்மையைச் சொன்னால், சின்னஞ்சிறு பையன் என்னைவிடத் தைரியசாலியாக விளங்கியது எனக்குக் கொஞ்சம் வெட்கமாகத்தான் இருந்தது. அதனால்தான் போலும் நான் மரங்களுக்கு அடியில் மறைந்துகொள்ள முற்படாமல் பக்கத்துப் பாதையில் சட்டெனத் திரும்பி என் வட்டாரத்தின் விமானந்தாக்கிப் பீரங்கிப் படைப் பிரிவைத் தேடச் சென்றேன்.

* * *

காமின்னிய் தீவில் விமானந் தாக்கிப் பீரங்கிப் படையினரிடம் நான் எதற்காக வந்தேனோ அந்தக் காரியம் முடிவதற்கு ஒன்றரை, இரண்டு மணிநேரம் பிடித்தது. படைக் காரியாலய மோட்டாரில் என்னை ஊர்வரை கொண்டுவிடுவதாகச் சொன்னார்கள். அது எந்த நிமிடமும் வரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மோட்டாருக்காகக் காத்திருக்கையில் வேறு வேலை ஒன்றும் இல்லாததால் பீரங்கிப் படைப் பிரிவுக் கமாண்டருடன் நான் எது எதையோ பற்றி உரையாடிக்கொண்டிருந்தேன். நான் அவரிடம் எவ்வளவு சிரமத்துக்குப்



பின் வந்து சேர்ந்தேன் என்பதையும் எங்கள் படகு குண்டுச் சிதர்மழையில் எப்படி அகப்பட்டுக்கொண்டது என்பதையும் விவரித்தேன்.

பீரங்கிப் படைப்பிரிவுக் கமாண்டர் முன்பு சேமிப்புப் படைவீரர்களைச் சேர்ந்திருந்த முதிய லெப்டினன்ட், கூச்சம் உள்ள மனிதர். நான் சொல்லியவற்றைக் கேட்டதும் அவர் எதனாலோ மிகவும் குழப்பம் அடைந்தார். அவர் முகம் கூடச் சிவப்பேறிவிட்டது.

''ஆம், ஆம்...'' என்று கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு கூறினார் அவர். ''துர்ப்பாக்கியவசமாக எங்கள் குண்டுகள் மேல் நோக்கி மட்டும் அல்ல, கீழ் நோக்கியும் பாய்கின்றன. ஆனால் அதற்கு என்ன செய்வது? மரத்தை வெட்டும் போது சிம்புகள் தெறிப்பதுண்டே, அவை போன்றவை இவை. இருந்தாலும் விரும்பத்தகாத விஷயம். மிகவும் விரும்பத்தகாத விஷயம். இழப்புக்கள் ஏற்படத்தானே செய்கின்றன! நம் ஆட்களே கொல்லப்படுகிறார்கள் அல்லவா? இப்போதுதான் ஒரு மூன்று வாரங்களுக்கு முன் படகோட்டி குண்டுச் சிதர்த் துண்டால் கொல்லப் பட்டான்'' என்றார்.

இதைக் கேட்டதும் நான் திடுக்கிடக்கூடச் செய்தேன் என்பது நினைவிருக் கிறது.

''படகோட்டியா? எப்படி? எங்கே? யார் அவன்?'' என்று கேட்டேன்.

''அட அதுதான் என்கிறேன், நேவா ஆற்றை நீங்கள் கடந்தீர்களே, அந்த இடத்தில். நல்ல ஆள். நாற்பத்திரண்டு ஆண்டுகள் படகோட்டியாக

வேலை செய்தான். அவனுடைய தகப்பனும் ஓடங்கள் ஓட்டும் தொழில்தான் செய்துவந்தானும். பாட்டனும் அப்படியேதானும்.''

''இப்போது யாரோ சிறுவன் அல்லவா ஓட்டுகிறுன்?'' என்றேன் நான்.

''ஹா!'' என முறுவலித்தார் லெப்டினன்ட். ''வேறென்ன! மத்வேய்! மத்வேய் கப்பித்தோனிச்! நாங்கள் அவனை அட்மிரல் நஹீமவ்* என்று அழைப்பது வழக்கம். கொல்லப்பட்டானே, அந்தப் படகோட்டியின் மகன் இவன்.''

''என்ன சொல்லுகிறீர்கள்? குண்டுச் சிதர்த் துண்டால் கொல்லப் பட்டானே, அதே ஆளுடைய மகனு?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''ஆமாம். அவனுடைய மகனேதான். தகப்பன் கப்பித்தோன் என்று அழைக்கப்பட்டான், அதனுல் மகனுக்கு மத்வேய் கப்பித்தோனிச் என்ற பெயர் வந்தது. இவனும் தேர்ந்த மாலுமி. வயதில் இளையவன்தான், ஆனல் வேலை எப்படிச் செய்கிறுன் என்று நீங்களேதான் பார்த்தீர்களே! திறமையில் பெரியவர்களோடுகூடப் போட்டி போடக் கூடியவன். தவிர, என்ன நேர்ந்தாலும் வேலைக்கு ஆஜராகத் தவறுவதே இல்லை. பகலானு லும் சரி, இரவானுலும் சரி, மழையானுலும் சரி, புயலானுலும் சரி....''

''குண்டுச் சிதர்கள் பொழிந்தாலும் சரி'' என்று நான் வாக்கியத்தை முடித்தேன்.

''ஆமாம். குண்டுச் சிதர்கள் பொழிந்தாலும் தான். இங்கே இதற்குத் தப்ப முடியாது இப்போது. சாதாரணப் பொழிவைவிட ஒரு வேளை இன்னும் அடிக்கடி இங்கே ஏற்படுகின்றன குண்டுச் சிதர்ப் பொழிவு கள்....''

லெப்டினன்ட் என்னிடம் இன்னும் என்னவோ சொன்னுர். எதையோ விவரித்தார். ஆனல் நான் அதைக் காது கொடுத்துக் கேட்கவில்லை. மத்வேயை இன்னெரு தடவை பார்க்க எதனுலோ எனக்குத் திடீரெனப் பெரு விருப்பம் உண்டாயிற்று.

''கேளுங்கள், தோழர் லெப்டினன்ட்'' என்று எழுந்திருந்தேன். ''உங்கள் மேட்டார் எங்கேயோ சிக்கிக்கொண்டிருக்கிறது. எனக்கோ காத்திருக்க நேரம் துளிக்கூட இல்லை. நான் போகிறேன். விடை கொடுங்கள்.''

''எப்படிப் போவீர்கள் நீங்கள்?'' என்று வியப்புடன் கேட்டார் லேப்டி னன்ட்.

''என்ன செய்வது? மறுபடி ஓடத்தில் ஆற்றைக் கடக்க வேண்டியது தான்'' என்றேன்.

---

* அட்மிரல் நஹீமவ் *(1802-1855)*—புகழ் பெற்ற ருஷ்யக் கடற்படைத் தளகர்த்தர்.—*(மொ-ர்.)*

* * *

பரிசல் துறைக்கு நான் போய்ச் சேர்ந்தபோது ஓடம் எதிர்க்கரையிலிருந்து அப்பொழுதுதான் கிளம்பியிருந்தது. மறுபடியும் அது பிரயாணிகளால் அளவுமீறி நிறைந்திருந்தது. அதன் தாழ்ந்த விளிம்புகள் தண்ணீருக்கு மேல் அரிதாகவே தென்பட்டன. ஆனல் துடுப்புக்கள் முன்போன்றே அனுயாசமாகவும் நிதானமாகவும் தன்னம்பிக்கையுடனும் இயங்கி, படகை நீரோட்டத்தின் போக்கில் சாய்வாகச் செலுத்தின. முன்போலவே அவை வெயிலில் பளிச்சிட்டன, ஒளிரும் வானவில் நிறத்தூவானத்தைக் காற்றில் பரப்பின. சூரியன் அதற்குள் உச்சிக்கு வந்துவிட்டது, வெம்மையாகக் காய்ந்தது. நல்ல அடைமழைக்குப் பின் கோடை காலத்தில் நிலவுவது போன்று ஒரே நிசப்தம் நிலவியது. இந்த நிசப்தம் ஒரு வகையில் விசேஷமானதாகக் கூடத் தோன்றியது.

இறங்கு துறையில் இன்னும் ஒருவரும் இல்லை. நான் மட்டும் தனியனுகப் பெஞ்சியில் உட்கார்ந்து நீர்மீதும் நெருங்கிக் கொண்டிருந்த படகின்மீதும் பார்வை செலுத்தியவாறு இருந்தேன். அது நேரந்தாழ்த்து வர வேண்டும் என இம்முறை நான் விரும்பவில்லை. மாருக, நான் அதை ஆவலாக எதிர்பார்த்தேன். எனது இந்த விருப்பத்தை உய்த்துணர்ந்து கொண்டது போலப் படகு விரைவாகக் கரையை நெருங்கியது. படகோட்டியின் தார்ச்சீலைக் கோட்டும் தலைமை மாலுமிக்கு உரிய தொப்பியும் பிரயாணிகள் கூட்டத்துக்கு இடையே எனக்குத் தென்படலாயின.

''பகலானுலும் சரி, இரவானுலும் சரி, மழையானுலும் சரி, புயலானுலும் சரி'' என்ற லெப்டினன்டின் சொற்கள் எனக்கு நினைவு வந்தன.

இதோ இங்கே, இந்த இடத்திலேயே, ஒருவேளை இதே போன்ற வெயிலொளி வீசும் நல்ல பருவ நாளில், இதே படகில், கையில் இதே துடுப்புக்களைப் பிடித்தவாறு தனது வேலை இடத்தில் இந்தப் பையனின் தகப்பன் கொல்லப்பட்டதை நான் சட்டென மிக உயிரோட்டத்துடனும் தெளிவாகவும் கற்பனை செய்துகொண்டேன். முதிய படகோட்டி கரைக்குக் கொண்டுவரப்பட்டதும், அவனுடைய மனைவியும் குழந்தைகளும் — இந்தப் பையனுங்கூடத்தான்—அவனை எதிர்கொள்ள விரைந்ததும், எவளோ அன்னிய மாது விம்மி அழுது, சிலுவைக்குறி இட்டுக்கொண்டு, 'சுவர்க்க சாம்ராஜ்யம் இவனுக்குக் கிட்டுவதாக! இறந்து போய்விட்டான்' என்று வீரிட்டதும், அதைக் கேட்ட பையன் உள்ளத்தைத் திகில் பற்றிக் கொள்ள, கண்கள் இருள் ஒரேயடியாக மனம் இடிந்து போனதும் என் அகக் கண் முன்னே காட்சியளித்தன.

இது நடந்து ஒரு மாதம் ஆகவில்லை, அதற்குள் இந்தப் பையன் இதே படகில் உட்கார்ந்து, தன் தகப்பன் கைகளிலிருந்து நழுவி விழுந்த அதே துடுப்புக்களால் படகைச் செலுத்துகிறான்.

''இவனால் எப்படி முடிகிறது? இந்தச் சின்னஞ்சிறு பையனால் இந்தப் பயங்கரமான துடுப்புக்களைக் கைகளில் பிடிக்க எவ்வாறு முடிகிறது? தன் தகப்பனின் உதிரம் இன்னும் உலராத இந்தப் பலகைமீது நிம்மதியாக உட்கார்வது இவனுக்கு எப்படி இயல்கிறது? இந்தப் பாழாய்ப் போகிற வேலை, இந்தப் படகு, துடுப்புகள், நேவா ஆற்றின் கரு நீர் ஆகியவற்றின் பால் ஒரே அருவருப்பும் அச்சமும் இவன் மனத்தில் வாழ்நாள் முழுவதும் நிறைந்திருக்கும் என்று தோன்றக் கூடும். தொலைவில் கேட்கும் பீரங்கிக் குண்டு வெடிக்கும் ஓசை கூட இவனுக்குத் திகிலூட்டி இவனுடைய பிஞ்சு இதயத்தைக் கொடிய ஏக்கத்தால் உறையச்செய்ய வேண்டுமே. இவனோ, புன்னகை அல்லவா செய்தான்? சற்று முன்பு விமானந் தாக்கிப் பீரங்கிகளின் வெடிகளால் விண்ணும் மண்ணும் அதிர்ந்து நடுங்கிக் கொண்டிருந்த போது இவன் புன்முறுவல் செய்தான் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்!'' இவ்வாறு என் சிந்தனை ஓடியது.

ஆனால் இங்கே என் எண்ணத் தொடர் அறுந்து விட்டது. என் பின்னாலிருந்து குதூகலம் பொங்கும் பெண்குரல் ஆறு முழுவதிலும் கணீரென்று பரவி ஒலித்தது:

''மத்வேய் கப்பித்தோனிச், துரிதப்படுத்தே-ஏன்!''

நான் உட்கார்ந்து எண்ணமிட்டுக் கொண்டிருப்பதற்குள் இறங்குதுறையில் ஆட்களின் கணிசமான கூட்டம் சேர்ந்துவிட்டது. இம்முறையும் இங்கே தொழிலாளிப் பெண்கள் மிக நிறைய இருந்தார்கள். சில படைவீரர்களும், படைவீரப் பெண்கள் இரண்டு மூன்று பேரும் ஒரு இளம் இராணுவ மருத்துவரும் வேறு இருந்தார்கள்.

படகு ஏற்கனவே துறையை அடைந்துவிட்டது. மறு கரையில் சற்று முன்பு நடந்ததே இப்போது மீண்டும் நடந்தது. ஓடம் துறைச் சுவரில் இடித்துக் கிறீச்சிட்டது. கரையிலும் படகிலும் இருந்த பெண்கள் உரக்கப் பேசத் தொடங்கினார்கள். பிரயாணிகள் இறங்கினார்கள், அக்கரை போக வேண்டியவர்கள் ஏறினார்கள். பையன் படகில் நின்று துடுப்பினால் படகு விளிம்பைத் துறைச் சுவரோடு பொருந்தியிருக்கும்படி வைத்தவாறு, குரலை உயர்த்தாமலே பிரயாணிகளுக்கு ஆழ்ந்த காரிய ரீதியான முறையில் கட்டளைகள் இட்டுக்கொண்டிருந்தான். இந்த இரண்டு மணி நேரத்தில் அவன் இன்னும் இளைத்து மெலிந்து போய்விட்டதுபோல எனக்குத் தோன்றியது. வெயிலாலும் களைப்பாலும் பழுப்பேறிய அவன் முகம் பளிச்சிட்டது. அவனுக்கு மூச்சு வாங்கியது. தன் மழைக்கோட்டுப் பொத்தான்களைக் கழற்றி

னன், சட்டைக்காலரை விரியத் திறந்தான். வெயில் படாத தோல் அதன் அடியிலிருந்து பளிச்சிட்டது. நான் படகில் ஏறியபோது அவன் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தான். அவனுடைய சிறு வெண் பற்கள் நொடிப் போது வெளித்தெரிந்தன.

''என்ன? அதற்குள் திரும்புகிறீர்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம். திரும்புகிறேன்'' என்று நான் பதில் அளித்தேன். அவன் என்னை அடையாளம் தெரிந்து கொண்டான், என்னுடன் பேசினன், புன்னகை கூடச் செய்தான் என்பதனல் எனக்கு எதனுலோ மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

உட்கார்கையில் அவனுக்குப் பக்கத்தில் இடம் பிடித்துக்கொள்ள நான் முயன்றேன். எனக்கு அப்படியே இடம் கிடைத்துவிட்டது. ஒருவரை மரி யாதையின்றி இடித்துத் தள்ள வேண்டி வந்தது என்பது உண்மையே. ஆயினும் சிறுவன் காப்டனுக்கு உரிய இடத்தில் அமர்ந்ததும் நாங்கள் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருந்ததைக் கண்டேன்.

டிக்கெட் கொடுக்கும் வேலையை முடித்துத் தலைக்கு இருபது கோப்பெக் குகள் வீதம் வசூலித்துப் பணத்தை எண்ணிக் கணக்கிட்டுப் பைக் குள் வைத்துக்கொண்டதும் மத்வேய் துடுப்புக்களைப் பிடித்துக்கொண் டான்.

''அம்மாமாரே, கூச்சல் போடாதீர்கள்'' என்று பிரயாணி மாதருக்குக் கண்டிப்பாக உத்தரவு போட்டான். அவர்கள் ஓரளவு குரல்களைத் தணித்துக் கொண்டார்கள். பையன் இன்னும் சௌகரியமாக உட்கார்ந்து, கைகளில் துப்பிக்கொண்டு படகைச் செலுத்தலானன். துடுப்புக்கள் வளை யங்களில் ஒரு சீராகக் கிறீச்சிட்டன. தண்ணீரும் படகின் பக்கங்களில் அதே மாதிரி ஒரு சீராக மோதத் தொடங்கியது.

பையனுடன் பேச்சு கொடுக்க எனக்கு மிகுந்த விருப்பம் உண்டா யிற்று. ஆனல் எதனுலோ தெரியவில்லை, நான் கொஞ்சம் கூச்சப்பட்டேன். பேச்சை எப்படித் தொடங்குவது என்று எனக்கு விளங்கவில்லை. ஆழ்ந்த முறையில் ஒருமுனைப்பாடுள்ள அவனுடைய முகத்தையும் நகைப்பூட்டும் குழந்தைப் புருவங்களையும் புன்னகையுடன் நோட்டமிட்டேன். அடர்த்தி யற்ற வெள்ளிய சிறு ரோமங்கள் அந்தப் புருவங்கள் மீது பளிச்சிட்டன. திடீரென்று அவன் என் மீது கண்ணேட்டினன். நான் முறுவல் செய்வதைக் கண்டுகொண்டு, ''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

''நான் சிரிக்கவில்லையே'' என்று ஓரளவு திகிலுடன்கூடச் சொன்னேன். ''நான் சிரிக்கிறேன் என்று எப்படி நீ எண்ணிக்கொண்டாய்? நீ எவ்வளவு சாமர்த்தியமாக வேலை செய்கிருய் என்பதைத் தான் வியந்து நோக்கிக் கொண்டிருக்கிறேன்'' என்றேன்.

''சாமர்த்தியமாவது ஒன்றுவது? வழக்கம் போலத்தான் வேலை செய்கிறேன்.''

''ஓகோ!'' என்று தலையை அசைத்தேன். ''அப்பா, அட்மிரல் நஹீமவ், நீ ரொம்பக் கொபக்காரன் போலிருக்கிறது...''

அவன் மறுபடி என்னை ஏறிட்டுப் பார்த்தான். இம்முறை அவனது பார்வையில் ஓரளவு ஆவல் காணப்பட்டதாக எனக்குத் தோன்றியது.

''நான் அட்மிரல் நஹீமவ் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினன்.

''இது என்ன பிரமாதம்? உலகில் வதந்திகளுக்குக் குறைவு இல்லையே.''

''நீங்கள் பீரங்கிப் படைப்பிரிவுக்குப் போயிருந்தீர்களோ?''

''போயிருந்தேன்''.

''அப்படியா! இப்போது புரிகிறது.''

''என்ன புரிகிறது?''

அவன் சற்று நேரம் பேசாதிருந்தான். என்னோடு மனம்விட்டு அளவளாவுவதா வேண்டாமா என்று சிந்திப்பவன் போலக் காணப்பட்டான்.

''கமாண்டர்கள் என்னைக் கேலியாக அட்மிரல் என்று அழைப்பார்கள். நான்தான் இங்கே எல்லாருக்கும் பணி செய்கிறேனே. விமானந்தாக்கிப் பீரங்கிவீரர்கள், விமானிகள், கடற்படைவீரர்கள், ஆஸ்பத்திரியைச் சேர்ந்தவர்கள், எல்லாருடனும் எனக்குப் பழக்கம் உண்டு....''

''ஆமாம் தம்பீ. வேலை உனக்குப் போதும் போதும் என்கிற அளவு இருக்கிறது. ரொம்பக் களைத்துப் போய்விடுகிருய் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?'' என்றேன்.

அவன் ஒன்றும் சொல்லாமல் தோள்களை மட்டும் குலுக்கினன். அவனுக்கு வேலை அளவுக்கு மேல் இருக்கிறது என்பதும் அவன் ஒரேயடியாகக் களைத்துப் போய்விடுகிருன் என்பதும் தாமே விளக்கமாக இருந்தன. படகு மறுபடி நீரோட்டத்துக்கு எதிராகச் சென்றது. துடுப்புக்கள் அடர்ந்த கருங்களிமண்ணில் போன்று சிரமத்துடனேயே நீரில் புதைந்தன.

நான் சிறிது நேரம் சும்மா இருந்த பிறகு சொன்னேன்: ''கேள், மத்வேய் கப்பித்தோனிச். ஒளிக்காமல் உள்ளபடி சொல்லு. சமீபத்தில் உனக்குப் பயமாக இல்லையா?''

''எப்போது? எங்கே?'' என்று ஆச்சரியப்பட்டான் அவன்.

''அட, சற்று முன்னல், விமானந்தாக்கிப் பீரங்கிகள் சுட்டுக் கொண்டிருந்தபோது.''

அவன் வறட்டுப் புன்னகை செய்தான். அவன் என்னைப் பார்த்த பார்வையில் வியப்புகூட அவ்வளவு இல்லை, இரக்கம்தான் அதிகமாக இருந்தது.

''நீங்கள் நேற்று ராத்திரி பார்த்திருக்கவேண்டும் என்ன நடந்தது என்று. குண்டு மாரி என்றால் அது அல்லவா குண்டுமாரி!'' என்றான்.

''இரவிலும் நீ வேலை செய்தாயா என்ன?''

''நான் முறைக்காவல் இருந்தேன். இங்கே மரத் தொழிற்சாலை மேல் பகைவர்கள் எரிகுண்டுகளை ஒரு வண்டிப் பாரம் கொட்டிவிட்டார்கள். நாங்கள் நெருப்பை அணைத்தோம்.''

'' 'நாங்கள்' என்றால் யார்?''

''வேறு யார்? பையன்கள்தாம்.''

''அப்படியானால் நீ என்ன, இரவு தூங்கவே இல்லையா?''

''கொஞ்சம் தூங்கத்தான் செய்தேன்.''

''இங்கே இந்த மாதிரி அடிக்கடி நடக்குமே.''

''என்னது? குண்டுமாரிதானே? ஆமாம். அடிக்கடி நடக்கும். இங்கே நாலா புறமும் பீரங்கிகள் இருக்கின்றன. குண்டுச் சிதர்கள் சிதறத் தொடங்கியதும் ஓடி ஒளிவதைத் தவிர வேறு வழி இல்லை.''

''மெய்தான். ஆனால் நான் பார்க்கிறேன், நீ என்ன ஆனாலும் ஓடி ஒளிவதில்லையே'' என்றேன்.

''எனக்கு ஓடுவதற்கு இடம் கிடையாது'' என்று வறண்ட புன்னகையுடன் சொன்னான் சிறுவன்.

''ஆனால் உள்ளதைச் சொல்லு, நெஞ்சில் கை வைத்து. எப்படியும் பயமாய்த்தானே இருக்கிறது?''

அவன் மீண்டும் சிந்தனை செய்து, மிக நன்றாக, சாதாரணமாக, நிம்மதியுடன் சொன்னான்:

''பயப்படுகிறோமோ, பயப்படவில்லையோ, குண்டு பட வேண்டியிருந்தால் பட்டுத்தானே தீரும்? பயந்ததனால் சுளுவாகிவிடுமா என்ன?''

''அது உண்மைதான். சுளுவாகிவிடாது'' என்று முறுவலித்தேன்.

ஒரு கேள்வி அவனிடம் கேட்க எனக்கு ஒரே ஆர்வம் உண்டாயிற்று. ஆயினும் கேட்க நா எழவில்லை. முடிவில் நான் தீர்மானமாகக் கேட்டே விட்டேன்:

''ஆமாம் மத்வேய், உன் தகப்பனார் சமீபத்தில் இங்கே கொல்லப்பட்டாராமே, உண்மைதானா?''

நொடிப்போது அவன் கைகளில் துடிப்புக்கள் நடுங்கின போன்று எனக்குத் தோன்றியது.

''ஆமாம்'' என்று கரகரத்த குரலில் கூறிவிட்டு முகத்தை மறு புறம் திருப்பிக்கொண்டான்.

''அவர் என்ன, குண்டுத் துண்டு பட்டா?''

''ஆமாம்.''

''அதுதான், பார்த்தாயா....''

நான் வாக்கியத்தை முடிக்கவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்பியதை அவன் புரிந்துகொண்டான் என்பது தெரிந்தது. ஒரு நிமிடம் அவன் துடுப்புக்கள் மேல் சாய்ந்தவாறு பேசாதிருந்தான். அப்புறம் என்னைப் பார்க்காமல் எங்கோ ஒரு புறம் நோக்கியவாறு கரகரத்த, எனக்கு விந்தையாகப் பட்ட குரலில் சொன்னான்:

''நீருக்குப் பயந்தவன் கடலில் இறங்கக் கூடாது.''

''சரியான வார்த்தை. இருந்தாலும், நீ இதைப் பற்றி எண்ணவில்லையா என்ன? உனக்கும் அதே மாதிரி நேர்ந்தால்?''

''என்ன நேர்ந்தால்?''

''குண்டுத் துண்டு தாக்கிவிட்டால்?''

''சீ, சீ'' என்று என்னைச் சினந்து நோக்கியபடி கூறினான் சிறுவன். பின்பு தேர்ந்த முதிய மாலுமி போலத் துணிவுடனும் சாதுரியத்துடனும் இடது தோள் பக்கமாகத் துப்பினான்.

அப்புறம் நான் புன்னகை செய்வதைக் கண்டு அடக்க முடியாமல் தானும் முறுவலித்தான்.

''அதனால் என்ன! என் மேலும் குண்டுத் துண்டு படக்கூடும்தான். எதுதான் நடக்காது? நான் கொல்லப்படவும் கூடும். அப்போது என்ன ஆகும்? அப்போது மான்கா துடுப்புக்களைப் பிடிக்க வேண்டி வரும்.''

''யார் அது மான்கா?''

''வேறு யார்? என் தங்கை. அவள் சின்னவள் தான். ஆனால் மற்றப் பையன்களைக் காட்டிலும் அவளுக்குப் பலம் அதிகம். மல்லாக்க நீந்தி நேவாவின் அக்கரைக்குப் போய்த் திரும்பி விடுகிறாள்.''

என்னோடு பேசிக்கொண்டிருக்கையில் மத்வேய் கணப் போது கூடப் படகு செலுத்துவதை நிறுத்தவில்லை. அது ஆற்றின் நடுவைக் கடந்து விட்டது. இப்போது நீரோட்டத்தால் ஒரு புறம் இழுத்துச் செல்லப்பட்டு உயர்ந்த வலது கரையைச் சாய்வாக நெருங்கியது. கரை மீது சாம்பல் நிறப் பலகை வீடுகளில் ஆங்காங்கு கண்ணாடிகள் மின்னின. பல்வகை முகடுகளின் பின்னிருந்து புழுதி படிந்த நொய்ந்த மரங்கள் எட்டிப்பார்த்தன. அவற்றுக்கு மேலே, நீர்த்த பால் நிறைத்தது போன்று நிறம் மங்கிய இள நீல வானம் முடிவின்றி நெடுகப் பரந்திருந்தது.

சிறு இறங்குதுறையில் மறுபடியும் மக்கள் கூட்டம் நெரிந்தது. குரல்களின் ஓசை கேட்டது. அதற்குள் ஒருவன் ஏதோ கத்தி எங்களை நோக்கிக் கை ஆட்டினான்.

''மத்வே-ஏய்!'' என்று கூவி அழைத்த குரல் கேட்டு அந்தத் திக்கில் நோக்கினேன். அழைத்தவள் ஒரு சிறுமி என்பதைக் கண்டேன். வெள்ளைத்

தலைக்குட்டையும் நிறம் மங்கிய, ஜிப்ஸிகள் அணிவது போன்ற நீண்ட கவுனும் அணிந்திருந்தாள் அவள்.

''மத்வே-ஏய்!'' என்று தொண்டையைப் பிய்த்துக் கொண்டு அழுகைக் குரலில் கத்தினாள் அவள். ''சீக்கிரப்படுத்து! அங்கே என்ன குடைந்து கொண்டிக்கிறாய்?''

மத்வேய் தலையைக் கூடத் திருப்பவில்லை. படகைத் துறை சேர்த்த பிறகே அவன் சிறுமி பக்கம் நோக்கி, ''எதற்குக் கூப்பாடு போடுகிறாய்?'' என்று நிதானமாகக் கேட்டான்.

அவள் உண்மையாகவே மிகவும் சின்னப் பெண். வெறுங்கால்களுடன் நின்றிருந்தாள். மத்வேயினது போன்றே வெயிலில் பழுப்பேறிய முகமும், அவனுடையவையே மாதிரி நகைப்பூட்டும் வெளிர் புருவங்களும் கொண்டிருந்தாள்.

''சாப்பிட வா! அம்மா எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறாள்! பருப்பு எல்லாம் சுண்டிப்போய் விட்டது'' என்று இரைந்தாள்.

படகிலும் துறையிலும் இருந்தவர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள். மத்வேயோ, அவசரப்படாமல் படகைத் துறையோரமாக நிறுத்திக் கட்டினான், எல்லாப் பிரயாணிகளும் இறங்கும் வரை காத்திருந்தான், பின்பு தான் சிறுமி பக்கம் திம்பினான்.

''நல்லது. போகிறேன். நீ வேலையை ஒப்புக் கொள்'' என்றான்.

''இது யார்? இவள்தான் மான்காவா?'' என்று கேட்டேன்.

''ஆமாம். இவள் தான் மான்கா. இப்படிப்பட்டவளாக்கும் அவள்!'' என்று புன்னகைத்தான். அவன் குரலில் உலமார்ந்த கனிவு மட்டும் அல்ல, உண்மையான பெருமை தொனித்தது.

''அருமையான சிறுமி'' என்று நான் சொன்னேன். மேலும் ஏதோ கூற விரும்பினேன்.

ஆனால் அந்த அருமையான சிறுமி என்னைத் துடுக்காகவும் சீற்றத்துடனும் நோக்கினாள், வெயிலில் பழுப்பேறித் தோல் உரிந்துகொண்டிருந்த சின்ன மூக்கை வேறு விடைத்தாள். எனவே நான் நாக்கு நுனிவரை வந்திருந்த சொற்களை எல்லாம் விழுங்கிவிட்டேன். அவள் மூக்கை உறிஞ்சினாள், வெறுங்கால்களால் திரும்பி நடந்தாள், ஜிப்ஸி கவுனின் விளிம்பைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு படகுக்குள் லாகவமாகக் குதித்தாள்.

''இந்தாருங்கள் அம்மாமாரே, அம்மாமாரே! கூச்சல் போடாதீர்கள்! கலவரம் வேண்டாம்!'' என்று தடிமல் பிடித்த கரகரத்த கட்டைக் குரலால் மத்வேய் மாதிரியே கத்தினாள் அவள். ''ஒருவேளை காலஞ் சென்ற தகப்பன் மாதிரியே'' என்று எண்ணிக்கொண்டேன்.

மத்வேயிடம் பிரிவு சொல்லிக் கொண்டு அவன் கையைக் குலுக்கு வதற்காகக் கரத்தை நீட்டினேன்.

''நல்லது. போய் வாருங்கள், வணக்கம்'' என்று சொல்லி, தன் சிறிய, வலிய, கரடுமுரடான, காய்ப்பேறிய கையை அலட்சியமாக என் புறம் நீட்டினுன்.

படி ஏறி ஆற்ருேரச் சாலையை அடைந்ததும் நான் திரும்பிப் பார்த் தேன்.

மத்வேய் ஒரே நீளமும் அகலமுமான மழைக் கோட்டும் பிரமாண்ட மான மீன்வலேஞர் நீள்ஜோடுகளும் அணிந்து இறங்கு துறையிலிருந்து புறப்பட்டு, குறுகிய மணல் திடர் வழியாக நடந்து கொண்டிருந்தான். அவன் தலே சற்றே சாய்ந்திருந்தது. மாலுமிபோன்று சாய்ந்தாடியவாறு நடந்தான் அவன்.

ஓடம் அதற்குள் கரையிலிருந்து நகர்ந்துவிட்டது. சிறுமி துடுப்புக்களே லாகவமாக வலித்துக் கொண்டிருந்தாள். துடுப்புக்கள் வெயிலில் குதூ கலமாகப் பளிச்சிட்டு, சுற்றிலும் ஆயிரமாயிரம் துளிகளேச் சிதறின.

சாரணச் சிறுவர்கள்*

சாரணச் சிறுவர்களை ஷூஸ்தவ் மறுபடியும் ஒரு தரம் ஆராய்ந்தார். துரதிர்ஷ்டவசமாகச் சிறுவர்கள் பிடிபட்டு விட்டால் அவர்கள் கொரில்லா படைகளைச் சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொடுக்கக் கூடியவை எவையும் அவர்களுடைய பைகளில் இல்லாதபடி அவர் உறுதி செய்து கொள்ள விரும்பினர். ஆனுல் சிறுவர்களது பைகளில் ரொட்டி வறுகலும் பன்றிக் கொழுப்பில் சில கீற்றுகளுமே இருந்தன. வலோத்யாவிடம் இவற்றைத் தவிர ஒரு பென்சிலும் துண்டுக் காகிதமும் இருக்கக் கண்டார். இவையுங்கூட இருக்கலாகாதென வெளியே எடுத்துவிட்டார். பிறகு ஷூஸ்தவ் முன்பே கொளுத்தி எறியவிட்டிருந்த சுரங்க விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு, சிறுவர்களைத் தம் பின்னுல் வரச் சொல்லித் தலையை அசைத்துக் காட்டிவிட்டு இருளினுள் புகுந்தார்: சாரணர்களுக்குப் பாதை விட விரும்பியது போல் இருள் அவர்களுக்கு எதிரே விலகிப் பின்வாங்கியது, அவர்கள் போய்ச் சேர்ந்ததும் உடனே அவர்களுக்குப் பின்னுல் திரும்பவும் பாதையை மூடிக் கொண்டது.

படிப்படியாய் உயர்ந்து சென்ற சுரங்க வழியின் மூலம் சாரணர்கள் கற் சுரங்கத்தின் மேல் அடுக்குக்கு ஏறினுர்கள். அந்தப் பாதாள வழி இறுக்கமாகவும் வளைந்து நெளிந்து திணறடிப்பதாகவும் இருந்தது. சாரணர்கள் போய்க் கொண்டிருந்த குறுகலான வழியிலிருந்து ஒன்றையொன்று முற்றும் ஒத்த குடைவுப் பாதைகள் இடப்புறத்திலிருந்தும் வலப்புறத்திலிருந்தும்

* இளைய மகனின் தெரு என்னும் கதையில் ஒரு சிறு பகுதி. இரண்டாவது உலக யுத்தத்தின் போது கெர்ச் தீபகற்பத்தைப் பிடித்துக் கொண்ட பாசிஸ்டுப் படைகளை எதிர்த்துப் போராடும் கொரில்லாப் படைப் பிரிவினரின் வீரச் செயல்களைப் பற்றிய கதை இது. 14 வயதுச் சிறுவனுகிய வலோத்யா துபீனின் இந்தக் கொரில்லாப் படைப் பிரிவின் உறுப்பினன். பாசிஸ்டுப் படையினர் முறியடிக்கப்பட்ட பிறகு கற் சுரங்கத்தின் வாயிலிருந்து நிலக் குண்டுகளை அகற்றிய போது வெடித்த ஒரு குண்டுக்குப் பலியாகி வலோத்யா துபீனின் உயிரிழந்தான்.

வலோத்யா துபீனினது நினைவில் 13ஆம் எண் பள்ளிக்கூடத்துக்கும் ஒரு தெருவுக்கும் அவனது பெயர் சூட்டப்பட்டது.—பதிப்பாசிரியர்.

கிளைத்துச் சென்றன. முடிவில்லா இருளுக்குள் இவை இட்டுச் சென்றன. சுரங்கத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்படாத பாளக் கற்கள் இந்தக் குடைவுகள் சிலவற்றில் குவிக்கப்பட்டிருந்தன. கொரில்லா வீரர் கள் தமது பாதாளக் கோட்டைக்குள் பகைவர்கள் ஊடுருவி வந்து விடாதபடி தடுப்பதற்காகப் பல இடங்களில் ஏற்கனவே தடைமதில்கள் எழுப்பியிருந்தார்கள், சுற்று வழிகளும் முட்டுமுனைச் சந்துகளும் குடைந்து வைத்திருந்தார்கள். குறுகலான சுரங்கப் பாதைகளும் சந்துகளும் குகைகளு மாகிய இந்த வலைப்பின்னல் தரைக்கடியில் பத்து, இருபது கிலோமீட்டர் தொலைவுக்குத் வியாபித்திருந்தது. கிடைமட்டமாகவும், சிறிது சிறிதாக உயர்வனவாகவும், செங்குத்தாய்ச் செல்வனவாகவும் அமைந்த இந்தச் சுரங்க வழிகள் ஒன்றுக்கொன்று குறுக்கு மறுக்காய் ஓடி, அனுபவமில்லாத எவரையும் திக்குமுக்காட வைக்கக் கூடியவை. ஆனால் ஷூஸ்தவும் அவரது சாரணச் சிறுவர்களும் நிசப்தமான இந்தக் குகை வழிகளில் சிறிதும் தயக்கமின்றி போய்க் கொண்டிருந்தார்கள். எங்காவது சிற்சில இடங்களில் மட்டுமே முதிய சாரணர் இச்சிறுவர்களுக்குச் சில விவரங்களை விளக்கினர்:

''தம்பிகளா, இந்தத் திருப்பத்தைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங் கள். இந்த மூன்று கற்களையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். இங்கே நாம் திரும்புகிறோம்.''

கற்களாலான இந்த அவசரக் குறியறிவிப்புகளில் வெளிச்சம் படும்படி விளக்கை உயர்த்திக் காட்டினர். இந்த வழிகாட்டிகளது குறியறிவிப்பு களின் இரகசியத்தை முன்கூட்டியே தெரிந்து வைத்திராதவர் எவரும் இவற்றைக் கண்டறிந்து கொள்வது முடியாத காரியம். கற்களாலாகிய இந்த அறிவிப்புகளைக் கொரில்லா வீரர்கள் படிக்கத் தெரிந்தவர்கள். இவற்றைக் கண்டதும் அவர்கள் தமக்குரிய பாதையைப் பிழையின்றி தெரிந்து கொண் டார்கள், மூடப்பட்ட பாதாள வழிகளிலிருந்து ஒதுங்கி எந்தப் பக்கத்துக் கிளைப் பாதையில் செல்ல வேண்டும், எங்கே திரும்ப வேண்டும் என்பதை உடனே புரிந்து கொண்டார்கள். சில இடங்களில் நூறு] மீட்டர்] தொலை வுக்குச் சுற்று வழியிலே சென்று வெளிச்செல் சுரங்கப் பாதைக்குத் திரும்பி வர வேண்டியிருந்தது.

முடிவில் அவர்களுக்கு முன்னல் மஞ்சள் நிற விளக்கொளி தெரிந்தது. காவல் பணியாற்றியவரின் குரல் இருட்டில் கணீரென ஒலித்தது:]]

''நில், யார் அங்கே?''

''துப்பாக்கி!'' இரகசியக் குறிச் சொல்லைச் சொல்லி ஷூஸ்தவ் பதி லளித்தார்.

அதற்குப் பிற்பாடு மேலும் ஒரு காவல் முனையை அவர்கள் கடக்க வேண்டியிருந்தது. இவ்விடத்தில் ஷூஸ்தவ் முணுமுணுக்கும் குரலில்

''துப்பாக்கி'' என்று மெதுவாய்ப் பதிலளித்தார். தரைப் பரப்புக்கு அருகிலிருந்த மேலடுக்கின் அகலமான சுரங்க வழிகள் இங்கு ஆரம்பமாயின: எங்கிருந்தோ இங்கு வெளிர் நீல ஒளி வீசிற்று. ஷூஸ்தவ் முணுமுணுக்கும் மெல்லிய குரலில் பேச முற்பட்டார். சரிவர காதில் விழாத அவரது இரகசியக் குரலும், உஷார் நிலையும், இருளைச் சிறிதளவுக் குறையச் செய்த மங்கலான வெளிச்சமும், நாஜிகள் நாட்டாண்மை புரிந்த மேற்பரப்பு நெருங்கி வந்து விட்டதென்ற உணர்வும் சேர்ந்து வலோத்யாவின் நெஞ்சினுள் கிலியை உண்டாக்கின. தாங்கள் மேற் கொண்டிருந்த பணி அபாயகரமானது, அது எப்படி முடிவுறுமெனச் சொல்வதற்கில்லை என்பதை முதன்முதலாய் இப்போதுதான் அவன் உணர்ந்து கொண்டான்.

''வெளியே செல்வதற்கான உங்களது பொந்து வழி எங்கே இருக்கிறது, சொல்லுங்கள். நாம் எந்தப் பாதையில் செல்ல வேண்டும்?'' என்று உள்ளடங்கிய குரலில் ஷூஸ்தவ் விசாரித்தார்.

விளக்கைப் பிடித்திருந்த அவரது கையை வான்யா கிரித்சேன்கோ தன் தலைக்கு மேல் ஒரு பக்கமாகச் சாய்த்து உயர்த்திஞன். சுற்றிலும் கூர்ந்து நோக்கிவிட்டுக் கிசுகிசுக்கும் குரலில் அவன் சொன்ஞன்:

''வலோத்யா உனக்கு இந்த இடம் அடையாளம் தெரிகிறதா? நாம் அந்தப் பக்கமாய்ப் போக வேண்டுமென நினைக்கிறேன். உனக்கு நினைவு இருக்கிறதா, நமது தந்தையர் சின்னமிட்டுக் குறித்திருந்த சுரங்கப் புழை அங்கேதான் இருக்க வேண்டும். ஆஞல் யாவும் இடிந்து கிடப்பது போலல்லவா தெரிகிறது....''

இப்போது வான்யாவும் வலோத்யாவும் முன்ஞல் சென்றனர். விளக்கு வெளிச்சம் வெளியே தெரியாதபடி மறைப்பதற்காக அதன் மேல் தோல் மூடியைப் போட்டுக் கொள்ளும்படி ஷூஸ்தவ் அவர்களுக்கு உத்தரவிட்டார். ஒருவர்பின் ஒருவராய் முன்னவரது தோளைப் பிடித்துக் கொண்டு நடந்தனர். பாளக் கற்களின் மிருதுவான மேற்படிவம் அவர்களது நடையை ஓசையற்றதாக்கியது. சப்தம் செய்யாமல் அவர்கள் முன்னே சென்றனர். பிறகு வான்யா திடுதிப்பென நடையை நிறுத்திக் கொண்டான், விளக்கின் மூடியைக் கணப் பொழுது உயர்த்திப் பார்ப்பதற்கு ஷூஸ்தவிடம் அனுமதி கேட்டான். அவர் சம்மதம் தெரிவித்தார், பெரும் பெரும் பாளக் கற்களின் குவியல் ஒன்று நொடி நேரத்துக்கு அவர்களது கண்ணெதிரே தெரிந்தது. அண்மையில் இங்கு பாறை தகர்ந்து விழுந்திருக்க வேண்டுமென்பது புலப்பட்டது. இப்போது அவர்கள் கைகால்களைக் கொண்டு ஊர்ந்து முன்னே செல்ல வேண்டியதாயிற்று. விழுந்து கிடந்த பாறைகளுக்கு இடையே இடுக்கு ஒன்று இருக்கக் கண்டதும் வலோத்யாவும்

வான்யாவும் ஒவ்வொருவராய் அதனுள் நுழைந்து, பல்லியைப் போல் வளைந்து நெளிந்து சென்றனர்.

எக்கணமும் பாறைகள் சரிந்த விழும் நிலையில் இருந்தன, அவை விழு மாயின் சாரணர்கள் ஈக்கள் போல் நசுக்கப்பட்டு விடுவார்கள். இந்த அபாயத்துக்கு இடையே அந்தக் குறுகிய இடுக்கினுள் புகுந்து பாறை யோடு ஒட்டிக் கொண்டு ஊர்ந்து செல்வது பயங்கரமாய் இருந்தது. ஆனால் ஷூஸ்தவின் நிலை இதனிலும் இக்கட்டானது. சிறுவர்களைப் பின் தொடர்ந்து, வலோத்யாவின் பாதத்தை விட்டு விடாமல் பற்றிக் கொண்டு முக்கி முனகியவாறு அவர் முன்னே சென்றார். தோல்யா கொவலியோவ் அவரது வலது பாதத்தைப் பிடித்துக் கொண்டு, ஊர்ந்து செல்லும் வரிசை யின் கடைசி ஆளாய் வந்து கொண்டிருந்தான். ஆனால் அவர்களுக்கு எதிரே வெளிச்சம் மேலும் மேலும் அதிகமாகி வந்தது. தொலைவில் பீரங்கிக் குண்டுகள் வெடிக்கும் சப்தம் அவர்கள் காதுக்கு எட்டியது. மேலும் ஐந்து நிமிடங்களுக்கு அவர்கள் ஊர்ந்து சென்றார்கள். பிறகு திடுமென அவர்களது தலைக்கு மேல் சிறு பொந்து ஒன்று தெரிந்தது. சரிந்து விழுந்த பாளக் கல் அதைப் பாதியளவுக்கு மூடியிருந்தது. பாதாள உலகின் இருளை விரட்டியடிக்க விரும்பியது போல் மேல் உலகிலிருந்து இதமான பூங்காற்று அந்தப் பொந்தின் வழியே உள்ளே வீசியது.... வலோத்யாவின் குதிகாலை ஷூஸ்தவ் ஓர் உலுக்கு உலுக்கினார். அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அவன் நகராமல் நின்றான்.

''தம்பிகளா, நான் மேலே என்ன நடக்கிறது என்று இந்தப் பொந்து வழியே பார்க்கிறேன்'' என்று ஷூஸ்தவ் மெல்லிய குரலில் அறிவித்தார். சிறுவர்கள் அவ்விடத்தை விட்டு விலகக் கூடாதென்று சொல்லிவிட்டு, பாளக் கல்லால் மூடப்பட்ட அந்தப் பொந்தை நோக்கி அவர் ஊர்ந்து சென்றார்.

''ஷூஸ்தவ் மாமா, நாங்கள் கூறிய சுரங்கப் புழை இதுவேதான்'' என்று அவருக்குப் பின்னாலிருந்து வலோத்யா கிசுகிசுத்தான். ''வான்யா, உனக்கு அடையாளம் தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''ஆமாம், இதுவேதான்!'' என்றான் வான்யா, மெல்லிய குரலில். ''நான் இது வழியே எட்டிப் பார்க்க வேண்டும்.''

''சப்தம் செய்யாதீர்கள்!'' என்று கிசுகிசுத்து விட்டு, எச்சரிக்கையுடன் ஷூஸ்தவ் அந்தப் பொந்து வழியே வெளியே கூர்ந்து நோக்கினார்.

கூதிர் பருவ பனிமூட்டத்தில் பழைய கரன்தீனது பார்க்கச் சகியாத காட்சி அவர் கண்ணுக்குத் தெரிந்தது. இம்மாதிரியான காட்சி எவ்விடத் திலிருந்து தெரியக் கூடியது என்பதை இப்போது அவர் நிர்ணயிக்க முடிந் தது. அவர்கள் தவழ்ந்து ஏறி வந்த இடுக்கு, குன்றின் செங்குத்துப்

பக்கத்தில் அமைந்ததாகுமென்று அவர் நிதானித்துக் கொண்டார். பொந்தை மூடியிருந்த கல்லை மெள்ள நகர்த்தி வைத்துவிட்டு ஷூஸ்தவ் வெளியே எட்டிப் பார்த்தார். வெளியே தாம் தலையை நீட்டுவதை ஜெர்மானியர்கள் கண்டு கொண்டுவிடுவார்களா என்று தெரிந்து கொள்ள அவர் விரும்பினார். அவர்கள் தம்மீது சுட ஆரம்பித்தால், சிறுவர்களை இங்கே வெளியே போகச் சொல்லக் கூடாதென்பது தெரிந்துவிடும்.

எங்கோ அருகாமையில் பீரங்கிகள் சுட்டன. பூமி வேதனையுடன் அதிர்ந்தாடிப் பீரங்கிகளது கனத்த குண்டுவீச்சுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தது.

வலோத்யாவால் இதற்கு மேல் பொறுத்திருக்க முடியவில்லை. ஓசையின்றிப் பொந்தின் வாய்க்கு ஏறி வந்து, ஷூஸ்தவின் தோளுக்கு மேல் அவன் எட்டிப் பார்த்தான். மலைச் சரிவும் கற் சுரங்கத்தின் தலைவாயிலும் தெரிந்தன. கரும்பச்சை மேல்கோட்டு போட்டிருந்த ஆட்களது உருவங்களை அங்கே கண்ணுற்றான். ''நாஜிகளா இவர்கள்?'' என்று நினைத்தான் வலோத்யா. பாறையின் குறுகிய தொண்டைக்குள்ளிருந்து வெளியே எட்டிப் பார்த்துத் தெரிந்து கொள்ளக் கூடியவற்றை ஆவலுடன் கவனித்து மனத்துள் பதித்துக் கொண்டான். அவனுக்குத் தொண்டை வறண்டு விட்டது. பகைவனை இவ்வளவு அருகே நின்று நேரில் தன் கண் கொண்டு பார்க்க முடியமென்று இன்னமும் அவனால் நம்ப முடியவில்லை. ஷூஸ்தவிடம் அவன் ஏதோ சொல்ல வாயெடுத்தான், ஆனால் அந்த முதிய சாரணர் கடுப்புடன் விறைத்து எதிர்த் திசையில் உற்று நோக்குவதைக் கண்டதும் அவனும் அந்தத் திசையில் பார்த்தான்.

குடியிருப்புகளிடமிருந்து விலகித் தனித்து நின்ற ஒரு சிறிய வீட்டுக்கு அருகே அதே கரும் பச்சை மேல் கோட்டு அணிந்த உருவங்கள் அங்கும் இங்கும் போய்க் கொண்டிருப்பது அவன் கண்ணுக்குத் தெரிந்தது. மாறுவேடக் கித்தான்களால் முக்காடு இடப்பட்ட பூதாகார மோட்டார் வாகனங்கள் நெடுஞ்சாலையிலிருந்து திரும்பி அந்த வீட்டை நோக்கி வந்து சென்றவண்ணமிருந்தன. அவ்வீட்டிலிருந்து இதன்முன் அங்கே இருந்திராத ஒரு கம்பத்துக்குக் கம்பிகள் நீண்டு சென்றன. ஈரமாயிருந்த நெடுஞ்சாலையில் சோபையற்ற மங்கலான ஒளி பளபளத்தது. பச்சை மேல்கோட்டு அணிந்த படையாட்களை நிரப்பிக் கொண்டு லாரிகள் இந்த நெடுஞ்சாலையில் கெர்ச்சை நோக்கிப் போய்க் கொண்டிருந்தன.

''தெரிகிறதா உனக்கு?'' என்று கிசுகிசுத்தார் ஷூஸ்தவ். ''உந்திக் கொண்டு தலையை உயர்த்திக் காட்டாதே, அப்படியே சாய்ந்து படுத்துக் கொண்டு பார். சரி, நீ கண்ணுற்றவை குறித்து எனக்கு அறிக்கை அளி, பார்க்கலாம்.''

''அங்கே அந்தச் சிறிய வீட்டுக்கு எல்லா வாகனங்களும் போய் வரு கின்றன. வீட்டைச் சுற்றி மக்கள் நிறைய காணப்படுகிறார்கள்.''

''அவர்கள் மக்கள் அல்ல, நாஜிகள்'' என்று கடுமையான குரலில் குறுக்கிட்டு ஷூஸ்தவ் அவனைத் திருத்தினார். ''தக்க சொற்களாய்ப் பார்த்துக் கையாள வேண்டும். சரி, உன் அறிக்கையை அளித்துச் செல்.''

''முன்பு அங்கே கம்பிகள் இல்லை, இப்போது இருக்கின்றன.''

''சமர்த்துப் பையன்! உன் கண்கள் கூர்மையானவை. சரி, இந்த விவரங் களைக் கவனித்துள்ள நீ, இவற்றிலிருந்து வந்தடையும் முடிவு என்ன?''

''அங்கே அவர்கள் ஏதோ அலுவலகம் அமைத்திருக்கிறார்கள் என்பதாய்த் தெரிகிறது.''

''ஆமாம், நீ சொல்வது முற்றிலும் சரி.... அவர்களது படை அலுவலர் தலைமையகம் ஒன்று அங்கே இருப்பதாகத் தெரிகிறது. இதை நாம் குறித்துக் கொண்டாக வேண்டும். சரி, கீழே அடிவாரத்தில் என்ன நடை பெறுகிறது பார்....''

குன்றின் அடிவாரத்தில் குடியிருப்புப் பகுதியின் சுற்றுப் புறங்களில் மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் தம் வீடுகளிலிருந்து வெளியே வருவதும், பகைப் படையாட்கள் அவர்களை விரட்டிச் செல்வதும் தெரிந்தது. மேல் கோட்டு அணிந்த படையாட்கள் கூச்சலிட்டுக் கத்தி அவர்களை முன்னே போகச் செய்தார்கள். மூட்டை முடிச்சுகள் அடங்கிய வண்டிகளை தள்ளிச் சென்ற மக்களை இந்தப் படையாட்கள் துப்பாக்கிக் கட்டைகளால் முதுகில் மொத்தி அவசரப்படுத்தியதையும், துப்பாக்கிக் குத்தீட்டிகளால் மூட்டை களில் குத்திப் பார்த்துச் சிலவற்றைத் தரையிலே வீசியெறிவதையும் பார்க்க முடிந்தது.

காமீஷ்-புரூனுக்கு மேல் கரிய இரத்தச் சிவப்புப் புகைத் திரள் விண் ணேக்கி எழுந்தது. காமீஷ்-புரூன் ஆலை இப்பகுதிக்குப் பெருமையளிக்கும் ஒன்றாய் இதுகாறும் நின்றிருந்த இடத்திலிருந்து இப்போது செந்நிறத் தீயின் நாக்குகள் உயர்ந்தெழுந்தன. நெடுஞ்சாலை வழியே லாரிகள் கெர்ச்சை நோக்கி விரைந்தோடின, அணியணியாகச் சாலையிலே சென்று கொண் டிருந்த படையாட்களது அழுக்கேறிய பச்சை உருவங்கள் நீர்த் திட்டு களில் பிரதிபலித்தன. கெர்ச்சின் திசையிலிருந்து ஓயாத வெடியோசை ஒலித்துக் கொண்டிருந்தது. குண்டு வெடித்த இடங்களிலிருந்து எழுந்த புகைத் திரள்கள் வானத்தில் குவிந்து வந்தன. அருகாமையில், நேரே தலைக்கு மேலே, பீரங்கிகள் முழுங்கின. ஒவ்வொரு முழக்கத்தின் போதும் சுரங்கத்தின் தலைவாயில் சிறு கூழாங்கற்கள் சடசடத்துப் பொழிந்தன. நேற்றெல்லாம் இவ்வுலகம் எல்லார்க்கும் நன்கு பழக்கமாகி யாவரும் புரிந்து கொள்ளும்படியான வாழ்க்கையின், இது ஒன்றே சாத்தியமானதென

நினைக்கத் தோன்றிய வாழ்க்கையின் அரங்கமாய் இருந்து வந்தது. இதே உலகம் இன்று இப்படி நிலை குலைந்துவிட்டதை, பலவந்தமாய் அன்னிய மாக்கப்பட்டுவிட்டதைப் பாறைகளிலிருந்து அந்தக் குறுகிய இடுக்கிலிருந்து பார்ப்பதற்குக் கதி கலக்கம் உண்டாக்குவதாய் இருந்தது.

ஷூஸ்தவ் திடுமென முன்கையால் வலோத்யாவைத் தட்டினார். உடனே வலோத்யா முன்விளிம்புத் தொப்பி அணிந்த ஒரு நாஜி தந்திக் கம்பிகளை எடுத்துக் கொண்டு அந்த வீட்டிலிருந்து வெளியே வரக் கண்டான். அந்த ஆள் படையதிகாரி என்பது பார்த்ததுமே தெரிந்தது. வெளியே வந்தவர் வீட்டின் அருகே நின்ற படையாட்களிடம் சென்று ஏதோ சொல்லிவிட்டு, கற் சுரங்கத்தின் சேதமுற்ற தலைவாயிலை நோக்கி நடந்தார். வீட்டுக்குள்ளிருந்து இரண்டு இயந்திர பீரங்கிகளை இழுத்து வந்து, இப்போது உருக் குலைந்துவிட்ட சுரங்க வெளிமுற்றத்தை நோக்கும்படி அவற்றை நிறுத்தி வைத்தார்கள்.

திடுதிப்பென்று தம் தலைக்கு மேல் ஏதோ பெருஞ் சப்தம் எழுப்பி விரைந்தோடுவது போல் தோன்றவே, ஷூஸ்தவும் வலோத்யாவும் அவசர மாகப் பொந்தின் வாயிலிருந்து தலையை உள்ளே இழுத்துக் கொண்டு, பிறகு மெள்ள வெளியே எட்டிப் பார்த்தனர்.

ஜெர்மன் படையாள் ஒருவன் மலையிலிருந்து வேகமாய்க் கீழே இறங்கி ஓடியது கண்ணுக்குத் தெரிந்தது. அவன் பாறையிலிருந்து பாறைக்குத் தாவிப் படையதிகாரியிடம் ஓடிச் சென்று சலாமடித்துவிட்டு, சுரங்கத் தலை வாயிலைச் சுட்டிக்காட்டி ஏதோ சொன்னான். பிறகு அவன் படையதிகாரி யின் பின்னால் சென்று வீட்டுக்குள் மறைந்தான்.

''ஆம், இங்கு இருப்பது படை அலுவலர்களது தலைமையகமாகவோ, ஒருவகைக் கண்காணிப்பு மையமாகவோதான் இருக்க வேண்டும்'' என்று ஷூஸ்தவ் தீர்மானித்துக் கொண்டார்.

மறுபடியும் அவர்கள் தமக்கருகே தாறுமாறான விநோத வகைத் தட தடப்பு எழக் கேட்டனர். பொந்து வாயிற்கு இடப்புறத்தில் சற்றுக் கீழ் மட்டத்தில் யாரோ நடக்க முடியாத நிலையில் தட்டுத் தடுமாறிக் கொண்டு நடந்து செல்வது போலிருந்தது.

''அதைப் பாருங்களேன்! லீஸ்கா அல்லவா போகிறது!'' என்று கிசு கிசுத்தான் தோல்யா கொவலியோவ். ''ஆமாம், நம்முடைய லீஸ்காதான்!''

மூன்று தலைகள் இடித்து மோதிக் கொண்டு அந்தக் குறுகிய வாயில் வழியே எட்டிப் பார்த்தன.

குன்றுச் சரிவில் சாரணர்களிடமிருந்து சற்றே விலகி நொண்டிக் கொண்டு வேதனையுடன் மெள்ள நகர்ந்து சென்றது, மெலிந்த பெண் குதிரையான லீஸ்கா. சுரங்கத் தொழிலாளர்கள் யாவருக்கும் தெரிந்த குதிரை அது.

பாளக்கல் வண்டிகளை இழுத்து வருவதற்காக அடிக்கடி அவர்கள் அதை சுரங்கத்துக்குள் அழைத்துச் சென்றிருந்தார்கள். இந்த லீஸ்கா இப்போது மெள்ள நொண்டித் தாவிக் குன்றுச் சரிவிலே போய்க் கொண்டிருந்தது. கால் கட்டு போடப் பட்டிருப்பதாகச் சிறுவர்கள் முதலில் நினைத்தார்கள். பிறகுதான் அதன் இடது முன்னங் கால் முறிந்து போய், கோணித் திருகிக் கொண்டு எதற்கும் உதவாததாகத் தொங்கியதை அவர்கள் கண்ணுற்றனர். நன்ருயிருந்த வலது காலை அழுத்தி ஊன்றி வலிப்பு வந்தது போல் இடுப்பை வெடுக்கென உயர்த்தி நொண்டிக் குதித்து அடிவாரத்தை நோக்கி அது மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது. பீரங்களது முழக்கம் கேட்டதும் அது துணுக்குற்றுத் தள்ளாடியது, கவிழ்ந்து தொங்கிய தலையை இப்படியும் அப்படியும் திருப்பிச் சுற்றிலும் ஒரு தரம் பார்த்துக் கொண்டது.

அமைதியான சுரங்கக் குதிரையான லீஸ்கா விலாவெலும்புகள் தெரியும்படி மெலிந்து போய், கால் முறிந்து நொண்டியாகி, தளர்ந்து தொங்கிய வாலில் வைக்கோலும் குச்சிகளும் ஒட்டிய நிலையில் யுத்தத்தின் இடி முழக்கமும் கொடிய மடமையும் நிறைந்த அந்தத் திறந்த பரப்பிலே விதி வசத்தால் இழுத்து விடப்பட்டிருந்தது.

''ஷூஸ்தவ் மாமா, நாங்கள் வெளியே செல்வதற்கு இதுவே சிறந்த தருணம்'' என்று திடமுடிவு ஒலிக்கும் குரலில் கூறினன் வலோத்யா. ''அங்கே காவலாள் தலைவாயில் அருகே வந்து திரும்பி எதிர்த் திசையில் நடை போட ஆரம்பித்ததும் தோல்யாவும் நானும் இங்கிருந்து வெளியே சென்று நேரே லீஸ்காவிடம் ஓடுவோம், நாங்கள் அதை வீட்டுக்கு அழைத்து செல்வதாய்ப் பாசாங்கு செய்வோம். லீஸ்காவுக்கு எங்களைத் தெரியும், எங்களைக் கண்டு அது மிரளாது.... அதை அழைத்துச் செல்லுகையில் சுற்றிலும் பார்வையிட்டு யாவற்றையும் குறித்துக் கொள்வோம். நீங்கள் உத்திரவிட்டபடி எங்களால் முடிந்த அளவுக்குப் பல விவரங்களையும் தெரிந்து கொள்வோம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?''

ஷூஸ்தவ் மௌனமாய் இருந்தார். கற் சுரங்கத்தின் பக்கம் தலை காட்டியவர்கள் எல்லாரையும் ஜெர்மன் படையினர் பிடித்துக்கொண்டது அவருக்குத் தெரியும். இது வரை அவர்கள் வயது வந்தவர்களை மட்டுமே கைது செய்தார்கள். ஆனல் யாருக்குத் தெரியும்? இனி அவர்கள் சிறுவர்களையும் பிடித்துச் செல்ல முற்படலாம்.

சுரங்கத்தின் தலைவாயிலுக்கு எதிரே காவல் புரிந்து சுழல் துப்பாக்கியைக் கையில் பிடித்துக் கொண்டு நடை போட்ட ஜெர்மன் படையாள் சரியாக அக்கணத்தில் பொந்து வாயிலிருந்து திரும்பி நின்று எதிர்த் திசையிலே நடந்தான். ஷூஸ்தவ் தமது மீசையின் முனைகளை உதட்டால் மென்று

கொண்டு நெஞ்சு கனத்துப் படபடக்கச் சிறுவர்களைப் புறப்படும்படி ஜாடை காட்டினார்.

''தோல்யா, வா என் பின்னால்!'' என்று சொல்லிவிட்டுச் சட்டென வலோத்யா பொந்திலிருந்து வெளியே தாவினான்.

அவனைத் தொடர்ந்து தோல்யாவும் வெளியே தாவி ஓடினான். பொந்தின் வாயிலிருந்து ஓடியச் சிறுவர்கள் இருவரும் திடுமென மறைந்து விட்டனர். ஷூஸ்தவ் விழிப்புடன் வெளியே எட்டிப் பார்த்தார் — சாரணச் சிறுவர்களைக் காண முடியவில்லை. பொந்து வாயிலுக்குச் சற்றே கீழே கரு நிழல் போல் தெரிந்த குழிக்குள் அவர்கள் ஒளிந்திருக்க வேண்டும் என்பது தெரிந்தது. ஒரு நிமிடத்துக்குப் பிற்பாடு இரு சிறுவர்களும் அங்கிருந்து வெளிப்பட்டு லீஸ்காவிடம் ஊர்ந்து சென்று, அதனருகே மண்டியிட்டு அமர்ந்து கொண்டார்கள். குதிரையின் முறிந்து போன காலை இருவரும் பரிசீலித்தது ஷூஸ்தவுக்குத் தெரிந்தது. தொலைவிலிருந்து நோக்குகையில் சிறுவர்கள் அந்தக் காயமுற்ற குதிரையிடம் மட்டுமே அக்கறை செலுத்தியதாகத் தோன்றியது. ஆனால் ஷூஸ்தவ் அவர்களுக்கு அருகே ஊர்ந்து சென்று பார்த்திருந்தாராயின், பின்வரும் உரையாடல் அவர் காதில் விழுந்திருக்கும்:

''தோல்யா, நான் சொல்வதைக் கேள்!''

''என்ன, சொல்லு.''

''நீ இங்கே லீஸ்காவிடம் உட்கார்ந்து கொண்டு இதன் காலைக் கவனிப்பது போல் பாசாங்கு செய். நான் அதற்குள் அந்தச் சிறு வீட்டிடம் சென்று பார்வையிட்டு விட்டுத் திரும்பி வருகிறேன். அங்கே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அருகே சென்று தெரிந்து கொண்டு வருகிறேன்.''

''அவர்கள் உன்னை விரட்டியடிப்பார்கள்.''

''ஆனால் தக்க காரணத்தை ஆலோசித்துக் கொண்டுதானே நான் அங்கே போகிறேன். உதவியைத் தேடி வந்திருப்பதாகப் பாசாங்கு செய்வேன். நமது குதிரை அடிபட்டுத் துன்புறுகிறது. அதற்கு எதாவது செய்தாக வேண்டும் என்பேன். அதே போது விழிப்புடன் கவனித்து அங்கே என்ன நடைபெறுகிறது என்று எல்லா விவரங்களையும் அறிந்து கொள்வேன். அதற்கிடையில் லீஸ்காவை நீ குன்றின் உச்சிக்கு அழைத்துச் செல்ல முயற்சி செய். உச்சியில் அவர்கள் வைத்திருப்பவற்றையும் நாம் தெரிந்து கொண்டாக வேண்டும்.''

''சீக்கிரமாய் நீ திரும்பி வருவாயா?''

''ஒரு நிமிடத்தில் வந்துவிடுவேன். சரி, எதற்காகத் தயங்குகிறாய்? சொன்னதும் சொன்னபடிச் செய்ய வேண்டும். குழுத் தலைவனாக என்னை அவர்கள் குறிப்பிட்டது உனக்குக் காதில் விழுந்ததா, இல்லையா? என்



உத்தரவுப்படி நீ நடக்க வேண்டும் என்பதுதான் அதன் அர்த்தம்!'' என்று கடுப்பு தொனிக்கக் கூறி முடித்தான் வலோத்யா. இதைச் சொல்லியதும் அவன் சிறிதும் தயக்கமின்றி அந்த வீட்டை நோக்கி நடந்தான்.

நடக்கும் போதே கோட்டுக் கையால் கண்களைக் கசக்கிக் கொண்டான்: ஆனால் அவன் கண்கள் ஏற்கெனவே வெளிச்சத்துக்குப் பழக்கப்பட்டு விட்டதால், அவன் எதிர்பார்த்தது போல் அவற்றில் கண்ணீர் துளிர்க்க வில்லை. ஆயினும் பலமாய்ச் செருமிக் கொண்டு, முட்டியாலும் கோட்டுக் கையாலும் தொடர்ந்து கண்களைக் கசக்கியபடி நடந்து, அந்த வீட்டுக்கு முன்னால் காவல் புரிந்த படையாளிடம் சென்றான். படையாள் வெடுக் கென விறைத்து நின்று இயந்திரக் கைத்துப்பாக்கியை உயர்த்திக் காட்டிக் கூச்சலிட்டான்:

,,Zurück!" வலோத்யாவை வந்த வழியே திரும்பி ஓடும்படி விரட்டுவது போல் அந்தப் படையாள் கையை வீசி ஆட்டினான்.

ஆனால் வலோத்யா முற்றிலும் இயற்கையான முறையில் செருமிச் சிணுங்கிக் கொண்டு நின்றான். அந்தக் கணத்தில் அவன் மெய்யாகவே பீதியுற்று விட்டதால் இயற்கையாகவே அவனுக்கு அழுகை வந்தது: ஷேஸ்தவ் மாமாவின், அவரது தோழர்களின் அன்பும் ஆதரவும் இல்லாமல்

பலமிழந்து நிர்கதியாய்த் தனியே நிற்கிறோம் என்ற உணர்வு அவனைத் திகிலடையச் செய்தது. ஜெர்மன் படையாள் முன்னிலும் அதிக கவனம் செலுத்த முற்பட்டு, புரியாத மொழியில் ஏதோ கத்தினான். எப்படி ஆரம்பிப்பதென்று புரியாமல், தெரியாத ருஷ்யர் எவரையும் அழைப்பது போல் வலோத்யா அந்த ஆளை "மாமா" என்றழைக்கப் போனான். ஆனால் ஒரு பாசிஸ்டை அப்படி இனிய முறையில் அழைப்பது அருவருக்கத்தக்கது, தன் முன்னுள்ள பணியைக் கருதியுங்கூட அப்படி அழைக்கலாகாது என்று முடிவு செய்து கொண்டு, முடிவில் ஒருவாறு கூறி முடித்தான்:

"லீஸ்காவுக்கு அடிபட்டிருக்கிறது. அது துன்புறுவதைப் பார்க்கச் சகிக்கவில்லை! அது எங்களுடைய குதிரை, என்னுடையது! **Mein Pferd!"**

வலோத்யா கூறியது படையாளுக்குப் புரியவில்லை. தன் எதிரே ருஷ்யச் சிறுவன் ஒருவன் அழுது கொண்டு நிற்பதை அவன் வெறுப்போடும் குழப்பத்தோடும் உற்றுப் பார்த்தான். வலோத்யா அந்தப் படையாளின் இயந்திரத் துப்பாக்கியையும் பிறகு தனது வாலையும் சுட்டிக்காட்டி, லீஸ்கா நின்றிருந்த திசையிலே கையை ஆட்டியபடி மறுபடியும் விளக்கிச் சொல்ல முற்பட்டான். படையாள் தொலைவில் நின்ற குதிரையைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் வலோத்யாவை நோக்கினான்; அவனது இறுக மூடிய உதடுகள் சற்றே சிரித்து விலகியபோது வெள்ளை உருக்காலாகிய இரு பல் வரிசைகள் அவன் வாய்க்குள் பளபளத்தன. படையாள் தனது இயந்திரத் துப்பாக்கியை வெடுக்கென சாய்த்து வலோத்யாவின் கால் முன்னால் காட்டினான். சிறுவன் பயந்து நடுங்குவதாய் நடித்து வாய் விட்டு அழுது புலம்பினான்: "ஐயோ, லீஸ்கா! அடிபட்டுப் போய்த் தவிக்கிறது!" மறுபடியும் அவன் லீஸ்காவைச் சுட்டிக் காட்டினான். குதிரையைக் குன்றின் உச்சிக்கு இட்டுச் செல்ல முயன்ற தோல்யா அந்த நேரத்தில் லீஸ்காவின் பிடரி முடியைப் பிடித்துக் கொண்டு நிற்பது தெரிந்தது.

இவ்வாறு வலோத்யா அந்தக் காவற் படையாள் எதிரே நின்று வேவு வேலைகளில் ஈடுபட்டிருந்த போது, இளநிலைப் படையதிகாரி ஒருவரும், ஒரு படையாளும் அந்தச் சிறிய வீட்டிலிருந்து வெளியே வந்தனர். உடனே அந்த அதிகாரி காவலாளைப் பார்த்துக் கூச்சலிட்டு, விரைவாய் வலோத்யாவிடம் வந்து, ரிவால்வரை ஆட்டியபடிக் கத்தினார்: **„Weg!“** கையை வீசிக் காட்டி, அங்கிருந்து ஓடிவிடும்படி வலோத்யாவை விரட்டினார். சிறுவன் மெள்ளத் திரும்பி, தோல்யாவை நோக்கி நடந்தான். தனக்குத் தேவையானவை யாவற்றையும் ஏற்கெனவே அவன் கண்டறிந்து கொண்டு விட்டான். காவல் படையாள் முன்னால் அவன் நின்றிருந்த போது வீட்டின் முன் கதவு இரண்டு மூன்று தரம் திறந்து மூடப்பட்டது. உள்ளே படையதிகாரிகளும் படையாட்களும் இருந்ததைச் சாரணச் சிறுவனின் கூர்மையான

கண்கள் காணத் தவறவில்லை. தொலைபேசி இயக்குநர் ஒருவர் தொலை பேசி இணைப்புக் கருவியின் மீது கவிழ்ந்து கொண்டு வேலை செய்ததையும் சன்னல் மூலம் அவன் கண்டு கொண்டுவிட்டான். படை அலுவலர் தலைமை யகத்துக்குப் பாதுகாப்பாய் அமைந்த இயந்திர பீரங்கிகள் எங்கெங்கே அமைந்திருந்தன என்பதையும், காவற் படையாள் நின்ற இடத்திலிருந்த படி வலோத்யா கவனித்து மனத்துள் குறித்துக் கொண்டுவிட்டான்.

இதற்குள் தோல்யா, லீஸ்காவை இழுத்துக் கொண்டு குன்றின் உச்சியை அடைந்திருந்தான். சுரங்க வாயிலில் காவல் புரிந்த படையாளின் கண் ணில் படாதபடி செல்லும் பொருட்டு வலோத்யா, பள்ளத்து இடுக்கு ஒன்றின் வழியே நடந்து தோல்யாவிடம் போய்ச் சேர்ந்தான். அங்கிருந்து ஜெர்மன் மார்ட்டர் பீரங்கிகளது மறைவிடமும், தொலைவில் குன்றின் மீது இருந்த கள பீரங்கித் தொகுதியும் தெளிவாய்க் கண்ணுக்குத் தெரிந் தன. எகிறயெழுந்த பீரங்கி வாய்களிலிருந்து, முதலில் ஒன்றிலிருந்தும், கணப் பொழுதுக்குப் பிற்பாடு மற்றென்றிலிருந்தும், பிறகு மூன்றுவது ஒன்றிலிருந்துமாய் ஓசையின்றி தீயின் சுவாலை பீறிட்டது. ஒரு வினடிக் கெல்லாம் காது செவிடுபடும்படிக் கனத்த வெடியோசை அடுத்தடுத்து எழுந்து, சிறுவர்களின் செவிப் பறையில் சம்மட்டி அடிப்பது போல் மோதின. காற்று அதிர்வில் வலோத்யாவின் கோட்டுக் காலர் விரிந்து உயர்ந்தது.

கெர்ச்சின் மீது ஜெர்மானியர்கள் குண்டு வீசிக் கொண்டிருந்தார்கள்.

''தோல்யா, யாவற்றையும் நீ நினைவில் இருத்திக் கொண்டாயா? விவரங்களைக் குழுப்படி செய்து கொண்டு விடாதே. நான் அந்த வீட்டில் நடைபெறுகின்றவற்றைக் கவனித்தேன். அது படை அலுவலர் தலைமை யகம்தான், சந்தேகம் இல்லை. இனி நாம் திரும்பிச் சென்றாக வேண்டும். என்ன ஆயிற்றோ என்று ஷுலஸ்தவ் மாமா கவலைப்படுவார். நீ லீஸ்காவை அழைத்து வா. இங்கே நமக்கு என்ன வேலை என்று நாஜிகள் நம்மை விசா ரிக்க வந்தால், லீஸ்காவைச் சுட்டிக் காட்டுவோம். எங்கள் குதிரையைக் காப்பாற்றி இங்கிருந்து அழைத்துச் செல்கிறோம் என்போம்.''

சுரங்கத்தின் தலைவாயிலுக்கு எதிரே அகழி தோண்டிக் கொண்டிருந்த ஜெர்மன் படையாட்களை ஒரு கண்ணால் கவனித்தபடி, சிறுவர்கள் இருவ ரும் வலியால் வருந்திய குதிரையை அருமையாகத் தடவிக் கொடுத்தனர். குதிரை நடுங்கி ஆடியது, நிற்க முடியாமல் தவித்தது. எலும்பு முறிந்து போய்க் கோணித் திருகிக் கொண்டிருந்த அதன் காலில் இரத்தம் கெட்டிப் பிடித்து வந்தது. சிறுவர்கள் தம்மிடமிருந்த ரொட்டி வறுகலை லீஸ்கா வுக்குத் தந்து தின்னச் சொன்னார்கள். ஆனால் குதிரை தின்பதில் நாட்டமின்றி, சோர்ந்து தொங்கிய தனது நெடுந் தலையை திருப்பிக் கொண்டது. ஒளி

யிழந்துவிட்ட அதன் அகன்ற கண்களில் பெருந் துளிகளாகக் கண்ணீர் துளிர்த்து மெள்ள வழிந்தோடியது. சிரமப்பட்டு லீஸ்கா தலையை நிமிர்த்து, முடிகளையுடைய கரிய மேல் உதட்டை உயர்த்திப் பரிதாபமான மெல்லிய குரலில் கனைத்த போது, சிறுவர்கள் இருவருக்கும் நெஞ்சு குமுறியது. கணப் பொழுதுக்கு அவர்கள் எல்லா அபாயத்தையும் மறந்துவிட்டனர். எப்படியாவது இந்தக் குதிரையை இந்த அபாயகரமான இடத்திலிருந்து வேறு எங்காவது அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்ற ஒரே எண்ணம் அவர்கள் இருவரையும் ஆட் கொண்டுவிட்டது.

அப்பொழுது அருகாமையில் திடுமெனப் பூட்ஸ் ஆணிகள் கல்லில் தட்டி நறநறக்கும் சப்தத்தைக் கேட்டு இருவரும் துணுக்குற்றுப் போயினர். தம்மை அறியாமலே தம் கோட்டுக் காலர்களுக்கு உள்ளே தலையை இழுத்துக் கொண்டனர், அவர்களது தலைக்கு மேல் உக்கிரமான ஒரு கடுங் குரல் ஒலித்தது. குதிரையையும் அதனருகே ஏதோ செய்து கொண்டிருந்த சிறுவர்களையும் கண்ணுற்ற பீரங்கிப் படையாள் ஒருவன் என்ன நடைபெறுகிறதென்று பார்ப்பதற்காக வந்திருந்தான். உயிருள்ள ஒரு நாஜி இப்படித் தன் எதிரே வர இது வரைக் கண்டிராத தோல்யா என்ன செய்வதென்று தெரியாமல் நின்றான். ஆனால் வலோத்யாவுக்கு இம்மாதிரியான தவிர்க்க முடியாத சந்திப்புகள் குறித்து ஓரளவு அனுபவம் இருந்ததால், அவன் லீஸ்காவின் நொண்டிக் காலைச் சுட்டிக்காட்டிப் பரிதாபத்துக்குரிய இந்தக் குதிரைக்கு உதவும்படி அந்த ஜெர்மன் படையாளிடம் வேண்டினான்.

அவன் சொன்னதில் ஒரு வார்த்தை கூட புரியாமல் மௌனமாய்ச் கேட்டுக் கொண்டு நின்ற அந்தப் படையாள் வெடுக்கென குனிந்து கனமான ஒரு பாறைக் கல்லைத் தூக்கிக் குதிரையின் மேல் எறிந்தான். அது லீஸ்காவின் பிட்டத்திலே பலக்க மோதியது. உடனே அந்தக் குதிரை துடித்துக் கீழே விழுந்து குன்றுச் சரிவிலே கரண மடித்து உருண்டோடியது. படையாள் கல்லை எறிந்த போது குதிரையின் அருகே நின்றிருந்த வலோத்யா துள்ளிக் குதித்து விலகினான், பொடிக் கற்களில் வழுக்கிக் கொண்டு அவனும் குன்றுச் சரிவில் உருண்டு சென்றான். ஆனால் எப்போதும் அமைதி குலையாதவனாய், எதற்கும் அசங்காதவனாய் இருக்கக் கூடிய தோல்யா கொவலியோவ் திடுமென இப்போது கட்டுக்கடங்காதவாறு சீற்றமடைந்து விட்டான்.

''முரட்டுத் தடியா, காயமடைந்த குதிரையைக் கல்லால் அடிக்கிறாயே'' என்று அவன், அந்த ஹிட்லர் படையாளை வெறிக்கப் பார்த்து ஆத்திரமாய் முணுமுணுத்து விட்டு, கல்லை எடுப்பதற்காக கீழே குனிந்தான்.

முழங்கால் அளவுக்கு உயரமான கனத்த ஜெர்மன் புதைமிதியின் முரட்டு உதை அவன் விலாப் பக்கத்தில் விழுந்தது. குனிந்து மண்டியிட்ட தோல்யா

எழுந்திருக்கவில்லை, தலை குப்புற குன்றுச் சரிவில் விழுந்து கீழே உருண்டான். பொடிக் கற்கள் திரள் திரளாய் பெயர்க்கப்பட்டு அவனுக்குப் பின்னால் சரித்தோடின. வலியும் ஆத்திரமும் அவலமும் பொறுக்கமாட்டாமல் பற்களைக் கடித்துக் கொண்டு அவன் கீழே போய்ச் சேர்ந்தான். ஜெர்மன் படையாள் அதற்கு மேல் அவர்களைப் பற்றி கவலைப்படாமல் குன்றின் உச்சியை அடைந்து எதிர்ப் பக்கத்தில் இறங்க ஆரம்பித்தான்.

வலோத்யா அவனது நண்பனிடம் ஊர்ந்து சென்றான்.

''ஐயோ, தோல்யா! உன்னை இப்படி உதைத்துத் தள்ளி விட்டானே, அந்த நாய்ப் பயல்!''

தோல்யா வாய் பேசாமல் விம்மியபடிக் கண்ணீரை விழுங்கிக் கொண்டு எதிர்ப் பக்கம் திரும்பினான். ஒன்றும் செய்ய இயலாதவனாய், அடிபட்ட தனது விலாப் புறத்தை இரு கைகளாலும் தடவிக்கொண்டு, தரையிலே கிடைந்தான்.

''நல்ல வேளை, அவனிடம் துப்பாக்கி இல்லை, பீரங்கிப் படையாட்களில் ஒருவனாய் இருக்க வேண்டும். துப்பாக்கி இருந்திருந்தால் உன்னைத் தீர்த்துக் கட்டியிருப்பான்....'' என்றான் வலோத்யா. ''உன்னை அவன் காயப்படுத்தியா விட்டான்? எங்கே காட்டு. சட்டையை கொஞ்சம் உயர்த்து, பார்க்கலாம். ஐயோ! கன்னிப் போயிருக்கிறதே!... படு பாவி! நம்மிடம் அவர்கள் ஆயுதங்கள் கொடுத்து அனுப்பவில்லை, அதனால்தான் இந்த பாவி இன்னும் உயிருடன் இருக்கிறான்... போனால் போகிறது போ. தோல்யா, இவனை நான் ஒரு போதும் மறக்க மாட்டேன், இவனது முகரைக் கட்டையை இருட்டிலும் அடையாளம் கண்டு கொண்டுவிடுவேன்.''

அவர்களுக்குச் சில தப்படிகளுக்கு அப்பால், முதுகெலும்பு முறிந்து போய் விழுந்து கிடந்த லீஸ்கா, மரண வேதனையால் துடித்துக் கால்களை உதைத்துக் கொண்டது.

''நம்முடைய லீஸ்காவைக் கொன்றுவிட்டார்கள்'' என்று வலோத்யா வருந்தினான். ''இவர்களுக்கு வழி விட்டோமானால் எல்லாரையும், எல்லாவற்றையும் கொன்று தீர்த்துவிடுவார்கள். ஆனால் நாம் வழி விடப் போவதில்லை. தோல்யா, நீ என்ன சொல்கிறாய்? சரி, போகலாம், புறப்படு. ஷூஸ்தவ் மாமா நமக்காகக் காத்துக் கொண்டு இருப்பார். லீஸ்கா, நீ எங்களுக்கு விடையளிக்க வேண்டும்!''

தோல்யாவை உதைத்துத் தள்ளிய படையாள் இதற்குள் சுரங்க வாயிலிருந்து மேலே ஏறி வந்து, சிறுவர்கள் பக்கம் திரும்பிக் கூட பார்க்காமல் பீரங்கி வரிசையை நோக்கிப் போய்ச் சேர்ந்தான்.

''தோல்யா, உன்னால் நடக்க முடியுமா? அப்படியானால் புறப்படு, போவோம்!''

அவர்கள் நடந்து செல்லவில்லை. குளிர்ந்திருந்த குட்டைப் புற்களில் வலோத்யா மண்டியிட்டுத் தவழ்ந்தான். தோல்யாவும் அவனைப் பின் தொடர்ந்து அதே போல் சென்றான். அவர்களது இந்த எச்சரிக்கை உணர்ச்சி அவசியமானதாகவே இருந்தது: பிரங்கிகளுக்கு இடையே வேலை செய்த நாஜிகளுக்கும் சுரங்கத் தலைவாயிலுக்கு அருகே வேலை செய்தோருக்கும் தெரியக்கூடாது; குன்றுச் சரிவிலே திரிந்த சிறுவர்கள் இருவரும் எங்கே போய் ஒளிந்து கொண்டார்கள், எவ்விடத்தில் பூமியினுள் மறைந்தார்கள் என்பது தெரியக் கூடாது.

விளாதிஸ்லாவ் கிரப்பிவின்

துறவி முனே*

ஆற்றிலிருந்து அதிர்வேட்டுகளின் வெடியோசை எழுந்தது. பலத்ததாய் இல்லாமல் மெத்தொலியாய் ஒலித்தது. ஊதிப் பருத்த கறுப்புக் கோளங்கள் ஈரம் தோய்ந்த அந்தியொளியில் மிதந்து சென்று வெடிப்பதாகக் கற்பனை செய்து கொண்டான் யாஷ்கா.

அறையில் விளக்கு இல்லை. கால்களை மடக்கிக் கொண்டு படுக்கையில் உட்கார்ந்திருந்த யாஷ்கா சன்னல் வழியே வெளியே உற்று நோக்கினன். சன்னல் கண்ணுடிகள் நீலமாயிருந்தன. அவற்றுக்கு அப்பால் முண்டு முடிச் சான கரிய கிளைகள் குத்திட்டு நின்றன. யாஷ்கா அலுத்துக் கொண்டான். நச்சரிக்கும் திகில் அவனுள் குடி கொண்டிருந்தது. திகில் அல்ல அது, நாளை என்னுகுமோ என்ற ஏக்கத் தவிப்பு.

மீண்டும் ஒரு கோளம் வெடித்துக் கனத்த தொப்பொலி எழுப்பியது. காற்று மெள்ளக் கண்ணுடியில் மோதிச் சென்றது, முட் குச்சிகள் அதிர்ந்தாடி சன்னல் விளிம்பில் பிருண்டின. சமையலறைக் கதவு கிரீச்சிட்டுத் திறந்து கொண்டது, அந்த இடுக்கினுள்ளிருந்து மஞ்சள் ஒளி வெளிப்பட்டது. அம்மா அங்கே முணுமுணுப்பதும் வேட்டு வைத்துப் பனிக்கட்டி உடைப்போரைச் சபிப்பதும் காதில் விழுந்தன. தூங்கிக் கொண்டிருந்த சாங்கா முனகினன்.

யாஷ்கா படுக்கையை விட்டகன்று வெறுங் காலில் சமையறைக்குச் சென் ருன். அங்கே வாயிற்படிக்கு அருகே அவன் தந்தையின் மிதியடிப் பொதி யுறைகள் இருக்கக் கண்டான். அவற்றுள் பாதங்களை நுழைத்துக் கொண்டு, ரப்பர் அடிகள் தரையில் தட்டித் தடதடக்கக் கடுப்புடன் முன்னறைக்கு நடந்தான்.

''சைத்தானே, மேலுடுப்பு ஒன்றும் இல்லாமலா திரும்பவும் வெளியே போகிருய்?'' என்று உள்ளே இருந்தபடி அவன் தாய் அவனைக் கேட்டாள்.

ஒன்றும் சொல்லாமலே அவன் தனக்குப் பின்னுல் கதவை இழுத்துப் படாரென மூடினன்.

மேலுடுப்பு போட்டிருந்தால் என்ன, போடாவிட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதான், எப்படியும் அவனுக்கு ஒன்றும் நேர்ந்துவிடப் போவதில்லை.

* ''புயல் மோதும் சரிவு'' என்ற கதையில் ஒரு பகுதி.—பதிப்பாசிரியர்.

ஏதாவது நேர்ந்திட வேண்டுமென அவன் மெய்யாகவே விரும்பினுன் — சளிப்பு பிடித்தால் நன்ருயிருக்குமே. சாக நேர்ந்தால்கூட நல்லதுதானே. தக்க நேரத்தில் நிகழ்வதாய் இருக்குமே. ஆனுல் அவன் உடல் நலமின்றி படுக்கவும் போவதில்லே, சாகவும் போவதில்லே. அது அவன் தலேவதி. வாழ்க்கையில் எல்லாமே அவனுக்கு விரோதமாய் இருப்பதாகத் தோன்றியது.

யாஷ்கா பெருமூச்செறிந்து சிலுப்பிக் கொண்டான், பிறகு நன்ருய் மூச்சை உள்ளுக்கு இழக்க விரும்பி வெளியே வாயில் முகப்பினுள் அடியெடுத்து வைத்தான்.

அந்திப் பொழுது சற்று விறுவிறுப்பு ஊட்டுவதாய் இருந்தது. உருகும் பனி, உறைந்து கெட்டியான தரை இவற்றின் வீச்சம் மூக்கில் ஏறியது. அதில் மற்ருென்றும் கலந்திருந்தது—ஈரப் பைன் மரத் துண்டுகளது பட்டையின் நெடியும் வீசியது. இம்மாதிரியான பட்டைகளிலிருந்து சிறந்த படகுகளும் ஓடங்களும் செய்யலாம். பெரிய பட்டையாய் இருக்குமாயின் பெரிய கப்பல் ஒன்றைத் தயாரிக்கலாம். பனி உருகியோடும் வெள்ளப் பெருக்கில் அதை மிதக்க விடலாம். வசந்த பருவம்.... ஆனுல் நிகழ்ச்சிகளது நடப்பினேப் பார்த்தால் கப்பல்கள் விடுவதற்கு இது உகந்த நேரமாகத் தெரியவில்லே....

இருப்பினும் அவன் தன் முன்னுல் வாயில் முகப்பு வரை வியாபித்திருந்த நீர்த் திட்டை உற்று நோக்கினுன். மெல்லிய ஊசியின் கனத்துக்கு அதன் மேல் பனிக்கட்டிப் படலம் மூடியிருந்தது. தண்ணீர்க் குழாய்க்கு அடியிலிருந்த தொட்டியிலும் பனிக் கட்டிப் படலம் படர்ந்திருந்தது. கவிழ்ந்து வளேந்திருந்த அந்தக் குழாயின் அடி உதட்டில் உறைந்த நீர்மணிச் சரங்களாலாகிய தாடி வளர்ந்திருந்தது, தாடியின் உடைமையாளர் தொட்டிக்குள் பார்த்துவிட்டு, அதனுள் உறைந்த நீரில் தனது உருவம் தெரியாததைக் கண்டு திகைப்புற்று வாயை விரியத் திறந்து கொண்டாற் போல நினேக்கத் தோன்றியது. இந்த வேடிக்கையான நினேப்பு யாஷ்காவின் முகத்தைப் புன்சிரிப்பால் கோணச் செய்தது. ஆனுல் இதனிலும் சுவையான ஒன்றும் அவன் கண்ணில் பட்டது. உறைந்த நீர்மணிச் சரங்களில் வெடிப்பு விழுந்த இடங்களிலும் பனிக்கட்டிப் படிகங்களிலும் செந்நிற ஒளிப் புள்ளிகள், நுண்ணிய நெருப்புப் பொறிகள் போல் மின்னக் கண்டான். எல்லாராலும் இவற்றைக் கண்டிருக்க முடியாது, ஆனுல் யாஷ்காவின் கூரிய கண்கள் இந்த ஒளித் துணுக்குகளேக் கண்டு கொண்டுவிட்டன. உடனே அவன் இவை எங்கிருந்து வந்தன என்று வியந்து, தலேயை உயர்த்தி மேலே பார்த்தான். ஜெட் பயணி விமானம் ஒன்று அதன் குறி விளக்குகள் பளிச்சிட்டுக் கண் சிமிட்ட ஓசையின்றி விண்ணிலே பறந்து கொண்டிருந்தது. பிறகு ஆழ்ந்து அதிரும் பலத்த இரைச்சல் அதனிடமிருந்து கேட்டது, சற்று நேரத்துக்குள் அது விருப்பமின்றி அடங்குவது போல் தொலேவில் மறைந்து போயிற்று.

யாஷ்காவின் பார்வை அந்த விமானத்திலிருந்து விலகி, கீழே அடி வானத்தை நோக்கித் திரும்பியது. தரைக்கு அருகே வானம் மேலும் மேலும் பிரகாசமாகிச் சென்றது. அதன் நிறம் கருநீலத்திலிருந்து மென்சிவப்பாக மாறி, பிறகு பச்சையாகி வந்தது. அஸ்தமனத்தின் மங்கலான மஞ்சள் வெளிச்சம் வீட்டு உச்சிகளுக்கு மேல் இன்னமும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. இந்த மஞ்சளானது பச்சையுடன் சங்கமித்த இடத்தில் கண்ணுக்குத் தெளிவாகப் புலப்படாத பிறைச் சந்திரன் வெள்ளிச் சரிகை போல் மெல்லுரு தரித்துத் தொங்கிக் கொண்டிருந்தது. அது கீழே விழுமாயின் உடனே ஏந்திப் பிடிப்பதற்குத் தயாராய் இருப்பது போல், வில்லோ, ரோவன் மரங்கள் கரிய வேலித்தடுப்புகளுக்குப் பின்னுலிருந்து குச்சி விரல்களை விரித்து நீட்டின. ஆனால் மெல்லிய முகில் போன்ற அந்தப் பிறை கீழே விழுமா, என்ன?

சுற்றுப்புற வீடுகளின் கூரைகள் அவற்றின் புகைபோக்கிகளும் ஏரியல்களும் குருவிக் கூடுகளும் உட்பட, மங்கி மறையும் அஸ்தமன ஒளியின் பின்னணியில் தெள்ளிய உருவரை காட்டின. இந்த வீடுகள் யாவும் அனேகமாய் ஒரே உயரமுடையவை. புதிதாகக் கட்டப்பட்ட நான்கு அடுக்கு வீடு ஒன்று மட்டும்தான் சிதறியமைந்த படகுகள், இழுவைக் கலன்களின் திரளிடையே நெட்டுருவாய் நிற்கும் போர்க் கப்பலைப் போல் நெடிதுயர்ந்து தனித்துத் தெரிந்தது.

அந்த வீட்டில்தான் சிறிது காலமாய் இல்கா வசித்து வந்தான். அந்த நான்கடுக்கு வீட்டை எல்லாக் குழந்தைகளும் இல்கா வீடு என்று அழைத்தனர். அந்த பெரிய வீட்டில் ஏறத்தாழ நூறு குடித்தனப் பகுதிகள் இருந்தன, இல்காவும் அவன் தாயும் அதில் முதலடுக்கில் ஒரு சிறிய குடித்தனப் பகுதியில் வசித்தனர். ஆயினும் அது இல்கா வீடு என்பதாகப் பெயர் பெற்றுவிட்டது.

யாஷ்கா குளிரால் நடுங்கினுன், ஆனுல் அவன் வாயில் முகப்பிலிருந்து திரும்பிச் சென்றுவிடவில்லை. வீடுகளையும் வானத்தையும் பார்த்தபடி அங்கே அவன் நின்றிருந்த போது, மறுநாளன்று தவிர்க்க முடியாதவாறு ஏற்படுமென அவன் எதிர்பார்த்த தொல்லையைப் பற்றிய கவலை அவனை விட்டு அனேகமாய் மறைந்து போயிற்று.

''எல்லாம் சரியாகிவிடும்'' என்று நினைத்தான் யாஷ்கா. சாக வேண்டுமென இப்போது அவன் விரும்பவில்லை.

ஒவ்வொன்றுய் மூன்று அதிர்வேட்டுகள் கிளர்ந்தெழுந்தன. கூறை முனையிலிருந்து கண்ணடிச் சரம் ஒன்று யாஷ்காவின் காலடியில் விழுந்து சுக்குநூருய் நொறுங்கிச் சிதறியது—உறைந்த நீர்மணிச் சரங்களில் ஒன்று அது. அவர்களது பூனையான ஸ்தியோப்கா மிரண்டு போய்க் கரிய மின்வெட்டென வாயில் முகப்பிலிருந்து பாய்ந்தோடியது.

நான்காவது அதிர்வேட்டு அதிர்ந்தது.

வசந்த பருவத்துக்கு வரவேற்பு தெரிவிக்கும் இரகசிய வாழ்த்து முழக்கம் அது. ஏன் இரகசிய வாழ்த்தெனில், வாண வேடிக்கையோ, ஒளிச் சுடர்களோ இருக்கவில்லை; வெடியோசை மட்டுமே அதிர்ந்தெழுந்து தெரு வெங்கும் எதிரொலித்தது.

ஆற்றின் பனிக்கட்டிக் கவசம் அபாயகரமாய்த் தகர்ந்து உடையப் போகும் தருணம் நெருங்கி விட்டதால், மரப் பாலத்துக்கு அருகே வெடி வைத்துப் பனிக் கட்டியை முன்கூட்டியே உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாலையின் மடமை காலையில் மறையும் என்பார்கள் ருஷ்யர்கள். காலையில் யாவும் தெளிவாய் நினைவுக்கு வருகின்றன, நன்ருய்ச் சிந்திக்க முடிகிறது என்பதே இதன் அர்த்தம். ஆனுல் எப்போதும் இது நல்லதெனச் சொல்வதற் கில்லை. யாஷ்கா விழித்தெழுந்தான், யாவும் நினைவுக்கு வந்தன, நம்பிக்கைக்கு இடம் ஏதும் இல்லை என்பது புரிந்தது.

உள்ளம் நன்ருயிராத நேரத்தில் வெயிலுங்கூட மகிழ்ச்சி தருவதாய் இல்லை. மனக் கசப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்குச் சென்ருன் யாஷ்கா. வெயிலானது நச்சைப் போல் மஞ்சளாய், தீமை வாய்ந் தாய்த் தோன்றியது. தேங்கி நின்ற நீர்க் குட்டைகளின் கூர்மையான பளபளப்பு அவன் கண்களைத் துன்புறுத்தியது, அதில் பெட்ரோல் வீச்சம் வீசு வது போலிருந்தது. கூரை முனைகளிலிருந்து சொட்டிய ஒவ்வொரு துளியும் அவன் கோட்டுக் காலரில் விழுந்து உருள முயன்றது. வகுப்பறையில் கலீனு நிக்கலாயிவ்னு சுற்றி வருகையில் அவரது மிதியடிகள் எழுப்பும் அதே ஓசை யை, இந்த நீர்த்துளிகள் தார் பூசிய நடைபாதையில் விழுந்து எழுப்பின.

வகுப்பறையினுள் சுற்றி வந்து கலீனு நிக்கலாயிவ்னு அவனிடம் சொல் வார்:

''வரப்யோவ், இது எனக்குப் புரியவில்லை. கணக்குப் போடுகையில் உன் சிந்தனை எங்கே போகிறது? மிகச் சுலபமான கணக்கு இது! ஆனுல் நீ வந்த டையும் விடை இப்படித் தாறுமாருய் இருக்கிறது. உனக்கு எப்படி நான் திருப்திகரமான மதிப்பெண் தர முடியும்? பதில் சொல்!''

அவனுல் பதில் சொல்ல முடியவில்லை. பேசாமல் குதிகாலால் தரைப் பலகையைத் தேய்த்தபடி நிற்கிருன், தோள் பக்கம் குனிந்து கீழே எங்கோ பார்க்கிருன். கணக்குப் போடுகையில் அவனுள் எழும் சிந்தனைகள் என்ன வென்று அவனுல் சொல்ல முடியவில்லை. அவை அவன் நினைவில் இல்லை. விதம் விதமான சிந்தனைகள் அவனுள் எழுவது உண்டு. சிந்தனையானது அவனுடைய பூனையான ஸ்தியோப்காவைப் போன்றதல்ல — வாலைப் பிடித்து அதை இழுத்து வந்துவிட முடியாது.

கடந்த முறை கணக்குப் போட்ட போது அவன் பாலைவனத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அஸ்தமிக்கும் சூரியனுக்கு எதிரே அது விரிந்து பரந்திருந்தது, செம்மஞ்சள் மணலில் வரிசையாய் ஒட்டகங்கள் போய்க் கொண்டிருந்தன.... ஆனால் அவனுக்குத் தரப்பட்ட கணக்கு ஒட்டகங்களைப் பற்றியது அல்ல, ஆப்பிள்களைப் பற்றியது—பெட்டிகளில் இருந்த ஆப்பிள்களைப் பற்றியது....

நாசமாகப் போன அந்த ஆப்பிள்களைப் புழுக்கள் அரித்துத் தின்னட்டுமென நினைத்தான் அவன். ஏனைய பையன்கள் அந்தக் கணக்கை நான்கு கட்டங்களாய் வகுத்தமைத்து விடை கண்டனர், ஆனால் யாஷ்கா மூன்றுவது கட்டத்திலேயே விடையைக் கணக்கிட்டு விட்டான். ஏனைய எல்லார்க்கும் கிடைத்த விடை 28 பெட்டிகள், ஆனால் யாஷ்கா 40 பெட்டிகளென விடையளித்தான். கூட்டல் கழித்தல், வகுத்தல் பெருக்கல் எதுவாயினும் இதே போலத்தான் அவன் தனியே ஒரு விடையை அளிப்பான். மிகச் சுலபமான சில கணக்குகளுக்கு மட்டும்தான் ஏனையோரைப் போல் அதே விடையை வந்தடைவான். இந்த நிலைமையில், திருப்திகரமான மதிப்பெண், சராசரியான அந்த மூன்று கிடைக்குமென அவன் எதிர்ப்பார்க்க முடியுமா?

மோசமான மதிப்பெண் பெறுவது யாஷ்காவுக்கு ஒரு புதிய அனுபவம் அல்ல. ஆயினும் மோசமான மதிப்பெண்களில் பல வகை உண்டு. கிடைத்ததும் உடனே மறந்துவிடத் தக்கவை ஒரு வகை. ஆனால் இன்று கிடைக்கக் கூடிய மதிப்பெண்கள் அபாயகரமானவை. இன்று சனிக்கிழமை. ஆதாலால் ஆசிரியையின் நோட்டுப் புத்தகத்தில் குறிக்கப்படும் மதிப்பெண் உடனே மாணவனது பாடப் பதிவு நோட்டில் எழுதப்பெற்றுவிடும். வீட்டுக்குத் திரும்பியதும் அம்மா அந்த நோட்டை எடுத்து,

''சரி வகுப்பில் உன் படிப்பு எந்த நிலையில் இருக்கிறது, பார்ப்போம்'' என்பார்.

வசவு வாங்க வேண்டியிருக்கும், அதற்கு மேல் மோசமாய் ஒன்றும் ஆகிவிடாதபடி பிற்பகலைச் சமாளித்து விடலாம். ஆனால் மாலையில்.... ஆறு மணிக்குப் பெற்றோர் கூட்டம் நடைபெறும், இதை அறிவித்து ஆசிரியை அவனுடைய பாடப் பதிவு நோட்டில் ஏற்கெனவே குறிப்பு எழுதியிருந்தார். அந்தக் கூட்டத்தில் அம்மாவிடம் யாவும் சொல்லப்படும்: அவனும் தோல்கா சேன்த்ஸோவும் வகுப்புக்கு எடுத்து வந்து மேசைக்குள் வைத்துக் கொண்டு தீனி அளித்த அந்தப் புறு, படாரென வெடித்த அந்தப் பலூன் ஆகியவையும் உட்பட அனைத்தும் தெரிவிக்கப்படும். அதோடு, யாவற்றிலும் முக்கியமான, கவலைக்குரிய ஒருதகவலும் அம்மாவிடம் கூறப்படும்: ''தோழர் வரப்யோவா, இது கவலைக் குரிய நிலைமை. ஆண்டின் முதற் பகுதியில் உங்கள் பையன் மோசமான மதிப்பெண் பெற்றான்; இப்போது திரும்பவும் மோசமான மதிப்பெண்

பெறுவனுயின் என்ன ஆகும்? இந்தத் தேர்வு நகரக் கல்வித் துறையினரது மேற்பார்வைத் தேர்வாகும்....''

அம்மா வீட்டுக்குத் திரும்புவார், வழி நெடுக ஓடி வந்தாற் போல் மேல் மூச்சு வாங்கும் நிலையில் அறைக்குள் நுழைவார். தேவையில்லாத போதுங் கூட அவர் எங்கும் எடுத்துச் செல்லும் அவரது அந்தக் கனத்த கடைப் பையை வீசி எறிவார். வாய் பேசாமல் யாஷ்காவின் கழுத்தைப் பிடித்து வீடெங்கும் இழுத்துச் சென்று அப்பாவின் பழைய வார் எங்கே போயிற்றெனத் தேடுவார், அல்லது வேறு எதனுல் அவனை வெளுக்கலாமென பார்ப்பார்....

ஆனுல் அவன் ஒன்றும் இந்த வாருக்கு அஞ்சுகிறவன் அல்ல. அம்மா தருவதாகச் சொல்லியிருந்த ரூபிளை இனி அவரிடமிருந்து பெற முடியாது—இதுவே அவனது பிரதான கவலையாய் இருந்தது. அஞ்சல் தலைகள் எல்லாம் விற்பனையாகித் தீர்ந்துவிடும், அவனது ஆசைக் கனவு தகர்ந்து போய்விடும்....

காழ்ப்புடன் காலித் தீப்பெட்டி ஒன்றை யாஷ்கா எட்டி உதைத்தான். ஈரத்தில் நனைந்த அந்தப் பெட்டி பாய்ந்தெழுந்து காற்றிலே பறந்து வயதான ஓர் அன்னையின் முதுகில் தாக்கியது. அவ்வன்னை திரும்பிப் பார்த்துவிட்டு, காலிகள் என்றும், தெருச்சுற்றிகள் என்றும் சொல்லி ஏதோ கூச்சலிட்டார். யாஷ்கா வாயை மூடிக் கொண்டு அவரிடமிருந்து விலகிச் சென்முன்....

படுமோசமான நாள்—எதுவும் நன்முய் இல்லை. அட்டவணையின்படி அன்று கணிதம்தான் முதலாவது பாடம். ஆனுல் கலீனு நிக்கலாயிவ்னு கணிதத்தை நான்காவது பாடமாக மாற்றிவிட்டு, வாசித்தலை முதலாவதாக எடுத்துக் கொண்டார். ஆரம்பத்திலேயே யாவும் தெளிவாகிவிடும் என்று நினைத்திருந்தான் யாஷ்கா—இப்பொழுது அவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருக்க வேண்டியதாயிற்று.

வாசித்தல், பிறகு எழுதுதல், பிறகு கைப்பயிற்சி — இவ்வளவும் முடிவுறும் வரை அவன் காத்திருந்தான். நல்ல வேளை ஒரு தரங்கூட ஆசிரியை அவனிடம் கேள்வி கேட்கவில்லை, ஆகவே இன்னெரு மோசமான மதிப்பெண் பெருமல் அவன் தப்பிக்க முடிந்தது.

உண்மையில் காத்திருக்கத் தேவையில்லை. யாவும் தெளிவாகவே தெரிந்தன. ஆயினும் யாஷ்காவின் மனத்துள் நம்பிக்கை இல்லாமற் போய்விடவில்லை, கடுகளவு இருக்கவே செய்தது. அதிசயங்கள் நிகழ்வதில்லையா, என்ன? ஏனைய எல்லாரும் கணக்குக்குச் சரியான விடையைக் காண முடியாமற் போய் ஒரேயொருவன் மட்டும் சரியானபடி விடை கண்டுவிடும்படியான அதிசயம் ஒரேயொரு தரம் நிகழலாம் அல்லவா?

இல்லை, அதெல்லாம் சாத்தியமன்று....

என்ன அநியாயம்! ஒரு மதிப்பெண்ணுக்காக இவ்வளவு தொல்லையா.... கலீனு நிக்கலாயிவ்னு அவரது சிவப்புப் பென்சிலால் இரண்டின் அந்தக் கோண

K Levin

வாலை மேல்நோக்கி இழுத்துவிடாமல் கீழ்ப் பக்கமாய் வளைத்துவிட்டால் என்னவாம்? பென்சிலைச் சற்றே அசைக்க வேண்டும், அவ்வளவுதானே. யாஷ்காவின் மதிப்பெண் மூன்ருகிவிடும், அவனுக்குத் தொல்லை இல்லாமற் போகுமே.

இன்னும் முக்கியமாய், அஞ்சல் தலைகள் கிடைத்துவிடுமே.

முழு நேரம் அவை அவன் கண்ணெதிரே தெரிந்தன. நீலம், மஞ்சள், இளஞ் சிவப்பு, பசும் பச்சை—இப்படிப் பல வண்ணங்களிலுமான தலைகள். ஒட்டைச்சிவிங்கிகள், சிங்கங்கள், காண்டாமிருகங்கள், மற்றும் யானைகளுங் கூட அவற்றில் இருக்கும். மாயக் கதையைப் போல் வண்ண எழில் கொண்ட இந்த அஞ்சல் தலைகள் புருண்டி அரசினுடையவை.

இரண்டு ரூபிள், இருபது கோப்பெக்—முழுத் தொகுதிக்குமான விலை. அவனிடம் ஏற்கெனவே ஒரு ரூபிளும் இரண்டு பத்துக் கோப்பெக் காசுகளும் இருந்தன. இருந்து இனி என்ன பயன்?

அவற்றில் ஒரு தலை அதியற்புதமானது. அதை நினைக்கும்போது அவனுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. நீலம் என்ருல் அப்படிப்பட்ட நீலம்! எவ்வளவு பெரிது தெரியுமா? காவியிலும் மஞ்சளிலுமான புலி அதில் இருக்கும்.

வேறு விதமான அஞ்சல் தலைகளாய் இருப்பின்—போனல் போகட்டுமென இருந்துவிடலாம். ஆனல் இவை அப்படியல்ல, எல்லாம் ஆப்பிரிக்காவினுடையவை!

ஆப்பிரிக்கா....

ஏக்கத்துடன் யாஷ்கா பெருமூச்சு விட்டு இருக்கையிலே நகர்ந்து உட்கார்ந்தான். அவனுடைய புத்தகப் பையின் கான்வஸ் வார் கீழே நழுவி அவன் மடியில் விழுந்தது. யாஷ்கா அந்த வாரை உள்ளங் கையில் தட்டையாய் வைத்து அதை உற்று நோக்கினன். பிறகு தனது விட்டுப் பாடங்களை பதிவு நோட்டில் குறித்துக் கொள்வதற்குப் பதில், அந்த வாரில் கொட்டை எழுத்துக்களில் ஆப்பிரிக்கா என்று எழுத முற்பட்டான். அவனது ஏக்கத்தையும் ஆதங்கத்தையும் இவ்வேலையில் முழு அளவில் ஈடுபடுத்தி அச்சடித்தது மாதிரி ஒவ்வொரு எழுத்தையும் எழுதிச் சென்ருன்.

மூன்று பாடங்களும் முடிவடைந்தன. அலுப்பூட்டும்படி நீண்டு சென்ற அவை ஒருவாறு முடிவுற்றன. அவற்றைத் தொடர்ந்து கடைசி இடைநேரமும் கழிந்தது. பிறகு கலீனு நிக்கலாயிவ்னு ஒரு கட்டு பாட நோட்டுகளை எடுத்து வந்தார்.

ஐந்து மதிப்பெண் பெற்ற நோட்டுகளை முதலில் எடுத்துக் கொடுத்தார். அவற்றுக்கு உரியவர்கள் முகத்தில் எந்தச் சலனமும் இன்றி முறைப்பாய் ஆசிரியையின் மேசையிடம் சென்று அவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். ஐந்து மதிப்பெண் பெறுவது தமக்கு ஒன்றும் பெரிய காரியமல்ல என்பதாகக்

காட்டிக் கொள்ள முயன்றவர்கள் அவர்கள். ஊதிப் பருத்த சிறுவன் காதக் கினது முகம் மட்டும்தான் பூரிப்புற்று ஆப்பிரிக்கக் கதிரவனைப் போல் பிரகாச மாயிருந்தது. எப்போதுமே அவன் ஐந்து வாங்கி வந்தான், ஏழு வயதுச் சிறு வனுக்குரிய முறையில் எப்போதுமே இது குறித்து ஆனந்தப்பட்டுக் கொண் டான். அதற்கு என்னவாம்? யாஷ்காவுங்கூடத்தான் ஆனந்தப்பட்டுக் கொள் வான், ஆனுல்....

பிறகு நான்கு வாங்கியோர் அழைக்கப்பட்டனர். வகுப்பில் இருந்தோரில் பாதிக்கு மேற்பட்டோருக்கு நான்கு கிடைத்திருந்தது, அந்தப் பரீட்சை கடி னமானதல்ல. ஆறே ஆறு பேர் மட்டும்தான் மூன்று வாங்கியிருந்தார்கள். யாஷ்கா இவர்களில் ஒருவன் அல்லன்.

மூன்று, நான்கு நோட்டுகளே ஆசிரியையின் மேசையில் எஞ்சியிருந்தன. கலீனு நிக்கலாயிவ்னு வழக்கம் போல் பெருமூச்செறிந்து கொண்டு அறிவித் தார்:

''நமக்கு ஏமாற்றமளித்தவர்களது நோட்டுகள் இவை.... கிலேப்பிக்கவ், இந்தா உனது நோட்டு. கூடுதலான முயற்சி துணை புரியும், முன்னேற வைக்குமென நினைத்தேன், ஆனுல் பயனில்லை... சரி, எழுந்து வந்து உனது நோட்டை வாங்கிக் கொள். கணக்குக்கு நீ விடை காணவில்லை, தப்பும் மசிக் கறையுமாய் இருக்கிறது.''

குண்டுப் பையன் கிலேப்பிக்கவ் இதே வகுப்பில் இரண்டாவது ஆண்டு படித்து வந்தவன். அமைதி குலையாமல் எழுந்து சென்று தப்பும் மசிக் கறை யுமாய் இருந்த நோட்டைப் பெற்றுக் கொண்டான்,பிறகு தனது இடத்துக்குத் திரும்பி வந்து அந்த நோட்டால் முழங் காலைத் தட்டிக் கொண்டான். யாஷ்கா துயரம் தோய்ந்த பொறுமையுடன் இதை உற்று நோக்கினுன். அவனுக்கு இரண்டு கிடைத்து வந்தது குறித்து கிலேப்பிக்கவ் சிறிதும் கவலைப்படவில்லை, பெருமைப் படுகிறவனுகவே தோன்றினுன். யாஷ்காவால் அவ்வாறு நடந்து கொள்ள முடிவதில்லை.

அடுத்த இரண்டு தான்யா சப்போழ்னிக்கவாவுக்குக் கிடைத்தது. அவள் தனது இருக்கைக்குத் திரும்பி வந்ததும் வாய் விட்டு அழ ஆரம்பித்தாள்.

''அன்தோன் கலீனவும் இரண்டு வாங்கி நம்மைச் சிறப்பித்திருக்கிருன்'' என்று அறிவித்தார் கலீனு நிக்கலாயிவ்னு. அவரது எழிலார்ந்த முகம் கோணிச் சுருங்கிச் செல்ல, ''இப்படி ஒரு விபரீதத்தை நான் எதிர்பார்க்க வில்லை!'' என்ருர்.

''நானும் எதிர்பார்க்கவில்லை'' என்று கூறி அன்தோன் சிரித்துக் கொண் டான். இரண்டானுலும் சரி, ஐந்தானுலும் சரி சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டவன் அவன்.

யாஷ்காவின் நோட்டு மட்டுதான் பாக்கி. மேசையின் ஓரத்தில் இருந்தது

—யாஷ்கா அதைப் பார்க்க முடிந்தது. நீல அட்டையுடன், மேல் முனையில் சிறு மசிக் கறை பட்ட நோட்டு.

கலீனு நிக்கலாயிவ்னு மௌனமாய் இருக்கக் காரணம் என்ன? இரண்டு கூட இல்லையா, என்ன? ஒற்றை கோடான ஒன்று குறிக்கப்பட்டிருக்கலாம். சரி இரண்டுக்குப் பதில் ஒன்றாகத்தான் இருக்கட்டுமே, என்ன பெரிய வித்தியாசம்?

கலீனு நிக்கலாயிவ்னு மெள்ள ஆரம்பித்தார்:

''பாக்கியிருப்பது வரப்யோவின் நோட்டு... கணக்குப் போடுகையில் நீ எதைப் பற்றி நினைக்கிறாய், தெரியவில்லையே எனக்கு.'' நோட்டைத் திறந்து பார்த்தார். ''அட்டூழியமாய் அல்லவா இருக்கிறது...''

யாஷ்கா எழுந்து நின்றிருக்க வேண்டியதில்லை, இருந்தாலும் எழுந்து நின்றான். அந்த நேரத்தில் அவனைப் பார்ப்பதற்குப் பரிதாபமாய் இருந்தது, இது அவனுக்கு நன்றாகவே தெரிந்தது—குட்டையாய், கூனிய உருவமாய், மூக்கு மட்டும் கூர்மையாய் நீண்டிருக்க, காலருக்குள்ளிருந்து மெல்லிய குச்சி போல் அவன் கழுத்து துருத்திக் கொண்டு தெரிய நின்றான். என்ன செய்வது? கிலேப்பிக்கப் அல்லவே அவன்....

''அட்டூழியம்தான் இது'' என்று திரும்பவும் கூறினார் கலீனு நிக்கலாயிவ்னு. ''நூற்றுப் பதினைறை இரண்டால் வகுக்கிறாய், எண்பது என்று எழுதுகிறாய். நீ இப்படி வகுத்தால் கணக்குக்கு எப்படி உனக்குச் சரியான விடை கிடைக்கும்? இரண்டாம் வகுப்பு மாணவன் கூட இம்மாதிரியான அசட்டுத் தவறுகளைச் செய்ய மாட்டானே....''

ஆமாம், செய்ய மாட்டான்தான். யாஷ்காவுங்கூட எப்போதும் இப்படி தவறு செய்வதாகச் சொல்ல முடியாது. புருண்டி அரசின் அஞ்சல் தலைகளின் முழுத் தொகுப்பில் பதினேரு தலைகள் இருந்தன என்பது தெரிந்ததும், ஒரு தலையின் விலை இருபது கோப்பெக்கென உடனே அவன் பிழையின்றி கணக்கிட்டு விட்டானே. ஆனால் அவர்கள் தனித்தனியே இத்தலைகளை விற்கவில்லை, விற்றிருந்தால் யாவற்றிலும் அழகானவையாகப் பார்த்து ஒருசிலவற்றை யாவது அவன் வாங்கியிருப்பான். முக்கியமாய் அந்த புலியுடன் கூடிய தலையை நிச்சயமாய் வாங்கியிருப்பான்....

''வரப்யோவ், என்ன செய்வதென்று தெரியவில்லை எனக்கு.... உனது நிலைமை மெய்யாகவே வருந்தத் தக்கது: இந்தக் கணக்குக்கு விடை காண்பதற்கு நீ கையாளும் முறை மிகவும் சுவையானது, ஏனையோரைக் காட்டிலும் சுலபமான முறையை நீ கையாண்டிருக்கிறாய். அவர்கள் எல்லாரும் நான்கு படிகளில் விடை கண்டார்கள், ஆனால் நீ மூன்றே படிகளில் விடை காண முயன்றுள்ளாய் எண்ணிக் கணக்கிடுவதில்தான். நீ முதல் வகுப்புக் குழந்தையையும் விட மோசமாய் இருக்கிறாய்....''

காவியும் மஞ்சளுமான அந்தக் குதூகலப் புலி அஞ்சல் தலையிலிருந்து பாய்ந்து வந்து அவன் கண்ணெதிரே நின்றது. உயிருள்ள புலி மாதிரி பெரி தாய் இருந்தது. ''எனது அருமைப் புலியே, நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று வாய்குள் கூறிக் கொண்டான் யாஷ்கா. ஆபத்தில் சிக்கிக் கொண்ட அவனைக் காப்பாற்றுவார் வேறு யாரும் இல்லையே. இந்த அவல நிலையை நினைத்து அவன் கண் கலங்கினான்.

''மெய்யாகவே வருந்தத் தக்க நிலைமை'' என்று துயரம் தோய்ந்த குரலில் தொடர்ந்து கூறிச் சென்றார் கலீனா நிக்கலாயிவ்னா. ''நீ கையாண்டுள்ள முறை சாமர்த்தியமானது. ஆனால் நீ புரிந்திருக்கும் அசட்டுத் தவறுகளைக் கருதுகையில் உனக்கு மதிப்பெண் அளிப்பது எப்படி? வரப்யோவ், உனது நோட்டை வாங்கிக் கொள். உனக்கு மூன்று அளித்திருக்கிறேன். ஆம், மைனஸ் மூன்று.''

உடனே சன்னல் வழியே கதிரவன் ஒளி பளிச்சிட்டு வீசியது!

மார்ச் மாதத்தில் வானிலை கணத்துக்குக் கணம் மாறிவிடுகிறது. ஐந்து நிமிடங்களுக்கு முன்பு கண் கூசும்படி கதிரவன் பளிச்சிட்டான். பிறகு திடுமென ஆற்றுக்கு அப்பாலிருந்து கரிய மேகங்கள் உருண்டோடி வந்தன. அலங்கோலமாய் அவை தலைவிரித்தாடிய காட்சியை எதிரொளிக்க விரும்பாமல் நீர்த் திட்டுகள் சன்னமான வட்ட அலைகளை எழுப்பித் தம்மை மூடிக் கொண்டன. இருள் கவிந்த கனத்த காற்று நகரினுள் வீசி, பழைய தெருக்களில் வெளிவாயிற் கதவுகளை ஆட்டிக் கிரீச்சிட வைத்தது. பிறகு மழை சுழன்றெழுந்து தூறியது—உண்மையில் அது நீர்கோத்த ஆவியே அன்றி மழையல்ல.

தெருவிலே சென்றவர்கள் முணுமுணுத்தபடி குல்லாய்களைக் கண்களுக்கு மேல் இழுத்து விட்டுக் கொண்டு, பிரித்து உயர்த்திவிடப்பட்ட கோட்டுக் காலர்களுக்குள் தமது நனைந்த மூக்கை மறைத்துக் கொண்டார்கள்.

ஆனால் யாஷ்கா முணுமுணுக்கவோ, கோட்டுக் காலர்களை உயர்த்தி விட்டுக் கொள்ளவோ இல்லை, சிவந்து போன கைகளையும் கோட்டுப் பைகளுக்குள் விட்டுக் கோள்ளவில்லை. எல்லாம் மன நிலையைப் பொறுத்திருக்கிறது: இம்மாதிரியான பருவ நிலையைச் சேறும் சகதியுமான உபத்திரவமென்றும் சொல்லலாம்; இதற்கு மாறாக, தென்மேற்கிலிருந்து புயல் மேகங்களையும் சிற்சில வேளைகளில் மழையையும் திரட்டி வரும் சூறாவளியென்றும் சொல்லலாம். பிந்திய முறையில் கொள்வோமாயின், ஊளையிடும் காற்று மகிழ்ச்சிக் குரலெழுப்பும் விழாநாள் முழக்கமாகி விடுகிறது, எப்போதாவது வெளித் தோன்றும் கதிரவனது ஒளிக் கற்றைகள் விழாநாள் வானவெடிகளது திகழொளியாகி விடுகின்றன.

விழா நாள் வானவெடிகளை நினைத்ததும் யாஷ்காவுக்கு நேற்று முழங்கிய அதிர்வேட்டுகள் நினைவுக்கு வந்தன. உடனே அவனுள் ஒரு விருப்பம் எழுந்தது: வெடி வைத்து வெடித்தவர்கள் பனிக் கட்டியைச் சரிவர உடையச் செய்தார்களா, அந்தப் பழைய பாலம் ஆபத்திலிருந்து விடுபட்டு விட்டதா என்று அங்கே சென்று பார்க்க வேண்டுமென நினைத்தான். மே தினத் தெருவும் புகைக் கப்பல் தெருவும் சந்திக்கும் முனையில் நின்று அவன் ஆலோசித்தான்: முதலில் வீட்டுக்கு ஓடி, தனக்கு வாக்களிக்கப்பட்டிருந்த அந்த ரூபிளைப் பெற்று அஞ்சல் தலைகளை வாங்கிக் கொள்ள வேண்டாமா? ஆனால் வீட்டுக்குச் சென்றதும் என்ன நடைபெறும் என்பது அவன் மனக் கண்முன் தெரிந்தது: அம்மா தொண தொணக்க ஆரம்பிப்பார், பிறகு அவனைச் சாப்பிடச் சொல்வார், மதிய உணவுக்காக கடை மூடுவதற்குள் அவனால் கடைக்குப் போக முடியப் போவதில்லை. யாஷ்கா ஆற்றை நோக்கித் திரும்பினான், புயல் மேகங்களையும் சிற்சில வேளைகளில் தூறும் மழையையும் சந்திப்பதற்காக விரைந்தான்.

தயக்கமின்றி ஆர்வமாய் நடந்தான். இப்போது அவனுக்கு எந்தத் தொல்லையும் இல்லை. சனிக்கிழமையாதலால் வீட்டுப் பாடங்கள் தரப்படவில்லை. நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை—முழுப் பொழுதும் விடுமுறையான நீண்ட நெடிய நாள். புருண்டி அரசின் நீல நிற அஞ்சல் தலையில் காவியும் மஞ்சளுமான புலி அவனுக்காகக் காத்திருந்தது....

ஆற்றின் செங்குத்தான கரை ஓரமாகச் சென்றது அந்தத் தெரு. கரையருகே சிதறித் தனித் தனியே நின்ற குடில்களிடையே முடிவடைந்தது. உச்சி விளிம்பிலிருந்து இந்தக் குடில்கள் எச்சரிக்கை உணர்வுடன் விலகியமைந்திருந்தன, தன்னந் தனியே ஒரேயொரு களிமண் குடில் மட்டும் அச்சமின்றி விளம்பு ஓரத்தில் தொத்திக் கொண்டிருந்தது.

கீழே ஆற்றிலே மிதந்த சென்ற பனிப் பாளங்களைச் சுற்றி கரிய நீர் மெல்லச் சுழன்று நாட்டியமாடியது. வலப் பக்கத்தில் பாலத்துக்கு அருகே பனிக்கட்டி உடைக்கும் காப்பமைப்புகளின் இரும்பு அலகுகளில் இந்தப் பனிப்பாளப் பெருக்கு மோதி உடைந்து, அடித்து மோதிக் கொண்டு மரத் தூண்களுக்கிடையே ஓடிச் சென்றது. பாலத்துக்கு மேலே பெரிய ஏற்ற லாரிகள் ஓடிய போது பலகைகள் வளைந்து வழக்கம் போல் பாலம் முக்கி முனகியது பாவம் இந்தப் பாலமென்று யாஷ்கா பரிதாபப்பட்டுக் கொண்டான். இந்தப் பாலம் கட்டப்பட்ட காலத்தில் இவ்வளவு பெரிய லாரிகள் இருந்திருக்க மாட்டா, கற்பனை செய்யப்பட்டுங்கூட இருக்காது.

யாஷ்கா கீழே நீரோட்டத்திடம் செல்லவில்லை. உச்சி விளிம்பு வழியே பனிக் கட்டிகள் மிதந்த இடத்தை நோக்கிச் சென்றான். காற்று முன்னெச்சரிக்கையுடன் அவனை விளிம்பிலிருந்து விலக்கித் தள்ளியது. ஆனால் யாஷ்கா

இந்தக் காற்றைப் பொருட்படுத்தவில்லை. விசிலடித்துக் கொண்டு புத்தகப் பையை வீசி ஆட்டினுன், நனைந்திருந்த வெண்பனியையும் களிமண் கட்டியையும் பூட்சுக் காலால் உதைத்துக் கீழே ஆற்றுக்குள் தள்ளினுன்.

இவ்வாறு அவன் துறவி முனையை வந்தடைந்தான்.

ஆறு வளைந்து திரும்பிய இடத்தில் உயர் கரையிலிருந்து துருத்திக் கொண்டு நின்ற முனை இது. முன்பு இங்கு ஒரு பெரிய மடாலயம் இருந்தது, ஆனுல் பிற்பாடு அது சரிந்து செல்ல முற்படவே அதை இடித்துவிட்டார்கள். ஆனுல் துறவி முனைக்கு இந்தப் பெயர் வர இம்மடாலயமல்ல காரணம். இதற்கெல்லாம் நெடுங் காலத்துக்கு முன்பு, புரட்சிக்கு முன்பு, வித்தாஸ் என்ற ஆலேயதிபருக்குச் சொந்தமான **துறவி** என்ருெரு புகைக்கப்பல் இங்கு மோதி உடைந்து மூழ்கியதால், இந்த முனை இப்பெயரை பெறலாயிற்று.

முக்கியமாய் வசந்த வெள்ளப் பெருக்கின் போது இம்மாதிரியான ஒரு நிகழ்ச்சி மிகச் சுலபமாய் இங்கு நடைபெற முடியும். நீருக்கும் உயர்ந்தெழும் கரைக்குமிடையே குறுகலாகவும் தட்டையாகவும் மணற் பரப்பு முழு நீளத்துக்கும் செல்கிறது. ஆனுல் இங்கே அடிப் பாறையானது களி மண்ணுக்கு வெளியே துருத்தி உயர்ந்தெழுந்து நேரே ஆற்றுக்கு மேலே சென்று திடுமென முடிவடைகிறது. ஆற்றின் அரணது கொத்தளமெனத் தோன்றும்படி இந்த முனை நீருக்கு மேல் நீண்டிருந்தது, பீரங்கிகள் மட்டும்தான் இருக்கவில்லை. மிதந்து வரும் பனிப் பாளப் பெருக்குகள் இந்தப் பாறையின் அடியில் ஒவ்வொன்ருய் மோதி, பாறையானது அசைக்க முடியாதபடி உறுதியாக இருப்பது தெளிவான பிறகே பின்வாங்கி விலகிச் சென்றன.

சுழலும் பனிப் பாளப் பெருக்குகளைப் பார்த்துக் களைப்படைந்ததும் யாஷ்காவின் பார்வை அந்தப் பாறையின் விலாப் பக்கமாய் உயர்ந்து சென்றது. அங்கே கல் இடுக்குகளிலிருந்து அங்குமிங்கும் நீட்டிக் கொண்டிருந்த காய்ந்த கோரைகள் காற்ருல் அப்படியும் இப்படியுமாய் ஆட்டிக் குலுக்கப்பட்டன.

முன்பு மடாலயம் இருந்த இடத்தில் உயரக் கட்டையான ஒரு மேடு எஞ்சியிருந்தது. அதன் ஓரம் பாறை முனையில் குல்லாயின் குறுகிய விளிம்பு போல் வெளியே நீண்டிருந்தது, கடந்த ஆண்டின் புற்களும் சிக்கலாய் அடர்ந்த வேர்களும் அதில் மண்டியிருந்தன. துறவி முனை தனது புருவங்களைச் சுளித்துக் கொள்வதாகத் தோன்றியது.

கதிரவனது தாக்குதலை இனியும் தொடர்ந்து எதிர்த்து நிற்க முடியாமல் மேகங்கள் ஓரிடத்தில் கலையலாயின. சூரியக் கதிர்களின் கற்றை அவ்விடத்தில் கிழித்துக் கொண்டு வெளியே பாய்ந்தது. ஆற்றைப் பார்க்க அமைந்த மேட்டுச் சரிவு அதன் உறைந்த பனியுடன் வெள்ளியாய்ப் பளிச்சிட்டது, அந்தப் பிரகாசம் தாங்க முடியாமல் யாஷ்கா கண்களைச் சுளித்துக் கொண்

டான். அந்த வெண்பனிச் சரிவின் உச்சியில் இரு சிறு உருங்கள் தொத்திக் கொண்டு ஊர்ந்தது முதலில் அவன் கண்ணில் படவில்லை.

பிறகு அவற்றை அவன் கவனித்ததும் அவனுக்குத் தூக்கி வாறிப் போட்டது.

அந்த உச்சியில் அவர்கள் என்ன செய்கிருர்கள் என்று முதலில் அவன் வியப்புடன் உற்றுப் பார்த்தான். பிறகு அவனுக்குத் திகிலாகிவிட்டது. அவர்கள் ஓரத்துக்கு மிகவும் அருகாமையில் அல்லவா இருந்தார்கள்? சூரியனது சாய்வுக் கதிர்களாலும் வெதுவெதுப்பான காற்ருலும் வருடி விடப்பட்ட அந்தச் சரிவு சிறிதும் பிடி கொடுக்காமல் வழுக்கியடிக்கக் கூடியது என்பது அவன் நின்றிருந்த இடத்திலிருந்தே தெளிவாகப் புலப்பட்டது. எப்படிப் பட்ட அசடுகள்! முதல் வகுப்புப் பையன்களாகவே இருப்பார்கள். கோழிக் குஞ்சுக்கு இருக்கும் அளவுகூட மூளை இல்லாதவர்கள்.

சறுக்கிச் சென்ற பூட்சுக் கால்களை வைத்து அழுத்தி அவசரமாய் அவன் அந்த மேட்டின் உச்சிக்கு ஓடினன். ''ஏ தம்பிகளா! இன்னும் கொஞ்ச காலம் உயிர் வாழ விரும்பினல் உடனே மேலே ஏறி வாருங்கள்!'' என்று அந்த உச்சியிலிருந்து கத்த வேண்டுமென நினைத்து அங்கே ஓடினன்.

ஆனல் கத்துவதற்கு நேரம் கிடைக்கவில்லை, அந்தச் சிறுவர்களில் சற்று உயர் மட்டத்தில் தொத்திக் கொண்டிருந்தவன் அதற்குள் தலையை உயர்த்தி யாஷ்காவைப் பார்த்துக் கூவினன்:

''மேலே ஏறி வர உதவி செய்! இல்லையேல் நாங்கள் சரிந்து சென்று கீழே தான் விழுந்தாக வேண்டும்!''

''ஆமாம், விழத்தான் போகிறீர்கள்'' என்று யாஷ்கா தன்னுள் நினைத்துக் கொண்டான். வழுக்கியடிக்கும் அந்த ஆபத்தான சரிவின் உச்சியிலே நல்ல வேளை தான் தொத்திக் கொண்டு தவிக்கும்படி நேரவில்லையே என்று உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டான். இந்த மகிழ்ச்சி நல்லதல்ல, யாஷ்காவுக்கு இது உடனே தெரிந்தது. ஆனல் அவன் என்ன செய்வான்? அசட்டு வாண்டுகள் அங்கே போய்ச் சிக்கிக் கொண்டதற்கு அவனல்லவே பொறுப்பு.

''நல்ல வசதியான இடமாகத்தான் தேடிப் பிடித்திருக்கிறீர்கள்'' என்று யாஷ்கா கடுப்புடன் கூறினன். ''எதைத் தேடிக் கொண்டு அங்கே சென்றீர்கள்?''

உதவும்படி கூவியச் சிறுவன் பித்தளைப் பொத்தான்களுடன் கூடிய சாம்பல் நிறக் குட்டைக் கோட்டு அணிந்திருந்தான், இதே துணியாலான தலைக் கவிகை அவன் தலையிலிருந்து கழன்று பிடரியில் விழுந்து கிடந்தது. இப்போது இவன் மெல்லத் திரும்பி யாஷ்காவை ஆத்திரமாய் உற்றுப் பார்த்தான். வேடிக்கை பேச்சுக்கு இதுவா நேரம்? குஞ்சத்துடன் கூடிய நீல நிறப் பின்னல் குல்லாய் அணிந்த மற்ருெரு சிறுவன் கூறினன்:

''ஒரு கயிறு கிடைக்குமானால் தப்பித்துக் கொண்டு விடுவோம்....''

யாஷ்காவின் மகிழ்ச்சி இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. வேடிக்கையல்ல, பயங்கரமான நிலைமை. அவனால் இப்போது இங்கிருந்து திரும்பிச் செல்ல முடியாது: கழைக் கூத்து வித்தைக்காரர்கள் இருவரும் பாறை உச்சியிலிருந்து வழுக்கிச் சென்று மெய்யாகவே கீழே விழப் போகிறார்கள் என்பது தெரிந்தது. மூன்று அடுக்குக் கட்டிடத்தின் உயரமிருந்த பாறை அது. கீழே ஊனை உறைய வைக்கும் குளிர்ந்த நீர், அல்லது பனிப் பாளங்களின் பெருக்கு, அவர்களுக்கு வரவேற்பு அளிக்கக் காத்திருந்தது. இரண்டில் எது மிகக் கொடியது என்று கூறுவதற்கில்லை.... கயிறு மட்டும் கிடைக்குமானால்.... ஆனால் கயிறுக்கு எங்கே போவது? அருகாமையில் எதாவது ஒரு வீட்டுக்கு ஓடிச் சென்று எடுத்து வரலாமா? ஆனால் திரும்பி வந்து பார்க்கும் போது அந்தச் சரிவு, யாருமின்றிக் காலியாக இருக்குமென அஞ்சினான்....

எச்சரிக்கையுடன் யாஷ்கா விசாரித்தான்:

''சரியாமல் சற்று நேரம் உங்களால் பிடித்துக் கொண்டிருக்க முடியுமா?''

''முடியும், ஆனால் எங்களுக்கு அடியில் வெண்பனி சரிந்து செல்வதாய்த் தெரிகிறதே'' என்றான் நீலக் குல்லாய் அணிந்த சிறுவன்.

போதாததற்கு வெண்பனியுமா சரிந்து செல்ல வேண்டும்?

சிறுவர்கள் இருவரும் கலவரமடையாமல் அமைதியாகவே இருந்தார்கள். இவர்களது இந்தத் துணிச்சல் குறித்து யாஷ்கா பொறாமைப்பட்டுக் கொண்டான். சற்றே நகர்ந்தாலும் ஆபத்தாகிவிடும், இருவரும் அசையாதிருந்தனர். யாஷ்கா உதவுவான் என்று காத்திருந்தனர். வெள்ளைக் குஞ்சத்துடன் கூடிய நீலக் குல்லாய் அணிந்தவன் கால்களையும் கைகளையும் அழுத்தி ஊன்றிக் கொண்டு அசங்காமல் இருந்தான். பனி உறைந்த பாறைப் பிதுக்கத்தை அவன் உடும்புப் பிடி கொண்டு பிடித்திருந்தான். அவனது விரல்கள் குளிர்ந்து போய் சிவந்திருந்ததை மேலே இருந்தபடி யாஷ்கா பார்க்க முடிந்தது. இரண்டாமவன் மல்லாந்து படுத்துக் குதி கால்களையும் முழங் கைகளையும் கொண்டு, உறைந்த பனியின் இடுக்குகளினுள் வைத்து அழுத்தி ஊன்றியிருந்தான். இப்போது அவன் யாஷ்காவைப் பார்க்கவில்லை, தலையை நெறித்துத் திருப்பினாலன்றி பார்க்க வழியில்லை. திப்பித் திப்பியாகச் சிதைந்திருந்த மேகங்களை அவன் உற்றுப் பார்த்தான். துணிக் கவிகை முழு அளவுக்குக் கழன்று விழுந்து விட்டது, அவனது மென்னிறச் சுருள் முடிகள் இப்போது வெளியே தெரிந்தன. அந்தச் சிறிய சுருள்கள் காற்றிலே ஆடித் துடித்தன. யாஷ்கா கலங்கிப் போய் உச்சியிலே நின்றான். அவன் நெஞ்சை அச்சம் இறுக்கியது, அது அவன் பலத்தைக் கொள்ளை கொண்டுவிட்டதாக நினைத்தான்.

என்ன செய்வதென்று தெரிந்திருந்தால் அவன் அப்படிப் பயந்திருக்க மாட்டான். ஆனால் திடுமென அவனுக்குப் புலப்பட்டது. உறைந்த பனிக்கு அடியிலிருந்து அந்தச் சரிவின் குறுக்கே களிமண் கட்டிகள் வரிசையாகத் துருத்திக் கொண்டிருக்கக் கண்டான். இவற்றின் சாய்வுக் கோடு சிறுவர்களுக்கு அருகே சென்று முடிவுற்றது. அங்கே சென்று தனது புத்தகப் பையை அவர்களிடம் தொங்கவிட்டால் போதும்....

ஆனால் பூட்சை வைத்ததும் அந்தக் கட்டிகள் பெயர்ந்து விழுந்தால் என்ன ஆவது? களிமண் கட்டிகள் சிறியவை, காலுக்கடியில் நொறுங்கிவிடக் கூடியவை.....

புத்தகப் பையைத் தோளிலிருந்து கழற்றி அதை இடக் கையால் பிடித்துக் கொண்டான். இறுகிய பற்களுக்கு இடையே மூச்சைப் பலமாக உள்ளே இழுத்தபடி உறை பனியிலே மெல்ல வழுக்கிச் சென்று களிமண் கட்டிகளது வரிசையை அடைந்தான்.

திகில் அவனுள்ள அலையென மூண்டெழுந்தது. எனினும் யாஷ்கா அந்தப் பழுப்பு நிறக் கட்டிகளில் கடைசிக் கட்டி வரைச் சென்றுவிட்டான். இப்போது அவன் கவிகை அணிந்தச் சிறுவனுக்கு நேர் மேலே நின்றான். கவனமாய் மண்டியிட்டு அமர்ந்து புத்தகப் பையை வெண்பனியிலே அந்தச் சிறுவனிடம் தள்ளினான். யாவும் எளிதாகவே நடந்தேறின. சிறுவன் அதன் வாரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு திரும்பிக் குப்புறப் படுத்து மெல்ல மேலே ஊர்ந்து சென்று யாஷ்காவுக்குப் பக்கத்தில் வந்து எழுந்து நின்றான்.

''உச்சிக்குப் போய்ச் சேரு, கவனமாய் ஏறிச் செல்'' என்றான் யாஷ்கா, கடுமையான குரலில்.

''வலேர்க்காவை மேலே இழுக்க வேண்டுமே'' என்று பின்னால் இருந்த தன் தோழனைப் பார்த்தபடி கேட்டான் அச்சிறுவன்.

''நீ மேலே போய்ச் சேரு. நீ இல்லாமலே இவ்வேலை நடந்தேறும்!'' என்று கத்தினான் யாஷ்கா.

இப்போது அச்சம் அவனை விட்டகன்று விட்டது. வாழ்வெல்லாம் அவனுக்கு ஏனையோர் உத்தரவிட்டு வந்தார்கள், இப்போது அவன் உத்தரவிட ஏனையோர் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதாகியது. கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்!

''போய்ச் சேரு நீ!'' என்று திரும்பவும் ஒரு தரம் சொன்னான். அச்சிறுவனின் சாம்பல் நிறக் கோட்டில் அடையாய் ஒட்டியிருந்த சேற்றைப் பார்த்துவிட்டு, மேலும் கூறினான்: ''மேல் எல்லாம் அழுக்காக்கிக் கொண்டு விட்டாய். வீட்டுக்குப் போனதும் சரியானபடி கிடைக்கும்!''

''ஆமாம், கிடைக்கத்தான் போகிறது....'' என்று சிறுவன் பெருமூச்செறிந்து கொண்டான். பிறகு சுற்றிலும் ஒரு தரம் பார்த்துவிட்டு உச்சிக்கு ஏற முற்பட்டான்.

வலேர்க்காவை மேலே இழுப்பது அவ்வளவு சுலபமாய் இருக்கவில்லை. எவ்வளவோ முயன்றும் புத்தகப் பை அவனை எட்டவில்லை. பிறகு யாஷ்கா வுக்குத் தன்னிடம் கத்தி இருப்பது நினைவுக்கு வந்தது. துருபிடித்த கத்தியால் புத்தகப் பையின் வாரை அறுக்க ஆரம்பித்தான். பையுடன் இணைத்துத் தைக்கப்பட்டிருந்த இடத்தில் அந்த மழுங்கிய கத்தியால் அறுத்து வாரைத் துண்டிக்க முயன்றான். அதே போது வலேர்க்கா நழுவிச் சென்று விடாமல் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கிறானா என்று இடையிடையே கவனித்துக் கொண்டான். வலேர்க்கா அதே இடத்தில்தான் தொத்திக் கொண்டிருந்தான்.

முடிவில் வார் அறுக்கப்பட்டது. இப்போது அது இரு மடங்கு நீளமுடையதாகிவிட்டது.

''பிடித்துக் கொள்!''

புத்தகப் பையைப் பிடித்துக் கொண்டு வலேர்க்கா முதுகுப் புறம் புரண்டு வெண்பனியில் சற்று நேரம் படுத்திருந்தான்.

''எதற்காக காத்திருக்கிறாய்?'' என்று கூச்சலிட்டான், மிரண்டு போன யாஷ்கா.

''இதோ வந்துவிட்டேன். மூச்சு சரியாகட்டும்.''

''மூச்சு சரியாவதற்குள் பொழுது விடிந்துவிடும் போலிருக்கிறதே'' என்று யாஷ்கா நினைத்துக் கொண்டான். பிறகு அவன் உத்திரவிட்டான்:

''காலால் உந்தித் தள்ளு, நான் மேலே இழுக்கிறேன்.''

பாதத்தின் நுனியை பனிக்குள் வைத்து அழுத்தி வலேர்க்கா மேலே உந்தித் தள்ளினான்.

யாஷ்கா பின்பக்கமாய்ச் சாய்ந்து நின்று வாரை மேலே இழுத்தான். வழவழப்பான களி மண்ணில் அவன் பூட்சுப் பாதங்கள் வழுக்கின. நிலையை மாற்றிக் கொண்டு, திரும்பவும் இழுத்தான்.

அவ்வளவுதான், வேலை முடிவுற்றுவிட்டது. வலேர்க்கா ஒரு தப்படி தள்ளி அவனுக்குப் பக்கத்திலே வந்து எழுந்து நின்றான், ஆபத்திலிருந்து மீண்டு வந்துவிட்டோமென மகிழ்ந்து கொண்டான். உருட்டை முகமும் கரு விழிகளுமுடைய அவன், ஓரளவு இல்கா மாதிரி இருந்தான். இன்னுங்கூட சற்று இளையவனாகத் தோன்றினான்.

''அப்பாடி!'' என்றான், சிறுவனின் முகத்தில் புன்னகை அரும்பியது. பிறகு அவன் திரும்பினான், களிமண் விளிம்பில் திடுமென நிலை குலைந்து ஆடிக் குலுங்கினான்.

''அப்படியே நில்!'' வெடுக்கென யாஷ்கா கையை நீட்டி அவனை விழுந்து விடாமல் பற்றிக் கொண்டான். ஆனால் இப்பொழுது யாஷ்காவால் நிற்க முடியவில்லை, கால் தடுமாறி கட்டிப் பனிச் சரிவில் வழுக்கிக் கொண்டு, ஒரு

நிமிடத்துக்கு முன்பு வலேர்க்கா தொங்கிய இடத்துக்குச் சறுக்கிச் சென்று விட்டான்.

யாவும் நொடிப் பொழுதில் நடைபெற்றுவிட்டது, திகிலடைவதற்குக் கூட நேரம் இல்லை. சுரீரென வலித்தாற் போல் கணப் பொழுதுக்கு அவன் தசைநார்கள் விறைத்துக் கொண்டன.

பயங்கரமாய் ஏதும் நடைபெற்றுவிடவில்லை. அவனது புதிய பூட்சுப் பாதங்களின் கூர்மையான முனைகள் அவனைக் கீழே வழுக்கிச் செல்ல விடாமல் தடுத்து நிறுத்தின. பாறை முனையிலிருந்து ஒரு மீட்டர் உள்ளே தள்ளி நின்றான் யாஷ்கா. ஓரளவு உறுதியாகவே நின்றான், காற்றுங்கூட, தாங்கிப் பிடித்து அவனுக்கு உதவியது. கொஞ்சங்கூட அவன் பயப்படவில்லை.

மெள்ள தலையை மட்டும் திருப்பி, மேலே நின்ற சிறுவர்களை நோட்டமிட்டான். வலேர்க்கா அவசரமாகப் புத்தகப் பையின் வாரைக் கெட்டியாகத் தன் கையில் சுற்றிக் கொண்டு, யாஷ்காவிடம் சொன்னான்:

''இதோ உன்னை நான் மேலே இழுக்கிறேன்!''

மேலே இழுக்கப் போகிறானாமே! தானே நிற்க முடியாமல் தவிக்கிறான். கைகள் குளிரால் தாக்கப்பட்டுச் சேவலின் கொண்டை மாதிரி சிவந்திருந்தன. முழங்கால்களைச் சுற்றிலும் கால் சட்டை நனைந்து போயிருந்தது, பூட்சுகளினுள் நீர் தளபுளத்தது தெளிவாகக் காதில் விழுந்தது.

''பேசாமல் உச்சிக்குப் போ! இருவரும் வீட்டுக்குப் போய்ச் சேருங்கள், போதும்! வீட்டிலே அம்மா உங்களைக் கணப்படுப்புக்கு மேல் அமர்த்தி உலர வைப்பார்கள்!''

''நீ என்ன ஆவதாம்?'' என்று கேட்டான், உச்சிக்கு அருகே நின்ற சுருட்டை முடிச் சிறுவன்.

''நீ எப்படி மேலே வரப் போகிறாய்?'' என்றான் வலேர்க்கா.

''எப்படி வரப் போகிறேனா? உங்களைப் போல் தொத்திக் கொண்டு தொங்குவேன் என்றா நினைத்தீர்கள்?'' உருகிச் சென்ற உறைபனியில் அருகருகே பாதங்களை வைத்தழுத்தி இரண்டு மூன்று தப்படிகள் மேல் நோக்கி நகர்ந்தான். ''பார்த்தீர்களா? உங்களைப் போல் நான் ஆமை மாதிரி ஊர்கிறவன் அல்ல'' என்றான்.

''இன்னும் ஏறியாக வேண்டுமே, என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான் வலேர்க்கா.

மேலும் மேலே ஏறுவதற்கு அவன் மண்டியிட்டு, அங்கே பனிக்கு மேல் விறைப்பாகத் துருத்திக் கொண்டிருந்த காய்ந்த கோரையிடம் ஊர்ந்து சென்றாக வேண்டும். ஆனால் இந்தச் சிறுவர்களுக்கு முன்னால் மண்டியிட்டு ஊர்வதற்கு யாஷ்காவுக்கு வெட்கமாயிருந்தது.

''நீங்கள் நடையைக் கட்டுங்கள்!''

''நல்லபடியாக மேலே வந்துவிடுவாயா நீ?''

''என்ன கேள்வி இது? வழுக்கிச் சென்று கீழே குதிப்பேன் என்று நினைக்கிறீர்கள்?''

பூட்சு நாடாவைக் கட்டப் போகிறவனைப் போல் யாஷ்கா கீழே குனிந்து மண்டியிட்டு உட்கார்ந்தான். பிறகு தோள் பக்கம் திரும்பிக் கூறினான்.

''புத்தகப் பையை அங்கே உச்சியில் வைத்துவிட்டுச் செல்லுங்கள்...''

இந்த அமைதியான சொற்களும், எதற்கும் அசங்காத இந்தச் சாமர்த்திய சாலிப் பையனது சாவதானமான நடத்தையும் சிறுவர்கள் இருவரின் சஞ்சலத்தை நீக்கின. இருவரும் சற்று நேரம் காத்திருந்து பார்த்தனர். ஆனால் யாஷ்கா, தொலைவில் ஆற்றுக்கு அப்பால் தெரிந்த காட்சியைக் கண்டு களிப்பவனைப் போல் பார்த்துக் கொண்டு மண்டியிட்டு அமர்ந்திருந்தான். சரி, அது அவன் விருப்பம், அங்கேயே உட்கார்ந்திருக்கட்டும்.

சிறுவர்கள் இருவரும் போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு யாஷ்கா அந்தக் காய்ந்த கோரையை நோக்கி நகர்ந்து கையை நீட்டினன்.

பார்ப்பதற்கு அது கெட்டியானதாகவே தோன்றியது. ஆனல் கையால் பிடித்ததும் நொறுங்கித் தூளாகிவிட்டது. வழுக்கியடித்துவிடாமல் தடுக்கும் பொருட்டு யாஷ்கா அப்படியே குப்புறப் படுத்துக் கொண்டான். விரல் நுனிகளையும், பூட்சு முனைகளையும், மற்றும் தன் முகவாயையுங் கூட உறைபனிப் பெருக்கில் அழுத்தித் தனது சரிவைத் தடுக்க முயன்ருன். அப்படியும் அவன் அந்தப் பயங்கரப் பாறை விளிம்பை அணுகி மேலும் மேலும் சரிந்து சென்று கொண்டிருந்தான். திரும்பவும் அவனை அச்சம் கவ்விக் கொண்டு உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரை சர்வாங்கத்தையும் நெரித்தது. அதே போது இந்த அச்சத்தை விடவும் வலுவன ஒன்றும் செயல்பட்டது. யாஷ்கா கூச்சலிட்டுக் கூப்பிட்டிருக்கலாம். ''வலேர்க்கா! எனக்கு உதவி செய்!'' என்று அவன் குரல் கொடுத்திருக்கலாம். சிறுவர்கள் இருவரின் காதுக்கும் அது எட்டியிருக்கும்.

ஆனால் அவன் கூச்சலிடவில்லை. பிடிவாதமாய் வாயை மூடிக் கொண்டு விரல் நகங்களை உறைபனியினுள் அழுத்திச் சென்றான்.

தனது சரிவைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்டான். ஆனால் இந்த வெற்றி அதிக நேரத்துக்கு நீடிக்கவில்லை. ஒவ்வொரு சிறு அசைவும், அவனது மூச்சுங்கூட மேலும் மேலும் விளிம்பை நோக்கி அவனை இழுத்துச் சென்றது. மெதுவாய், அங்குலம் அங்குலமாய் அவன் சரித்து கொண்டிருந்தான்.

நெடு நேரம் கழிந்தது போல் தோன்றியது. சூரியன் வெளியே தலை காட்டினான். பிறகு திரும்பவும் நிழல்கள் கவிந்து கொண்டன. அவை ஆற்றங்கரை மீதும் யாஷ்கா மீதும் படிந்தன.

அவன் அழ ஆரம்பித்தான்.

அழுது செருமியபடி முகவாயை நொறுங்கும் உறைபனியில் வைத்தழுத்தி, சரிவுக்கு மேலே பாறை உச்சியை உற்றுப் பார்த்தான். மேகச் சிதறல்கள் பாறை முகட்டுக்கு மேல் பறந்து சென்றன. அவ்விடம் வெறிச்சோடிப் போயிருந்தது. யாரும் அங்கே வர மாட்டார்கள் என்பது யாஷ்காவுக்கு விளங்கியது. அவ்விரு அசட்டுச் சிறுவர்களைப் போன்றவர்கள்தான் எப்போதாவது இப்பக்கம் தலைகாட்டுவார்கள்.

பாறை முகட்டுக்குப் பின்னாலிருந்து ஒரு தந்தி மரம் அதன் குறுக்கு கட்டைகளுடன் தலை உயர்த்திக் காட்டியது. கூண்டுக் குருவிகளைப் போல் சோடிசோடியாய் அவற்றின் மீது வெள்ளை உருளைகள் அமர்ந்திருந்தன. சந்தேகத்துக்கு இடமின்றி சிறிது சிறிதாய் அவன் விளிம்பை நோக்கி வழுக்கிச் சென்றதை அந்தத் தந்தி மரக் குறுக்குக் கட்டைகள் அவனுக்குப் புலப்படுத்தின. முதலில் ஒரு கட்டை பாறை முகட்டுக்குப் பின்னால் மறைந்தது, பிறகு இரண்டாவதும் மறைந்தது, மூன்றாவது கட்டை இப்போது முகட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

அதுவும் மறையும் போது அவன் கதை முடிவடைந்துவிடும், யாஷ்காவுக்கு அது புரிந்தது.

பிறகு தன்னிடம் கத்தி இருப்பதைத் திடுமென நினைத்துக் கொண்டான். துருபிடித்த மழுங்கிய கத்திதான் என்றாலும் அது நீளமானது, அவனது கோட்டுப் பையினுள் இருந்தது. புத்தகப் பையின் வாரை அறுத்த பின் கத்தியைக் கோட்டுப் பைக்குள் வைத்திருந்தான், அதை அவன் சரியாக மூடக் கூடவில்லை. கையை எப்படியாவது இப்போது அந்தப் பைக்குள் விட்டாக வேண்டும்.

யாஷ்கா இப்போது அழவில்லை. மெல்ல தனது வலக் கையைப் பின்பக்கம் கொண்டு போய்த் தடவிப் பார்த்தான். விலாப் பக்கத்தில் அவனது கோட்டு மடங்கிச் சுருங்கியிருந்தது, கோட்டுப் பை அவனுக்கு உதவ விரும்பியது

போல் வெளியே துருத்திக் கொண்டிருந்தது. கத்தியின் வழவழப்பான பிடி யாஷ்காவின் கையில் பட்டது. ''எனது அருமைக் கத்தி!'' என்று வாய்க்குள் அதைப் பாராட்டிக் கொண்டான். விலாவுக்கு அடியிலிருந்து கையை வெளியே எடுத்து, திறந்திருந்த கத்தியை மெல்ல உயர்த்தினன். அந்த அசைவால் அவன் மேலும் இரு அங்குலம் சரிந்து செல்ல வேண்டியதாயிற்று, ஆனல் அவன் பயப்படவில்லை. முக்கி முனகியபடி யாஷ்கா தனது முழு பலத்தையும் முழு அவலத்தையும் கொண்டு அந்தக் கத்தியால், வெறுக்கத் தக்க பனிக் கட்டியின் நெஞ்சில் ஓங்கிக் குத்தினன்.

கத்தி அதன் பிடி வரை முழு நீளத்துக்குத் துளைத்துச் சென்றது, அதோடு அவனது முட்டிக் கையும் உறைபனியில் அழுந்தி சிறு பள்ளத்தைப் பதித்தது.

அப்படி அல்லவா செய்ய வேண்டும்? கத்தி அசையாமல் உறுதியாய் நின்றது. கணப் பொழுது ஓய்வெடுத்துக் கொள்கொள்ளலாம், பிறகு கால்களை மெல்ல மேலே இழுத்து மடக்க வேண்டும். அதன்பின் உடலை மேலே இழுத்து நீட்ட வேண்டும். கத்தியைக் குத்தி இவ்வாறு கைப்பிடிகள் அமைத்து கொண்டு அவன் அந்தக் களிமண் கட்டிகளை வந்தடைந்து விடலாம். மூன்றே மூன்று கஜம் ஏறிச் சென்ருல் போதும்.

அன்று நடைபெற்ற மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளை எல்லாம் யாஷ்கா நினைத்துப் பார்த்தான்: அதிர்ஷ்டவசமாக அவனுக்கு மூன்று மதிப்பெண் கிடைத்தது, வீட்டுப் பாடம் தரப்படாதது, அவன் வாங்கப் போகும் அஞ்சல் தலைகள், போற்றத்தக்க முறையில் சிறுவர்கள் இருவரையும் அவன் காப்பாற்றியது ஆகிய யாவற்றையும் நினைத்துப் பார்த்தான்.

யாஷ்கா புன்னகை புரிந்து கொண்டான். இன்னும் காயாத கண்ணீருக்கு இடையிலிருந்து, பாறை முகடுக்குப் பின்னல் நின்ற தந்தி மரத்தின் உச்சியைக் கவனித்தான். அதன் கூர் முனை மேலும் மேலும் சிறிதாகி வந்தது. அவன் வழுக்கிச் செல்லவில்லை, ஆயினும் அந்தத் தந்தி மரம் அவன் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்தது.

கண்ணுக்குத் தெரியாத சிறு அருவிகள் பனிக் கட்டிக்கு அடியில் வெண் பனியைக் கறைத்துக் கொண்டு சென்றன. யாஷ்கா படுத்திருந்த அந்தப் பனிக் கட்டி மேலும் மேலும் வேகமாய் விளிம்பை நோக்கிச் சரிந்து சென்றது... இப்போது அது உடைந்து கீழே ஆற்றுக்குள் தடதடத்து விழுந்தது.

''சாகாமல் பிழைத்துக் கொண்டால் போதும்...''—யாஷ்கா கடைசியாக நினைத்தது இதுதான்.

ஆ பூ - பா க் கா ர்

குல்தூம்

மலையின் சாய்வான சரிவில் கடுமையான வரிசைகளாக நின்றன கல்லறை முகப்புப் பாளங்கள். இந்த இடுகாட்டு நினைவுச் சின்னங்கள் பல தலைமுறைகளின் இரகசியங்களைப் பாதுகாத்து வைத்திருந்தன. ஆனல் பிறப்பு, இறப்புத் தேதிகளைத் தவிர வேறு எந்த விவரமும் அவற்றில் போறிக்கப்படவில்லை.

இடுகாடு புனிதத் தலம். மலைவாசிகள் அதன் அமைதியைப் பரிவுடன் காத்தனர். காட்டுப் பழமரங்கள் எவராலும் தொடப்படாமல் இங்கே தழைத்து வளர்ந்தன. முந்திரிப் பழங்களின் அளவே கொண்ட ஆப்பிள்கள் காய்த்துக் குலுங்கிய காட்டு ஆப்பிள் மரத்தின் பின் மறைந்திருந்தது கும்மட்ட முகடு வேய்ந்த சிறு வீடு. கும்மட்டத்தின் உச்சியில் ஒரு கோளம் வைக்கப்பட்டிருந்தது. ஜன்னல்களுக்குப் பதிலாக முக்கோணத் துவாரங்கள். கதவு பழங் காலத்தது, செதுக்கு வேலைப்பாடு கொண்டது. ஷேக் ஹாஜி இபன்-பம்மாத் என்ற துறவியின் சமாதி அது.

மதிப்புக்குரியவரும் அசாரமாய் இருக்கின்றவருமான முதாளர்தான் முஸ்லீம்களுக்குப் புனிதமான இந்த இடத்துச் செல்வது வழக்கம். குபச்சீ கிராமத்தில் இரண்டாயிரம் பேர் இருந்தனர், ஒவ்வொரு குடும்பத்திலும் செதுக்குச் சித்திரக் கலைஞர் ஒருவர் தவருமல் இருந்தார். ஆனல் அசாரங்களை முறைப்படி அனுசரித்தவர்கள் இந்நாட்களில் இங்கே அதிகம் பேர் இல்லை.

சாதாரணச் சீட்டித் துணி உடை அணிந்த ஒரு சிறுமி ஷேக்கின் சமாதிக்குப் பின்னல் சென்றுள். அவள் பெயர் குல்தூம். வயது பதினென்றுதான், ஆனல் பார்வைக்கு இன்னும் பெரியவளாகத் தோன்றினள். சிறுமி விம்மி அழுது கொண்டு, கண்ணீரைத் தேய்த்து முகமெல்லாம் பூசிக்கொண்டு நின்றுள். பெரிய கராக்குல் தொப்பிகள் அணிந்தவர்கள் அவளுடைய தகப்பனர், குபச்சீ கிராமத்தின் செதுக்குச் சித்திரக் கலைஞர், பஹ்மூதை அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள். சிறுமி அடிக்கடி அந்தத் திக்கில் பார்வையைச் செலுத்திய வண்ணமாய்] இருந்தாள். தங்கள் காலஞ்சென்ற நண்பனுக்கு

இறுதிக்கடன் செலுத்த வந்திருந்த கலைஞர்கள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பஹ்ரூத் தம் குடும்பத்தின் ஒரே ஆடவர். அவர் திடீரென் இறந்துபோனார். அவருடைய மனைவி பிக்காவும் புதல்வி குல்தூமும் அனாதைகள் ஆகிவிட்டார்கள்.

இறுதிச் சடங்கு முடிந்தது. ஒரு முதியவர் சம்பிரதாயப்படி குரானின் சில பகுதிகளை ராகத்துடன் படித்தார். அப்புறம் எல்லாரும் அவரவர் இடங்களிலிருந்து எழுந்து, அதிகப்படி வார்த்தையால் நிசப்தத்தைக் குலைக்க விரும்பாதவர்கள் போல மௌனமாகக் கலைந்து சென்றார்கள்.

குல்தூம் தனித்திருந்தாள். அவள் தகப்பனாரின் புதையிடத்துக்குப் பாய்ந்துபோய், இன்னும் ஈரமாயிருந்த குளிர்ந்த தரையைத் தழுவிக் கொண்டு கதறியழுதாள்.

வேகு நேரம் கழித்தே அவள் அழுகை ஒய்ந்து களைத்துச் சோர்ந்து கிராமம் திரும்பினாள். வீடு ஆட்களால் நிறைந்திருந்தது. விதவைக்குத் தேறுதல் சொல்ல வந்திருந்தார்கள் கிராமத்தார். பலருடைய விழிகளில் கண்ணீர் பளிச்சிட்டது. பஹ்ரூத் தேர்ந்த செதுக்குச் சித்திரக் கலைஞராக மட்டும் அல்ல, உளமார்ந்த நல்லியல்பு கொண்டவராகவும் இருந்தார்.

ஆனால் இறந்தவர் வீட்டில் குழுமியிருந்தவர்களில் ஒருவராவது குல்தூமைக் கவனிக்கவில்லை. ஒருவராவது அவளுக்கு ஒரு வார்த்தைகூடத் தேறுதல் சொல்லவில்லை. வயதுவந்த மனிதனின் இதயத்தில் உள்ளதுபோன்று அவ்வளவே பெருந்துயரம் குல்தூமின் சிறு இதயத்திலும் இருக்க முடியும் என்றே ஒருவரும் நினைக்கவில்லை போலும். தான் தனியானவள் என்ற உணர்வு இதனால் சிறுமியின் மனத்தில் இன்னும் கடுமையாக உறைத்தது. அவள் தகப்பனாரின் வெறுமையான சிற்பக்கூடத்துக்குள் போய், கதவைச் சாத்திக் கொண்டு, துயரம் தாங்க முடியாமல் மென்மையான கரடித் தோல்மேல் உட்கார்ந்தாள். தகப்பனார் சிற்றுளியால் வேலை செய்கையில் இங்கேதான் அவர் காலருகே அவள் ஒண்டிக் கொள்வது வழக்கம். தகப்பனார் அவளுக்குக் கதைகள் சொல்லுவார். தந்தைக்கு ஒத்தாசை செய்ய மகள் எப்போதும் ஆயத்தமாயிருந்தாள். அவர் செதுக்கு வேலையை முடித்ததுமே கலைப் பொருளைத் துப்புரவு செய்து அதற்கு மெருகு கொடுப்பாள் குல்தூம்.

''நீ என்ன செய்கிறாய்?.. இங்கே ஏன் செதுக்குகிறாய், அங்கே ஏன் செதுக்கவில்லை?... வெள்ளிக் கம்பி உனக்கு எதற்காக?'' என்று சில வேளைகளில் கேள்வி மேல் கேள்வி போடுவாள்.

அவளுக்கு ஆயிரம் சந்தேகங்கள் கிளம்பும். தகப்பனார் அவளுடைய கேள்விகளுக்குப் பொறுமையாக விடைகள் அளிப்பார், ஒவ்வொரு அற்ப விஷயத்தையும் விளக்க முயல்வார். ஆனால் தாயார் குறுக்கிடுவாள்.

''நீ அப்பாவின் வேலைக்கு இடைஞ்சல் செய்கிறாய். உனக்கு இது தெரிந்து ஆக வேண்டியது என்ன? நீ ஆண்பிள்ளை இல்லையே. பொற்கொல்லன் வேலை பெண்களுக்கு ஏற்றது அல்ல'' என்று அவள் அடிக்கடி சொல்லுவாள்.

''பெண்களுக்கு இந்த நுட்பமான கலை ஏன் ஏற்றதில்லை?'' என்று புரியாமல் திகைப்பாள் குல்தூம்.

உண்மைதான். குபச்சீ கிராமத்தில் ஒரு பெண்கூடப் பொற்கொல்லர் வேலை செய்வதில்லை.

இப்போது, துக்கத்தால் மனம் இடிந்துபோன குல்தூம் இதையெல்லாம் பற்றிச் சிந்தித்தாள். அப்புறம் சிற்பக்கூடத்தின் தரையில் விரித்திருந்த கரடித்தோல் மேல் படுத்து உறங்கி விட்டாள்.

அதிகாலையில் கம்மியர்களைக் கூட்டுறவுச் சங்கத் தொழில் நிலையத்துக்கு அழைப்பதற்கான மணி அடித்தது. பிக்கா வழக்கப்படி துள்ளி எழுந்தாள். அப்புறந்தான் அவளுக்கு நினைவு வந்தது, அவர்கள் வீட்டிலிருந்து வேலைக்குப் போவதற்கு இப்போது ஒருவரும் இல்லை என்பது.

வழக்கமாக விருந்தாளிகளை வரவேற்பதற்கான அறையில் கடிகாரம் ஏழுமணி அடித்தது. பள்ளி தெல்ல ஆயத்தம் செய்ய நேரம் ஆகிவிட்டது.

''உடம்பெல்லாம் ஒரே தளர்ச்சி!'' என்றாள் பிக்கா.

''நீ படுத்திரு, அம்மா. நானே தேநீர் தயாரிக்கிறேன்'' என்றாள் குல்தூம்.

''நீ அகாலத்தில் எங்களை விட்டுப் போய்விட்டாய், பஹ்மூத்!'' என்று மறுபடி அழத் தொடங்கினாள் பிக்கா.

குல்தூம் முகம் சுளித்தாள்.

''கண்ணீரால் அப்பாவை மீட்டும் உயிர்ப்பிக்க முடியும் என்றால் நானும் உன்னோடு சேர்ந்து அழுதிருப்பேன், அம்மா. இனி நாம் பிழைப்பு நடத்துவது எப்படி?'' என்றாள்.

பிக்கா தலையை ஆட்டினாள்.

''ஆமாம், என் சின்னக் கண்ணே, என் சமர்த்து மகளே! அப்பாவின் பெட்டியை எடுத்து வா'' என்று மகளை ஏவினாள்.

குல்தூம் தகப்பனாரின் சிற்பக்கூடத்துக்குப் போனாள். சிற்றுளிகள், சிறு சுத்தியல்கள், இடுக்கிகள் முதலிய கருவிகளைப் பார்வையிட்டுப் பெரு மூச்சு விட்டாள். தகப்பனார் தாம் செய்த நகைகளை வைத்திருந்த பெட்டியைத் தேடி எடுத்துத் தாயாரிடம் கொண்டு கொடுத்தாள். பெட்டியில் சில வெள்ளி விரல் காப்புகளும் கண்ணாடிப் ''போலி இரத்தினக் கற்கள்'' பதித்த தங்க முலாம் பூசிய மோதிரங்களும் மூன்று ஜோடி கம்மல்களும் மட்டுமே இருந்தன.

பிக்கா பெட்டியில் இருந்தவற்றைக் கூர்ந்து பார்த்து விட்டு, ''இவை நமக்குக் கொஞ்ச நாட்களுக்குத்தான் போதும்'' என்று சிந்தனையுடன் சொன்னாள்.

''அப்புறம் என்ன செய்வது?'' என்று கேட்டாள் மகள். தாயார் அவள் பக்கம் திரும்பி, ''ஒருவேளை, அப்பாவின் கருவிகளை விற்போமா? நீ மட்டும் ஆண் குழந்தையாய் இருந்தால், எல்லாக் கருவிகளையும் உனக்காகப் பாது காத்து வைத்திருப்பேன்.''

குல்தூம் கலவரத்துடன் தாயாரை நோக்கினாள். அவளுக்கு இந்தச் சொற்கள் பிடிக்கவில்லை.

''அம்மா, கருவிகளை விற்காதிருப்போம். இவை அப்பாவின் நினைவுச் சின்னங்கள் ஆயிற்றே!'' என்று பணிவுடன் கெஞ்சினாள்.

* * *

இதற்கு ஒரு வருடம் கழிந்துவிட்டது. குல்தூம் நான்காம் வகுப்பிலிருந்து தேறி ஐந்தாம் வகுப்புக்குப் போய்விட்டாள்.

பள்ளிக்கூடத்தில் பட வரைவு வகுப்பு. குல்தூம் கரும் பலகை அருகே நின்றாள். குபச்சிச் சித்திரக் கோலம் வரையும் படி ஆசிரியர் அவளிடம் சொன்னார். செதுக்குச் சித்திரக் கலைஞர்கள் மூன்று வகையான பட வரைவுகளைக் கையாளுவது வழக்கம் என்பது குபச்சியில் எல்லோருக்கும் தெரிந்ததே. ஒன்று ''மர்ஹராய்'' எனப்படுவது. இதன் அர்த்தம் ''அடர்ந்த புதர்''. பூக்களும் இலைகளும் சிக்கலாகப் பின்னியது இந்தப் படம். பூக்கள் இல்லாத நீள்வட்ட வடிவானது ''தூத்தா''. சித்திர வேலையின் நடுவில் முத்திரை போல அமைந்தது ''தீம்பா''.

இவற்றில் குல்தூம் எதைத் தெரிந்தெடுப்பாள்? சந்தேகம் இல்லாமல் ''தூத்தா'' சுளுவானது. நேரான தண்டு வரைந்து, அதிலிருந்து சுருண்டு செல்லும் சிறு கிளைகளையும் அவற்றில் சிற்றிலைகளையும் தீட்ட வேண்டும், அவ்வளவுதான்.

குல்தூம் வரையத் தொடங்கியதும் மாணவர்கள் கரும் பலகையை உற்றுப் பார்க்கலானார்கள். அவள் வரைய வரைய அவர்களுடைய ஆச்சரியம் அதிகமாயிற்று. எல்லாவற்றிலும் சில்கலான ''மர்ஹராய்'' படத்தைக் குல்தூம் அனுயாசமாக, தங்கு தடையின்றி வரைந்தாள். கடந்த நூற்றாண்டில் இந்தக் கிராமத்தை ஐரோப்பா முழுதும் பிரபலமாக்கிய புகழ் பெற்ற குபச்சிக் கலைஞரான தூப்சி என்பவருடைய நேர்த்தியான சித்திரக் கோலத்தை வியப்பூட்டும் துல்லியத்துடன் வரைந்து விட்டாள் அவள்.

''ஓகோ!'' என்றார் திகைப்புற்றுவிட்ட ஆசிரியர். ''குல்தூம், நன்றி உனக்கு! உட்காரு நீ!''

வகுப்பு முடிந்ததும் பக்கத்து வீட்டுப் பையனாகிய மஹப் அவளிடம் வந்தான்.

''நீ கேட்ட சாமானைக் கொண்டுவந்திருக்கிறேன்.''

''நன்றி.''

மஞப் கொண்டுவந்திருந்தது சிகரெட்டுப் பெட்டி. குல்தூம் தன் நோட்டுப் புத்தகத்தை எடுத்து, சிகரெட்டுப் பெட்டி மேலிருந்த சித்திரக் கோலத்தை விரைவாகப் பெயர்த்து வரைந்து கொண்டாள்.

''இது உனக்கு எதற்காக என்பது எனக்குப் புரியவில்லே. எத்தனே சித்திரக் கோலங்களே நீ பெயர்த்து வரைந்து கொண்டிருக்கிருய்!'' என்று விளங்காமை தோன்றத் தோள்களேக் குலுக்கிஞன் மஞப்.

''கற்றுக்கொள்கிறேன்'' என்று புன்னகை செய்தாள் குல்தூம்.

தேர்ந்த கலேஞர்கள் வரைந்த சித்திரக் கோலங்களில் குல்தூம் வெகு காலமாகவே அக்கறை காட்டி வந்தாள். ஒரு கலேஞரின் கைவேலேக்கும் வேறு கலேஞரின் வரைவுக்கும் உள்ள நுட்பமான வேறுபாடுகளே இப்போது அவ ளால் பிரித்துக் காண முடிந்தது. வரைவதற்கு அவ்வளவாக நேரம் கிடைப்ப தில்லே அவளுக்கு. அவளுடைய தாயார் ஓயாமல் நோய்ப்பட்டாள். பள்ளிப் படிப்போடு கூடவே வீட்டைச் சுத்தம் செய்வது, சமைப்பது, பால் கறப்பது, எல்லாவற்றையும் குல்தூம் தான் சமாளிக்க வேண்டியிருந்தது.

தகப்பஞர் காலமான பிறகு சிறுமி குல்தூம் மாறிப்போய் விட்டாள். முன்பும் அவள் வளவளவென்று பேசுவதில்லேதான். இப்போதோ, அவள் வாயிலிருந்து வார்த்தை கிளம்புவதே அரிதாகிவிட்டது. முன்பு குல்தூம் இருட்டைக் கண்டு அஞ்சிஞள், அவள் தனியாக இருப்பதே அரிதுதான். ஒன்று, தகப்பஞருடன் அவருடைய சிற்பக்கூடத்தில் உட்கார்ந்திருப்பாள், இல்லாவிட்டால் தாயாருக்கு வீட்டுக் காரியத்தில் ஒத்தாசை செய்வாள். இப் போதோ, வீட்டு வேலேகளே எல்லாம் முடித்த பின் விருந்தினருக்கான முன் னறைக்குப் போய்விடுவாள். அங்கேயே தூங்குவாள். ஆரம்பத்தில் தாயார் இதஞல் கவலேப்பட்டாள். ஒரு தடவை சாவித் துளே வழியாக அறைக்குள் பார்க்கவும் செய்தாள். ஆஞல் விசேஷமாக எதுவும் அவளுக்குத் தென் படவில்லே. குல்தூம் வீட்டுப் பாடங்களேச் செய்தாள், அப்புறம் படுக்கையில் படுத்துக்கொண்டு விளக்கை அணேத்துவிட்டாள்.

ஆஞல் முற்றிலும் வியப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று தொடங்கியது. காலஞ் சென்ற பஹ்மூதின் நகைப்பெட்டி மாயச் சக்தி உள்ளதுபோலத் தோன்ற லாயிற்று. திங்கட்கிழமையன்று பிக்கா அந்தப் பெட்டியிலிருந்து ஒரு ஜோடிக் கம்மல்களே எடுத்துக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொடுப்பாள். மறு வாரம் பார்க்கும் போது அதே பெட்டியில் புதிய கம்மல்களோ மோதிரமோ இருக்கும். இந்த மாயத்தைப் பற்றி பிக்கா ஒருவரிடமும் ஒரு வார்த்தை கூடச்சொல்லவில்லே. சொன்ஞல் சைத்தான்கள் குடும்பத்துக்கு உதவுவதை நிறுத்திவிடுவார்களோ என்று பயந்தாள். இது சைத்தான்களின் வேலேதான் என்பதில் மட்டும் அவளுக்குச் சந்தேகமே ஏற்படவில்லே.

''மாய'' நகைப்பெட்டி தாயாரையும் பெண்ணையும் காப்பாற்றி வந்தது. கிராமத்தின் எல்லாக் குடும்பத்தாரையும் போலவே அவர்களும் வசந்த காலத்தில் வீட்டைச் செப்பனிட முடிந்தது.

மே தின விழாவுக்கு முன்பு, கூட்டுறவுச் சங்க அலுவலகம் சிறந்த செதுக்குச் சித்திரப் போட்டி ஒன்றை அறிவித்தது. பரிசு பெறும் பொருள்கள் வெகுவாக மதிக்கப்படும். அவை கிராமப் பொருட்காட்சிசாலையில் கட்டாயமாக வைக்கப்படும். மனுபின் தகப்பனர் கூட்டுறவுச் சங்கத் தலைவர். ஆகவே இந்தப் போட்டியைப் பற்றி விவரமாகத் தெரிந்து சொல்லும்படி குல்தூம் அவனைக் கேட்டுக்கொண்டாள்.

''உனக்கு இது எதற்காக?'' என்று ஆச்சரியப்பட்டான் மனுப்.

''வேண்டும்!'' என்று பிடிவாதமாகத் தலையை ஆட்டினாள் குல்தூம்.

''எதற்காக என்று அப்பா என்னைக் கேட்டால் என்ன சொல்வது?''

''உனக்கு இது புரியவில்லையா என்ன? நமது பள்ளிச் செய்தித்தாளுக்காக வேண்டும் இந்த விவரம். அப்படியே சொல்லு.''

மனுப் குல்தூம் சொன்னபடியே செய்தான். பள்ளிச் செய்தித்தாளிலும் இந்தப் போட்டி பற்றிய குறிப்பு வெளியாயிற்று.

மீண்டும் நாட்கள் ஒன்றன்பின் ஒன்ருகப் பறந்தன.

ஒரு நாள் குல்தூம் வீட்டிலிருந்து வழக்கத்துக்கு முன்னரே புறப்பட்டாள். பள்ளிக்கூடம் போகும் வழியில் அவள், புகழ்பெற்ற கலைஞர் தூப்சீயின் வழித்தோன்றலாகிய ஹாபீப் ஆசானின் வீட்டுக்குச் சென்ருள்.

முதிய செதுக்குச் சித்திரக் கலைஞருக்குப் பணிவாக வணக்கம் தெரிவித்த பின், அழகிய சித்திர வேலை செய்து வெள்ளிக் கங்கணம் ஒன்றை அவரிடம் நீட்டினாள்.

''அப்பாவின் நகைப்பெட்டியில் இதைக் கண்டெடுத்தேன். இதைப் போட்டிக்குக் கொடுக்கலாமா?'' என்ருள்.

ஹாபீப் ஆசான் அந்த நகையைக் கூர்ந்து நோட்டமிட்டார். பிறகு குல்தூமைத் துருவி ஆராய்பவர்போல உற்றுப் பார்த்தார்.

''இது பஹ்மூத் ஆசானின் கைவேலை அல்ல, மகளே'' என்ருர்.

''அப்படியா? ஒரு வேளை அவ்வளவு நன்ருகச் செய்யப்படவில்லையோ, முரட்டு வேலையோ? சித்திரக் கோலம் அழகாய் இல்லையோ?'' என்று கேட்கும் போதே குல்தூம் முகஞ்சிவந்தாள்.

முதிய கலைஞர் தலை அசைத்தார்.

''இதைச் செய்த கலைஞர் தேர்ச்சி உள்ளவர், சின்னப் பெண்ணே. உன் தகப்பனரை நான் நன்ருக அறிந்திருந்தேன். அவருடைய வலது கையில் இரண்டு விரல்கள் குறைவு, போரில் அவற்றை இழந்துவிட்டார். ஆயிரம்

பொருள்களுக்கு நடுவில் அவருடைய கைவேலையை என்னல் சட்டெனக் கண்டுகொள்ள முடியும்'' என்ருர்.

மூக்குக் கண்ணுடிக்கு மேலாகக் குல்தூம் மீது பார்வை செலுத்தினர் ஹாபீப் ஆசான். அவள் மன வருத்தமும் கிளர்ச்சியும் அடைந்திருப்பதைக் கண்டார். கவுனின் கழுத்துப் பட்டை விளிம்பைத் தடுமாற்றத்துடன் விரல்களால் நெருடிக்கொண்டிருந்தாள் அவள்.

''இந்தக் கங்கணத்தில் சிறந்த கலைஞனின் கைவேலை தென்படுகிறது. நீ இதை வைத்துவிட்டுப் போகலாம்'' என்றார் ஹாபீப் ஆசான்.

மன மகிழ்ச்சியால் குல்தூமின் முகம் சிவப்பேறியது.

''வணக்கம். நான் போய்வருகிறேன். இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கு நேரமாகி விடும்'' என்றாள்.

ஹாபீப் ஆசானோ, அவள் கொண்டு வந்த கங்கணத்தைக் கூர்ந்து பார்த்தவாறு இன்னும் வெகு நேரம் உட்கார்ந்திருந்தார்.

''வரிகள் எவ்வளவு நேராக, நுட்பமாக இருக்கின்றன! பூக்கள் உயிருள்ளவை போல இருக்கின்றன, என்னோடு பேசுகின்றன. மற்றக் கலைஞர்களுக்குக் கட்டாயம் காட்ட வேண்டும்'' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்

டார். பின்பு மனைவியிடம் ''நான் காலை ஆகாரம் சாப்பிடப் போவதில்லை. அவசரமாக வேலைக்குப் போக வேண்டும்!'' என்று உரக்கச் சொன்னார்.

கங்கணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

* * *

போட்டியில் பரிசு பெற்ற பொருள்களில் வெள்ளிக் கங்கணமும் இருந்தது. ''செய்தவர் யார் என்று தெரியவில்லை'' என்ற குறிப்புடன் அது பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டது.

இதற்குச் சற்று பின்னர் நடந்தது பின்வரும் நிகழ்ச்சி.

...ஒரு நாள் நடு நிசிக்குப் பிறகு, ஹாபீப் ஆசானின் வீட்டில் கிராம முதியவர்கள் வழக்கம் போலக் கூடினார்கள். திடீரென்று குதிரைக் குளம்பொலி கேட்டது. பாய்ந்து வந்த குதிரைமேல் சேணங்கூட இல்லாமல் உட்கார்ந்து மேய்ச்சல் தரையிலிருந்து வந்தான் மனுப். அவன் சட்டெனத் தரையில் குதித்து, ''ஷேக்கின் சமாதியில் மறுபடி விளக்கு எரிகிறது'' என்று மூச்சு திணறச் சொன்னான்.

''இதற்காகவா குதிரையை இப்படி விரட்டினாய்?'' என்று கூட்டுறவுச் சங்கத் தலைவரும் அவனுடைய தந்தையுமான யூசுப் கேட்டார்.

''இந்தத் தகவல் உங்கள் அக்கறைக்கு உரியதாய் இருக்கும் என்று நாங்கள் நினைத்தோம்'' என்று சமாதானம் கூறினான் மனுப். ''ஏதோ ஒரு பயங்கர மிருகம் உள்ளே ஓடியதைப் பையன்கள் பார்த்தார்களாம்'' என்றான்.

''ஷேக்கின் சமாதிக்கு உள்ளே போய் அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும்'' என்று தயக்கத்துடன் சொன்னார் ஹாபீப் ஆசான்.

கிழவர்களின் முகங்களில் கவலை படர்ந்தது.

''ஆமாம். ஷேக்கின் கல்லறை பற்றிய இந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேளை வந்துவிட்டது. அங்கே விளக்கு எரிவதாக இதற்கு முன்பும் நான் கேள்விப்பட்டேன். போவோமா, நல்லவர்களே? '' என்று கேட்டார் தலைவர் யூசுப்.

''துறவியின் ஆன்மாவுக்கு இடைஞ்சல் செய்வானேன்?'' என்று தமக்குத் தாமே போல முணுமுணுத்துக் கொண்டார் முதிய கலைஞர் அலீ ஆசான்.

''போகலாம், வாருங்கள்'' என்று தீர்மானமாகக் கூறி, முக்கி முனகிக் கொண்டு விரிப்பிலிருந்து எழுந்தார் ஹாபீப் ஆசான்.

* * *

கற்பாங்கான தரைமேல் கொந்தளித்துப் பாய்ந்த ஆற்றின் முழக்கம் கீழே கணவாயிலிருந்து வந்தது. மனுப் இடுகாட்டின் வாயிலில் குதிரையை நிறுத்திவிட்டுத் தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டான். அவன் கால

டியிலிருந்து பறந்தது இரவுப் பறவை. மனுப் திகிலால் அனேகமாகக் கூச்சலிடப் பார்த்தான்.

அதோ தெரிந்தது ஷேக்கின் சமாதி. ஆம், முக்கோணத் துவாரத்தின் வழியே சந்தேகமில்லாமல் வெளிச்சம் தென்பட்டது.

ஹாபீப் ஆசான் உடன் வந்தவர்களை விட்டுவிட்டு உற்றுக் கேட்டார்.

சிறு சுத்தியல் விட்டு அடிக்கும் ஓசை கல்லறைக்கு உள்ளே இருந்து தெளிவாகக் காதில் பட்டது.

ஹாபீப் ஆசான் கற்சுவரில் இருந்த இடுக்கோடு ஒண்டியபடி உள்ளே என்ன நடக்கிறது என்று கூர்ந்து பார்த்தார்.

மெழுகுவத்தியின் மங்கிய வெளிச்சத்தில் ஒரு பெண் கரடித்தோல் மேல் உட்கார்ந்திருப்பதை அவர் கண்டார். அவள் கையில் வெள்ளி மின்னியது. அவள் வேலை செய்துகொண்டிருந்தாள். அந்தப் பெண் வேறு யாரும் அல்ல, காலஞ்சென்ற பஹ்ரூதின் மகள் குல்தூம்தான்.

ஹாபீப் ஆசான் வெகு நேரம் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

''உஷ்ஷ்.... தாயாருக்கு இடைஞ்சலாய் இருக்க வேண்டாம் என்று இங்கே வேலை செய்கிறுள்'' என்று அப்புறம் சொன்னுர்.

எல்லோரும் சந்தடி செய்யாமல் திரும்பிப் போய் விட்டார்கள்.

மறு நாள் காலையில் ஹாபீப் ஆசான் பொருட்காட்சிசாலைக்குப் போனுர். அங்கே குபச்சீ கிராமத்தின் சிறந்த கலைஞர்கள் செய்த பொருள்கள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த அழகிய கங்கணத்தின் பக்கத்தில்,

''செய்தவர் யார் என்று தெரியவில்லை''

என எழுதப்பட்ட குறிப்பு இருந்தது. ஹாபீப் ஆசான் அதை அகற்றிவிட்டு,

''மாணவி குல்தூம் செய்தது''

என்ற குறிப்பை வைத்தார்.

அ ந் தி ரே ய் து கி னெ த் ஸ்

மாம்பெத்தின் குல்லாய்

சமர்ப்பணம்: நத்தீனுவுக்கு

மாம்பெத்துக்கு ஏழு வயது. இப்போதுதான் முதன்முதலாய்க் குளிர் கால மேய்ச்சல் வெளிகளுக்கு வந்திருந்தான்.

அவனுக்கு இங்கு யாவும் புதுமையாய், உள்ளங் கவர்வனவாய் இருந்தன. வந்ததும் உடனே எங்கும் சென்று சுற்றிப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. மந்தைகளைக் காவல் புரிந்த நாய்களுடன் ஓடிச் சென்று சுற்றிவர விரும்பினுன். அவனது அருமைச் செம்மறியாடான வெள்ளைவால் எப்படி இருக்கிற தென்று பார்த்துவிட்ட வர ஆசைப்பட்டான். யாவற்றுக்கும் முக்கியமாய், அவன் அப்பாவும் அம்மாவும் இப்போது வசித்து வந்த சிறு குடிசைக்கு அடியில் புகுந்து பார்க்க விரும்பினுன். அது சாதாரண குடிசையல்ல, சக்கரங்களுடன் கூடியது. அதற்கு அடித்தளம் ஏதும் இல்லை, நான்கு சக்கரங்களின் மீது அமைந்திருந்தது. ஆம், முதலில் அவன் யாவற்றையும் பார்த்தாக வேண்டும்.

ஆனுல் அவனை அழைத்து வந்திருந்தவரைப் போகவிடாமல் உட்கார வைத்து அப்பாவும் அம்மாவும் அவரிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தனர்: கிராமத்தில் எல்லாம் நல்லபடி நடந்தேறுகின்றனவா, பாட்டி எப்படி இருக்கிறுர், மாமா என்ன செய்கிறுர்....

குளிர் கால மாலைப் பொழுது குறுகலானது. மாம்பெத் அங்கும் இங்கும் சென்று எட்டிப் பார்ப்பதற்குக் கூட நேரம் இல்லை, அதற்குள் விளக்குகளைக் கொளுத்தி விட்டார்கள், இரவு சாப்பாடு ஆரம்பமாகி விட்டது. பிறகு அவனைப் படுக்க வைத்து விட்டார்கள். பயணம் புரிந்து களைத்துப் போயிருப்பான், படுத்துறங்க வேண்டும் என்றுர்கள்.

அம்மா லாந்தரைக் கொளுத்திக் கொண்டு ஆட்டுக் கிடையிடம் போய்ச் சேர்ந்தார். அப்பா படுத்துக் கொண்டார். பகற் பொழுது முழுதும் அவர் கிடையுடன் இருந்த வேலை செய்திருந்தார், படுத்ததும் தூங்க ஆரம்பித்து அறை முழுதும் கேட்கும்படி விசிலடித்தார். தூங்கும் போது ஏனையோரைப் போல் அவர் குறட்டை விடவில்லை, மூக்கால் விசிலடித்தார்.

முடிவில் யாவும் அமைதியானதும் மாம்பெத் தனது படுக்கையை விட்டெழுந்து, சன்னலருகே தொங்கிய உபரி லாந்தரின் திரியை உயர்த்தினுன்.

கால்களில் பூட்சுகளைப் போட்டுக் கொண்டான். பிறகு அம்மாவினுடைய பழைய மென்முடிக் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டான், மழையானாலும் குளிரானாலும் வெயிலானாலும் எதற்கும் அஞ்சாதபடி அப்படி அடிபட்டுத் தழும்பேறிப் பதப்பட்டிருந்த கோட்டு அது. காது மூடிகளுடன் கூடிய அப்பாவின் பழைய மென்முடிக் குல்லாயைத் தலையில் வைத்து அழுத்திக் கொண்டு, வெது வெதுப்பாய், அடக்கமாயிருந்த அந்தச் சிறு குடிசையிலிருந்து ஓசையின்றி வெளியேறி கடுங் குளிராயிருந்த இருளினுள் பிரவேசித்தான்.

தியென்—ஷான்* மலைகளில் பிப்ரவரி மாத இரவுகள் காரிருள் அடர்ந்து கோரமாய் இருப்பவை. மலையிடுக்கிலிருந்து சீறிப் பாய்ந்த கொடுங் காற்று வயிறு காய்ந்த ஓநாயைப் போல் ஊளையிட்டு, வெண்பனி அல்லது மழை அல்லது ஊனை உறையச் செய்யும் உறைபனியை சூழற்றி அடித்துக் கொண்டு வீசும்.

மேய்ப்பாளர்களது அந்தத் தன்னந்தனிக் குடிசையைச் சுற்றி புதர்களோ, வேலிகளோ எவையும் இல்லை—நிரந்தரப் பனி மூடிய வெண் முடிகளுடன் நின்ற மலைகளிடையே அமைந்த விசாலமான சமவெளிதான் விரிந்திருந்தது. பிற்பகலில் மாம்பெத் அங்கே வந்து சேர்ந்த போது குளிர் கால மேய்ச்சல் வெளியைச் சுற்றி நெடுந்தொலைவுக்கு யாவும் கண்ணுக்குத் தெரிந்தன, எல்லா ஓசைகளும் காதில் விழுந்தன. ஆனால் இப்பொழுது காற்றின் மூர்க்கக் கூச்சலில் எதுவுமே காதில் விழவில்லை, காற்றிலிருந்து பாதுகாப்பாய்க் குடிசைக்குப் பக்கத்தில் வந்து நின்ற ஆடுகளுடைய கத்தலுங்கூட காதுக்கு எட்டவில்லை. எதையும் பார்க்க முடியவில்லை. மங்கிய மஞ்சள் ஒளி மட்டும் தான் அந்தக் கொடிய மையிருட்டில் அவ்வப்போது கண்ணுக்குத் தெரிந்தது. இரவெல்லாம் கிடையைச் சுற்றி நடந்து வந்த அம்மாவின் கையிலிருந்த லாந்தரின் ஒளி அது.

அம்மாவின் நிலை குறித்து நினைத்த போது மாம்பெத்துக்கு வருத்தமாயிருந்தது. இந்தக் குளிரிலும் பயங்கர இருட்டிலும் அம்மா தனியே வேலை செய்ய வேண்டியிருந்தது. அம்மாவுக்கு உதவி செய்ய வேண்டுமென்று அவன் வேகமாய் நடந்தான்.

காற்றின் இரைச்சல் அவன் காலடி ஓசையை மூழ்கடித்தது, அம்மாவுக்குப் பக்கத்தில் வந்ததும் கூப்பிடுவதற்காக அவன் வாயெடுத்தான். அப்போது அவன் தாய் ஏதோ அபாயத்தை உணர்ந்து கொண்டது போல் வெடுக்கென

* தியென்-ஷான்—ஆசியாவிலுள்ள மலைத் தொடர், சுமார் 2500 கிலோ மீட்டர் நீளமுடையது. இதில் சுமார் 1200 கிலோமீட்டர் நீளமுள்ள பகுதி சோவியத் கூட்டரசில் இருக்கிறது.—பதிப்பாசிரியர்.

அசையாமல் நின்றாள். தலை குனிந்து சற்று அதிகக் கூர் உணர்வு கொண்ட இடது காதைக் காற்றின் திசையில் திருப்பிக் கூர்ந்து கவனித்தாள்.

மாம்பெத்தும் உடனே எச்சரிக்கையுடன் கவனித்தான். இருட்டினுள் உற்றுப் பார்த்தான். ஆடுகளுக்கு ஏதோ அபாயம் நெருங்குவதை அம்மா கண்டு கொண்டுவிட்டதாய் நினைத்தான்.

''அம்மா, என்ன அது?'' என்று மிரண்டு போன குரலில் கேட்டான்.

ஆனால் காற்றின் ஈரம் தோய்ந்த கனத்த அலை அவன் முகத்திலே மோதி அவனது குரலை மூழ்கடித்துவிட்டது.

''அம்மா!''—உச்சக் குரலில் கத்தியபடி மாம்பெத் அவன் தாயிடம் ஓடினான்.

''மாம்பெத், நீதானா அது! என்னைப் பயந்து மிரளச் செய்து விட்டாயே! ஓநாய்தான் பதுங்கிக் கொண்டு என்னருகே வருகிறது என்றல்லவா நினைத்தேன். எதையும் கண்ணால் பார்க்கவும் முடியவில்லை, காதால் கேட்கவும் முடியவில்லை. ஆனால் ஏதோ அருகே இருக்கிறது, நெருங்கி வருகிறது என்று என் முதுகு எனக்கு உணர்த்திற்று.''

''எப்போதுமே நீ முதுகால் உணர்ந்து கொண்டு விடுகிறுய். அது எப்படி அம்மா, முடிகிறது உன்ஞல்?''

''நான் மட்டுமல்ல, மேய்ப்பாளர் ஒவ்வொருவரும்தான் இப்படி உணர்ந்து கொள்கிருர்'' என்று உரும்கான் பதிலளித்தாள், தனது மழைக் கோட்டின்

அடிமுனையை இழுத்து அதனால் தன் மகனை அணைத்து மூடிக் கொண்டாள்.

''இரவெல்லாம் சுற்றி நடந்து வருகிறேன்—எங்கும் ஏதும் நடைபெறவில்லை. பிறகு திடுமெனப் பகீர் என்கிறது, முதுகுக்குப் பின்னால் யாரோ நிற்பது போலவும், கிடையின் மீது பாய்வதற்காகப் பதுங்குவது போலவும் தோன்றுகிறது.''

இதைக் கேட்டதும் மாம்பெத்துக்கு முதுகுத் தண்டினுள் சுருக்கென்றது.

''திரும்பிப் பார்ப்பதற்குக்கூட நேரமில்லை, அதற்குள் நாய்கள் பாய்ந்தோடிச் சென்று குரைக்க ஆரம்பிக்கின்றன.''

''அபாயம் வருவதாய் இன்று இரவு உன் முதுகு உனக்கு உணர்த்தியதா, அம்மா?'' என்று மாம்பெத் பரபரப்புடன் கேட்டான்.

''இன்று இரவு என் முதுகு குளிர் தாங்காமல் விறைத்துப் போய்விட்டது, ஓநாய் வந்து பாதத்தால் பிறாண்டினாலுங்கூட என்னால் எதையும் உணர முடியாது.''

''பாவம், ஆட்டுக் குட்டிகள் குளிர் தாங்காமல் தவிக்கும்'' என்று மாம்பெத் கவலை தொனிக்க பெருமூச்செறிந்து கொண்டான். ''லாந்தரை என்னிடம் தா, சற்று நேரம் நான் காவல் புரிந்து சுற்றி வருகிறேன், நீ போய் குளிர் காய்ந்துவிட்டு வா.''

''வேண்டாம்; வேண்டாம்! மகனே, நீ போய்ப் படுத்துக் கொள், நீ தூங்க வேண்டும்.''

விருப்பம் இல்லாதவனாய் குடிசைக்குத் திரும்பினான் மாம்பெத். கதவுக்கு அருகே வந்ததும் நின்று சுற்றிலும் பார்த்தான். சப்தம் எதாவது கேட்கிறதா என்று கவனித்தான். காற்றின் இரைச்சல் கொஞ்சம் அடங்கியிருந்தது. தூக்கக் கலக்கம் கொண்ட ஆடுகள், எப்போதாவது கத்துவது காதில் விழுந்தது. குடிசையின் தட்டைக் கூரை மீது படுத்திருந்த காவல் நாய் கொய்பகார் பசியும் அயர்வும் மிக்கதாய்க் கொட்டாவி விட்டது. அதற்கு குளிராயிருந்தது, வயிறு பசித்தது. மேய்ப்பாளர்கள் தமது காவல் நாய்கள் இரவில் தூங்காமல் விழித்திருக்கும் பொருட்டு அந்தியில் அவற்றுக்குத் தீனி அளிப்பதில்லை. மாம்பெத் இந்தக் கண்டிப்பான விதியை மீறிச் சென்று, இறைச்சித் துண்டு ஒன்றை எடுத்து வந்து கூரையின் மேல் விட்டெறிந்தான். பசியால் வாடிய நாய் அந்தத் துண்டு கீழே விழுமுன் தாவிப் பிடித்து, வெள்ளைப் பற்கள் பளிச்சிட்டு ஒளிர வெடுக்கென கடித்து அதை விழுங்கிற்று.

அதன் பிறகுதான் மாம்பெத் படுத்துக் கொண்டான். கொய்பகார் முன்னிலும் இப்போது விழிப்புடன் காவல் புரியும், ஒண்டிக் கொண்டு நெருக்கமாகப் படுத்திருந்த ஆடுகளைச் சுற்றி வந்த லாந்தரின் மஞ்சள் ஒளிர்வைக் கண்கொட்டாமல் கவனிக்கும் என்று அவன் தன்னுள் கூறிக் கொண்டான்.

அமைதியாகப் படுத்திருந்த ஆடுகளை எஜமானி இரவெல்லாம் சுற்றிச்

சுற்றி வந்தாள். கண் கொட்டாமல் இதைக் கவனித்து வந்த கொய்பகார் அப்போது நினைத்திருக்கும்: ''ஏன் தூங்காமல் கண் விழித்திருக்கிறாள். நன்றாகத் தூங்கலாமே இவள். ஏதேனும் நடைபெறுமாயின் கொய்பகாராகிய எனக்குத்தானே முதலில் அது காதில் விழும். இல்லையேல் முற்றத்தின் எதிர்ப் பக்கத்தில் குவிக்கப்பட்டிருக்கும் கதகதப்பான ஆட்டுப் புழுக்கையின் மீது படுத்திருக்கும் அக்தாய்லக் எப்படியும் அதை கவனிக்கத் தவறிவிடாதே. எஜமானன் இப்பொழுது புகை பிடித்து முடித்துவிட்டுக் குடிசைக்குள் சுவரோரத்தில் படுத்துறங்குவான். ஆனால் எஜமானி, தூங்காமல் கண் விழித்திருக்கிறாளே....''

வெண்பனிப் பூச்சிடப்பட்ட கண்களின் இடுக்கு வழியே கொய்பகார் கூர்ந்து கவனித்தது, மெள்ள வட்டமிட்டுச் சுற்றிச் சென்ற மஞ்சள் ஒளித் திட்டை அது உற்று நோக்கி வந்தது.

எஜமானி இப்போது காற்று வீசிய பக்கத்தில் நின்றுவிட்டாள். ஒரு காலை மடக்கி மண்டியிட்டு கொண்டாள், எதோ சிந்தனையில் ஆழ்ந்தவளாய் அவள் அமர்ந்திருந்தாள்.

கிடையைச் சுற்றி லாந்தர் நகராததைக் கண்டதும் கொய்பகார் தலையை உயர்த்திக் காதுகளை நிமிர்த்திக் கொண்டு மோப்பம் பிடித்தது. இப்போது அது உஷாராக இருந்தாக வேண்டும்.

உறங்கும் ஆடுகளது வீச்சம்தான் சுற்றிலும் நிறைந்திருந்தது. உதயம் நெருங்கியதும் காற்றின் அவலம் தோய்ந்த இரைச்சல் குறைந்து வந்தது.

ஆனால் தொலைவில் புதர்களுக்கு இடையிலிருந்து பகையின் துர்நாற்றம் திடுமென இப்போது அதன் மூக்கினுள் ஏறியது. கொய்பகாரின் முதுகில் முடிகள் குத்திட்டு நின்றன. அது துள்ளியெழுந்தது, அதன் தசைநார்கள் விறைத்துத் துடித்தன. தனது கூட்டாளியான அக்தாய்லக்கும் காய்ந்த ஆட்டுப் புழுக்கை மேட்டிலே நின்று புதர்களின் திசையிலே உற்று நோக்கக் கண்டது.

உடனே சொல்லி வைத்தாய் போல இரண்டு நாய்களும் பலக்கக் குரைத்து எச்சரித்தபடி பாய்ந்தோடிச் சென்று உறங்கும் ஆட்டுக் கிடையை வட்டமிட்டுச் சுற்றின.

பலக்கக் குரைத்துக் கொண்டும் சீறி உறுமிக் கொண்டும் ஒன்றை நோக்கி ஒன்று ஓடின. இரண்டும் சந்தித்துக் கொண்ட போது ஒன்றையொன்று கடிக்க முயன்றன, ஆனால் அந்த வேகத்தில் அது சாத்தியமன்று. நிற்க நேரமில்லை, ஆடுகளைப் பகைவன் கவர்ந்து செல்ல முடியாதபடி தடுப்பதற்காக அவை ஓட்டமாய் ஓட வேண்டியிருந்தது.

''என்ன ஆயிற்று?'' என்று கூச்சலிட்டாள், துணுக்குற்று விழித்துக் கொண்ட உரும்கான்.

ஆடுகள் முட்டி மோதிக் கொண்டு நிற்பதையும் பரபரப்புற்று நாய்கள் அவற்றைச் சுற்றி ஓடி வருவதையும் பார்த்ததும், எங்கோ அருகாமையில் ஓநாய்கள் இருக்கின்றன என்பது உடனே அவளுக்குப் புரிந்தது. குடிசைக்கு ஓடிக் கணவனை எழுப்ப வேண்டும், இல்லையேல் துப்பாக்கியையாவது எடுத்து வர வேண்டுமென நினைத்தாள். ஆனால் அங்கே எத்தனை ஓநாய்கள் இருக்குமோ, யாருக்குத் தெரியும்? ஏற்கெனவே அவை மிக அருகாமையில் வந்து, தக்க வாய்ப்புக்காகக் காத்திருந்தாலும் இருக்கலாம். துப்பாக்கி எடுத்து வருவதற்காக அவள் போனாளெனில், அவை ஆட்டைக் கொன்று விடும்! உரும்கான் அவளது உருருக்குவைக் கையில் எடுத்துக் கொண்டாள்—ஒரு முனையில் சுருக்குக் கயிற்றுடன் கூடிய நீளமான கோல் அது. தயாராய்க் காத்திருந்த குதிரையின் மீதேறிக் கிடையைச் சுற்றிப் பறந்தோடினாள். இரண்டு சுற்று தான் அவள் சுற்றி வந்திருப்பாள், அதற்குள் சிறிதும் விருப்பமின்றி ஆடுகளிடமிருந்து பின்வாங்கி விலகிச் சென்ற மிகப் பெரிய ஓநாய் ஒன்று அவள் கண்ணில் பட்டது.

''கொய்பகார், அக்தாய்லக்!'' என்று நாய்கள் இரண்டையும் கூவியழைத்தாள். சவுக்கைச் சொடுக்கி குதிரையை விரட்டி, பின்வாங்கி ஓடிய ஓநாயைத் துரத்திக் கொண்டு, காட்டுக் கூச்சல் எழுப்பியபடி பறந்தோடினாள்.

ஓநாய் திரும்பிப் பார்த்தது. காழ்ப்புடன் அதன் பச்சை விழிகள் ஒளிர்ந்தன, உடனே அது ஓட்டமாய் ஓடிச் சென்றது.

''தொலைந்து போ, சைத்தானுக்குப் பிறந்த பைசாசமே!'' என்று ஓடிச் சென்ற விலங்கைப் பார்த்துக் கத்தி, நாய்களை உசுப்பி விட்டாள் உரும்கான்.

முட்புதர்களுக்கு அருகே குதிரையை அவள் நிறுத்தினாள். கொய்பகார் மட்டும்தான் அவளுடன் வந்ததென்பதைக் கவனித்தாள். எக்காரணத்தாலோ அவளைப் பின் தொடர்ந்து வராத அக்தாய்லக் தொலைவிலிருந்து குரைத்து எச்சரிக்கைக் குரலெழுப்பியதைக் கேட்டு கொய்பகாருங்கூட பரிதாபமாய் முனகிக் கொண்டு பின்தங்கி நின்று தன்னைப் போகவிடும்படி வேண்டியது.

தன்னைவிட கிடைக்குத்தான் நாய் அதிகமாய் வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்து கொண்டு, கொய்பகாரை அவள் திரும்பி ஓடும்படி விட்டாள். உதயத்துக்கு முன்னதான இருட்டில் அந்தக் கெட்டிக்கார நாய் மின்வெட்டெனப் பாய்ந்து மறைந்தது.

தன்னால் ஓநாயை விரட்டிச் சென்று பிடிக்க முடியாது, தான் இங்கு இருக்கையில் அங்கே கிடைக்குத் தீங்கு ஏற்படலாம் என்பது தெரிந்ததும் உரும்கான், இனி ஒருபோதும் துப்பாக்கியின்றி வெளியே வரக் கூடாதென்று தன்னைத் தானே கடிந்து கூறிக் கொண்டாள்.

துப்பாக்கியும் லாந்தரும் நாயும்தான் மேய்ப்பாளரின் உற்ற துணைகள், இரவில் இவற்றில் எதையும் கணப் பொழுதுக்கும் விட்டுப் பிரிவது சரியல்ல.

திடுமெனப் பின்னுலிருந்து துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது, பிறகு இரண்டாவது தரமும் கேட்டது. அதைத் தொடர்ந்து அக்தாய்லக் பரிதாபமாய்க் கதறுவதும் கொய்பகார் ஆத்திரமாய்க் குரைப்பதும் காதுக்கு எட்டின. வெடுக்கெனக் குதிரையைத் திருப்பிக் குடிசையை நோக்கி அவள் அதைத் தலை தெறிக்கும் வேகத்தில் பாய்ந்தோடச் செய்தாள். குடிசைக்கு அப்பால் அரைக் கிலோமீட்டர் தொலைவிலிருந்து நாய்களின் ஆவேச உறுமல்களும் தக்தொர்பாயின் கிலி கொண்ட குரலும் அவள் காதுக்கு எட்டின.

ஆனால் அவள் போய்ச் சேர்வதற்குள் யாவும் அமைதியடைந்துவிட்டன. அங்கே ஒரு பள்ளத்தில் ஓநாய் ஒன்று விழுந்து கிடந்தது. விரிந்த மார்பும் மிகுந்த ஆற்றலும் கொண்ட கொய்பகார் அதனருகே அமர்ந்து, காயமுற்ற தனது பாதத்தை நக்கிக் கொண்டிருந்தது. தக்தொர்பாய் தன் கரங்களில் ஓர் ஆட்டைத் தூக்கி வந்தான்.

''வெள்ளைவால் அல்லவா அது!'' என்று கூவினுள் உரும்கான். ''ஓநாய் அதைக் கொன்று விட்டது?''

''இல்லை, கொல்வதற்கு அதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஆனுல் கிடையை விட்டு விட்டு நீ எங்கே போனுய்?''

''ஓநாயை விரட்டிக் கொண்டு போனேன். சுருக்கை மாட்டி அதைப் பிடித்து விடலாம் என்று நினைத்தேன், ஆனுல் அது....''

''ஓநாய்கள் அசட்டுப் பிறவிகள் அல்லவே! ஜோடியால் வந்துதான் பக்கத்துக்கு ஒன்றாய்ச் சென்று அவை தாக்குதல் தொடுக்கும். ஓநாய்கள் தனியே வேட்டையாடப் புறப்படுது அரிதினும் அரிது, இது தெரியாதா உனக்கு?''

''நல்ல வேளை வெள்ளைவால் தப்பித்துக் கொண்டது!'' அகமகிழ்ந்து, உரும்கான் அந்தச் செம்மறியை வாங்கித் தன்னுடன் குதிரை மீது வைத்து கொண்டாள். ''நீ ஓநாயை எடுத்துச் சென்று அதன் தோலை உறித்தெடு. ஆனுல் ஆட்டுக் குட்டி எங்கே போயிற்று? வெள்ளைவாலின் குட்டி எங்கே?''

''அது கிடையில் இல்லையெனில், ஓநாய்தான் அதைத் தூக்கிச் சென்றிருக்க வேண்டும். அப்படியானுல் இரண்டுக்கும் அதிகமான ஓநாய்கள் வந்தன என்று அர்த்தம்!''

அந்தக் கொள்ளைக்கார ஓநாயை விரட்டிச் செல்ல விரும்பியது போல் உரும்கான் தன் குதிரையைத் திருப்பினுள். ஆனுல் அவள் விரட்டிச் செல்லவில்லை, தலையை ஆட்டி வருத்தப்பட்டுக் கொண்டு வேகமாய்க் கிடைக்குத் திரும்பி வந்தாள். குட்டியின் கதி இப்படி ஆயிற்றே என்று மனம் நொந்து கொண்டாள். வெள்ளைவால் அவளது வளர்ப்பு ஆடு. அவள் மேய்பாளராய் வேலை ஏற்றதற்கே இந்த ஆடுதான் காரணம். கடந்த ஆண்டிற்கு முந்திய ஆண்டில் குன்றின் விளிம்புக்கு அடியில் கிடை தங்கியிருந்த போது பெரிய பனிச் சரிவு ஏற்பட்டு ஆடுகள் புதையுண்டு போயின. பல ஆடுகள் மடிய நேர்ந்து

விட்டது. பால் குடிக்கும் குட்டிகள் பலவும் தாய் ஆடுகளை இழந்து விட்டன. இந்தக் குட்டிகளைக் கூட்டுப் பண்ணை உறுப்பினர்களிடம் ஒப்படைத்து வளர்க்கச் சொன்னார்கள். மாம்பெத் கைக்குழந்தையாக இருந்ததால் உரூம்கான் அப்போது வேலை செய்யாமல் வீட்டில் இருந்தாள். அவள் இருபது குட்டிகளை எடுத்துச் சென்று வளர்த்தாள். பசும் பாலை அவற்றுக்கு ஊட்டி வந்தாள், குட்டிகள் உயிர் பிழைத்துக் கொண்டன. அவளது இந்தச் சேவையைப் பாராட்டி கூட்டுப் பண்ணை நிர்வாகக் குழு, மாம்பெத்துக்கு மிகவும் பிடித்தமான குட்டி ஒன்றை அவளுக்குப் பரிசாக அளித்தது. அந்தக் குட்டி துடிதுடிப்பானது, ஓயாமல் ஓடி விளையாடியது. வெள்ளை வாலைத் தவிர முற்றும் கறுப்பாய் இருந்தது. அதனால்தான் அது வெள்ளைவால் என்று பெயர் பெற்றது.

இலையுதிர் காலத்திற்குள் அந்தக் குட்டி வளர்ந்து பருத்துவிட்டது. உரூம்கான் அதை அடித்துக் கறியாக்குவதெனத் தீர்மானித்தாள். அந்தே நேரத்தில் கூட்டுப் பண்ணைத் தலைவர் அவளிடம் வந்தார்.

''அடேயப்பா!'' என்று அவர் வெள்ளைவாலைப் பார்த்து வியந்து கொண்டார். ''போற்றத் தக்க கரங்களால் வளர்க்கப்பட்ட குட்டி என்பது பார்த்ததும் தெரிகிறதே! ஏனையோரது குட்டிகளில் எதுவும் இவ்வளவு கமுக்கு மொழுக்கென இல்லை.... உரூம்கான் நீ மேய்ப்பாளராய் வேலை ஏற்றுக் கொள்ளேன், நன்றாயிருக்கும். என்ன சொல்கிறாய்? உன் கணவனுடன் சேர்ந்து வேலை செய்யலாம். உன் கணவனின் கூட்டாளிக்கு வயதாகிவிட்டது, குதிரையிலே சவாரி செய்ய முடியாதபடி கிழவராகிவிட்டார்.''

அவர் இவ்வாறு பேசி அவளை இதற்குச் சம்மதிக்கச் செய்துவிட்டார். மாம்பெத்தை அவன் பாட்டியிடம் விட்டுச் செல்வதென ஏற்பாடாயிற்று. உரூம்கான் வெள்ளைவாலை இறைச்சிக்காக வெட்டவில்லை, தனக்கு அதிர்ஷ்டம் கிடைக்கச் செய்யுமென்று அதைத் தன்னுடன் அழைத்துச் சென்று கூட்டுப் பண்ணையின் கிடையில் சேர்த்துக் கொண்டாள்.

இப்பொழுது அவளது அதிர்ஷ்டம் அவளை விட்டகன்று விட்டதே என்று வருந்தினாள். அவளது அருமை வளர்ப்பின் முதலாவது குட்டியை ஓநாய் தூக்கிச் சென்றுவிட்டது. இனி அதன் இரண்டாவது குட்டியை எதிர் பார்த்துக் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை....

வெள்ளைவாலை அவள் கிடையில் கொண்டு போய் விட்டாள். பிறகு குதிரையைக் கட்டிவிட்டு, மாம்பெத் நல்லபடி தூங்குகிறானா என்று பார்ப்பதற்காகச் சென்றாள். சன்னலே வழியே உள்ளே பார்த்தாள்—வியந்து கூவிவிட்டுக் குடிசைக்குள் ஓடினாள்.

மாம்பெத் நடுங்கி ஆடும் சின்னஞ் சிறு குட்டிக்கு தன் வாயிலிருந்து பாலைக் கொடுத்ததை லாந்தரின் மங்கலான வெளிச்சத்தில் அவள் கண்ணுற்றாள்.

''வெள்ளைவாலின் குட்டி ஆயிற்றே இது!'' என்று கூவினாள் உரும்கான். உள்ளே நுழைந்ததும் அவள் அதை அடையாளம் கண்டு கொண்டுவிட்டாள். ''இதை நீ எங்கே போய் எடுத்து வந்தாய்? இதை ஓநாய் தூக்கிச் சென்று விட்டதாக உன் அப்பா சொன்னாரே.''

மாம்பெத் உடனே பதில் சொல்லவில்லை, அவன் வாய் நிறைய பால் இருந்தது.

குட்டிக்கு அந்தப் பாலை ஊட்டியதும் சாவதானமாய் அவன் அந்த ஓநாயைப் பற்றி அம்மாவிடம் கூறினான்.

''நான் அந்த ஓநாயைப் பயமுறுத்தி விரட்டியடித்தேன்.''

பிறகு அவன் முழு விவரத்தையும் அவசரமின்றி அமைதியாய்ச் சொன்னான்.

நாய்கள் குரைத்து எச்சரிக்கை அளித்ததும் அவன் விழித்துக் கொண்டு விட்டான். அவன் அப்பா படுக்கையிலிருந்து துள்ளியெழுந்து, துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வெளியே ஓடினார். அவசரத்தில் அவர் லாந்தரை மறந்து விட்டதாக நினைத்து மாம்பெத் லாந்தரைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னால் ஓடினான். ஆனால் இருட்டிலே அப்பா சென்ற இடம் அவனுக்குத் தெரியவில்லை. தனது அச்சத்தை விரட்டும் பொருட்டு திரியை உயர்த்தி லாந்தரைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொண்டான். குடிசைக்கு அருகே நெருக்கமாய் ஒண்டிக் கொண்டு நின்ற கிடையைச் சுற்றி நடந்தான்.

அக்தாய்லக் படுத்திருக்கும் இடமான ஆட்டுப் புழுக்கை மேட்டை அடைந்ததும் அங்கே பச்சிளம் ஆட்டுக் குட்டி ஒன்று கிடையை விட்டு விலகி அங்கும் இங்கும் ஓடக் கண்டான்.

''தாயைத் தேடியலைகிறது'' என்று நினைத்துக் கொண்டான். அந்த அசட்டுக் குட்டியைத் தூக்கித் தனது மென்முடிக் கோட்டுக்குள் வைத்து மூடிக் கொண்டான். லாந்தர் அவன் முதுகுக்குப் பின்னால் இருந்தது. அவனுக்கு முன்னால் மையிருட்டாக இருந்தது. அம்மாவையும் காணோம், அப்பாவையும் காணோம். இருட்டில் நாய்களது ஆத்திரக் கூச்சல் எழுந்த இடத்தில் அவர்கள் இருந்தனர்.

பிறகு திடுமென மாம்பெத்துக்கு எதிரே ஓநாயின் பச்சையாய் ஒளிர்ந்த இரு விழிகள் தெரிந்தன. அதனுடைய நீளமான வெள்ளைப் பற்கள் பளிச்சிட்டன.... கடித்துக் கொண்டும் உறுமிக் கொண்டும் அது மேலும் மேலும் அவனை நெருங்கி வந்தது. அச்சமும் நடுக்கமும் மாம்பெத்தின் முதுகுத் தண்டினுள் சலசலத்துச் சென்றன.

ஆட்டுக் குட்டி கத்தினால் ஓநாய் உடனே தெரிந்து கொண்டுவிடும். ஆகவே கத்தாதபடி அதை அவன் தன்னுடன் அணைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டான். அதே கணத்தில் லாந்தரைப் பற்றி அவனுக்கு நினைவு வந்தது.

திரும்பிப் பார்க்காமலே ஒரு கையால் தனக்குப் பின்னால் தடவிப் பார்த்தான். லாந்தரை எடுத்து, கவசம் போல் அதை முன்னால் நீட்டிப் பிடித்துக் கொண்டான். உடனே பற்களும் பச்சை விழிகளும் அங்கிருந்து மறைந்துவிட்டன.

மெய்யாகவே அவன் எதிரே ஓநாய் வந்ததோ, என்னமோ — யாருக்குத் தெரியும்? ஆனால் மாம்பெத் கதி கலங்கிச் செயலிழந்துவிடவில்லை, லாந்தரை நினைத்துக் கொண்டான்—இதுதான் முக்கியமானது.

அவன் தாய் அருமையாய் அவன் தலையை வருடி விட்டவாறு கூறினாள்:

''நல்லது, இந்தக் குட்டி வளர்ந்து கொஞ்சம் பெரிதாகட்டும், இதிலிருந்து உனக்கு நாங்கள் அழகான ஒரு புதிய குல்லாய் செய்து தருவோம்.''

''கூட்டுப் பண்ணைத் தலைவருடைய குல்லாயைப் போலவா?'' என்று ஆனந்தம் பொங்கக் கேட்டான மாம்பெத்.

கூட்டுப் பண்ணைத் தலைவர்தான் உலகிலேயே மிகச் சிறந்த ஆடைகள் அணிந்தவரென மாம்பெத் கருதி வந்தான்.

* * *

சிறிது காலம் கழிந்தது. மாம்பெத் காப்பாற்றிய ஆட்டுக் குட்டி பெரிதாகியது, சுருள் முடிகள் அடர்த்தியாக வளர்ந்தன. கிடையிலேயே துடிப்பும் துறுதுறுப்பும் மிக்க ஆடாக விளங்கிற்று. பிறகு ஒரு நாள் மாலையில் மாம்பெத்தின் அப்பா அவனை வெளியே முற்றத்துக்கு அழைத்து, இந்த ஆட்டுக் குட்டியைக் கொல்லப் போவதாக அவனிடம் சொன்னார்.

''என்னுடைய ஆட்டுக் குட்டியைக் கொல்வதாவது?'' என்று கைகளை விரித்து ஆட்டிக் கொண்டு மாம்பெத் அழ ஆரம்பித்தான். ''அதை நான் கொல்லவிட மாட்டேன்! வெட்டிக் கொல்வதற்காகவா அதை நான் ஓநாய்களிடமிருந்து காப்பாற்றினேன்? அம்மாதிரியான ஆளா நான்?''

''இல்லை, நீ அம்மாதிரியானவன் அல்ல'' என்று அவன் தந்தை தமது கறுக்கு அரிவாளை மறைத்துக் கொண்டார். ''ஆனால் உனக்கு எதிலிருந்து குல்லாய் செய்வதாம்?''

''உயிருள்ள ஆட்டுக் குட்டியிலிருந்துதான் குல்லாய் செய்ய வேண்டுமா?''

''வேறு எதிலிருந்து செய்வதாம், சொல்லு.''

''எதிலிருந்தும் எனக்குக் குல்லாய் செய்ய வேண்டியதில்லை. ஏற்கெனவே என்னிடம்தான் ஒரு நல்ல குல்லாய் இருக்கிறதே'' என்று மாம்பெத் தனது பழைய மென்முடிக் குல்லாயை இழுத்து விட்டுக் கொண்டான். அது அவன் கண்கள் வரை தணிந்து வந்துவிட்டது, இன்னும் கொஞ்சம் இழுத்திருந்தானானால், அது அவன் மூக்கையும் மூடியிருக்கும்.

அவன் தந்தை வாய் பேசாமல் அங்கிருந்து போய்ச் சேர்ந்தார்.

அன்று அந்தியில் கூட்டுப் பண்ணைத் தலைவர் அவர்களிடம் வந்தார். நடந்தவை யாவற்றையும் மாம்பெத்தின் அப்பா அவரிடம் சொன்னார்.

படுப்பதற்காகத் தயார் செய்து கொண்டிருந்த மாம்பெத்திடம் கூட்டுப் பண்ணைத் தலைவர் சென்றார். கனத்த கையை மாம்பெத்தின் தோள் மேல் வைத்து, உருக்கமான குரலில் அவர் கூறினார்:

''கருத்துள்ள மேய்ப்பாளன் ஆகக்கூடியவன் இவன். இம்மாதிரியான உதவியாளர்கள் நமக்கு நிறைய வேண்டும்?''

இதற்குப் பிறகு நெடுநேரம் வரை மாம்பெத்துக்குத் தூக்கம் வரவில்லை, கூட்டுப் பண்ணைத் தலைவர் தன்னை மெச்சினாரா, அல்லது திட்டினாரா என்று அவனுக்கு விளங்கவில்லை. விடியற் காலையில் அவன் தந்தை ஆட்டுக் கிடையிடம் சென்றபின் அவன் தாய் படுத்துறங்குவதற்காகக் குடிசைக்கு வந்ததும் தான், கூட்டுப் பண்ணைச் சொத்துக்கு யாரும் எந்தத் தீங்கும் இழைக்க இடமளிக்காதவனே கருத்துள்ள மேய்ப்பாளன் என்பதை அவன் தெரிந்து கொண்டான்.

''அம்மா, கூட்டுப் பண்ணைத் தலைவர் என்னை உதவியாளனாய் அமர்த்திக் கொள்வாரா?''

''மகனே, நீ சீக்கிரமாய் வளர்ந்து பெரியவன் ஆகு, நிச்சயமாய் உன்னை உதவியாளனாய் அமர்த்திக் கொள்வார்'' என்று சொல்லி அவன் தாய் படுத்துக் கொண்டாள்.

''கூட்டுப்பண்ணைத் தலைவரைப் போல் எனக்கும் தாடி வளர்ந்துவிடுமா?''

''கட்டாயம் வளரும். வெளியில் நீ இன்னும் அதிகம் நடந்து கொண்டிரு, சீக்கிரமாய் உனக்குத் தாடி வளரும்.'' தூங்க ஆரம்பித்த தாயுடன் ஆட்டுக் குட்டியைப் போல் மாம்பெத் ஒண்டிக் கொண்டான்.

* * *

மார்ச் முதல் நாள் இரவு. வெண்பனி முன்பே உருகிவிட்டது, இரவு கன்னங் கரேலென இருந்தது. மலைகளிலிருந்து குளிர் காற்று வீசியது, மணற் பொடி போல் சுள்ளென தாக்கிய சன்ன மழைத் தூறலை இந்தக் காற்று தன்னுடன் கொணர்ந்தது. கால் வைக்க இடமின்றி அவ்வளவு நெரிசலாய் ஆடுகள் ஒன்றோடொன்று ஒண்டியிருந்தன. பிறக்கப் போகும் குட்டிகளுக்கு இது அபாயம் விளைவிப்பதாக இருந்தது. குட்டிகள் இந்த நெரிசலில் மிதித்து நசுக்கப்பட்டுவிடும். குளிரும் தூறலுமாய் இருந்த அன்று இரவில் மிகப் பல குட்டிகள் இவ்வுலகுக்கு வந்து சேரப் போகின்றன என்பது உரூம்கானுக்கும் தக்தொர்பாயுக்கும் தெரிந்தது.

இம்மாதிரியான இரவை மேய்ப்பாளர்கள் குட்டிப் பேறு இரவு என்பார்கள். விடியர்க் காலை முதல் மேய்ப்பாளர்கள் மாறி மாறி ஒவ்வொருவரும் பொறுப்பேற்றுக் காவல் புரிகின்றனர். மேய்ப்பாளர் குடிசையினுள் ஒருவர் குளிர் காய, இன்னொருவர் வெளியே கிடையைச் சுற்றி வருகிறார். குளிரில் அடிபட்டுக் குமைந்து போனதும் அவர் கதகதப்பான குடிசைக்குத் திரும்பி வருகிறார், உள்ளே இருப்பவர் வெளியே சென்று பொறுப்பேற்றுக் கொள்கிறார். ஒரே ஆளால் முழு நேரமும் கவனித்துக் கொள்வது முடியாத காரியம்.

மேய்ப்பாளரின் வேலை அப்படிப்பட்டது: பகலாயினும் இரவாயினும், கோடையாயினும் குளிர் காலமாயினும் உண்மையில் அவருக்கு ஓய்வு இல்லை. எல்லைக் காவலரைப் போல் எந்நேரமும் அவர் கடமையாற்றியாக வேண்டும். ஆனால் குட்டிப் பேறுக் காலமான வசந்தம்தான் அவருக்கு யாவற்றிலும் மெத்தக் கடினமானது—இரு காதுகளையும் நிமிர்த்து ஒரு கண்ணைத் திறந்து கொண்டுதான் அவர் தூங்க வேண்டியிருக்கிறது.

அன்று இரவு மாம்பெத்தும்கூட தூங்கவில்லை. அவன் பெற்றோருக்கு அது தெரியாதென்றாலும், புதிதாகப் பிறக்கும் குட்டியின் கத்தலை தானே முதலில் கேட்க வேண்டுமென அவன் தூங்காமல் காத்திருந்தான். ரோமம் மூடிய கதகதப்பான குட்டியைத் தன் கரங்களே முதலில் தூக்க வேண்டுமென விரும்பினான்.

அன்று இரவு குளிர் கடுமையாக இருக்குமென அப்பா கூறியதை அவன் கேட்டிருந்தான். நாய்க்குக் கதகதப்பு அவசியமென்று குடிசைக் கூரைக்கு அவன் உலர் புல் எடுத்துச் சென்றான். இது சரியல்ல என்று அவன் தந்தை முணுமுணுத்துக் கொண்டார், கதகதப்பாக இருந்தால் ஆடுகளைச் சரிவர காவல் புரியாமல் தூங்கிவிடும் என்றார் அவர். ஆனால் மாம்பெத் தனது உற்ற நண்பனின் இரவு நேர இருப்பிடத்தை வசதியாக்கியதோடன்றி, அதற்கு உணவும் கொண்டு வந்து தந்தான். இதனால் கொய்பகார் என்றையும் விட அன்று இரவு விழிப்புடன் காவல் புரிந்தது. முன்னிலும் அது நன்றாகவே பணியாற்றும் என்பதில் மாம்பெத்துக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. அவன் கூரைக்கு ஏறிச் சென்றதும் நாய் ஆசையாக முனகி, வாலைக் குழைத்துக் கொண்டு அவனை வரவேற்றது.

''படுத்துக் கொள்! கொய்பகார், நீ படுத்துக் கொள்!'' என்று மாம்பெத் அதன் காதுக்குள் சொல்லி, பெரிய ஆட்டின் முடிகளைப் போல் சுருட்டையாய் அடர்ந்திருந்த அதன் முடிகளைத் தடவிக் கொடுத்தான். ''கொஞ்சம் நகர்ந்து படுத்துக் கொள், இங்கே புல் கொஞ்சம் ஈரமாய் இருக்கிறது. அப்படித்தான், நீ அருமையானவன்!''

நாயின் உடலால் கதகதப்பாக்கப் பட்டிருந்த புல்லில் மாம்பெத்தும் படுத்துக் கொண்டான்.

அந்தச் சிறு குடிசையிடமிருந்து கொஞ்சம் தள்ளி லாந்தரின் மங்கலான மஞ்சள் வெளிச்சம் பளிச்சிட்டுச் சிமிட்டியது. குளிராயிருந்த கார் இருளில் ஆடுகள் அமைதியாகப் படுத்திருந்தன.

மாம்பெத்தின் தாய் ஆட்டுக் கிடையைச் சுற்றி வந்தாள். தன்னையன்றி வேறோர் ஆளும் கிடையைக் காவல் புரிந்தது அவளுக்குத் தெரியாது. எத்தனைக் கண்கள் அன்று விழிப்புடன் இருந்தன என்பதை அவள் ஊகிக்கவில்லை.

மாம்பெத்துக்குக் குளிர ஆரம்பித்தது. மழைத் துளிகள் அவனது கோட்டுக் காலருக்குள் உருண்டு சென்றன. குளிரான இத்துளிகள் அவனது உடலை அடைந்து, உறைபனி ஊசிகளைப் போல் முதுகுத் தண்டில் சரிந்து ஓடின. மாம்பெத்துக்கு மேலெங்கும் சிலிர்த்தது. பின்புறத்தில் ஓநாய் நெருங்கி வந்ததும் அம்மாவுக்கு முதுகுத் தண்டில் உண்டாகும் உணர்ச்சியைப் போன்றதே இது என்பதாய் நினைத்தான்.

மழைத் தூறல் சிறிது சிறிதாய் நின்று போயிற்று. நாயின் சுருள் முடிகள் காற்றிலே உலரத் தொடங்கின. மாம்பெத்தின் மென்முடிக் குட்டைக் கோட்டிலிருந்துதான் இன்னும் ஈரம் மறையவில்லை. கைகளைக் கொய்பகாரின் வயிற்றுக்கு அடியில் நுழைத்து அவன் வெதுவெதுப்பாக்கிக் கொண்டான். அப்போதும் குளிர் அவனை வாட்டியது. கிடைக்கு அருகே ஓநாய்க் கூட்டம் வருமாயின், கூச்சலிடுவதற்குக்கூட, ஏன் அசைவதற்குக்கூட தன்னிடம் சக்தி இருக்காதெனநினைத்தான்.

உலர் புல்லில் முன்னிலும் அமைதியாக காற்று சலசலத்தது. இப்போது இந்த ஓசையைச் சலசலப்பெனச் சொல்ல முடியாது, தூங்கும் போது அப்பாவின் மூக்கிலிருந்து எழுந்த மெல்லிய விசிலென்றே சொல்ல வேண்டும். காதுக்குச் சரிவர கேட்காத அந்த உள்ளடங்கிய விசில் ஓசைக்கு இடையே, மாம்பெத்துக்கு இப்போது நாயின் தூக்கக் கலக்கம் கொண்ட முனகலும், பிறகு பசி கொண்ட ஓநாய் எங்கோ தொலைவில் ஊளையிடுவதும் காதில் விழுவதாகத் தோன்றியது.

கரு நீல வானத்தில் மங்கலான நீல நிற விண்மின் தோன்றி மேலும் மேலும் பிரகாசமாகி வேகமாய் அருகாமையில் வந்து கொண்டிருந்தது.

''ஸ்பூத்னிக்!'' என்று ஊகித்து கொண்டு ஆனந்தமடைந்து, கொய்பகாரின் சுருள் முடிக் கழுத்தில் தட்டினன் மாம்பெத். ''கிராமத்தில் எல்லாக் குழந்தைகளும் ஏதும் அறியாதவர்களாய் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனல் நீயும் நானும் முதன்முதலாக இன்று இரவு ஒரு ஸ்பூத்னிக்கைக் கண்டு களிக்கிறோம்!''

ஸ்பூத்னிக் பறந்தோடியது, நெடு நேரம் வரை சுற்றிலும் பிரகாசமாக இருந்தது. இது நடைபெற்றது வானத்திலா, அல்லது மாம்பெத்தின் மனத்திலா? மகிழ்ச்சி மேலிடும் போது இரவானது பகலைப் போல் பிரகாசமாகிவிட முடியும்.

மாம்பெத் பலவுங் குறித்து சிந்திக்க முற்பட்டான். ஆனால் திடுமெனக் கீழே ஏதோ சப்தம் கேட்டது—மிருதுவான, மகிழ்ச்சிகரமான, பரபரப்பூட்டும் சப்தம்.

மாம்பெத் மூச்சை அடக்கிக் கொண்டு காது கொடுத்துக் கேட்டான்.

''இம்—பா!''—புதிதாகப் பிறந்த ஆட்டுக் குட்டியின் நடுங்கும் குரல் முன்னிலும் தெளிவாகத் திரும்பவும் கேட்டது.

மாம்பெத் எப்படித் துள்ளிக் குதித்தெழுந்தான்! ஆனந்தம் தாங்க மாட்டாமல் எப்படிக் கூச்சலிட்டான்!

குளிர், தூக்கக் கலக்கம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. கடகடத்து ஆடிய குறுகலான ஏணியில் அடித்து மோதிக் கொண்டு கீழே இறங்கினன். அப்போதுதான் உலகினுள் அடியெடுத்து வைத்திருந்த ஆட்டுக் குட்டி மிக அருகாமையிலிருந்து முன்னிலும் பலமாகவும் விடாப்பிடியாகவும் கத்துவது காதில் விழுந்தது. அது எங்கிருந்து கத்திற்று என்று தெளிவாகவே தெரிந்தது.

''அம்மா! ஆட்டுக் குட்டி! ஆட்டுக் குட்டி பிறந்திருக்கிறது!'' என்று கூவிக் கொண்டு, தூங்கும் ஆடுகளுக்கிடையே புகுந்து ஓடினன் மாம்பெத்.

அவன் தாய் அங்கே வந்து சேரும் முன்பே மாம்பெத் அந்தக் குட்டியைத் தேடிப் பிடித்து ஈரமாயிருந்த அதைத் தூக்கி மார்புடன் வைத்து அணைத்துக் கொண்டான். லாந்தரின் வெளிச்சத்தில் அந்தக் குட்டியை ஆராய்ந்தான்.

''அம்மா, இதற்கும் வெள்ளைவால் இருக்கிறது!'' என்று மகிழ்ந்து கூவினன். ''வெள்ளைவாலின் வம்சத்தைச் சேர்ந்ததாகவே இருக்க வேண்டும்.''

இதற்கிடையில் அவன் தாய், குட்டியை ஈன்ற செம்மறியிடம் சென்றாள். உடனே அவள் மாம்பெத்திடம் சொன்னாள்:

''குட்டிக்குக் குளிர் தாங்காது, குடிசைக்குள் கொண்டு போ. அப்பாவை உடனே வரச் சொல். தாய் ஆட்டையும் நாங்கள் உள்ளே கொண்டு வந்தாக வேண்டும், இன்னொரு குட்டி போடும் போல் தெரிகிறது!''

ஆனந்தக் கூச்சலிட்டபடி மாம்பெத் குடிசைக்குள் ஓடினன். அப்பா விழித்தெழுந்து கிடையிடம் ஓடினார். லாந்தரின் திரியை மாம்பெத் உயர்த்தினன், பிறகு நடுங்கும் கால்களை ஊன்றி அந்தக் குட்டியை நிற்க வைத்தான். வெற்றி முழக்கமிட்டுக் கத்தி, குட்டையான வெள்ளை வாலை அது ஆட்டிக் கொண்டது.

''இப்போது நம்மிடம் மூன்று வெள்ளைவால்கள் இருக்கின்றன!'' என்று களிப்புற்றுக் கூவினன் மாம்பெத்.

பொழுது விடியும் நேரத்தில் அந்தச் செம்மறி இன்னொரு குட்டியை ஈன்றது — வெள்ளைக் கால்களும், நெற்றியில் வெள்ளை நட்சத்திரமும், வெள்ளைவாலும் கொண்ட குட்டி.

''நான்கு! நான்கு வெள்ளைவால்கள்!'' என்று மாம்பெத் மகிழ்ந்து கொண்டான். அன்று பகற் பொழுதெல்லாம், அவன் சென்ற எல்லா இடங்களிலும் 4 என்ற எண்ணை எழுதி வைத்தான்.

அன்று மிகப் பல செம்மறிகள் குட்டிகளை ஈன்றன. பலவும் இரட்டைக் குட்டிகள். அவன் தாய் அளவிலா மகிழ்ச்சி கொண்டு, பூர்சாக் பணியாரத்தை நிறைய சுட்டுக் குவித்தாள்.

அவன் தந்தை வயிறு புடைக்க அதைத் தின்றுவிட்டு, பூரிப்புடன் மாம்பெத்திடம் கூறினர்:

''எல்லாருக்கும் முதலாய் நீ தேடிப் பிடித்துத் தூக்கிக் கொண்ட அந்த வெள்ளைவால் குட்டியிலிருந்து நாங்கள் உனக்குக் குல்லாய் செய்து கொடுப்போம். இரண்டு குட்டிகளுக்குத் தாய் ஆட்டால் பால் கொடுக்க முடியாது, அதனிடம் இரண்டுக்கும் போதிய அளவு பால் இருக்காது.''

மாம்பெத் பதிலளிக்கவில்லை, காதில் வாங்காதது போல் மௌனமாய் இருந்தான்.

இரண்டு, மூன்று நாட்கள் கழிந்ததும் தபால்காரப் பெண் அவர்களுக்குப் பாட்டியிடமிருந்து ஒரு கடிதமும், மாம்பெத்தின் அம்மா, அப்பாவின் படங்கள் அச்சிடப்பட்ட ஒரு செய்தியேடும் கொண்டு வந்து தந்தாள். அந்தச் செய்தியேட்டில் வெளியாகியிருந்த கட்டுரை அவன் அம்மாவையும் அப்பாவையும் யாவருக்கும் முன்மாதிரியான ஒளிச்சுடர்கள் என்று கூறிப் பாராட்டின. தபால்காரப் பெண் அவ்வாறுதான் சொன்னுள். இரவில் தன் தாயும் தந்தையும் லாந்தர்களை எடுத்துச் சென்று சுற்றி வந்து ஓநாய்களை நெருங்க விடாமல் காவல் புரிந்ததால் அவர்கள் ஒளிச்சுடர்களெனப் போற்றப்பட்டார்கள் என்பதை மாம்பெத் புரிந்து கொண்டான்.

செய்தியேட்டில் அச்சிடப்பட்டிருந்த படங்களை மாம்பெத் பார்த்துக் கொண்டிருந்த போது, கூட்டுப் பண்ணைத் தலைவருக்கு அவன் தந்தை கடிதம் எழுதினர். மலை மீது ஏறிச் செல்லும் ஆமையைப் போல் அவர் மிகவும் மெதுவாய் எழுதினர். தடியாகவும் கறுப்பாகவும் அமைந்த பெரிய எழுத்துக்களில் எழுதினர், நனைந்த பெட்டைக் கோழி பதித்துச் செல்லும் தடங்களைப் போலிருந்தன அவர் எழுதிய எழுத்துக்கள். கடிதத்தை எழுதி அவர் அந்தத் தபால்காரப் பெண்ணிடம் கொடுத்துவிட்டு வெளியே போய்ச் சேர்ந்தார். தபால்கரப் பெண் அன்பு உள்ளம் கொண்டவள், உலகிலேயே சிறந்த அழகி அவளே என்று சொல்லத்தக்கவாறு இருந்தாள், அப்பா எழுதியிருந்த கடிதத்தை அவள் மாம்பெத்துக்குப் படித்துக் காட்டினுள். குட்டிப் பேறுக் காலத்தின் முதல் இரவன்று மாம்பெத் ஆற்றிய சேவையை அவன் தந்தை மறக்காமல் கூட்டுப் பண்ணைத் தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இதைப் படித்து இருவரும் மகிழ்ந்து கொண்டனர். அந்தத் தபால்காரப் பெண் மிகச் சிறந்த

வளாய் இருந்தாள். ''வெண்மலர்'' என்தாகப் பொருள்படும் இனிய பெயரான ஜகுல் என்று அவள் பெயரிடப்பட்டிருந்தாள்.

* * *

குளிர் காலம் அதன் இறுதியை நெருங்கிக் கொண்டிருந்தது. மலைப் பிளவிலிருந்து இப்போது குளிர் காற்று வீசவில்லை. பனி மூடிய மலைகளிலிருந்து குதுகலாமாய் மணி நாதமிட்டு ஓடி வந்த அருவிகளில் மலர்கள் நிறைய காணப்பட்டன. மஞ்சளும் நீலமும் சிவப்பும், மற்றும் கற்பனைக்கு எட்டாத ஏனைய பல வண்ணங்களிலும் இருந்தன இவை.

பிரகாசமாகவும் உற்சாகமாகவும் இருந்த ஒரு நாளன்று கூட்டுப் பண்ணைத் தலைவர் அவர்களைத் தேடி வந்தார்.

பனி மட்டத்துக்குக் கீழே மேய விடுவதற்காகக் கிடையை அப்பா ஓட்டிச் சென்றிருந்தார். மேலிருந்து பார்ப்பதற்கு அந்த ஆடுகள் கண்ணைப் பறிக்கும் வசந்த பருவப் புல்லின் பச்சையில் வாரியிறைக்கப்பட்ட நீல மணிகளைப் போல் தோன்றின.

அம்மா மே தின விழாவுக்காக யாவற்றையும் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். மாம்பெத் அவளுக்கு உதவினுன்.

குடிசைக்குப் பின்னுல் கூட்டுப் பண்ணைத் தலைவர் தமது குதிரையைக் கட்டினுர். பிறகு உள்ளே சென்று வாழ்த்துத் தெரிவித்து அம்மா, மாம்பெத் இருவரின் கைகளையும் பிடித்துக் குலுக்கினுர். என்ன சேதி, எத்தனை குட்டிகள் கிடைத்தன என்றெல்லாம் விசாரித்தார்....

கூட்டுப் பண்ணைத் தலைவர் தமது நீண்ட கரிய தாடியை உருவியபடி மாம்பெத்தை உற்று நோக்கினுர். அவருக்கு வயது அதிகமாகிவிடவில்லை, முதிய வயதுக்குரிய தோற்றமும் செல்வாக்கும் பெறும் பொருட்டே அவர் தாடி வளர்த்துக் கொண்டதாக பேச்சு அடிபட்டது. இருபதாவது வயதிலேயே அவர் கூட்டுப் பண்ணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுவிட்டார். இவ்வளவு இளையவர் ஒருவரின் சொல்லை வயது முதிர்ந்தவர்கள் மதிக்க மாட்டார்கள் என்று அஞ்சி அவர் தாடி வளர்த்துக் கொண்டதாகக் கூறப்பட்டது.

தாடியைத் தடவியபடி மாம்பெத்துக்கு எதிரே நின்ற அவர் அடர்ந்த புருவங்களை நெரித்துக் கொண்டு கண்டிப்பு தொனிக்கும் குரலில் கேட்டார்:

''தோழர் மாம்பெத் தக்தொர்பாயிவ், நான் கேள்விப் படுவது மெய்தானு? திரும்பவும் நீ வெகுமதியை வேண்டாமென்று உதறிவிட்டாயாமே? உனக்குப் புதிய குல்லாய் செய்வதற்காக ஆட்டுக் குட்டியைக் கொல்லக் கூடாதென்று தடுத்துவிட்டாயாமே?''

கூட்டுப் பண்ணைத் தலைவர் தன்னைக் கண்டிப்பதாக முதலில் மாம்பெத் நினைத்தான். பிறகுதான் அவனுக்கு அவரது கேள்வியின் உட்பொருள் புரிந்தது. உடனே அவன் முன்பு தன் அப்பாவிடம் கூறிய அதே பதிலைத் திரும்பவும் கூறினான்:

''குல்லாய் செய்வதற்காக, உயிருள்ள ஆட்டுக் குட்டியைக் கொல்லக் கூடாது!''

''நீ நல்ல பையன்! சிறந்த மேய்ப்பாளன் இங்கே உருவாகி வருகிறான்! வாழ்த்து உனக்கு!'' என்று கூட்டுப் பண்ணைத் தலைவர் உருக்கமான குரலில் கூறினார். ''உயிருள்ள ஆட்டுக் குட்டிகளிலிருந்து குல்லாய்கள் செய்வதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று சொல்லி நாம் இருவருமாகச் சேர்ந்து மாஸ்கோவுக்குக் கடிதம் எழுதுவோம்.''

''ஆம், எழுதுவோம்! அதுதான் சரி!'' என்று உற்சாகமாகக் கூவினான் மாம்பெத்.

''சரி, இப்பொழுது நீ இந்த அன்பளிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நீ வேண்டாமென நிராகரிக்க முடியாத ஒரு வெகுமதியை உனக்கு அளிக்கத் தீர்மானித்துள்ளோம்.''

இவ்வாறு சொல்லி, கூட்டுப் பண்ணைத் தலைவர் வெளிர் நீல உச்சியுடன் கூடிய நரி முடிக் குல்லாய் ஒன்றை வெளியே எடுத்து மாம்பெத்துக்கு அன்பளித்தார்.

எளிதில் உடைந்துவிடும் மலர்க் குடுவையை வாங்குவது போல் மிகவும் கவனமாய் இரு கைகளாலும் மாம்பெத் அந்த அரிய குல்லாயை வாங்கி, அதை ஒவ்வொரு பக்கமாகத் திருப்பி வியப்பால் விரிந்த கண்களால் பரிசீலித்தான்.

அந்தக் குல்லாய் வெளிர் நீல மலர்க் குடுவை போன்றதாகவே இருந்தது, அதன் நீல வெல்வெட் உச்சி மலைகளுக்கு மேலே தெரியும் அருணோதய வானத்தைப் போல் தகதகத்தது. சுற்றிலும் இருந்த விளிம்பு உயிருள்ள நரி சுருட்டிக் கொண்டு படுத்திருப்பது போல் இருந்தது. பொன்னிற மென் முடிகள் மீது அவன் மூச்சு விட அஞ்சினான், கனகாம்பரமென நினைக்கும்படி அவை அவ்வளவு மிருதுவாய் இருந்தன!

''தலையில் சூட்டிக் கொள்'' என்று புன்னகை புரிந்தார் கூட்டுப் பண்ணைத் தலைவர். ''நீ சம்பாதித்துச் கொண்டது இது!''

ஏனோ தெரியவில்லை, இதற்கிடையில் அவன் தாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சிரித்து மகிழ வேண்டிய தருணத்தில் கண்ணீரா விடுவார்கள்— என்ன விபரீதம்!

குல்லாயின் உட்புறத்தில் தைக்கப்பட்டிருந்த சென்னிறப் பட்டை மாம்பெத் கண்டு மகிழ்ந்து கொண்டான், அன்று அலர்ந்த செம்மலர் போன்ற

தாய் இருந்தது அது. அப்பாவின் பழைய குல்லாயைத் தலையிலிருந்து எடுத்து முழங் கால்களுக்கு இடையில் வைத்து அழுத்திக் கொண்டான். இனியும் அது பயன்படக் கூடியதுதான். கனகாம்பரத்தைப் போல் இலேசாக இருந்த புதிய குல்லாயைப் பவித்திரமாய் உயர்த்தித் தலையில் கோலாகலமாகச் சூட்டிக் கொண்டான்.

''என் குதிரை மீது ஏறிக் கொள், உன் அப்பாவிடம் ஓடிச் சென்று உனது புதிய குல்லாயை அவருக்குக் காட்டு'' என்றார் கூட்டுப் பண்ணைத் தலைவர்.

என்னென்பது, இவரது தயாள சிந்தையை!

பசுமையான வெளியில் விரைவில் கனகாம்பர மலர்க் கொத்து கதிரவனது ஒளியில் பளிச்சிட்டு, காற்றிலே மிதந்து வருவது போல் சென்றது.

''அற்புதமான குல்லாய், இது உனக்கு எப்படி கிடைத்தது?'' என்று வியந்து கேட்டார் அவன் தந்தை.

அதை ஒரு பக்கமாய்ச் சற்றே சாய்த்துக் கொண்டு பெருமிதத்துடன் பதிலளித்தான் மாம்பெத்:

''நான் சம்பாதித்துக் கொண்டது!''

கிராமச் சிறுவர்கள் கேட்கும் போதெல்லாம் இதே போல் பெருமையாக மாம்பெத் சொல்லிக் கொண்டான்:

''நான் சம்பாதித்துக் கொண்டது!''

Цена 2 р. 05 к.